# உங்களை உயர்த்தும் நேர நிர்வாகம்

## 1. நேரம்: ஒரு பார்வை

உலகப் பொதுவானது நேரம். இது மனிதரின் அடிப்படைப் பண்புகள் எங்கும் ஒரே மாதிரி இருப்பது போன்றது. இது ஏற்றத்தாழ்வு, வயது வித்தியாசம் பார்ப்பதில்லை. காலம் பொதுவுடைமைத்தன்மை கொண்டதாயிருக்கும். அதனால்தான் அது பேதமின்றி இருபத்து நான்கு மணி நேரத்தை எல்லாருக்கும் வழங்கி யிருக்கிறது.

நேரம் பணத்தைவிட மேலானது. காரணம் பணத்தால் நேரத்தைச் சம்பாதிக்க முடியாது. ஆனால், பணத்தைச் சம்பாதிக்க நேரத்தால் முடியும்.

உங்கள் பணத்தை எப்படிச் சேமிப்பது, செலவிடுவது என்பது போல், நேரத்தை எப்படிச் சேமிப்பது செலவிடுவது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இதைத்தான் நேர நிர்வாகம் (Time Management) என்கிறார்கள்.

'சாரி, சார். நேரமே இல்லாமப் போச்சு' என்று சொல்கிறோம். ஒரு சந்திப்புத் திட்டத்தைத் தவறவிடுகிற போதும், குறிப்பிட்ட வேலையை முடிப்பதில் சுணக்கம் காட்டுகிற போதும், வெகு இயல்பாய் இந்த வார்த்தை வந்து விழுகிறது.

RangaRakes
tamilnavarasam.com

உண்மையிலேயே நம்மிடம் நேரம் இல்லையா? நேரத்தை நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் நேரப்பங்கீடு செய்ய நமக்குத் தெரியவில்லை என்றுதான் அர்த்தம்.

வேலை சிறியதோ பெரியதோ அந்த வேலையை முடிக்க எவ்வளவு நேரம் தேவைப்படும் என்பதைக் கணக்கிட்டுக் கொள்ள வேண்டும். எந்த வேலையையும் திட்டமிட்டுக் கொண்டால் குறித்த நேரத்துக்குள் அதை முடிக்க இயலும்.

தன்னுடைய திறமையில் நம்பிக்கை இல்லாதவரும், விரைந்து முடிவெடுக்க இயலாதவரும், சோம்பேறிகளும் வேலையைத் தள்ளிப் போடுகிறார்கள். அதாவது, இன்று செய்து முடிக்க வேண்டிய வேலையை நாளை பார்த்துக் கொள்வோம் என்று தள்ளிப் போடுவது. இதனைச் செயல் தாமதம் செய்வது (Procrastination) என்பார்கள்.

சிலர் பணத்தைச் செலவழிப்பதில் மிகவும் கவனமாய் இருப்பார்கள். செலவிடுவதற்கு முன் இது அவசியமானதா, இன்னும் குறைந்த செலவில் இதை முடிக்க வழி இருக்கிறதா என்று சிந்தித்துக் கொள்வார்கள். அதே கவனமும், சிந்தனையும் நேரத்தைச் செலவிடுவதிலும் இருக்கவேண்டும்.

**நேரம் எப்படி யெல்லாம் வீணாகிறது?**

★ ஷாப்பிங் செல்கிறபோது என்னென்ன பொருட்களை வாங்குவது என்று பட்டியலிட்டுக் கொள்ள வேண்டும். கடையில் வாங்கத் தூண்டும் பொருட்கள் நிறைய இருக்கும். அவை கவர்ச்சிகரமான பேக்கிங்குடன் காட்சியளிக்கும். ஒன்று





வாங்கினால் ஒன்று இலவசம் என்பார்கள். எதை வாங்குவது என்று தீர்மானிக்க முடியாமல் போய்விடும். பொருட்களைப் பட்டியலின்றி வாங்கச் செல்வதில் பணம் மட்டுமல்ல, நேரமும் விரயமாகும்.

★ தொலைக்காட்சி முன்பாய்த் தொடர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருப்பது, கேட்டால் பொழுது போக வேண்டுமே என்பார்கள். நேரம் கிடைக்கவில்லையே என்று புலம்புகிறவர்கள் மத்தியில், நேரத்தை எப்படித் தொலைப்பது என்று கேட்டுக் கொண்டு நிற்பவர்களும் இருக்கிறார்கள்.

★ பயனுள்ள சொற்பொழிவுகள், கருத்தரங்குகளுக்குச் செல்ல நேரம் இல்லை நமக்கு, பயனுள்ள புத்தகங்களை வாங்கி நாளொன்றுக்கு நாலைந்து பக்கம் படிக்கவும் நேரம் இல்லை நமக்கு. ஆனால், நண்பர்களுடன் நேரிலோ, தொலைபேசியிலோ நேரம் செல்வது தெரியாமல் அரட்டையடித்துக் கொண்டிருப்போம். அடுத்தவரை விமர்சிப்பதில், அடுத்தவர் விசயத்தில் மூக்கை நுழைப்பதில் அலாதி ஆர்வம் நம்மவர்களுக்கு.

★ கடந்த காலத்தைப் பற்றி அசை போட்டுக் கொண்டிருப்பது.

★ காத்திருப்பதில் எவ்வளவு நேரம் வீணாகிறது என்று நமக்குத் தெரிவதில்லை. பேருந்துக்குக் காத்திருப்பது, க்யூக்களில் காத்திருப்பது, ஒரு நண்பரின் வருகைக்காகக் காத்திருப்பது, பொது நிகழ்ச்சிகளில் ஒரு முக்கிய புள்ளி வரும்வரை பொறுமை காப்பது

என்று சொல்லிக் கொண்டே போகலாம். காத்திருப்புகளில் வாழ்க்கையின் பெரும் பகுதி கழிந்து விடுகிறது என்பதை நாம் எப்போது புரிந்து கொள்ளப் போகிறோம்?

## 'காத்திருத்தல்'

எதற்கெடுத்தாலும், 'நேரம் வர வேண்டாமா? அந்த வேளை வரட்டுமே!' என்று சொல்கிறவர்கள் இருக்கிறார்கள். சிலர் வாய்ப்பு வந்து தங்கள் வீட்டுக் கதவைத் தட்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். பெரும்பாலும் வாய்ப்புகளை நாம்தான் தேடிப் போக வேண்டியிருக்கும்.

மகா அலெக்சாண்டர் (வரலாற்றுப்புகழ்) மாதிரி ஒரு சிலர் வாய்ப்புகளுக்குக் காத்திராமல், அந்த வாய்ப்புகளைத் தாங்களே உருவாக்கும் வல்லமை படைத்தவர்களாய் இருந்திருக்கிறார்கள்.

விருப்பத்தோடு செய்கிற காரியம் நேர்த்தியாக அமையும். அத்தோடு குறித்த நேரத்திலும் அது செய்து முடிக்கப்பட்டுவிடும். விருப்பமின்றிச் செய்கிற காரியம் நேர்த்தியாக அமையாது என்பதோடு இழுத்துக் கொண்டே போகும்.

விருப்பத்தோடு செயல்படுகிறவர்கள் வெற்றிகரமாய்த் திகழ்கிறார்கள். தொழில் துறையிலாகட்டும், விளையாட்டுத் துறையிலாகட்டும் - விருப்பந்தான் சாதனைக்கு அவசியப்படுகிறது. விருப்பத்தையும் விடா முயற்சியையும் இணைத்துக் கொண்டால் சாதிக்க முடியும்.



## மன நிலை

காலையில் படுக்கையை விட்டு எழும்போது மகிழ்ச்சியான மன நிலையோடு இருந்தால் அன்று முழுக்கவும் அது நீடிக்கும். அலுவலக வேலைகளைச் சுறுசுறுப்பாயும், கவனமாயும் செய்து முடிப்போம். வீட்டில் காபி சரியில்லை. சட்டையின் பிய்ந்து போன பொத்தான் தைக்கப்படவில்லை என்று பெண்டாட்டியிடம் சண்டை பிடிக்கிறவர் அந்த நாள் முழுக்க எதிர்ப்படுகிறவர்களிடமெல்லாம் சிடுசிடுத்துக் கொண்டுதானிருப்பார். வேலையிலும் போதிய கவனம் செலுத்த முடியாமல் தவறுகள் நேர்ந்துவிடும்.

## ஓய்வுக்கான நேரம்

நீங்கள் ஓய்வுக்குச் செலவிடுகிற நேரம் உங்கள் உடல், மன நலத்துக்கு உதவும். ஒவ்வொரு மணி நேர வேலைக்குப் பிறகும் ஐந்து நிமிடம் ஓய்வெடுக்கலாம். ஒவ்வொரு நாள் முடிவிலும் ஒரு மணி நேரம் ஓய்வாக இருக்கலாம்.

கடினமான வேலைகளினால் ஏற்படும் இறுக்கத்தில் இருந்து விடுபட ஓய்வு முக்கியம். ஓய்வுக்குப்பின் மறுநாள் வேலைக்குத் தேவையான தெம்பு, புத்துணர்வு கிடைத்துவிடும். ஓய்வே இல்லாமல் வேலை செய்கிறவரின் வேலைத் திறன் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துவிடும். எந்திரங்களுக்கும் ஓய்வளிக்கிற நாம் உடலுக்கும் ஓய்வளிக்க வேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது.

## பத்தில் ஒரு பங்கு குளியலறையில்

நம் ஆயுளில் மூன்றில் ஒரு பங்கு தூக்கத்தில் கழிந்துவிடுகிறது. பத்தில் ஒரு பங்கு உண்பதிலும், மற்றொரு

RangaRakes
tamilnavarasam.com

பத்தில் ஒரு பங்கு குளியலறையிலும் கழிந்துவிடுகிறது. ஒரு பங்கு நேரம் அரட்டையிலும், பொழுதுபோக்கிலும் தொலைந்து விடுகிறது.

இப்படி 70 சதவீத நேரம் நம் கைவிட்டுப் போய்விட மிச்சமிருப்பது 30 சதவீத நேரம் மட்டுமே. நம் வாழ்வின் வளர்ச்சியும், மகிழ்ச்சியும், வெற்றியும் அந்த 30 சதவீதத்தில் இருந்துதான் நாம் பெற்றாக வேண்டும். நேரப் பங்கீடு என்பது இந்நிலையில் அவசியமாகிறது.

★

## 2. முந்துரிமை அளித்தல்

**எ**ந்த வேலையை எப்போது செய்வது, ஒரு வேலைக்கு எவ்வளவு நேரம் ஒதுக்குவது என்று தெரியாத காரணத்தால் எல்லாமே குளறுபடியாகி விடுகிறது. இந்தக் குழப்பத்தில் இருந்து எப்படி மீள்வது என்று தெரியாமல் திகைத்து நிற்போம்.

### வேலை முந்துரிமை (Priority) என்பது என்ன?

வேலையின் தன்மை, முக்கியத்துவம் உணர்ந்து வேலைகளை வரிசைப்படுத்திக் கொள்வது. உடனடியாய் முடிக்க வேண்டிய வேலைக்கு முந்துரிமை அளிப்பதோடு அதற்காகும் நேரத்தையும் திட்டமிட்டுக் கொண்டால் அத்தனை வேலைகளும் ஒழுங்காய்ச் செய்து முடிக்கப்படும்.

உங்கள் மேலதிகாரிகளிடமும், வாடிக்கையாளர் களிடமும் பாராட்டைப் பெற வேலைகளுக்கு முந்துரிமை அளியுங்கள்.





### முந்துரிமையால் என்ன பயன்?

இருக்கிறதே! வாழ்க்கையில் எவையெல்லாம் முக்கியத்துவம் உடையவை, எவையெல்லாம் முக்கியத்துவம் அற்றவை என்பது விளங்கி விடுகிறதே!

உங்கள் வேலை முக்கியத்துவத்தில் ஒரு வகைப் படுத்தல் இருக்க வேண்டும்.

★ அதிக முக்கியத்துவம் உடையவை

★ முக்கியத்துவம் உடையவை

★ ஓரளவு முக்கியத்துவம் கொண்டவை

★ முக்கியத்துவ மற்றவை

முதல் மூன்று வகைகளையும் அடிப்படையாய்க் கொண்டு உங்கள் வேலைகளுக்கு நீங்கள் முந்துரிமை யளிக்கலாம். நான்காவதாய்ச் சொல்லப்பட்டிருக்கும் முக்கியத்துவ மற்றவை வகையில் வரும் வேலைகளை நேரம் இருந்தால் செய்யலாம்; அல்லது செய்யாமலே விட்டு விடலாம்.

உங்களுடைய பட்டியலில் குடும்பத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுங்கள். உங்கள் அலுவல்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். அடுத்து நட்பு, ஓய்வு, பொழுதுபோக்கு இவற்றுக்கு இடமளியுங்கள்.

★

## 3. நேரத்தை மதித்தல்

நேர உணர்வு முக்கியம். குறித்த நேரத்தில் எதையும் செய்வது. காலம் தவறாமை.

நீங்கள் ஒரு நிகழ்ச்சிக்கு, விருந்துக்கு அழைக்கப் படுகிறீர்கள். நிகழ்ச்சி ஆறு மணிக்குத் தொடங்குவதாக வைத்துக் கொள்வோம். நீங்கள் ஒரு ஐந்து நிமிடம் முன் கூட்டிச் செல்லலாம். ஐம்பது நிமிடம் முன் கூட்டிச் சென்றால்... உங்களுக்கு அழைப்பு விடுத்தவர் உங்களை வரவேற்க ஆயத்தமாகி விட்டிருக்க மாட்டார்.

ஐந்து நிமிடம் தாமதமாய்ச் செல்லலாம். உங்களை அழைத்தவர் பொறுத்துக் கொள்வார். ஐம்பது நிமிடம் தாமதமாய்ச் சென்றால்... உங்களை வரவேற்க ஆளே இருக்கமாட்டார்கள். உங்கள் தாமதத்தின் மூலம் எதிராளிக்குத் தேவையில்லாத மன இறுக்கத்தை நீங்கள் ஏற்படுத்தி விடுகிறீர்கள்.

வேலை அல்லது வியாபார நிமித்தமாய் ஒருவரைச் சந்திக்க வேண்டியிருக்கும். நீங்கள் நினைத்த போதெல்லாம் அந்த நபரின் அறைக்குள் நுழைந்துவிட முடியாது. அவர் நாள் முழுக்கத் தமது வேலைகளைக் கவனிக்க வேண்டியவராயிருப்பார். அத்தகைய பிசியான பார்ட்டிகள் பார்வையாளர்கள் அல்லது சந்திக்க வேண்டியவர்களுக்கென்று நேரம் ஒதுக்கியிருப்பார்.

அந்த நேரத்தில்தான் அவர்களை நீங்கள் சந்திக்க முடியும். வழக்கறிஞர், மருத்துவர், தொழிலதிபர், அரசில் பொறுப்பு வகிப்பவர் இவர்களை எல்லாம் சந்திப்புத் திட்டம் இல்லாமல் நீங்கள் பார்க்க முடியாது.



உங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நேரத்துக்குள் நீங்கள் சொல்ல வேண்டியவைகளைச் சொல்லி முடித்துவிட வேண்டும். சந்திப்புத் திட்டத்தைத் தவற விடுகிற போது எதிராளியின் நல்ல அபிப்ராயத்தைப் பெறுவதிலும் தவறி விடுகிறீர்கள்.

நேர உணர்வு இல்லாதவரால் குறித்த நேரத்துக்கு எதையும் செய்ய முடியாது, எங்கும் செல்ல முடியாது. நேரத்தில் குறியாயில்லாதவர் நேரத்தை இழக்கிறார், பணத்தோடு மனிதர்களையும் இழக்கிறார்.

மனிதர்களை மதிக்க வேண்டும். அதற்கு நேரத்தை மதித்தாக வேண்டும். நேரம் மனித வளத்தோடு சம்பந்தப் பட்டது. மனிதவளம் ஒரு நாட்டின் பொருளாதாரத்தை நிர்ணயிப்பது.

நேரம் எதற்கெல்லாம் தேவைப்படுகிறது? அதைவிட நேரம் எதற்குத் தேவைப்படாது என்று கேட்டுக் கொள்ளலாம். பணத்தைச் சம்பாதிக்க, மனிதர்களைச் சம்பாதிக்க (மனித உறவை மேம்படுத்திக் கொள்ள), பதவி, புகழ், வெற்றி என்று நாம் விரும்புகிறவை களையெல்லாம் தேடிக் கொள்ள நேரம் தேவைப் படுகிறது.

உங்களுடைய நேரத்தில் அடுத்தவர் குறுக்கீட்டை நீங்கள் அனுமதிக்க மாட்டீர்கள். நீங்களாகப் பார்த்துத் தான் அவருக்கு நேரம் ஒதுக்குவீர்கள். அப்படித்தான் எதிராளியும்.

நேரம் வளர்ச்சியுடன் தொடர்புடையது. ஆக்க பூர்வமானவைகளில் மட்டுமே அதைச் செலவிட

RangaRakes

tamilnavarasam.com

வேண்டும். வளர்ச்சிக்குத் தேவை குறிக்கோள். ஒரு குறிக்கோளை அடைய எவ்வளவு நேரம் அல்லது காலம் தேவைப்படும் என்பதைக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.

இன்று செய்து முடிக்கிற வேலை, சேமிக்கிற பணம், வாங்குகிற வீடு, விடுமுறையில் மேற்கொள்ளும் பயணம் - இப்படி எல்லாமே ஒரு குறிக்கோளைக் கொண்டிருக்கும். உங்கள் குறிக்கோளில் வெற்றி பெற உங்கள் வாழ்வின் ஆண்டுகளை, மாதங்களை, நாட்களை, மணிகளை நீங்கள் தகுந்த முறையில் மதிப்பிட்டு, ஒதுக்கீடு செய்ய வேண்டியிருக்கும்.

ஒரு நாளில் உறக்கத்துக்காக 8 மணி நேரம் செலவிடுவீர்களா (அதுதான் நியாயமான ஒதுக்கீடு) மீதமுள்ளது 16 மணி நேரம். இதில் 8 மணி நேரத்தை அலுவலக அல்லது நிறுவன வேலைக்கு ஒதுக்குகிறீர்கள். எஞ்சிய 8 மணிநேரத்தை உங்கள் வளர்ச்சிக்கான திட்டமிடுவதில், மனித உறவுகளை மேம்படுத்திக் கொள்வதில், பொழுது போக்கு மற்றும் ஓய்வில் செலவிட வேண்டும். இதுவே நேரத்தை உரிய விதத்தில் பகுத்துக் கொள்வதாகும்.

நீங்கள் நேரத்தை மதிக்கிறவராயிருந்தால், நேரத்துக்கு எதையும் செய்வதென்று பழகிக் கொள்ளுங்கள். உங்கள் நேரத்தை வீணடிக்கிற ஆசாமிகளை அண்ட விடாதீர்கள். நீங்கள் செலவிடும் நேரம் உரிய பலனை அளிக்கிறதா என்று பாருங்கள். உரியபலன் கிடைக்காது என்கிற பட்சத்தில் ஒரு வேலையைக் கையில் எடுக்காதீர்கள்.

★





## 4. எதையும் தள்ளிப் போடாதீர்கள்!

இன்றே செய்து முடிக்கக் கூடிய வேலையை நாளை பார்த்துக் கொள்வோம் என்று தள்ளிப் போடுவீர்கள். அது வரிசையில் இருக்கும் மற்ற வேலைகளையும் தள்ளிப் போகச் செய்து விடும்.

### ஏன் தள்ளிப் போடுகிறோம்?

குறிப்பிட்ட வேலையின் மீது விருப்பம் இல்லாமை

தற்சமயம் அந்த வேலையைத் தொடங்கும் மனநிலை இல்லாமை

சரியான திட்டமோ, முன் தயாரிப்போ தேவைப் படுகிற வேலையாய் அது இருக்கலாம்.

நீங்கள் உரிய நேரத்தில் வேலைக்கு வரவேண்டும், உரிய நேரத்தில் வேலைகளைச் செய்து முடிக்க வேண்டும் என்று உங்கள் நிறுவனம் எதிர்பார்க்கும். நீங்கள் தாமதமாய் அலுவலகம் செல்வதும், வேலைகளைச் செய்து முடிப்பதில் சுணக்கம் காட்டுவதும் உங்கள் மேலிடத்துக்கு அதிருப்தியை ஏற்படுத்தும். அதன் விளைவாய் உங்களுடைய வளர்ச்சி பாதிக்கப்படும்.

செயல் தாமதம் (Procrastination) ஒரு கெட்ட பழக்கம். கெட்ட பழக்கம் என்றாலே அது கேடு செய்வது, விடப்பட வேண்டியது என்று பொருள்.

கடிதம் எழுதுதல், செலுத்த வேண்டிய தவணை, கட்டணம் இவற்றில் நாம் அக்கறை காட்டுவதில்லை. அட, ஒரு நாளில் என்ன குடியா முழுகிவிடப் போகிறது என்று அலட்சியப் படுத்துவோம். அப்படி நாள் கணக்கில் தள்ளிப் போட்டால் அதுவே பெரிய பிரச்னை

ஆகிவிடுகிற அபாயமும் இருக்கிறது. தேவையில்லாமல் நாமே ஒரு நெருக்கடியை ஏற்படுத்திக் கொண்டு திணறுவானேன்?

எந்த வேலையை நீங்கள் வெறுப்பின் காரணமாய்த் தள்ளிப்போடுகிறீர்களோ, அந்த வேலையைச் செய்தேயாக வேண்டிய கட்டாயத்தில் நீங்கள் இருப்பதை மறந்து விடக்கூடாது. வேலையின் மீது விருப்பத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

சிலர், ஏதோ ஒரு அச்சத்தின் காரணமாகவும் ஒரு வேலையை உடனே முடிக்காமல் தள்ளி வைப்பதுண்டு. தம்முடைய திறமையின் மீது நம்பிக்கை இல்லாதவர்கள் இதை நம்மால் செய்து முடிக்க இயலுமா என்று சந்தேகப்படுவார்கள். சந்தேகிக்கத் தொடங்கியதுமே பயமும் வந்துவிடும். தயக்கத்தையும், அச்சத்தையும் உதறிவிட்டு வேலையைக் கையில் எடுங்கள்.

### செயல் தாமதம் செய்வதை எப்படி விடுவது?

★ வேலையை விரும்புங்கள்

★ பொறுப்பை உணருங்கள். இன்று தள்ளிப் போடுகிற வேலையைச் செய்ய நமக்குப் பதில் வேறொருவர் வரப்போவதில்லை, நாம் தான் செய்தாக வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

★ இந்த வேலை எளிதாய் முடிக்கப்படக் கூடியதுதான் என்று எண்ணிக் கொள்ளுங்கள்.

★ உற்சாகமும், நம்பிக்கையும் கொண்டு செயல் படுங்கள்.





★ சோம்பலுக்கும் மனச்சோர்வுக்கும் இடமளிக்கக் கூடாது.

காலத்தில் செய்து முடித்தால் கிடைக்கிற பலன் தள்ளிப் போடுகிற வேலையில் கிடைக்காது என்பதைப் புரிந்து கொள்வது முக்கியம்.

★

## 5. வீணாகும் நேரங்கள்

செயல் தாமதம், முறையான திட்டமில்லாது இருத்தல், குறுக்கீடு, கவனக்குறைவு இவற்றால் நேரம் வீணாகிவிடும்.

இரவு முழுதும் ஒருவர் தனது வயலுக்கு நீர்பாய்ச்சி யிருப்பார் ஆனால், எங்கோ ஒரு எலிவளை இருந்து அதன் வழியே நீர் முழுவதும் வெளியேறி விடக் கூடும். அப்படித்தான் நேரமும்.

### நேரம் எப்படியெல்லாம் வீணாகிறது?

நீங்கள் செய்ய வேண்டிய வேலையை அடுத்தவரிடம் தள்ளி விடுவதாலும், அடுத்தவரிடம் ஒப்படைப்புச் செய்ய வேண்டிய வேலையை நீங்களே இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வதாலும் நேரம் வீணாகி விடும்.

நேரத்தை மிச்சப்படுத்தும் உத்திகள், கருவிகள், அணுகுமுறைகள் இவற்றைப் பயன்படுத்தாத நிலை யிலும் நேரம் பாழ்படக் கூடும்.

ஒரு வேலையில் இன்னொரு வேலை குறுக்கிடும், ஒரு வேலையைச் செய்து கொண்டிருக்கும் போது அனாவசிய

நபர்களின் குறுக்கீடும் இருக்கும். குறுக்கீடுகளைச் சமாளிப்பது, விடுபடுவது என்று இரண்டு வழிகள் உண்டு. எதைத் தேர்ந்தெடுப்பது என்பது உங்கள் விருப்பம்.

குறுக்கீடுகளில் இருந்து விடுபட அல்லது அவற்றைத் தவிர்க்க உங்கள் அலுவலக வரவேற்பாளர் அல்லது உதவியாளரை நீங்கள் பயன்படுத்தலாம்.

**நேரத்தை எவையெல்லாம் வீணடிக்கின்றன?**

1. திட்டமின்மை
2. தேவையில்லாமல் கூட்டப்படுகிற கூட்டம்
3. எண்ணற்ற அறிக்கைகள்
4. எண்ணற்ற விதி முறைகள்
5. முன்னுரிமை அளிக்கத் தவறுதல்
6. காலக்கெடு நிர்ணயித்துக் கொள்ளாதிருப்பது
7. ஒரே நேரத்தில் பல வேலைகளை மேற்கொள்வது
8. குறுக்கீடுகள்
9. வேலையைத் தள்ளிப் போடுவது
10. முடிவெடுப்பதில் தாமதம்
11. வேலை ஒப்படைப்புச் செய்யாமை

இவற்றுள் எந்த ஒற்றும் நேரவிரயத்துக்குக் காரணமாகலாம். எதுவெல்லாம் உங்கள் நேரத்தை வீணடிக்குமோ அதை முதலில் அழித்துப்போடுங்கள். குறுக்கீடுகளைத் தகர்ப்பதில் தயவு தாட்சண்யம் காட்டாதீர்கள்.



நாம் நேரத்தை வீணடிப்பது தெரியாமலே அதை இழந்து கொண்டிருக்கிறோம்.

ஒன்று, நீங்கள் செய்கிற வேலை உங்கள் நிறுவனத்துக்குப் பயன்படுவதாகவோ, உங்களுக்குப் பயன்படுவதாகவோ இருக்க வேண்டும். யாரும் பணத்தைச் சும்மா தருவதில்லை. நேரத்தையும் சும்மா தந்து விடமாட்டார்கள்.

நேரத்தை எப்படிப் பராமரிப்பது என்பதை உங்கள் இல்லத்தரசியிடம் இருந்தே நீங்கள் கற்றுக்கொண்டுவிட முடியும். அவர் இன்றைய சமையலுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை முதல் நாளிரவே திட்டமிட்டுக் கொண்டு விடுகிறார்.

சமையலுக்கான காய் வகைகளை முதல் நாள் இரவே நறுக்கிவைத்துக் கொள்கிறார்.

காலையில் சமைத்துக் கொண்டே குழந்தைகளை ஸ்கூலுக்குத் தயார் செய்து விடுகிறார்.

மாலையில் அலுவலகத்தில் இருந்து வரும் உங்களை வரவேற்கத் தயாராகிறார்.

குழந்தைகளின் ஹோம் ஒர்க்கை மேற்பார்வையிடுகிறார்.

இடைப்பட்ட நேரத்தில் ஓய்வெடுக்கிறார்.

வீட்டில் முதியவர்கள் இருந்தால் அவர்களைக் கவனித்துக் கொள்கிறார்.

குழந்தைகளை ஸ்கூலில் விடுதல், மின் கட்டணம், தொலைபேசிக் கட்டணம் இவற்றைச் செலுத்துகிறார்.

RangaRakes

tamilnavarasam.com

வங்கிக்குச் சென்று வருகிறார்.

ஷாப்பிங் செய்து முடிக்கிறார்.

பெண்கள் தங்களுடைய நேரத்தைத் திறம் பட நிர்வகிப்பவர்கள் என்பதில் இரு வேறு கருத்துகள் இருக்க முடியாது.

★

## 6. நேரத்தை எப்படிச் சேமிக்கலாம்?

குறித்த நேரத்தில் ஒரு வேலையை முடிப்பது குறியாய் இருக்க வேண்டும். ஆயத்தம் செய்து கொள்வது (Preparation) அவசியம்.

சிலருக்கு அடுத்தவருடைய வேலைத் திறனில் நம்பிக்கை இருப்பதில்லை. எல்லாமும் தங்களுடைய கையில் அல்லது தங்களுடைய மேற்பார்வையில் செய்யப்பட வேண்டும் என்று நினைப்பார்கள். அப்படிச் செய்வதில்தான் அவர்களுக்குத் திருப்தி. இப்படி வேலைகளை இழுத்துப் போட்டுக் கொள்ளா விட்டால் அவர்களுடைய நேரம் கணிசமான அளவு மிச்சப்படும்.

போதிய தகவல்களை வைத்துக் கொண்டு முடி வெடுங்கள். துரிதமாகவும், சிறப்பாகவும் முடிவெடுக்க முடியும்.

கருத்துப் பரிமாற்றம் நல்லது. விவாதித்தல் (discussion) பயனளிக்கும். அதே சமயம் வாதம் செய்வது (argumement) நேரத்தை வீணடிக்கிற காரியம்.





காலக் கெடுவை நிர்ணயித்துக் கொண்டு வேலைகளைச் செய்யுங்கள். அந்த அவகாசத்துக்குள் அந்த வேலை முடிக்கப்பட வேண்டும் என்பதில் கண்டிப்பாயிருங்கள். அதற்கான திட்டமிடுங்கள்.

என்ன நிகழ்கிறது, அதில் மற்றவர்களுடைய வேலை என்ன என்பதை அவர்களுக்குப் புரிய வையுங்கள். நிகழ்வுகளைக் கட்டுப்படுத்த உங்களால் இயலும். அதற்கு நேரத்தைக் கட்டுப்படுத்துவது அவசியம் என்பது உங்களுக்குப் புரிந்திருக்க வேண்டும்.

சீன அரசர் தனது அமைச்சரிடம் உத்தரவிட்டார், 'நம்முடைய தலைநகரம் முழுவதும் மரங்கள் வளர்க்கப்பட வேண்டும்' என்று. அமைச்சர் சொன்னார், 'அரசே! குறைந்தது ஐந்து ஆண்டுகளாவது தேவைப்படும்' என்று, 'ரொம்ப சரி. ஒரு நிமிடத்தையும் வீணாக்கக் கூடாது. மரக்கன்று நடுகிற வேலையை இப்போதே தொடங்கி விடுங்கள்' என்றார் அரசர்.

திறந்து கிடக்கிற தெருவைத் திறந்து வைக்கவும், எப்போதும் கட்டப்படாத கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டவும், ஒரு போதும் நிறைவேற்றாமல் விடப்படும் திட்டங்களைத் தொடங்கி வைக்கவும் விழா விளம்பரம் என்று பணத்தையும் நேரத்தையும் பாழடிக்கிற நம் தலைவர்கள் சீன அரசரின் வார்த்தைகளை நினைவில் கொள்ள வேண்டும்.

அன்றாடம் செய்து முடித்த வேலைகளை அன்றன்று இரவே படுக்கைக்குச் செல்லுமுன் ஒரு மறுஆய்வு செய்து கொண்டு விடுங்கள்.

எங்கே தவறு நேர்ந்தது, தாமதம் ஆயிற்று என்பதைத் தெரிந்து கொண்டுவிட்டால். மீண்டும் அப்படியொரு

தவறு தேர்வதை, தாமதம் ஏற்படுவதைத் தவிர்த்து விடலாம்.

நேர ஒதுக்கீடு செய்யும் போது வேலையை மதிப்பிட்டுக் கொள்வது முக்கியம்.

உங்களுடைய வேலை மற்றும் அதிகார எல்லைகளை உணர்ந்திருப்பது நல்லது.

நீங்கள், ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்யும் திறமை உடையவன் நான் என்று எண்ணிக் கொள்ளாதீர்கள். அப்படிச் செய்யப்படுகிற வேலையில் நேர்த்தி இருக்காது. அவசரத்தில் செய்யப்படும் தவறுகளை மீண்டும் திருத்திக் கொள்ள இரண்டு பங்கு நேரம் செலவிடும்படி ஆகும்.

இன்றைய வேலைகள் என்னென்ன என்பதை முதல் நாளே படடியலிட்டுக் கொள்வது நல்லது. வேலையை எப்படிச் செய்வது, எவ்வளவு நேரம் ஒதுக்குவது என்று திட்டமிடுகிற போது எல்லாமே நம் கட்டுப்பாட்டில் இருப்பதாய் உணர்வீர்கள்.

தனிபட்ட முறையிலும், தொழில் தொடர்பிலும் உள்ள நபர்களின் முகவரி தொலைபேசி எண் போன்ற விபரங்களை உங்கள் மேசை மீது கைக் கெட்டும் தொலைவில் வைத்திருங்கள்.

இன்று யார் யாரைச் சந்திப்பது, எந்தெந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வது என்பது பற்றிய டே பிளானர் (Day Planner) ஒன்றும் உங்களிடம் இருக்க வேண்டும்.

1. உங்கள் பொறுப்புக்களை கடமைகளை உணர்ந்திருங்கள்.



2. துரிதமாய் முடிவெடுக்கப் பழகுங்கள்.

3. உங்கள் அலுவலக மேசை அடைசலாயிருக்கக் கூடாது.

4. கொள்கைப் பிடிப்புடன் இருங்கள்

5. விதிகளைக் கடைப்பிடியுங்கள்

6. கடந்த காலத்தில் நடந்தவற்றை எண்ணிக் கவலைப் படுவதோ, இழந்தவற்றுக்காக வருந்துவதோ கூடாது. வருங்காலம் பற்றிய அநாவசியக் கற்பனைகளும் பயனளிக்காது என்பதால் அவற்றைத் தவிர்க்கவும்.

7. பிரச்னைகளை குடன் தீர்த்து விடுவது நல்லது. பிரச்னைகளை முற்ற விட்டால் அவை உங்கள் கட்டுப்பாட்டில் இருந்து மீறியதாகும்.

★

## 7. குறுக்கீடுகள்

உங்கள் அலுவல் நேரம் எட்டு மணி என்றால் அதில் ஒவ்வொரு மணியிலும் எத்தனை குறுக்கீடுகள் நேரும் என்பதை எண்ணிப்பாருங்கள். ஒவ்வொரு குறுக்கீடும் உங்கள் நேரத்தில் எத்தனை நிமிடங்களை அபகரிக்கும் என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள்.

குறுக்கீடுகள் எப்போது வேண்டுமானாலும் வரும், எந்த வடிவத்தில் வேண்டுமானாலும் வரும்.

நேரத்தைத் திறம்படக் கையாளக் கூடியவர்களுக்குத் தெரியும் - குறுக்கீடுகளை எப்படிச் சமாளிப்பது என்பது.

RangaRakes

tamilnavarasam.com

அவர்கள் இல்லை, முடியாது என்று மறுக்கத் தயங்குவதே யில்லை.

மனிதர்கள் நேரடியாகவும். தொலைபேசி வாயிலாக வும் குறுக்கீடு செய்வார்கள். உங்கள் உதவியாளர் அல்லது வரவேற்பு அலுவலரைக் கொண்டு அநாவசியத் தொலை பேசி அழைப்புகளையும் முக்கியமற்ற மனிதர்களையும் வடிகட்டி விடலாம்.

ஷாப்பிங், பொது நிகழ்ச்சி, விருந்து முதலியவற்றில் நிறையப்பேரைச் சந்திக்கும்படி இருக்கும். ஒரு கையசைப்பு, தலையசைப்பு, புன்னகை, சின்னதாய் ஒரு ஹலோ இவற்றுடன் நிறையப் பேரை நீங்கள் கடந்து சென்றுவிட முடியும். பொருளற்ற பேச்சுகள், விமர்சிப்புகளில் நேரம் மட்டுமா வீணாகிறது? தேவை யற்ற தொல்லைகளும், பிரச்னைகளும் வந்து சேர்ந்து விடுகின்றனவே!

உங்கள் அலுவலக அறை நீங்கள் வேலை பார்க்கவும், அலுவல் தொடர்பாய் உங்களைச் சந்திப்பவர்களைப் பேசி அனுப்பவும் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். சந்திப்புகளுக்கென்று நேரம் ஒதுக்கி விட்டால் வேலைக்கு இடையூறு ஏற்படாது.

உங்கள் வேலையின் இடையே ஒருவர் உங்களைக் காண வந்துவிட்டால் (அத்தனை முக்கியம் இல்லை எனில்) நீங்கள் உடனே எழுந்து நில்லுங்கள். நின்றபடியே அவரிடம் பேசி அனுப்பி விடுங்கள். சம்பிரதாய மற்றதாய்த் தெரிகிறதே என்று தயங்க வேண்டாம். அவர் வந்த நோக்கத்தைத் தெரிந்து கொண்டு, ஓரிரு வார்த்தை கள், புன்னகை, நன்றி இவற்றோடு அவரை அனுப்பி



விடலாமே. அவரும் குறைப்பட்டுக் கொள்ள மாட்டார். ‘அவருடைய வேலை நேரத்தில் வந்தது நம்முடைய தவறு, ஆனாலும் அக்கறையோடு பேசினார்’ என்ற நினைப்புடன் சென்று விடுவார்.உங்கள் மேசைக்கு எதிரே இருக்கைகள் இல்லாதிருந்தால் போதும், வருகிறவர்கள் நிமிடத்துக் குள்ளாகவே திரும்பிச் சென்று விடுவார்கள்.

குறிப்பிட்ட நேரத்தைக் கடந்தும் ஒருவர் பேச்சை நீட்டித்துக் கொண்டு போகக் கூடும். நீங்கள் அதை அனுமதிக்கக் கூடாது. எதிராளியின் பேச்சை ஊக்குவிக்கக் கூடாது. கைக் கடிகாரத்தை அல்லது சுவர்க் கடிகாரத்தை அடிக்கடி பாருங்கள். அவராகப் புரிந்து கொண்டு போகட்டும். அப்படியும் போகவில்லை என்றால், ‘மன்னியுங்கள். நாம் இது பற்றி இன்னொரு சமயம் விரிவாய்ப் பேசிக் கொள்ளலாம்’ என்றோ வங்கிக்குப் போக வேண்டும் என்றோ சொல்லுங்கள்.

முகபாவத்தைத் தீவிரமாக வைத்துக் கொண்டு நீங்கள் கேட்டால் போதும், அவர் தானே எழுந்து கொள்வார். இது ஒன்றும் துரத்தியடிக்கிற காரியமல்ல, நாசூக்கான முறையில் வேலையில் நேரிடும் குறுக்கீட்டைத் தவிர்க்கிறீர்கள், அவ்வளவுதான்.

குறுக்கீடு வேலையின் மீது உங்களுக்குள்ள கவ னத்தைச் சிதறடித்து விடும். வேலையைக் குறித்த நேரத்தில் முழுமையாய்ச் செய்ய விடாது.

குறுக்கீடுகளைத் தவிர்ப்பதன் மூலம். ஒரு வேலைக்கு நீங்கள் ஒதுக்கீடு செய்யும் நேரத்தை முழுமையாய்ப் பயன்படுத்திக் கொள்ள முடியும். குறுக்கீடுகளைப் போல் நேரத்தை மோசமான அளவுக்கு வீணடிப்பது எதுவும் இல்லை.

RangaRakes
tamilnavarasam.com

குறுக்கீடுகள் மூன்று வகை

1. அவசரமானது (எதிர்பாராது நிகழ்ந்த ஒரு கெடுதல் பற்றியது)

2. முக்கியமானது (நேற்றுச் செய்த வேலையை வைத்துவிட்டு இன்று வேறொரு வேலையை உடனே செய்து முடிப்பது பற்றியது)

3. எரிச்சலூட்டுவது (ஒரு முக்கியமான வேலையில் ஈடுபட்டிருக்கும் போது வருகிற முக்கியத்துவமற்ற தொலைபேசி அழைப்பு)

இவற்றை உதாரணமாய்ச் சொன்னாலும் அனுபவத்தில் இதுபோல் இன்னும் பல குறுக்கீடுகள் நிகழவே செய்யும்.

நீங்கள் அவசரமான குறுக்கீட்டை உடனே கவனித்தாக வேண்டும்.

முக்கியமான குறுக்கீடு வேலை முந்துரிமை பற்றியது. ஒன்றை ஒதுக்கி வைத்துவிட்டு இன்னொரு வேலையைக் கையில் எடுப்பது பற்றி நீங்கள் தீர்மானித்தாக வேண்டும். மேலதிகாரி அல்லது நிர்வாகத் தலைவரின் குறுக்கீடு என்கிற போது முந்துரிமைப் படுத்துவதை (Proritize) அவரிடமே விட்டு விடலாம்.

எரிச்சலூட்டும் குறுக்கீடுகளை எவ்விதத் தயவு தாட்சண்யமும் இல்லாமல் நீங்கள் மறுத்து விடலாம்.

மனிதர்கள் தீவு மனப்பான்மையுடன் வாழ்ந்து விட முடியாது. சமூகம் என்கிற அமைப்பின் கீழ் அவர்கள் ஒன்று சேர்ந்து வாழ வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.





'என்ன சார் இன்னைக்கு வெய்யில் ரொம்பக் கடுமை இல்லையா' என்கிற மாதிரிக் கேட்டு வைப்பார்கள். தட்பவெப்ப நிலை (Climate) நம்முடைய கட்டுப்பாட்டில் இல்லை யென்றாலும் கேட்டு வைப்போம். சாலையில், படிக்கட்டில், நடைபாதையில் எதிர்ப்படுகிற பரிச்சயமானவரிடம் ஒரு கையசைப்பு, புன்னகை செய்கிறோம், சின்னதாய் ஒரு ஹலோ சொல்கிறோம்.

நான் ஒன்றும் சமுதாயக் கோட்பாடுகளுக்கு எதிரானவன் அல்ல என்பதை மற்றவர்களுக்குப் புரிய வைப்பதற்காகத் தான். மற்றவர்கள் உங்களை மனித குல விரோதியாய் எண்ணிக் கொள்வதை நீங்கள் விரும்ப மாட்டீர்கள், அதே சமயம் அவர்களால் உங்களுடைய நேரம் வீணடிக்கப்படுவதையும் நீங்கள் விரும்ப மாட்டீர்கள்தானே.

★

## 8. வேலை ஒழுங்கு

உங்கள் தோற்றத்திலும், அணிகிற உடைகளிலும் கவனம் செலுத்துகிற மாதிரிதான் வேலையை ஒழுங்கு படுத்திக் கொள்வதும். வேலையைத் திட்டமிட்டுக் கொள்வது அவசியம். திட்டம் ஒரு தெளிவை ஏற்படுத்தும். வேலையை வேலையின் விளைவை அது மதிப்பிட்டு உதவும்.

திட்டமிடுவது நன்மை செய்யுமா?

நிச்சயமாக! உங்கள் குறிக்கோளை அடையவும், குறியீட்டெல்லை (Target) களைத் தொடவும்

திட்டமிடுங்கள். திட்டமிடுவதன் மூலம் நேரம். உழைப்பு, பணம் இவை கணிசமாய் மிச்சப்படும். நீங்கள் திட்டமிட்டுக் கொள்ளாவிட்டால் உங்கள் வேலையின் பளு கூடிக் கொண்டே போகும்.

முன் பின் போயறியாத நகரத்தில் சாலை வரை படம் (Road Map) எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் வேலைத் திட்டமும்.

செயல்திட்டம் போலவே ஒழுங்கமைப்பு உபகரண மாகப் பதிவேடு ஒன்றையும் வைத்துக் கொள்ளலாம். அதில் உங்கள் வேலைகளை மூன்று பிரிவாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். எதுவெல்லாம் முக்கியமானதும், உடனடியாய்ச் செய்து முடிக்க வேண்டியதாயும் இருக்கிறதோ அதுவெல்லாம் பிரிவு 1லும் முக்கியமான அதே சமயம் அவசரமில்லாதவற்றைப் பிரிவு 2லும், முக்கியத்துவம் குறைந்தவைகளைப் பிரிவு 3லும் இடம் பெறச் செய்ய வேண்டும்.

உங்கள் சார்பாக உங்கள் உதவியாளரோ, கீழமைப் பணியாளர்களோ (Sub Ordinates) செய்ய வேண்டியவை களையும் அந்தப் பதிவேட்டில் ஒரு பக்கமாய்க் குறித்துக் கொள்ளலாம்.

**காலக் கெடு**

சி. நார்த்கோட் பார்கின்ஸன் என்பவர் ஒரு விதியை உருவாக்கினார். அதன்படி, கிடைக்கிற நேரத்துக்குத் தக்கபடி வேலை விரிவடைந்து கொண்டே போகும்.

ஒரு வேலையை ஆறுமணிநேரத்தில் முடிப்பது என்று நீங்கள் தீர்மானித்து இருந்தால் அது ஆறு மணி நேரத்துக்கும் வளர்ந்து கொண்டே போகும்.





மூன்று மணி நேரத்தில் முடிந்தாக வேண்டும் என்ற நிலையில் இருந்தால் அந்த மூன்று மணி நேரத்தில் அதைச் செய்து முடித்துவிடலாம்.

நாம் நிர்ணயித்துக் கொள்கிற காலக் கெடுவைப் பொறுத்தே ஒரு வேலை விரிவடைகிறது அல்லது குறுகி விடுகிறது. கெடுவிற்குள் ஒரு வேலையை முடித்தே தீருவது என்று முனைந்து விட்டால் எதுவும் சாத்தியந்தான்.

வீட்டில்... குடும்பக் கடமைகள் அநேகம். யார் யார் எந்தெந்தப் பொறுப்புகளை ஏற்பது என்று முடிவு செய்து கொள்ளுங்கள். அவரவரும் தங்களுக்குரிய வேலைகளைச் செம்மையாய்ச் செய்து முடிக்க இது உதவும்.

குடும்பக் கடமைகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டால் கணவன் மனைவி இருவருமே அலுவலகம் சென்று வருவது சாத்தியம். வார விடுமுறைகளில் வீட்டைச் சுத்தம் செய்வது, தோட்ட வேலை இவற்றில் குழந்தைகளையும் ஈடுபடுத்தலாம். அவர்கள் பொறுப் புடையவராய் வளர இது வகை செய்யும்.

அலுவலக வேலை பணத்தைப் பெற்றுத் தரும். வீட்டில் செய்கிற வேலை குடும்பத்தினரின் மகிழ்ச்சிக்கு உதவும்.

**கால அட்டவணை**

அலுவலக வேலைகளைப் போலவே வீட்டு வேலைகளையும் அட்டவணைப் படுத்திக் கொண்டு விடலாம்.

அன்றாட வேலைகளை எந்தெந்த நேரத்தில் செய்வது, எவ்வளவு நேரம் செய்வது என்பது அட்டவணையில் தெளிவாகும். குடும்ப உறுப்பினர்களின் வேலைகளையும் அந்த அட்டவணையில் இடம் பெறச் செய்யலாம். அதன் மூலம் எல்லா வேலைகளையும் நீங்கள் சரிவரச் செய்வீர்கள். மிச்சப்படுகிற நேரத்தை உங்கள் குடும்ப உறுப்பினர்களோடு பொழுது போக்கு, பொது நலச் சேவை இவற்றிலும் நீங்கள் ஈடுபட முடியும்.

**உரிய இடம்**

சமையலறையில் வைக்க வேண்டிய பொருளைப் படுக்கையறைக்கும், படுக்கையறையில் வைக்க வேண்டியதை வரவேற்பறைக்கும் கொண்டு வந்து விட்டால் குளறுபடிதான்.

சாவிகளை அவற்றுக்குரிய இடத்தில் வைக்கா விட்டால் வீடு முழுக்கத் தேடுவீர்கள், நாள் முழுக்கத் தேடிக் கொண்டிருப்பீர்கள். மேசை மீது என்னென்ன பொருட்கள் இருக்கவேண்டும். மேசை இழுப்பறையில் எவற்றை வைப்பது என்பதில் கவனமாயிருங்கள். இது வீட்டுக்கு மட்டுமல்ல, அலுவலகத்துக்கும் பொருந்தும். பொருட்கள் உரிய இடத்தில் வைக்கப்படாமல் தேடுகிற வேலை மிச்சம். நேரம் வீணடிக்கப்படாது. மனம் உளைச்சலுக்குள்ளாகாது.

அலுவலகத்தில் போலவே வீட்டிலும் கோப்பு முறை (Filing system) தேவைப்படும்.

★ சொத்துக்கள் பற்றிய ஆவணங்கள்

★ வீட்டு வரி, மின்சாரக் கட்டணம், மருந்து பில்கள்



★ ஒப்பந்தம் பற்றி காகிதங்கள்

★ காப்பீட்டு ஆவணங்கள்

★ தவணை கட்டும் ரசீதுகள்

இவற்றைத் தனித்தனியே வகைப்படுத்திப் பாதுகாக்க வேண்டும். பிற்பாடு தேவைப்படுகிற போது ஒரு நிமிடத்தில் எடுத்து விடலாம். எல்லாவற்றையும் குப்பலாக பீரோமூலையில் போட்டுவைத்தால் தேடுவதில் சிரமம். முக்கியமான காகிதங்கள் தொலைந்து போகவும் கூடும்.

★ கல்விச் சான்றிதழ்கள்

★ வேலை நியமன உத்தரவு

★ குடும்பப் புகைப்படங்கள்

★ குழந்தைகளின் கல்வி, மருந்து விவகாரங்கள்

★ ஆவணங்களின் பதிவு எண்கள், முக்கிய நிகழ்ச்சிகள் பற்றிய தேதிகள் இவையும் பாதுகாக்கப்பட வேண்டியவை.

**சுத்தம் செய்தல்**

வீட்டுத்தரை, கண்ணாடி சன்னல், சோபாக்கள் இவை அடிக்கடி சுத்தம் செய்யப்பட வேண்டியவை. வாக்குவம் க்ளீனர் கொண்டு வீட்டைச் சுத்தம் செய்வது சுலபம். மரத்தினாலான பொருட்கள், சுவர்கள், பர்னிச்சர்கள், விளக்கு மூடிகள் (Shades) இவற்றில் படியும் தூசுகளை வாக்குவம் க்ளீனர் கொண்டு நீங்கள் சுத்தப்படுத்தி விடலாம். நீங்கள் குனிந்து வளைந்து சிரமத்துடன் செய்கிற வேலைகளை வாக்குவம் க்ளீனர் எளிதாய்ச் செய்து முடிக்கும்.

RangaRakes

tamilnavarasam.com

## ஒழுங்கு செய்யப்பட்ட அலுவலகம்

நிறுவனம் ஓர் ஒழுங்கான அமைப்பைப் பெற்றிருந்தால் தான் அங்கே வேலை ஒழுங்காக நடக்கும். உற்பத்தி விற்பனை நிர்வாகம் என்று எதிலும் சீர்த்தன்மை இருக்கும்.

அமைப்பு ரீதியில் ஒழுங்கு இருந்தால் தவறு ஏற்படுகிறபோது எளிதில் கண்டறியவும் சரி செய்யவும் இயலும்.

அத்துடன் நேரநிர்வாகத்தில் அது நல்ல விளைவுகளை ஏற்படுத்தும். அலுவலகச் சுவரில் நிறுவன வளர்ச்சி பற்றிய படங்களை, புள்ளி விபரங்களைத் தொங்க விடுவது நல்லது. அவை தொழில் ரீதியான சிந்தனைகளை வாடிக்கையாளர் மனதில் ஏற்படுத்தும்.

வேலை இடம் காற்றோட்டமாகவும், வெளிச்சமாகவும் இருந்தால் அலுவலர்கள் நம்பிக்கையுணர்வோடு, சுறுசுறுப்பாக செயல்பட முடியும். பெரிய நிறுவனங்கள் தங்கள் அலுவலகத்தின் உள்அலங்காரத்தைச் சிறந்த முறையில் செய்திருப்பதைக் கவனியுங்கள். மெத்தை தரை விரிப்பும், சவுகரியமான பர்னிச்சர்களும் அவர்களை எவ்விதச் சிரமமுமின்றித் தொடர்ந்து வேலையில் ஈடுபடுத்தும்.

பணியாளர்களின் மேசைகளில் அவர்களுடைய வேலையின் தன்மைக்கேற்ற தேவையன கருவிகளைப் பொருத்த வேண்டும்.

எப்போதும் எல்லாமும் ஒரே மாதிரியாயிருப்பதில்லை. காலத்துக்கேற்ப ஒவ்வொன்றும் மாற்றத்தை ஏற்கின்றன. நேரத்தை மிச்சப்படுத்துகிற விதமாய் நவீனக் கருவிகளும் உபகரணங்களும் வந்து கொண்டேயிருக்கும். கால மாறுதலுக்குட்பட்டு அலுவலகத்தில் மாற்றங்கள் செய்யத் தயங்கக் கூடாது.



உங்கள் மேசையை நீங்கள் ஒழுங்கு படுத்தி வைத்திருப்பதைக் கொண்டே உங்கள் அலவலகத்தின் ஒழுங்கமைவை ஒருவாறு ஊகித்துக் கொண்டு விட முடியும்.

உங்கள் மேசை மீது அவசியமானவைகளை மட்டுமே வைத்துக் கொள்ளுங்கள். தேவைப்படுகிற எல்லாமும், கைக் கெட்டுகிற மாதிரி இருக்க வேண்டும்.

செயல் தாமதத்திற்கு முற்றுப்புள்ளி வையுங்கள். கடினமான வேலைகளை முதலில் செய்து முடியுங்கள். கவனத்தை ஒரு முகப்படுத்தி வேலை பாருங்கள். குறுக்கீடுகளைத் தவிர்த்து விட்டாலே பாதி வேலை முடிந்த மாதிரி, பாதி நேரம் மிச்சமாகி விடும்.

நவீனத் தொழில் நுட்பங்களை முழுமையாய்ப் பயன்படுத்துங்கள். எனக்குத்தனிப்பட்ட முறையில் நேரமே இல்லை என்று குறைப்பட்டுக் கொள்கிற நிலை உங்களுக்கோ, உங்கள் பணியாளர்களுக்கோ இருக்கக் கூடாது. காரணம், அதுவே (அந்த நேரம்) வாழ்வின் முக்கியத்துவத்தை அவர்கள் உணர்ந்து கொள்ளும் தருணம் ஆகும்.

★

RangaRakes

tamilnavarasam.com

## 9. வேலை ஒப்படைப்பு

உங்களுடைய வேலைப் பளு குறைய வேண்டும் என்றால் வேலையை மற்றவர்களுக்கும் பிரித்து ஒப்படைக்க வேண்டும். ஆங்கிலத்தில் இதனை 'delegation' என்பார்கள்.

★ வேலைப் பகிர்வின் மூலம் உங்களுடைய சுமை குறையும், நேரமும் கணிசமாய் மிச்சப்படும்.

★ கீழமைப் பணியாளர்களிடம் வேலையைப் பிரித்து ஒப்படைப்பதால் மிச்சப்படும் நேரத்தை நீங்கள் மற்றொரு வேலைக்குப் பயன்படுத்த முடியும்.

★ உங்களுடைய திறமைக்கும் குறைவான சில்லறை வேலைகளில் உங்கள் ஆற்றலை வீணடிக்க வேண்டியிராது;

★ வேலைகளைப் பிரித்து ஒப்படைக்கும் போது முதலில் கவனிக்க வேண்டியது பணியாளரின் திறமையை. அவரவரின் திறமைக்கேற்ற வேலையை அவரவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

★ வேலை ஒப்படைப்புச் செய்ய ஊழியர்களிடம் நம்பிக்கை வைப்பது முக்கியம்.

★ வேலை ஒப்படைப்பு ஊழியர்களுக்குப் பயிற்சியாய் அமையும். தங்கள் திறமையை மேம்படுத்திக் கொள்வதற்குக் கிடைத்த வாய்ப்பாக அவர்கள் அதைக் கருத வேண்டும்.

★

RangaRakes

tamilnavarasam.com

# பெரியோர்கள் சந்தித்த பரபரப்பூட்டும் நிகழ்ச்சிகள்

## விளங்காமல் கொடுத்த விளக்கம்

**வி**டுதலைப் போராட்ட காலத்தில் இராஜாஜியும் பிற்காலத்தில் பெரியார் என்ற சிறப்புக் பெயரால் அழைக்கப்பட்ட ஈ.வே. இராமசாமியும் நெருக்கமான நண்பர்களாக இருந்தார்கள்.

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் அரசியல் மாநாட்டில் கொண்டு வரப்பட்ட ஒரு தீர்மானத்தைத் தோற்கச் செய்ய வேண்டும் என்று இராஜாஜி நினைத்தார்.

முன்னால் பேசிய ஒருவர் தீர்மானத்தை ஆதரித்து மிகவும் அற்புதமாகப் பேசிவிட்டார். விட்டுவிட்டால் தீர்மானம் நிறைவேறி விடும்.

அந்தச் சமயத்தில் ஈ.வே.ரா. (பெரியார் என்று அப்பொழுது குறிப்பிடும் வழக்கம் இல்லை) மேடைக்கு வந்து சேர்ந்தார். மேடையில் என்ன நடந்தது என்று அவருக்குத் தெரியாது.

இராஜாஜி ஈ.வே.ரா.வை அழைத்து பிரேரேபிக்கப்பட்டிருக்கிற தீர்மானத்தைச் சொல்லி அதை எதிர்த்துப் பேசுமாறு கேட்டுக் கொண்டார்.

ஈ.வே.ரா. சற்றும் தயங்காமல் எழுந்து சென்று தீர்மானத்தை எதிர்த்து தர்க்க ரீதியான காரணங்களைச் சொல்லி எதிர்த்துப் பேசினார்.

அவர் பேச்சு பிரதிநிதிகளை வெகுவாகக் கவர்ந்ததால் தீர்மானம் தோற்றுவிட்டது.

ஈ.வே.ரா. இராஜாஜியை நோக்கி 'அந்தக் தீர்மானம் என் கருத்துக்கு ஒத்துவரக் கூடியதாயிற்றே. அதை எதற்காக எதிர்த்துப் பேசச் சொன்னீர்கள்?'' என்று கேட்டார்.

''எதற்காக அந்தத் தீர்மானத்தை எதிர்க்க வேண்டும் என்பது பற்றித்தான் தர்க்க ரீதியாக விளக்கமாகப் பேசினீர்களே? நீங்கள்

RangaRakes tamilnavarasam.com

பேசிய காரணங்களுக்காகத்தான் நான் அதை எதிர்த்தேன்" என்றார் இராஜாஜி புன்முறுவலுடன்.

## புடைவை கொடியாயிற்று!

ஜெர்மனியில் 1907 ஆம் ஆண்டில் சர்வதேச மாநாடு ஒன்று நடைபெற்றது. தாதாபாய் நௌரோஜியின் செயலாளராகப் பணியாற்றி வந்த திருமதி. காமா அம்மையார் மாநாட்டில் கலந்து கொண்டார்.

அந்த மாநாட்டிலே பாரத நாட்டுக்கு முழுச் சுதந்திரம் வேண்டும் என காமா அம்மையார் முழக்கமிட்டார். அந்தச் சமயத்தில் பாரதத்தின் தேசியக்கொடி என்று எதுவும் இல்லை.

அந்தச் சமயத்தில் பாரதத்தின் தேசியக் கொடி என்று எதுவும் இல்லை.

உங்கள் தேச தேசியக் கொடி எது என்று யாரோ கேள்வி எழுப்பினர்.

காமா அம்மையார் ஒரு கணம் யோசித்தார்.

அப்போது அவர் பச்சை வண்ணச் சேலை அணிந்திருந்தார். சேலையின் முன்றானை காவி நிறத்தில் இருந்தது.

காவி நிறமும் பச்சை நிறமும் சேர்ந்தாற் போலிருக்குமாதலால் தமது புடைவையின் ஒரு பகுதியைக் கிழித்து, "இதுதான் எங்கள் தேசியக் கொடி" எனப் பறக்க விட்டார்

அந்தக் கொடியின் வண்ணத்தை ஒட்டித்தான் பிற்காலத்தில் பாரதத்தில் காங்கிரஸ் கட்சி தனது தேசியக் கொடியை அமைத்துக் கொண்டது.

## காலம் வரும்?

பிரிட்டிஷ் ஆட்சியின் பிரதமராக ஒரு காலத்தில் இருந்தார் டிஸ்ரேலி என்பவர்.



அவர் கூச்ச சுபாவம் உள்ளவர். பொதுக் கூட்டங்களில் பேசிப் பழக்கமில்லாதவர்.

அவர் பிரதமராகப் பதவி வகிக்குமுன் காமன்ஸ் சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது - முதன் முதலாக காமன்ஸ் சபையில் பேச முற்பட்டபோது அவருக்குப் பேச நாவெழவில்லை. வாயைத் திறந்து இரண்டொரு சொற்கள் பேசச் சொற்கள் குழறின. ஒன்றும் பேசாமலே உட்கார்ந்து விட்டார்.

அந்தக் காட்சியைக் கண்டு காமன்ஸ் சபை உறுப்பினர்கள் கைதட்டி ஆரவாரம் செய்து அவரை ஏளனப் படுத்தினர்.

டிஸ்ரேலிக்குக் கோபம் வந்துவிட்டது.

"நான் பேச்சின் மூலமே உலகப் புகழ் பெறுவேன். ஒரு காலத்தில் என் பேச்சைக் கேட்பதற்காக நீங்கள் காத்திருப்பீர்கள்" என்று ஆவேசத்துடன் கூறிவிட்டு உட்கார்ந்தார்.

டிஸ்ரேலி அன்றிலிருந்து திட்டமிட்டுத் தனது பேச்சாற்றலை வளர்த்துக் கொண்டார். நாளடைவில் மிக அற்புதமாகப் பேசும் திறனைப் பெற்றார். விவாத ரீதியாக அவர் பேசும் பேச்சைக் கேட்க மக்கள் திரண்டனர். உலகத்தின் மிகச் சிறந்த பேச்சாளிகளில் ஒருவர் என்ற பெரும் புகழையும் அவர் பெற்றார்.

டிஸ்ரேலி ஒரு முறையன்று - இரண்டு முறை பிரிட்டிஷ் பிரதம மந்திரியாகப் பதவி வகித்துச் சிறப்படைந்தார்.

## மிக விலை உயர்ந்த பொருள்

மௌலானா ஜாமீன் என்பவர் உலகப் புகழ் பெற்ற பாரசீகக் கவிஞராகத் திகழ்ந்தார். சிறந்த தத்துவ ஞானியாகவும், கவர்ச்சி மிக்க பேச்சாளராகவும் கூட அவர் இருந்தார்.

மௌலானா ஜாமீன் வீட்டிலிருக்க நேர்ந்தால் வீட்டுக் கதவை மூடி உட்புறம் தாளிட்டுக் கொள்வார். வீட்டை விட்டு வெளியே புறப்பட்டால் கதவைத் திறந்து போட்டுவிட்டுச் செல்வார்.

RangaRakes tamilnavarasam.com

அவருடைய அந்த வினோதமான நடவடிக்கை அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

ஒரு நாள் நண்பர் ஒருவர் மௌலானா ஜாமீனை நோக்கி, "உங்கள் செயல் விந்தையாக உள்ளதே! சாதாரணமாக மக்கள் வீட்டைவிட்டு வெளியே செல்லும்போதுதான் பாதுகாப்புக்காக வீட்டைப் பூட்டி விடுவார்கள். நீங்களோ வீட்டுக்குள்ளிருக்கும் போது தாழ்ப்பாள் போட்டுக் கொள்கிறீர்கள். வீட்டை விட்டு வெளியே செல்லும்போது திறந்து போட்டு விடுகிறீர்கள். இது ஏன்? என வினவினார்.

"மிகவும் விலை உயர்ந்த பொருளாக என்னை மட்டுமே நான் நினைத்துக் கொள்கிறேன். ஆகவே விலை உயர்ந்த பொருள் வீட்டில் இருக்கும்போது கதவைத் தாழ்ப்பாளிட்டுப் பாதுகாப்பு செய்கிறேன். நான் வீட்டை விட்டு வெளியே செல்லும்போது விலை உயர்ந்த பொருள் வீட்டில் இல்லை அல்லவா எதற்காக வீட்டைப் பூட்டிப் பாதுகாக்க வேண்டும்? அதனால்தான் வீட்டைத் திறந்து போட்டு விட்டு வெளியேறுகிறேன்" என்றார் மௌலானா ஜாமீன்.

## யார் மீது கோபம்?

பாரதத்தில் காந்தியடிகள் முதன் முதலாக பொது வாழ்வில் ஈடுபட்டிருந்த சமயம் ஒருநாள் நண்பர் ஒருவருடன் அவருடைய காரில் பயணம் செய்து கொண்டிருந்தார்.

காந்தியடிகள் அந்தக் காரில் பயணம் செய்கிறார் என்று அறிந்த அவரைப் பிடிக்காத சிலர் மறைவாக இருந்து கொண்டு கார் மீது சரமாரியாகக் கற்களை வீசினர்.

காந்தியடிகள் வண்டியை நிறுத்தச் சொன்னார்.

பிறகு காரை விட்டு இறங்கி கார் மீது கல் வீசியவர்கள் இருந்த இடத்திற்குச் சென்றார்.

அவர்களை நோக்கி, "உங்களுக்கெல்லாம் என்மீது கோபம் என்று எனக்குத் தெரியும். நீங்கள் உங்கள் கோபத்தைக் காண்பிக்க



என் மீது கல் வீசுவதுதான் நியாயம். இந்தக் கார் என்னுடையதன்று. என் நண்பருடையது. இந்தக் கார் மீது கல் வீசினால் அது என்னை பாதிக்காது. நண்பரின் கார்தான் சேதப்படும். அதனால் நான் தனியாக நிற்கிறேன். உங்கள் கோபம் தீரும்வரை என்மீது கல் வீசுங்கள். அப்புறம் இந்த இடத்தை விட்டுச் செல்லுகிறேன்" என்றார்.

கல் எறிந்தவர்கள் வெட்கப்பட்டு காந்தியடிகளை வணங்கி விட்டுச் சென்றார்கள்.

## பொறுப்பு எங்கே?

**கா**மராஜ் சிறுவனாக இருந்த சமயம் க்ஷத்திரிய வித்தியாசாலா என்ற தொடக்கப் பள்ளியில் கொஞ்ச காலம் படித்தார்.

பள்ளியில் அப்போது சிறப்பு பூசைகள் நடக்கும். மாணவர்கள் அந்தப் பூசையில் உற்சாகத்துடன் கலந்து கொள்வார்கள்.

இந்தப் பூசைக்காக ஒவ்வொரு மாணவரும் ஓர் அணா கொடுத்தார்கள். காமராஜ் அவர்கள் ஒன்றரை அணா கொடுத்தார்.

பூஜைக்குக் காமராஜும் சென்று சாமி கும்பிட்டார். பூஜை முடிந்ததும் மாணவர்கள் எல்லாம் வரிசையாக நின்று பிரசாதத்தை வாங்கிக் கொள்ள வேண்டும் என்று பள்ளி நிர்வாகிகள் மாணவர்களுக்கு உத்தரவு போட்டார்கள்.

மாணவர்கள் வரிசையாக முதலில் நின்றார்கள். ஆனால் பிரசாதம் தரப்படும்பொழுது மாணவர்கள் ஒழுங்கு மாறி அடித்து மோதிச் சென்று பிரசாதம் வாங்க முற்பட்டார்கள்.

காமராஜ் மற்ற மாணவர்களைப் போல அடித்து மோதிச் சென்று பிரசாதம் வாங்க முற்படவில்லை. ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றார்.

அவரைத் தேடி வந்து யாரும் பிரசாதம் தரவில்லை. அவர் வெறுங்கையுடன் வீடு திரும்பினார்.

காமராஜரின் பாட்டி பேரன் பிரசாதம் வாங்காமல் திரும்பி வந்ததைக் கண்டு, "நீ பிரசாதம் வாங்க வில்லையா?" என்று கேட்டாள்.

RangaRakes tamilnavarasam.com

அங்கே நடந்த நிகழ்ச்சியினை விவரித்த காமராஜ், "பாட்டி! இந்த விஷயத்திலே வாத்தியார் பொறுப்பா நடந்திருக்கணும். பூசைக்குக் காசு கொடுத்த எல்லா பிள்ளைகளுக்கும் அவர் பிரசாதம் கொடுத்திருக்கணும். ஒழுங்குக்கு மாறாக அடித்து மோதிச் சென்ற பிள்ளைகளுக்கு மட்டும் பிரசாதம் கொடுத்துவிட்டு, அமைதியா இருந்த எனக்கு வாத்தியார் பிரசாதம் கொடுக்காமல் விட்டது பொறுப்பில்லாத செயல் பாட்டி" என்று காமராஜ் கோபத்துடன் கூறினார்.

## ஷேக்ஸ்பியரின் சொத்து

ஆங்கில இலக்கியத்தின் மங்காத ஒளி நட்சத்திரமாக இருப்பவர் ஷேக்ஸ்பியர். இங்கிலாந்து நாட்டுக்கும் பல பெருமைகள் இருந்தாலும் ஷேக்ஸ்பியரின் பிரசித்தி பெற்ற இறவாத புகழுடைய நாடகங்கள்தான் சிகரம் வைத்தது போலத் திகழுகின்றன.

ஷேக்ஸ்பியர் திருமணம் செய்துகொண்ட ஹானே ஹதாலே என்ற பெண்மணி அவரைவிட எட்டு ஆண்டுகள் மூத்தவராவார்.

இருவரும் தொடக்கக் கால முதலே மன ஒற்றுமை ஏற்பட வில்லை. எப்பொழுது பார்த்தாலும் வீட்டில் சண்டை சச்சரவுதான்.

அதன் காரணமாக ஷேக்ஸ்பியர் மனைவியை விட்டு வெகு தொலைவு சென்று தனியாக வசித்து வந்தார்.

வறுமைச் சூழல் காரணமாக ஷேக்ஸ்பியர் பதின்மூன்று வயதிலேயே பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு வேலைக்குச் சென்றார்.

அவர் செய்யாத தொழில் இல்லை. பால் கறந்தார். ஆடு மேய்த்தார். தோல் பதனிடும் தொழிலைச் செய்தார்.

பிழைப்பு நாடி லண்டன் நகரத்துக்கு வந்தார். நாடகங்களை நடத்தினார்.

RangaRakes



நடிப்பு அவருக்குக் கைகொடுத்தது. நிறைய வருமானம் வந்தது. வந்த பணத்தை வீண் செலவு செய்யாமல் சேர்த்து வைத்து நல்ல வட்டிக்குக் கடன் கொடுத்து பணத்தை மேலும் வளர்த்தார்.

ஷேக்ஸ்பியருக்கு நாற்பது வயதானபோது அவருக்கு ஏராளமான சொத்து இருந்தது.

ஷேக்ஸ்பியர் மரணமடைந்த போது தமது சொத்தில் மனைவிக்காக ஒரு சென்ட்கூட எழுதி வைக்கவில்லை.

ஷேக்ஸ்பியரின் புகழ் பெற்ற நாடகங்கள் அனைத்தும் அவர் மரணமடைந்த பிறகுதான் வெளிவந்து புகழ் சேர்த்தன.

## லிங்கன் போக விரும்பிய இடம்

ஐக்கிய அமெரிக்க நாடுகளின் காங்கிரசுக்கு தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்தது. அது 1847 ஆம் ஆண்டு.

'விக்' கட்சியின் சார்பில் ஆபிரகாம் லிங்கன் அபேட்சகராக நின்றார்.

அவருக்கு எதிராக 'டெமொக்ராடிக்' கட்சியின் சார்பில் பீட்டர் கார்ட்னாட் என்னும் பாதிரியார் நின்றார்.

பீட்டர் கார்ட்னாட் ஒரு மாதா கோயிலில் மதப் பிரசாரம் நடத்திக் கொண்டிருந்தார்.

அதாவது மதப்பிரசாரம் செய்யும் சாக்கில் தமக்கு ஆதரவு தேட தேர்தல் பிரசாரம் செய்தார்.

அந்தக் கூட்டத்திற்கு ஆபிரகாம் லிங்கனும் போயிருந்தார்.

லிங்கனுக்கு கடவுள் நம்பிக்கையும் மதப்பற்றும் இல்லை என்று நிரூபிக்க வேண்டும் என்று கார்ட்னாட் நினைத்தார்.

உடனே அவர் தமது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த வர்களை நோக்கி, "உங்களிலே சுவர்க்கத்தை அடைய விரும்புவோர் எழுந்து நில்லுங்கள்" என்றார்.



tamilnavarasam.com

பலர் எழுந்து நின்றவர் ஆபிரகாம் லிங்கன் எழுந்து நிற்கவில்லை.

"நரகத்துக்குச் செல்ல விரும்பாதவர்கள் எழுந்து நில்லுங்கள்" என்று பீட்டர் கார்ட்னாட் கேட்டார்.

லிங்கனைத் தவிர மற்ற அனைவரும் எழுந்து நின்றனர்.

பீட்டர் கார்ட்னபட் ஏளனமான குரலில் "லிங்கன் அவர்களே! நீங்கள் சொர்க்கத்துக்கும் போகாமல் நரகத்துக்கும் போகாமல் வேறு எங்குதான் போக விரும்புகிறீர்கள்?" என்று கேட்டார்.

"நீங்கள் போக முடியாத இடத்திற்குப் போக விரும்புகிறேன்." என்றார் லிங்கன்.

"அது என்ன இடம்?" என்று கார்ட்னாட் ஆச்சரியத்துடன் வினவினார்.

ஆபிரகாம் லிங்கன் நிதானமான குரலில் "நான் காங்கிரசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செல்ல விரும்புகிறேன்" என்றார்.

## கூலி பேசாத வேலைக்காரர்

விடுதலைப் போராட்ட காலத்தில் பாலகங்காதர திலகரின் நடவடிக்கைகளை உளவு அறிவதற்காக பிரிட்டிஷ் சர்க்கார் ரகசியப் போலீஸ்காரன் ஒருவனை திலகர் வீட்டில் சமையல்காரனாக இருக்குமாறு அனுப்பி வைத்தனர். அவனும் அப்படியே திலகரின் சமையற்காரனாகப் பணிபுரிந்து வந்தான்.

சில மாதங்கள் சென்றன. ஒருநாள் சமையல். காரனாக இருந்த ரகசியப் போலீஸ்காரன் திலகரை வணங்கி, "எஜமான்! சம்பளம் போதவில்லை. கூட்டித் தர வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான்.

திலகர் சிரித்துக் கொண்டே, "ஏனப்பா, நான் உனக்கு ஆறு ரூபாய் சம்பளம் தருகிறேன். பிரிட்டிஷ் அரசாங்கமோ உனக்கு அ இருபத்தாறு ருபாய் சம்பளம் கொடுக்கிறது. இன்னும் உனக்குத் திருப்தி ஏற்படவில்லை என்றால் உன்னுடைய முதல் எஜமானார் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் தான் கேட்க வேண்டும்" என்றார்.



ரகசியப் போலீஸ்காரனின் தலை அவமானத்தால் தாழ்ந்து விட்டது. அதற்குப் பிறகு அங்கே அவன் வேலைக்கு வரவில்லை.

## தொப்பியின் மகத்துவம்

மன்னரின் முன்னிலையில் இருக்கும் போது குடிமக்கள் யாரும் தலையில் தொப்பி அணிந்திருக்கக் கூடாது என்பது இங்கிலாந்து நாட்டில் இன்றுவரை இருந்துவரும் மரபாகும்.

இரண்டாம் சார்லஸ் இங்கிலாந்து நாட்டின் மன்னராக இருந்த சமயம் ஒரு பள்ளிக்கூடத்தைப் பார்வையிடச் சென்றார்.

அந்தப் பள்ளியின் தலைவராக இருந்த டாக்டர் புஸ்பி என்பவர் இங்கிலாந்து நாட்டின் சிறந்த கல்விமான் என்று போற்றப் பட்டவர். அவர் தலைமையிலுள்ள பள்ளியில் தரமான கல்விப் போதனை உண்டு என்ற நற்பெயர் இருந்தது.

தம்முடைய பள்ளியைப் பார்வையிட வந்த மன்னர் இரண்டாம் சார்லஸை டாக்டர் புஸ்பி மிகுந்த வணக்கத்துடனும் மரியாதையுடனும் வரவேற்றார். தம்முடைய பள்ளி முழுவதையும் சுற்றிக் காண்பித்தார்.

மன்னருடன் அவர் இருந்த நேரம்வரை டாக்டர் புஸ்பி தமது தலைத் தொப்பியை அகற்றவே இல்லை. மரபை மீறி தலையில் தொப்பி அணிந்திருந்தார்.

மன்னர் பள்ளியை விட்டுப் புறப்படுமுன் டாக்டர் புஸ்பி மரபை மீறி மன்னர் முன்னிலையில் தொப்பி அணிந்ததற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

பிறகு அதற்கான காரணத்தையும் சொன்னார்.

"மன்னர் அவர்களே, தங்களை அவமதிக்கும் நோக்கம் எனக்கு இல்லை. இந்த உலகத்தில் டாக்டர் புஸ்பியை விட உயர்ந்தவர் யாரும்

RangaRakes

tamilnavarasam.com

இருக்கமுடியாது என்று என்னுடைய மாணவர்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் முன் நான் தொப்பியில்லாமல் காட்சியளித்தால் என்னைப் பற்றிய மதிப்பும் மரியாதையும் மாணவர் களிடம் குறைந்துவிடும். அதனால்தான் தங்கள் முன்னிலையில் தொப்பியை எடுக்காமலிருந்தேன்'' என்றார் டாக்டர் புஸ்பி.

## பெரியோர்க்கு உள்ள மரியாதை

**ப**தினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டில் இருந்த ஜென்னர் என்னும் அறிஞர் அந்தக் காலத்தில் பயங்கரமான கொள்ளை நோயாக இருந்த வைசூரி நோயைக் கட்டுப்படுத்தும் சிகிச்சை முறையைக் கண்டு பிடித்தார்.

அவர்தான் வைசூரி நோய்த் தடுப்புக்காக அம்மை குத்தும் முறையை அறிமுகப்படுத்தினார்.

அப்போது பிரான்ஸ் நாட்டை ஆண்டுவந்த நெப்போலியனுக்கு டாக்டர் ஜென்னர் மீது அளவு கடந்த மதிப்பும் மரியாதையும் உண்டு.

ஒரு சமயம் டாக்டர் ஜென்னரின் நண்பர்களான இரண்டு ஆங்கிலேயர்களை பிரெஞ்சு அரசாங்கம் கைது செய்துவிட்டது.

“அவர்கள் தமது நண்பர்கள் என்றும் குற்றமற்றவர்கள் என்றும். அவர்களை விடுதலை செய்து இங்கிலாந்து நாட்டுக்கு அனுப்ப வேண்டும்'' என்றும் டாக்டர் ஜென்னர் நெப்போலியனுக்கு வேண்டுகோள் கடிதம் ஒன்றை அனுப்பினார்.

நெப்போலியன் அந்த வேண்டுகோள் கடிதத்திலிருந்த கையெழுத்தைச் சரியாகக் கவனிக்கவில்லை. “வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை'' என்று அந்தக் கடிதத்தில் நெப்போலியன் எழுதி அதைத் தொடர்புடைய அதிகாரிகளுக்கு அனுப்புவதற்காக வைத்திருந்தார்.

தற்செயலாக அந்தப் பக்கம் வந்த நெப்போலியனின் துணைவியார் அந்தக் கடிதத்தைப் படித்துவிட்டு “அன்பரே! இந்த



வேண்டுகோள் டாக்டர் ஜென்னரிடமிருந்து வந்திருக்கிறது என்பதைத் தாங்கள் கவனிக்கவில்லையா?'' என்று சொன்னாள்.

“அப்படியா?'' என்று அந்தக் கடிதத்தை எடுத்துப் பார்த்த நெப்போலியன் “நல்ல வேளை. பெரிய தவறு செய்ய இருந்தேன். டாக்டர் ஜென்னர் உலக மக்களுக்காக எவ்வளவு பெரிய சேவை செய்தவர். அவருடைய வேண்டுகோளை எவ்வாறு புறக்கணிக்க முடியும்?'' என்று கூறியவாறே டாக்டர் ஜென்னரின் நண்பர்களான ஆங்கிலேயர்களை விடுதலை செய்து அவர்களை மரியாதையுடன் இங்கிலாந்து நாட்டுக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார்.

## தைமூரின் வலை

**அ**ரசன் தைமூர் தனது அரசவைக் கவிஞரான கிர்மானியுடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

அப்போது தைமூர் கவிஞர் கிர்மானியை நோக்கி, ‘கவிஞரே! நான் என்னை விற்பனை செய்யத் தீர்மானித்திருக்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். என்னை நீங்கள் விலை கொடுத்து வாங்குவதாக இருந்தால் எவ்வளவு பணம் கொடுப்பீர்கள்?'' என்று கேட்டார்.

கவிஞர் கிர்மானி அஞ்சா நெஞ்சம் படைத்தவர் என்று புகழப் படுபவர். தமது மனத்தில் பட்டதை யாருக்கும் அஞ்சாமல் வெளியிடுபவர்.

தைமூரின் வினாவுக்கு “மன்னர் அவர்களே! தங்களை விலைக்கு வாங்கும் நிலை எனக்கு ஏற்பட்டால் நூறு காசுகள் கொடுப்பேன்'' என்று பதிலளித்தார் கிர்மானி.

தைமூர் சிரித்துக்கொண்டே “கவிஞரே. என் இடுப்பில் அணிந்திருக்கும் கச்சே நூறு காசு விலை பெறும்'' என்றார்.

“மன்னவரே. நான் சொன்ன விலை அந்தக் கச்சுக்காகத்தான். தனிப்பட்ட முறையில் நீங்கள் எந்தச் செப்புக் காசையும் பெற மாட்டீர்கள். நீங்கள் மட்டுமென்ன. எந்த மனிதனுடைய விலை மதிப்பும் அவ்வளவுதான்'' என்றார் கவிஞர் கிர்மானி.

RangaRakes
tamilnavarasam.com

## இராஜாஜியின் சமபந்தி உணவு

சகஜானந்தர் என்பவர் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர். ஆனால் வடமொழியையும் தமிழ் மொழியையும் கற்றுப் புலமை பெற்றுத் திகழ்ந்தவர்.

வேதாந்தியாகவும் துறவியாகவும் திகழ்ந்த சகஜானந்தாவிடம் ராஜாஜி அவர்கள் மிகுந்த அன்புடனும் நட்புறவுடனும் பழகினார்.

சகஜானந்தர் சிதம்பரத்திலே "நந்தனார் கலைக் கழகம்" என்ற ஒரு நிறுவனத்தை அமைத்து அதன் மூலம் சமூகத் தொண்டாற்றி வந்தார்.

நந்தனார் கலைக் கழகத்திற்கு ராஜாஜி அடிக்கடி பொருளுதவி செய்திருக்கிறார்.

ஒருநாள் ராஜாஜி ஒரு புரட்சிகரமான ஏற்பாட்டைச் செய்தார்.

சகஜானந்தரைத் தமது இல்லத்துக்கு வரவழைத்து தம்முடன் சேர்ந்து அமர்ந்து உணவு கொள்ளுமாறு செய்து உபசரித்தார்.

அந்த நிகழ்ச்சி சேலத்தில் ராஜாஜியின் சமூகத்தைச் சேர்ந்தவர்களிடம் பெரும் புயலைக் கிளப்பிவிட்டது.

அந்தணகுலப் பெரியோர்கள் ஒன்று கூடி ராஜாஜியையும் அவர் குடும்பத்தினரையும் சாதி விலக்கு செய்து ஒதுக்கி வைத்தனர். அவருடைய குடும்பத்தில் நடக்கும் எந்த நிகழ்ச்சிக்கும் உற்றார் உறவினர்கள் செல்லாமல், பரிகாசம் செய்தனர்.

ராஜாஜி சமபந்தி போஜனப் புரட்சியை நடத்தும் சமயம் அவருடைய தந்தையார் ஊரில் இல்லை. ஊரிலிருந்து அவர் வந்ததும் ராஜாஜியின் போக்கு பிடிக்காதவர்கள் தந்தையிடம் கோள் மூட்டினர்.

தந்தை தன்னிடம் புகார் கூறியவர்களையும் அழைத்துக் கொண்டு மகனை வந்து சந்தித்து அவர் செயலைக் கண்டித்தார்.

ராஜாஜி தமது தந்தையையும் அவருடன் வந்தவர்களையும் நோக்கி "நமது புராதன சாஸ்திரங்களில் எந்த இடத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உணவளிக்கக் கூடாது என்று கூறப்பட்டிருக்கிறது?" என்று கேட்டார்.



ராஜாஜியின் வினாவுக்கு பதில் சொல்லமுடியாதவர்கள் மெல்ல அந்த இடத்தைவிட்டு நகர்ந்தனர். தந்தையும் மகனும் மட்டும் தனியாக இருந்தனர்.

அப்போது தந்தை மகனை நோக்கி, "நீ சொல்வதில் உள்ள நியாயம் எனக்கு விளங்குகிறது. இறைவன் சிருஷ்டியில் அனைத்து உயிர்களும் சமம் என்றுதான் வேதம் முதலான சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆனால் உற்றார் உறவினர்களைப் பகைக்கக் கூடாதே என்றுதான் கவலைப்படுகிறேன்" என அன்போடு மொழிந்தார்.

## 'டீயே மதுரம்'

ஒரு தடவை பேராசிரியர் கல்கி அவர்கள் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் இல்லத்துக்கு வருகை தந்தார்.

அவருக்காக கலைவாணரின் துணைவியார் டி. ஏ. மதுரம் உணவு தயாரித்துக் கொண்டிருந்தார்.

முன்னதாக ஏதாவது பானம் தரலாம் என எண்ணிய மதுரம் அம்மையார்,

"ஐயாவுக்கு காபி பிடிக்குமா டீ பிடிக்குமா?" என்று கேட்டார்.

"டீயே (டி.ஏ) மதுரம்" என்று புன்னகையுடன் நகைச்சுவை ததும்பக் கூறினார் பேராசிரியர் கல்கி.

## நிலக்கடலையும் பைபிளும்

ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர் என்பவர் ஒரு ரசாயன சாஸ்திரி. நீக்ரோ இனத்தைச் சேர்ந்த சிறந்த கல்விமான்.

நிலக்கடலை தொடர்பாக அவர் சிறந்த ஆராய்ச்சியினைச் செய்திருந்தார்.

அவருடைய ஆராய்ச்சி செனட் கமிட்டியினரால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

RangaRakes

tamilnavarasam.com

"இந்த நிலக்கடலை தொடர்பான நுணுக்கங்களை எங்கிருந்து கற்றீர்?" என செனட் உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

"மிகவும் பழைமையான ஒரு நூலிலிருந்து கற்றேன்" என்றார் வாஷிங்டன் கார்வார்.

"என்ன நூல் அது?" என்று மீண்டும் கேள்வி எழுந்தது.

"பைபிள்" என்று கார்வர் பதிலளித்தார்.

"நிலக்கடலை பற்றி பைபிளில் குறிப்பிட்டிருப்பதாக நான் கேள்விப்படவே இல்லையே! பைபிளில் நிலக்கடலை பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது!" என செனட் உறுப்பினர் வியப்புடன் கேட்டார்.

"பைபிளில் நேரடியாக நிலக்கடலை பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. நிலக்கடலையைப் படைத்த கடவுளைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. நிலக்கடலை பற்றி முழு உண்மைகளையும் எனக்கு அருளும்படி கடவுளிடம் வேண்டிக் கொண்டு என் ஆராய்ச்சியினைத் தொடங்கினேன். மெல்ல மெல்ல உண்மைகள் எனக்கு விளங்கின" என்றார் ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர்.

## தமிழிலே சொட்டும் தேன்

**கோ**வை மாவட்டத்தின் ஆசிரியர் இலக்கிய மன்ற விழாவிலே முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதன் தலைமை தாங்கினார்.

அப்போது தேன் தமிழ் மொழி பற்றி அவர் பேசிய பேச்சின் ஒரு பகுதி இது. தமிழ் மொழி தேனைப் போன்ற இனிய நற்சுவை உடையது. பேசினாலும் கேட்டாலும் தமிழிலே தேன் சொட்டும். இப்போது பாருங்களேன். நான் படித்தேன், உட்கார்ந்தேன், பார்த்தேன், எடுத்தேன், சிந்தித்தேன் என்றெல்லாம் சொல்லிப் பாருங்கள்? ஒவ்வொலு சொல்லிலும் தேன் சொட்டுகிறது இல்லையா?"



## கறுப்பு உடை ம.பொ.சி.

**சி**லம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்கள் பல்லாண்டுகளுக்கு முன்னர் ஒரு தடவை சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு செனட் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு ஒரு பட்டமளிப்பு விழா நடைபெற்றது. உறுப்பினர் என்ற முறையில் ம.பொ.சி. அவர்கள் அந்த விழாவுக்குச் செல்ல வேண்டும். அந்த விழாவுக்குச் செல்லும் போது பட்டதாரிகள் அணியும் கறுப்பு அங்கி அணிய வேண்டும்.

நண்பரான செங்கல்வராயனிடம் தம்முடைய தர்ம சங்கடத்தைக் கூறிக் கொண்டார் ம.பொ.சி.

"கவலைப்பட வேண்டாம்" என்று அபயமளித்தார் செங்கல்வராயன்.

உடனே எட்டு முழம் வேஷ்டியைக் கொண்டு ம.பொ.சிக்கு பஞ்சகச்சம் கட்டினார். கறுப்புக் கவுனையும் மாட்டினார்.

தம்முடைய அப்போதைய தோற்றத்தை ம.பொ.சி. கண்ணாடியில் பார்த்தார்.

"தமிழ்ப் பண்புக்கோ பழக்க வழக்கத்துக்கோ சற்றும் ஒத்துவராத இந்தக் கரும்பூத உடையை நான் அணிய விரும்பவே இல்லை. செனட்டர் பதவியை பல்கலைக் கழகத்தினர் பறித்துக் கொண்டால் கூட நான் கவலைப்படப் போவதில்லை" என்று கூறிய ம.பொ.சி. அதற்குப் பிறகு செனட் கூட்டம் எதிலும் கலந்து கொள்ளவில்லை.

## பெரியாரின் சிக்கனம்

**பெ**ரியார் ஈ.வே.ரா மிகச் சிக்கனமாகச் செலவு செய்வதில் புகழ் பெற்றவர்.

RangaRakes tamilnavarasam.com

அவர் சிக்கன சிந்தைக்கு இதோ ஒரு சான்று.

ஒரு சமயம் கோயமுத்தூர் ரயில் நிலையத்தில் தொழிலதிபர் ஜி. டி .நாயுடு பிரயாணம் செய்வதற்காக வந்தார்.

அப்போது எங்கோ பயணம் செய்வதற்காக பெரியார் ஈ.வெ.ரா. மூன்றாம் வகுப்புப் பெட்டியில் அமர்ந்திருந்தார். அந்தக் காலத்தில் ரயில் பெட்டிகளில் மூன்று வகுப்பு உண்டு.

ஜி. டி. நாயுடு பெரியார் இருக்குமிடம் சென்று அவருடைய பயணத்தைப் பற்றி விசாரித்துவிட்டு சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது தமது ஆளைவிட்டு முதல் வகுப்பிற்கு ஒரு டிக்கெட் வாங்கிவரச் செய்து பெரியாரிடம் கொடுத்து. "வசதிக் குறைவாக ஏன் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் பயணம் செய்கிறீர்கள்? இறங்கி முதல் வகுப்பிக்குச் சென்று விடுங்கள்" என்று கூறிவிட்டு ஜி. டி. நாயுடு சென்று விட்டார்.

மற்றொரு ரயில் சந்திப்பில் வண்டி நின்றபோது தாம் அமர்ந்திருந்த பெட்டியை விட்டுக் கீழிறங்கிய ஜி. டி .நாயுடு. பெரியார் மீண்டும் மூன்றாம் வகுப்புப் பெட்டியிலேயே பயணம் செய்வதைக் கண்டு வியப்புற்று அவரிடம் சென்றார்.

"நான் முதல் வகுப்பு டிக்கெட் வாங்கிக் கொடுத்தேனே. அது என்ன ஆயிற்று?" என வினவினார்.

"எந்த வகுப்பில் உட்கார்ந்தால் என்ன, ரயில் போக வேண்டிய இடத்திற்கு கொண்டு சென்றுவிடப் போகிறது. அதற்காகத்தான் நீங்கள் கொடுத்த முதல் வகுப்பு டிக்கெட்டை நிலைய அதிகாரியிடம் கொடுத்து பணமாக்கிக் கொண்டேன்" என்றார் பெரியார்.

ஜி. டி. நாயுடுவுக்கு அந்தச் செய்தியைக் கேட்டு சிரிப்பதைத் தவிர வேறு வழி ஏது?

RangaRakes



## மின்விசை உற்பத்தியைக் கண்டுபிடித்தவர்

**டை**னமோ என்னும் மின்விசை உற்பத்திக் கருவியைக் கண்டுபிடித்து உலகப் புகழ்பெற்றவர் மைக்கேல் பாரடே என்ற அறிஞர்.

பாரடே சின்ன வயதில் புத்தகம் பைண்ட் செய்யும் நிறுவனத்தில் உதவியாளராகப் பணியாற்றி வந்தார்.

பைண்ட் செய்வதற்காக வரும் நூல்களில் விஞ்ஞான நூல்களைத் தேடிப் பிடித்து அவற்றைப் படித்து தமது விஞ்ஞான அறிவை பாரடே வளர்த்துக் கொண்டார்.

எப்படியாவது ஹம்ப்ரி டேவியின் உதவியாளராகச் சேர்ந்துவிட வேண்டும் என்று தீர்மானித்த பாரடே அதற்கான ஒரு திட்டத்தைத் தீட்டினார்.

ஹம்ப்ரி டேவி சொற்பொழிவாற்றும் இடங்களுக்குச் செல்லும் பாரடே அவருடைய பேச்சைக் கவனத்துடன் குறிப்பு எடுத்துக் கொண்டார். பிறகு அதை விரிவாக ஒரு நோட்டுப் புத்தகத்தில் அழகான கையெழுத்தில் எழுதி அந்த நோட்டுப் புத்தகத்தை நன்றாக பைண்ட் செய்தார்.

ஒரு நாள் அந்த நோட்டை பாரடே ஹம்ப்ரி டேவிக்கு அனுப்பி வைத்தார்.

தம்முடைய சொற்பொழிவுகள் ஒரு பிழையும் இல்லாமல் மிகச் சிறப்புற அந்த நோட்டுப் புத்தகத்தில் எழுதப்பட்டிருப்பதைக் கண்டு வியப்படைந்த ஹம்ப்ரி டேவி கடிதமெழுதி மைக்கேல் பாரடேயை வரவழைத்தார்.

பாரடேயின் விஞ்ஞான ஆர்வத்தைக் கண்டு அவரைத் தம் உதவியாளராக ஹம்ப்ரி டேவி வைத்துக் கொண்டார்.

ஹம்ப்ரி டேவியின் கூட்டுறவினால் தலை சிறந்த விஞ்ஞானி யாகிவிட்ட மைக்கேல் பாரடே தமது சொந்த முயற்சியினால்

tamilnavarasam.com

டைனமோ என்னும் மின் உற்பத்தி சாதனம் ஒன்றைக் கண்டுபிடித்து மனித சமுதாயத்துக்கு உதவிப் பெரும் புகழ் பெற்றார்.

## கழுதைகள் யார்?

**பி**ரபல ஆங்கில நாடக ஆசிரியரான ஷெரிடன் ஒரு தடவை இங்கிலாந்தின் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

ஒரு தடவை பாராளுமன்றத்தில் அவர் கடும் எதிர்ப்பு தெரிவித்த ஒரு தீர்மானம் ஆளுங்கட்சி உறுப்பினர்களின் கட்டுப் பாடான வாக்களிப்பினால் நிறைவேற்றப்பட்டு விட்டது.

அதைத் கண்டு ஆத்திரமுற்ற ஷெரிடன் எழுந்து "இந்தச் சபையிலே உள்ள உறுப்பினர்களில் பாதிப்பேர் அறிவு சிறிதுமில்லாத கழுதைகள்" என்று தாக்கிப் பேசினார்.

அவருடைய அந்தக் காட்டமான தாக்குதலைக் கண்டு திடுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கழுதைகள் என்று கேவலமாகப் பேசியதைத் திரும்பப் பெற வேண்டும் என்று எதிர்ப்புக் குரல் எழுப்பினர்.

பாராளுமன்றத் தலைவரும் ஷெரிடன் தாம் சொன்ன கழுதைகள் என்ற சொல்லைத் திரும்பப் பெற வேண்டும் என்று கட்டளையிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களில் பாதிப் பேர் கழுதைகள் என்று சொன்னதற்காக வருந்துகிறேன். அந்தச் சொற்களைத் திரும்பக் பெற்றுக் கொள்கிறேன். "நமது மன்ற உறுப்பினர்களில் பாதிப்பேர் கழுதைகள் அல்லர்" என்று அழுத்தந்திருத்தமான குரலில் கூறினார்.

## மகனை எப்படி உருவாக்க வேண்டும்?

**அ**மெரிக்காவின் ஜனாதிபதிகளில் ஒருவராக இருந்தவர் கார் பீல்டு என்பவர். ஜனாதிபதியாக ஆவதற்கு முன்னர் அவர் ஒரு கல்லூரியின் தலைவராக இருந்தார்.



ஒரு தடவை நல்ல செல்வ வளம் பெற்ற ஒருவர் தமது மகனை அழைத்துக் கொண்டு கார்பீல்டைக் காண வந்தார்.

அவர் கார்பீல்டிடம் "என் மகன் எல்லா மாணவர்களும் படிக்கும் அளவுக்குப் படிக்க விரும்பவில்லை. மிகவும் துரிதமாக இவன் கல்வி கற்பதற்கு ஏதாவது குறுக்கு வழி உண்டா?" என வினவினார்.

"நீர் விரும்புவது போலச் செய்ய முடியும். ஆனால் உமது மகன் எப்படி உருவாக வேண்டும் என்பதைப் பொறுத்த விஷயம் அது" என்றார் கார்பீல்டு.

"நீங்கள் சொல்வது விளங்கவில்லையே" என்றார் வந்த செல்வர்.

"உமது மகனை ஓர் அடிமுட்டாள் ஆக்கவேண்டும் என்றால் ஒரு மாதத்தில் கூட அதைச் செய்துவிட முடியும். இவனை ஒரு சிறந்த கல்விமானாக. அறிவாளியாக ஆக்க வேண்டுமானால் அதற்கு சற்று அதிக காலந்தான் ஆகும்" என்றார் கார்பீல்ட்.

செல்வரின் முகத்தில் ஈயாடவில்லை.

## இனாமாகப் பெறும் உப்பு

**ஒ**ரு காலத்தில் ஈரானை நௌஷேர்கான் என்ற பாதுஷா ஆண்டு வந்தார்.

ஒருநாள் பாதுஷா தனது பரிவாரத்தினருடன் காட்டுக்கு வேட்டையாடச் சென்றார்.

காட்டை அடைந்ததும் அவர்களுக்கு உணவு தயாரிப்புகள் செய்யச் சென்றிருந்த சமையற்காரர்களின் தலைவன் பாதுஷாவை வணங்கி 'மன்னாதி மன்னா! தயவுசெய்து காட்டை ஒட்டிய ஓர் கிராமத்துக்குச் சென்று வர அனுமதி அளிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான்.

"ஏன் எதற்காக அங்கே செல்ல வேண்டும்? என்று பாதுஷா கேட்டார்.

RangaRakes
tamilnavarasam.com

"சமையலுக்குத் தேவையான உப்பை எடுத்து வர மறந்து விட்டேன். பக்கத்துக் கிராமக் குடிமகன் யாரிடமாவது கொஞ்சம் உப்பு வாங்கி வரலாம் என்று நினைக்கிறேன்" என்றான் சமையற்காரன்.

"உப்பு வாங்குவதற்குப் பணம் எடுத்துச் செல்லுகிறாயா?" என்று பாதுஷா வினவினார்.

"பணம் எதற்கு மகாராஜா? தங்கள் மன்னருக்காக இனாமாக உப்பு தர குடிமக்கள் மகிழ்ச்சியுடன் முன்வர மாட்டார்களா?" என்றான் சமையற்காரத் தலைவன்.

"அது கூடாது. இந்தா பணம். இதைக் கொடுத்து உப்பை விலைக்கு வாங்கு" என்று பாதுஷா கொஞ்சம் பணத்தை அளித்தார்.

"குடிமக்களிடம் இனாமாக உப்பு பெறுவது தவறு என்று நினைக்கிறீர்களா? கொஞ்சம் உப்பு இனாமாகக் கொடுக்கும் அளவுக்குக் கூடவா நமது குடிமக்கள் வசதியற்றவர்களாக இருக்கிறார்கள்?" என்று தயக்கத்தோடு கேட்டான் சமையற்காரத் தலைவன்.

"நான் கேட்பதாகச் சொன்னால் குடிமக்கள் மூட்டைக் கணக்கில் உப்பை இங்கே கொண்டு வந்து இறக்கி விடுவார்கள் என்பதில் ஐயமில்லை. அத்துடன் உப்பு விலை கொடுத்து வாங்கக்கூட முடியாத அளவு பாதுஷாவின் பொக்கிஷம் வறண்டது போலும் என்று அவர்கள் பேசிக் கொள்வார்கள். அதைக் கேட்கும் அரசாங்க அதிகாரிகள் பாதுஷா திவால் ஆகிவிட்டார் என்று எண்ணிக் கொண்டு என்னை மதிக்காமல் தன்னிச்சையாக குடிமக்களைக் கசக்கிச் சுரண்டத் தொடங்கி விடுவார்கள். அதனால்தான் அற்பப் பொருளாக இருந்தாலும் பாதுஷா இனாமாகப் பெறக்கூடாது. உன்னை நான் பணம் கொடுத்து உப்பு வாங்கச் சொன்ன தன் நோக்கம் இதுதான்" என்றார் பாதுஷா.



## படைகள் பின்வாங்கினால்...

ஒரு சமயம் போர் முறையில் நெப்போலியனின் படைகள் எதிரிகளினால் திடீர் தாக்குதல் நடத்தப்பெற்று சங்கடமான ஒரு நிலையில் இருந்தது.

அப்பொழுது இரவு நேரம் கூடாரத்தில் நெப்போலியன் உறங்கிக் கொண்டிருந்தான்.

உறங்கும் நேரத்தில் நெப்போலியனை எழுப்பித் தகவல் கூறி அவன் ஆலோசனையைப் பெறுவது எப்படி என்று நெப்போலியன் படைத் தளபதி சங்கடமடைந்தான். என்றாலும் வேறு வழி யில்லாததால் படைத்தளபதி நெப்போலியன் கூடாரத்துக்குள் பிரவேசித்தான்.

நெப்போலியன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். நெப்போலியனை எழுப்பலாமா வேண்டாமா என்று படைத் தளபதி யோசித்த போது மேஜைமீது ஏதோ எழுதப்பட்ட காகிதம் ஒன்று விரித்து வைக்கப்பட்டிருந்தது தளபதியின் கண்களில் பட்டது.

அந்தக் கடிதத்தை எடுத்துப் படித்தான்.

எதிரிப் படைகள் இன்று இரவு திடீர்த் தாக்குதல் நடத்தக்கூடும் என்று யூகித்து எதிரிப்படைகளை எவ்வாறு சமாளிக்கலாம் என்பதற்கான வழிவகைகளை அந்தக் கடிதத்தில் நெப்போலியன் தெளிவாக எழுதி வைத்திருந்தான்.

வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்த நெப்போலியனின் படைத் தளபதி நெப்போலியனை எழுப்பாமலேயே அந்த ஆலோசனைக் கடிதத்தை மட்டும் எடுத்துக் கொண்டு புறப்பட்டார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த ஆலோசனைப்படி தளபதி எதிர்தாக்குதல் நடத்தி எதிரிப் படைகளைப் பின்வாங்கி ஓடச் செய்தான்.

RangaRakes tamilnavarasam.com

## ஆடு பாம்பே

**ப**ல ஆண்டுகளுக்கு முன்னர் சங்கீத விற்பன்னரான செம்பை வைத்தியநாத பாகவதரின் இசைக் கச்சேரி மும்பை நகரில் நடை பெற்றது. ஏராளமான மும்பை வாழ் தமிழர்கள் கச்சேரி கேட்கக் குழுமியிருந்தார்கள்.

அச்சமயம் பாகவதர் ஒவ்வொரு தெய்வத் திருத்தலங்களைப் பற்றியும் பாடினார்.

அப்போது கூட்டத்திலிருந்த பம்பாய் வாசி ஒருவர் "எங்கள் பாம்பே (பம்பாய்) குறித்தும் ஒரு பாடல் பாட முடியுமா?" என ஆங்கில மொழியில் வேண்டுகோள் விடுத்தார்.

"ஆஹா பாடுகிறேன்" என்று முகத்தில் புன்னகை தோன்றக் கூறிய வைத்தியநாத பாகவதர் "ஆடு பாம்பே விளையாடு பாம்பே நாதர் முடி மேலிருக்கும் நல்ல பாம்பே..." எனப் பாடத் தொடங்கி விட்டார்.

"பாம்பே" என்ற சொல் வரும்போதெல்லாம் அதற்கு ஓர் அழுத்தம் கொடுத்து பாகவதர் பாடிய விதம் கண்டு சபையிலே நீண்ட நேரம் கர ஒலி எழுந்தது.

## பரதேசியின் பின்னால் சென்ற பண்டிதர்!

**ம**காவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை பல நூல்களைக் கற்றறிந்த தமிழ் மேதை.

தண்டியலங்காரம் என்ற பழந்தமிழ் இலக்கியத்தைப் பயில அவருக்கு ஆசையாக இருந்தது.

ஆனால் முறையாக தண்டியலங்காரம் பயிற்றுவிக்கக் கூடிய தகுதி வாய்ந்த புலவர் அவர் கண்களில் தென்படவில்லை.

அந்தச் சமயம் ஊர் ஊராக அலைந்து கொண்டிருந்த ஒரு பரதேசியைப் பற்றி அவர் கேள்விப்பட்டார்.



பரதேசியாக இருந்தாலும் அவர் சிறந்த தமிழ் அறிஞர் என்றும் பல பழந்தமிழ் நூல்களைக் கற்றறிந்தவர் என்றும் தெரிய வந்தது.

அந்தப் பரதேசி தண்டியலங்காரத்தில் நல்ல தேர்ச்சி பெற்றவர் என்றும், தண்டியலங்காரத்தின் பழைய பிரதி அவரிடம் இருக்கிறது என்ற தகவலும் மீனாட்சி சுந்தரனாரின் செவிக்கு எட்டியது.

தாமாக விரும்பினாலன்றி யாருக்கும் பாடம் சொல்லிக் தருவதில்லை என்பதையும் அவர் கேள்விப்பட்டிருந்தார்.

எப்படியேனும் அப்பரதேசியிடம் தண்டியலங்கார நூலில் பாடம் கேட்டு. அந்த மூல நூலைப் பிரதி எடுத்துக் கொள்ள வேண்டும் என்னும் தீர்மானத்துக்கு வந்தார் மீனாட்சி சுந்தரம்பிள்ளை.

பிறகு அவர் பரதேசியைச் சென்று சந்தித்தார்! அவர் செல்லுமிடங்களுக்கெல்லாம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும் உடன் சென்றார். பரதேசி கஞ்சாப் பிரியர் அவர் கஞ்சா அடிக்க விரும்பிய போதெல்லாம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அதைச் சேகரித்து பரதேசிக்கு அளித்தார். இவ்வாறாக, பரதேசியை மகிழ வைத்து தண்டியலங்காரம் முழுவதையும் பாடம் கேட்டதுடன் மூல நூலை முற்றிலுமாகப் பிரதி எடுத்துக் கொள்ளவும் செய்தார்.

## எலிக்கு ஏன் பெருமை?

**கா**ந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் இருந்து தென்னாப்பிரிக்கா வாழ் இந்திய மக்களுக்காக சேவை செய்தது அனைவருக்கும் தெரியும்.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்ற புதிதில் தலை முடி வெட்டிக் கொள்வது அவருக்குப் பெரிய பிரச்சினையாக இருந்தது.

அங்கே பெரும்பாலும் வெள்ளையர்களின் முடி அலங்கார நிலையங்கள் இருந்தன. கருப்பரான காந்தியடிகளுக்கு முடிவெட்ட அந்த வெள்ளையர்கள் மறுத்தனர்.



tamilnavarasam.com

காந்தியடிகள் கத்தரிக்கோலால் முடிவெட்டும் மெஷின் போன்ற வற்றை விலைக்கு வாங்கி கண்ணாடிமுன் நின்று கொண்டு தாமே முடிவெட்டிக் கொண்டார். அவருடைய சுயமுயற்சி தலையை அலங்கோலப்படுத்தி விட்டது.

அப்போது அவர் வழக்குரைஞராகப் பணியாற்றியதால் மறுநாள் நீதிமன்றத்துக்கு சென்றபோது அங்கே இருந்த வெள்ளைக்கார வழக்குரைஞர்கள், "என்ன காந்தி! உமது தலைமுடிக்கு என்ன வந்தது? இரவு நீர் உறங்கும்போது எலி உமது தலைமுடியைக் கத்தரித்து விட்டதா?" எனக் கேட்டு கேலி செய்தனர்.

காந்திஜி சிரித்துக் கொண்டே "நண்பர்களே, எனக்குச் சேர வேண்டிய பெருமையை எலிக்குக் கொடுப்பதை ஆட்சேபிக்கிறேன். ஏனென்றால் தலை முடியிலே நீங்கள் காண்பதெல்லாம் முற்றிலும் என் கைவண்ணமே" என்றார்.

## நீண்ட காலக் கடன்

ஒரு தடவை புது டில்லியில் பார்லிமெண்ட் வீதியில் கவிக் குயில் சுரோஜினி தேவியின் நினைவுத் தபால் தலை வெளியீட்டு விழா நடந்தது.

அந்த விழா மேடையில் ஏ.கே.சென், டி. டி. கிருஷ்ணமாச் சாரியார், லால்பகதூர் சாஸ்திரி ஆகியோர் இருந்தனர். அப்போது தபால் மந்திரியாக இருந்த ஏ.கே. சென் தபால் தலையின் முதல் விற்பனையாக பதினைந்து பைசா ஸ்டாம்புகளை டி.டி. கிருஷ்ணமாச் சாரியாருக்கும் லால்பகதூர் சாஸ்திரிக்கும் அளித்தார்.

உடனே டி.டி.கே தமது சட்டைப் பையிலிருந்து ஒரு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து ஏ.கே. சென்னிடம் கொடுத்தார். சாஸ்திரி யிடம் அப்போது பணம் இல்லை.

டி.டி.கே. ஏ. கே. சென்னை நோக்கி, "ஒரு ரூபாயில் மிச்ச மிருக்கும் சில்லறையை சாஸ்திரியாருக்கு அளித்த ஸ்டாம்புக்காக எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார்.



சாஸ்திரிக்கு தர்ம சங்கடமாக இருந்தது. "எனக்காக நீங்கள் பணம் கொடுப்பதாவது" என்று தயக்கத்தோடு கூறினார்.

டி.டி.கே சிரித்துக் கொண்டு, "சாஸ்திரி அவர்களே! உங்களுக்காக சென்னிடம் அளித்த பதினைந்து காசு உங்கள் சார்பில் தர்மமாகத் தரப்பட்டது என்றா நினைக்கிறீர்கள்? பதினைந்து காசு உங்களுக்கு நீண்ட காலக் கடனாகக் கொடுத்திருக்கிறேன். உரிய காலத்தில் அந்தத் தொகையை வட்டியுடன் வாங்கிக் கொள்கிறேன்" என்றார் டி.டி.கே.

## முப்பாலும் இப்பாலும்

பல்லாண்டுகளுக்கு முன்னால் திருத்தணியில் தமிழரசுக் கழகத்தின் சார்பில் இலக்கிய மாநாடு நடைபெற்றது.

அந்த மாநாட்டில் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார்.

பிரபுலிங்க லீலையிலிருந்து சில அழகுக் காட்சிகளை வாரியார் சுவாமிகள் அற்புதமாக விளக்கிக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில் அன்பர் ஒருவர் வாரியார் அவருக்கு ஒரு குவளையில் ஏதோ கொண்டு வந்து கொடுத்தார்.

வாரியார் சுவாமிகள் அதைக் கவனித்தார்.

உடனே அவர் "இது காப்பி - ஆனால் நான் சொல்வதோ அசல்" என்றார்.

அவருக்கு அருகே அமர்ந்திருந்த சிலம்புச் செல்வர் ம.பொ.சி. "இது காப்பி அல்ல பால்" என்று விளக்கினார்.

உடனே வாரியார் "நான் முப்பாலும் கடந்து அப்பால் இருக்கிறேன். இதோ இப்பாலும் வந்து விட்டது" என்று கூறி முடித்தார்.

அதைக் கேட்டுக் கூட்டத்திலிருந்த மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

RangaRakes

tamilnavarasam.com

## நானும் சிறுவன்தான்!

பாரதத்தின் பிரதம மந்திரியாக லால்பகதூர் சாஸ்திரியார் இருந்த சமயம்.

புது டில்லியில் தொடக்கப்பள்ளி ஒன்றின் விழாவுக்கு பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியாரை அழைத்திருந்தனர்.

நூற்றுக்கணக்கான பள்ளிச் சிறுவர்கள் விழாவில் குழுமியிருந்தனர்.

'மைக்'கின் முன்னால் எழுந்து நின்ற லால்பகதூர் சாஸ்திரி குழந்தைகளை நோக்கி, "எனக்கு என்ன தகுதியிருக்கிறது என்பதற்காக இங்கே அழைத்திருக்கிறார்கள் என்று தெரியுமா?" என்று கேட்டார்.

"தெரியும். நீங்கள் இந்த தேசத்தின் பிரதம மந்திரி" என்று குழந்தைகள் உற்சாகமாகக் குரல் கொடுத்தனர்.

லால்பகதூர் சாஸ்திரி சிரித்துக் கொண்டே "அது ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால் எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா? நானும் உங்களைப் போல மெலிந்து குட்டையாக உங்கள் அளவே இருக்கிறேன். அதாவது உங்களைப் போன்ற ஒரு சின்னப் பிள்ளை மாதிரி நான் காட்சி தருகிறேன் இந்த முக்கியமான தகுதிக்காகத்தான் என்னை இங்கே அழைத்திருக்கிறார்கள் என்பது என் எண்ணம்" என்று கூறினார்.

## ஓடுவது ஏனோ?

பேரறிஞர் ஷிப்லி மருத்துவமனையில் உடல் நலக் குறைவு காரணமாகப் படுத்திருந்தார்.

அறிஞர் ஷிப்லிக்கு ஏராளமான ரசிகர்கள் இருந்தார்கள். அவர்களைப் பற்றியெல்லாம் ஷிப்லிக்கு அதிகமாகத் தெரியாது.

ஒரு நாள் ஒரு சிறு கூட்டம் ஷிப்லியைப் பார்க்க மருத்துவமனைக்கு வந்தது.



"நீங்களெல்லாம் யார்?" என்று ஷிப்லி கேட்டார்.

"நாங்களெல்லாம் உங்கள் அன்புக்கு உரியவர்கள்" என்றனர் வந்தவர்கள்.

ஷிப்லி உடனே தமக்கு அருகே இருந்த பொருட்களை எல்லாம் எடுத்து, வந்தவர்கள் மீது வீசியெறிந்தார்.

வந்தவர்கள் என்னவோ ஏதோ என்று எண்ணி ஓடத் தொடங்கினர்.

ஷிப்லி சிரித்துக்கொண்டே, "என் அன்புக்கு உரியவர்கள் என்று கூறிக் கொண்டீர்களே? அன்புக்கு உரியவன் தந்த சிறு தண்டனையைக் கூட உங்களால் சகித்துக் கொள்ள முடியவில்லையே!" என்றார்.

## அமுதமும் ஈயும்

பகவான் இராமகிருஷ்ணர் ஒருநாள் தமது சீடர்களுடன் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார்.

அப்போது பொதுவான ஒரு வினாவை எழுப்பினார்.

"நீங்கள் ஓர் ஈயின் உருவத்தைப் பெற்றிருக்கிறீர்கள் என வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் எதிரே அமுதம் நிறைந்த ஒரு கோப்பை இருக்கிறது. அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்?"

இதுதான் பகவான் இராமகிருஷ்ணரின் கேள்வி.

கேள்வியின் தன்மையைப் புரிந்து கொள்ளாத மற்ற மாணவர்கள் பதில் சொல்லத் தெரியாமல் மௌனமாக இருந்தனர்.

சுவாமி விவேகானந்தர் எழுந்து "நான் அந்தக் கோப்பையின் விளிம்பில் கவனமாக உட்கார்ந்து கொண்டு கோப்பையில் உள்ள அமுதத்தைப் பருகுவேன். அவசரப்பட்டு கோப்பையிலுள்ள அமுதத்தில் விழுந்து உயிரை விடமாட்டேன்" என்றார்.

இராமகிருஷ்ணர் சிரித்துக் கொண்டே "நீ முற்றிலும் ஒரு விஷயத்தை மறந்துவிட்டாய்" என்றார்.

RangaRakes tamilnavarasam.com

“என்ன அது?” என்று விவேகானந்தர் வியப்போடு கேட்டார்.

“கோப்பையில் இருப்பதோ அமுதம். அமுதத்தை உண்டவர் களுக்கு மரணமே இல்லை. அப்படியிருக்க கோப்பையின் விளிம்பில் உட்கார்ந்தால் என்ன? அமுதத்திலேயே விழுந்தால் என்ன?” என்றார் இராமகிருஷ்ணர்.

## மந்திரி பதவியைவிட பெரிய பதவி

தமிழ் நாட்டில் ராஜாஜி மந்திரி சபை அமைத்த நேரம்.

இராஜாஜியின் பக்தரும் ஆதரவாளருமான பேராசிரியர் ‘கல்கி’ அவர்களுக்கு இராஜாஜி மந்திரி சபையில் நிச்சயம் ஒரு மந்திரி பதவி கிடைக்கும் என்று எல்லாரும் நம்பினர்.

ஒரு தடவை ‘கல்கி’யின் நண்பர் ஒருவர் ‘கல்கி’யைச் சந்தித்த போது இந்த விஷயத்தைப் பற்றி விசாரித்தார்.

‘கல்கி’ பளிச் சென்று பதில் சொன்னார்.

“என்னைப் பொறுத்த மட்டில் ‘கல்கி’ பத்திரிகையின் ஆசிரியர் பதவியை விட உயர்ந்த ஒன்று இருப்பதாக நினைப்பதற்கில்லை” என்றார்.

## சோறு போடுவது யார்?

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த வில்ஸனின் தந்தை ஒரு கிராமத்தின் மாதா கோயில் பாதிரியாக இருந்தார்.

ஒருநாள் அவர் மாதா கோயிலில் உபன்யாசம் முடிந்துவிட்டுத் தமது குதிரை மீதமர்ந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்.

பாதிரியாருக்கு வணக்கம் தெரிவித்த கருமி “ஐயா! தங்கள் குதிரை நல்ல புஷ்டியாக கொழு கொழு வென்று இருக்கிறது. நீங்களோ எலும்புந் தோலுமாக மிகவும் பலவீனமாக இருக்கிறீர்களே” என்று கேலி செய்யும் நோக்கில் கேட்டான்.



பாதிரியார் கலகலவெனச் சிரித்துவிட்டு “நீங்கள் கேட்கும் விஷயமாக ஒரு ரகசியத்தைக் கூறுகிறேன். என் குதிரைக்கு நான் உணவளிக்கிறேன். அதனால் அது கொழுகொழுவென்று இருக்கிறது. எனக்கு உணவளிப்பதோ உங்களையொத்த கிராம மக்கள்தான்!...” என்றார்.

## இராஜாஜியும் சத்தியமூர்த்தியும்

தீரர் சத்தியமூர்த்தி சென்னை மாநகராட்சியில் மேயராக இருந்தார் என்ற விஷயம் பலருக்குத் தெரிந்திருக்கும்.

சத்தியமூர்த்தி மேயர் பதவி முடிந்து விலகும் சமயம் அவருக்கு பாராட்டுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் இராஜாஜியும் கலந்து கொண்டார்.

அப்போது இராஜாஜி அவர்கள் “சர்க்காரிலிருந்து நான் விலகியது சத்தியமூர்த்தியின் அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் நான் சர்க்காரிலேயே இருந்திருந்தால் பூண்டி நீர்த்தேக்கம் திட்டம் தொடர்பாக இன்னும் பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கும். ஆனால் சத்தியமூர்த்தி ரொம்ப இலேசாக சாதித்து விட்டார். சென்னை போன்ற பணக்கார கார்ப்பரேஷன் அரை வயிற்றுக்கு இல்லாதவர்களிடம் பணத்தை ஏன் வாங்க வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. நான் மீண்டும் சர்க்காரில் உத்தியோகம் வகிக்க நேருமானால் பூண்டி திட்டம் போன்ற வேறு திட்டங்களுக்கும் கஷ்டம் ஏற்பட்டிருக்கும்” என்றார்.

“சென்னையில் நல்ல முறையில் குடிநீர் விநியோக முறை இருப்பது மாகாணம் முழுமைக்கும் எவ்வளவு நன்மை தரும் என்பதை மறந்துவிடக் கூடாது. மருத்துவமனைகள், சர்க்கார் அலுவலகங்கள் கல்லூரிகள் போன்ற முக்கியமான நிறுவனங்கள் சரிவர நிர்வகிக்க முடியாவிட்டால் மாகாணமே மோசமான நிலையை அடையும். இராஜாஜி மீண்டும் தமிழக முதல்வர் பதவிக்கு வந்தால் அவரது கல் மணத்தையும் கரைக்க என்னால் முடியும்” என்றார்.

RangaRakes
tamilnavarasam.com

## குழந்தைகள் எப்படி இருக்கும்?

பேரறிஞர் பெர்னாட்ஷாவுக்கு, அக்காலத்தில் புகழ்பெற்றிருந்த ஒரு திரைப்பட நடிகை கடிதம் எழுதியிருந்தார்.

"பேரறிஞர் அவர்களே! தங்களை நான் காதலிக்கிறேன். தங்களைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன். அதுவும் தாங்கள் அனுமதியளித்தால்தான், நாம் திருமணம் செய்து கொண்டால் நமக்குப் பிறக்கும் குழந்தை என்னைப் போன்ற பேரழகும், தங்களிடம் அமைந்திருப்பதைப் போன்ற பேரறிவும் கொண்டதாக இருக்கும்" என அந்த நடிகை கடிதத்தில் எழுதியிருந்தாள்.

நடிகையின் கடிதத்திற்கு பெர்னாட்ஷா உடனே பதில் எழுதினார்.

"உங்கள் கடிதம் கிடைத்தது. உங்கள் அன்பைப் பெற நேர்ந்ததற்கு மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் உங்கள் கடிதத்தில் நீங்கள் குறிப்பிட்டிருக்கும் குழந்தை விஷயந்தான் எனக்குச் சந்தேகத்திற்கு இடமாக இருக்கிறது. நமக்குத் திருமணமானால் பிறக்கும் குழந்தை என்னைப் போன்ற அழகும் உங்களைப் போன்ற அறிவும் உள்ளதாக அமைந்துவிட்டால் என்ன செய்வது என்பதுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது."

பெர்னாட்ஷாவின் இந்தக் கடிதத்தைப் படித்த பிறகு நடிகையிடமிருந்து பதிலே வரவில்லை.

# பிரச்சனைகள் ஏன் தோன்றுகின்றன? சமாளிப்பது எப்படி?

## வாழ்க்கையும் பிரச்சனைகளும்

**வா**ழ்க்கை, பிரச்சனைகளைச் சிருஷ்டிக்கிறதா அல்லது பிரச்சனைகளின் கூட்டு உருவந்தான் வாழ்க்கையா?

இது சுவையான கேள்வியே - ஆனால் சிக்கலான கேள்வியும்கூட.

உலகத்தில் மனிதனாகப் பிறந்ததே ஒரு பிரச்சனைதான்; ஒரு சிக்கல்தான் என்று கருதுவோர் உண்டு.

''ஈசனே! மறுபடியும் என்னைப் பூமியில் பிறக்க வைத்தால் இந்த மானிடப் பிறவியாக மட்டும் பிறக்க வைக்காதே. பட்டதெல்லாம் போதும்; படமுடியாதினித் துயரம்'' என்று பக்தியுள்ளத்துடன் மனம் கசிந்துருகப் பாடும் பக்த சிகாமணிகள், வாழ்க்கையை ஒரு சிக்கலான பிரச்சனை யாகவே மதித்து அதிலிருந்து மீள இறைவனிடம் வரங் கேட்கின்றனர்.

இது ஒரு வகை.

இன்றைய விஞ்ஞான யுகம் இந்தக் கூக்குரலைப் பொருட்படுத்துமா?

மனிதன் பிறக்கிறான், இது ஒரு சாதாரண நிகழ்ச்சி.

ஆனால் அவன் வளரும் போதும், உலகத்தைப் புரிந்து கொள்ளும் போதும் பல பிரச்சனைகளைச் சந்திக்கிறான். சந்தித்தாக வேண்டிய நிர்ப்பந்தம் அவனுக்கு ஏற்படுகிறது.

RangaRakes

tamilnavarasam.com

அந்தப் பிரச்சனைகளை ஒதுக்கி விட்டு அவற்றில் படாமல் மனிதன் வளரமுடியாது. அப்படி வளருபவன் அரை மனிதனாகத்தான் இருக்க முடியும். ஆகவே வாழ்க்கை என்று நாம் குறிப்பிடுவதானது, மனிதன் தன் முன் எதிர்ப்படும் பிரச்சனைகளைச் சமாளிப்பது எப்படி என்பது இன்று பொதுவாகக் கொள்ளப்படும் கருத்து.

இரண்டு கருத்துகளில் ஒன்று உண்மை; மற்றது பொய் என்று கூறுவோர் அறியாதாரே. இரண்டிலும் உண்மை உண்டு.

மனிதன் மற்றெல்லாப் பிராணிகள் போலவேதான் உலகத்தில் பிறக்கிறான். ஆனால் வாழ்க்கை நடத்த மற்ற பிராணிகள் மனிதனளவு சிரமமோ, வேதனையோ படுவதில்லை.

பசித்த நேரத்தில் உண்ணுவது; உறக்கம் வரும்போது தூங்குவது; இனப் பெருக்கத்துக்காக ஒன்று கூடுவது. இப்படியாகப் பிராணிகளின் வாழ்க்கை கழிகிறது.

நடுக்காட்டில் தன்னந்தனியாக விடப்பட்ட எந்த ஒரு பிராணியும் நீண்ட நேரம் தடுமாற்றமுறுவதில்லை. (மனிதன் தன்னோடு இணைந்து வளர்க்கும் பிராணிகளைத் தவிர) கூடிய சீக்கிரம் சூழ்நிலையோடு கூடிப்போய் அந்தக் காட்டிலேயே தனக்கென ஒரு வாழ்க்கை முறையை அவை அமைத்துக் கொள்ளும்.

மனிதனால் அது சாத்தியப்படாது. பழக்கமான உணவுப் பொருள் இல்லாமல் அவனால் வாழ முடியாது. நடுக் காட்டில் நின்றுகொண்டு ஆவி பறக்கும் காப்பியை எண்ணி ஏங்குவான்; சுவையான சிற்றுண்டிகளை நினைத்து கண்ணீர் விடுவான்; இட்லி சாம்பார் இல்லாமல் எப்படி காலைப் பொழுது போகும் என்று கலங்குவான். வெங்காய சாம்பார்



அல்லது வாசனை கமழும் மாமிசக் குழம்புடன் சேர்ந்த அரிசிச் சாதத்தின் நினைவிலேயே நெஞ்சம் குமுறுவான்.

பஞ்சணை மெத்தை இல்லாவிட்டாலும் பாங்கான ஒரு தலையணையாவது இருந்தால்தானே இரவுப் பொழுது கழியும்? வழியில்லையே என வாய் விட்டலறுவான்.

இப்படியாக முந்திய தனது வாழ்வு முறையை எண்ணி யெண்ணி மிக வேதனைப்பட்டு உயிரை விட்டாலும் விடு வானே தவிர, சூழ்நிலையை ஜீரணித்து அதனோடு ஒன்றி விடும் பண்பு அவனுக்கு எளிதில் வராது.

இந்தக் குழப்பமான குறைபாட்டுக்குக் காரணம் என்ன வென்றால் மனிதன் மற்ற பிராணிகளை விட ஒரு விஷயத்தில் உயர்ந்தவன்.

அதாவது மற்ற பிராணிகளுக்கு இல்லாத ஒரு விசேஷ அம்சம் மனிதனுக்கு இருக்கிறது.

அதுதான் பகுத்தறியும் சக்தி. சிந்தனை செய்யும் மனப்பான்மை.

உலகத்தில் மனிதனைச் சூழும் இன்னல்கள் அவ்வளவும் அவனுடைய பகுத்தறியும் தன்மையினால்தான் உண்டா கின்றன. உலகத்தில் யாரொருவன் சிந்திக்கும் திறம்படைத்த பேரறிஞனாக விளங்குகிறானோ அவன்தான் அதிகமான கஷ்டங்களை அடைகிறான் என்பதைக் கண்கூடாகக் காண் கிறோம்.

மனிதனாகப் பிறந்து சந்தர்ப்ப வசத்தாலோ வேறு எப்படியோ பித்தனாகி விட்ட ஒருவனைப் பாருங்கள். சிந்திக்கும் திறமையற்ற அந்தப் பைத்தியம் மகிழ்ச்சியுடன் காலம் கடத்துவான். மற்ற அறிவுள்ள மக்களைப் பாதிக்கும் எந்தத் தொல்லையும் அவனை அண்டுவதில்லை.

RangaRakes tamilnavarasam.com

ஆகவே மனிதர்கள் பகுத்தறிவுடன் பிறந்த ஒரு காரணத்தாலேயே அவர்களில் பலர் சங்கடங்களைச் சந்திக்க நேரிடுகிறது என்பதை உணரும்போது மனிதப் பிறவியை விட வேறு பிறவி நல்லதே என்று எண்ணத் தோன்றுவது இயல்புதானே!

ஆனால் இந்த எண்ணம் ரூபாயின் ஒரு பக்கம் போன்றுதான். அது மட்டுமே ரூபாயன்று.

இறைவன் தனக்கு அருளியிருக்கும் பகுத்தறிவைக் கோணல் வழியில் அன்றி நேர்வழியில் செலுத்தி உலகத்தைப் புரிந்துகொண்டு ஒழுகும்போதுதான் அவன் மனிதத் தன்மையை அடைகிறான். இது ரூபாயின் மறுபக்கம் போன்ற உண்மை.

மனிதனல்லாத மற்ற பிராணிகள் எங்கோ வானுலகத்திலிருந்து தங்கள் தேவைகளைப் பெற்று வாழ்ந்து விடவில்லை. தங்கள் கண்முன் பரந்து கிடக்கும் பூமியிலிருந்தே தங்கள் வாழ்க்கைத் தேவைகளைப் பெற்று ஜீவிக்கின்றன.

இறைவன் பிராணிகட்குப் பகுத்தறிவை அளிக்காத காரணத்தால் அவை பலவிதமான சிந்தனைகளைப் போட்டுக் குழப்பிக் கொண்டு வாழ்க்கையை சிக்கலாக்கி அவதியுறாமல் ஒரே சிந்தனையுடன் நேரடிச் செயல் மூலம் காலம் கழிக்கின்றன.

மனிதனைப் படைத்த இறைவன் அவனுக்காக - அவன் வாழ்க்கைக்காக என்று எத்தனையோ பொருள்களைத்தான் விட்டு வைத்திருக்கிறான். அவற்றை அனுபவித்து இன்பம் பெற முடியும். ஆனால் பகுத்தறிவைப் பெற்ற காரணத்தால் சந்தேகம், அவநம்பிக்கை, சுயநலம், பொறாமை ஆகிய குழப்பங்களை மனதிலே தேக்கிக் கொண்டு நேர்வழியாகச் செல்லாமல் குறுக்கு வழி என எண்ணிச் செக்குமாடு போல சுற்றிச் சுற்றி வந்து தொல்லையுறுகிறான்.



சிந்தனையைக் கட்டுப்படுத்தி செயலுக்கு முக்கியத்துவம் அளித்து இறைவனின் அருளைத் தேடியுணர்ந்து வாழ முற்படுபவனின் வாழ்க்கையில் பிரச்சனைதான் ஏது? சிக்கல்தான் ஏன் தலைகாட்டுகிறது?

சில ஆள்களைப் பார்த்திருக்கலாம். சதா முணு முணுத்துக் கொண்டிருப்பது அவர்கள் தொழில்.

''நான் நன்றாக முன்னுக்கு வரக்கூடியவன். ஆனால் என்னைச் சூழ்ந்து நிற்கும் பல பிரச்சனைகள் என் சக்தியைத் தாழ்த்தி மேலெழவொட்டாமல் தடுத்துக் கெடுக்கின்றன. சூழ்நிலையின் சிக்கல்கள் இல்லாவிட்டால் நான் இந்நேரம் எப்படியோ இருந்திருப்பேன்,'' என்று திரும்பத் திரும்ப இவர்கள் கூறுவார்கள்.

இவர்கள் என்ன எண்ணுகிறார்கள்? தங்களுக்கு ஓர் அலாவுதீன் தீபமும், மந்திரக் கம்பளமும் கிடைத்து விட்டால் தீபத்தைத் தேய்த்து பூதத்தை ஏவி தேவையான உண்டிகளை வரவழைத்து உண்டுவிட்டு, அழகான கன்னிகைகளைப் பூதத்தின் சக்தியால் வரவழைத்து, அருகே உல்லாசமாக அமர்த்திக் கொண்டு, மந்திரக் கம்பளத்தின் மீது ஏறிக்கொண்டு அகில உலக முழுவதும் பவனிவரலாம் என்பது இவர்கள் சிந்தனை.

இந்தச் சோம்பேறித்தனமான பகற் கனவு காணத் திறமை வேண்டுமா என்ன? தெரு சுற்றும் பிச்சைக்காரன்கூட இதைவிட அற்புதமான கனவுகளைக் கண்டுவிடுவானே!

குழந்தை பிறந்து அழ ஆரம்பித்த உடனேயே அது பிரச்சனையைச் சந்திக்கிறது. பசிக்குப் பால் தேவை என்ற பிரச்சனை. உண்டபின் உறக்கம். இவை குழந்தை முன் தென்படும் முதற் பிரச்சனைகள்.

இப்படித் தொடங்கும் பிரச்சனை மனிதனுடன் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வருகிறது. மனித வளர்ச்சிக்கு ஏற்ப -

RangaRakes

tamilnavarasam.com

மனித சிந்தனைக்கு ஏற்ப அதுவும் வளர்ச்சியடைகிறது. இறுதிக் காலம் வரை ஏதாவது ஓர் உருவத்தில் பிரச்சனை மனிதனைத் தொடர்ந்துதான் வருகிறது.

மனிதனை நீக்கிப் பிரச்சனைகள் இல்லை. பிரச்சனைகள் இல்லாமல் மனிதனும் இல்லை. ஒருவித சிக்கலும் இல்லாமல் மோட்டார் கார் வேகத்தில் வாழ்க்கை ஓடும் என்று எதிர்பார்ப்பவர்கள் வாழ்க்கையைப் பற்றிப் புரியாத வர்களே. அப்படிப்பட்டவர்கள் ஒன்று அறியாமை காரண மாக அவ்வண்ணம் எண்ணியிருப்பார்; அல்லது எதையும் செய்யச் சொல்லப்படும் குழுவினராக அவர்கள் இருப் பார்கள்.

நீராவி வண்டியை இன்று பார்க்கிறோம். ஆயிரக் கணக்கான ஆள்களையும், ஏராளமான பொருள்களையும் இழுத்துச் செல்லும் கம்பீரமான அதன் எஞ்சினைப் பார்க்கிறோம். மனித வாழ்க்கையின் பல பிரச்சனைகளைத் தீர்த்து மனிதனுக்குத் தோழனாக விளங்கும் நீராவி வண்டி செல்வதற்காக முதன் முதலாக நமது நாட்டில் இருப்புப் பாதை அமைத்த அந்தப் பழைய காலத்தை நினைவில் கொள்ளுங்கள்.

இருப்புப் பாதை போடுவதற்கு முன்பு பாதை செல்லும் இடத்தை நிர்ணயித்திருப்பார்கள். பிறகு வழியில் குறுக் கிடும் மேடு பள்ளத்தையும், காடுகளையும், முட்செடி புதர்களையும் அழித்து பாதையைச் சமமாக்கியிருப்பார்கள்; வழியில் ஆறுகளோ, சிறு கால்வாய்களோ குறுக்கிட்டால் அவற்றின் மீது பாலங்கள் கட்டியிருப்பார்கள்.

பின்னர் இருப்புப் பாதையைத் தொடங்கியிருப்பார்கள். இருப்புப் பாதை மட்டும் அமைக்கப்பட்டு விட்டால் போதுமா? அவற்றைப் பாதுகாத்து அடிக்கடி செப்பனிட ஆள்கள், வண்டி நின்று ஆள்களை ஏற்றிச் செல்ல



ஆங்காங்கே நிலையங்கள், அவற்றை நிர்வகிக்கத் தக்க மனிதர்கள், நீராவி வண்டியை ஓட்ட பயிற்சி பெற்ற ஆள்கள், அவர்கட்கு உத்தரவிடவும் வண்டியைக் காக்கவும் பாது காப்பாளர்கள்... ... இப்படியாகப் பல பிரச்சனைகள்.

பல்லாண்டுகளாகப் பாடுபட்டு செப்பனிட்டு முடிந்த இருப்புப் பாதையிலே ஓடும் நீராவி வண்டிப் பெட்டி யொன்றில் சுக நித்திரை புரியும் மனிதன் சற்று கண்விழித்து அந்த வண்டி இருப்புப் பாதையில் ஓடுவதற்கு முன் எத்தனை பிரச்சனைகளை சமாளித்தாக வேண்டியிருக்கிறது என்பதை நினைத்துப் பார்த்தால் பெரிய பிரமிப்பு தட்டும்.

"சரி... எத்தனையோ வருடங்கள் எப்படியோ பாடுபட்டு, ஏதோ ஒரு வகையில் பண்படுத்தி வண்டியை ஓடவிட்டு விட்டார்கள்; அப்படியானால் அது சம்பந்தப்பட்ட பிரச்சனை தீர்ந்த மாதிரிதானே!..."

இப்படி ஒரு கேள்வி எழுப்பினால் அதற்கு நாம் பதில ளித்தாக வேண்டியதில்லை. நமது நாட்டில் அடிக்கடி நிகழும் ரயில் விபத்துகளே உங்கள் வினாவுக்கு பதிலளிக்கப் போதுமானவையாகும்.

நிலம் திருத்தி, பாலங்கள் கட்டி, இருப்புப் பாதை அமைத்து பல நாள் அந்தப் பாதையிலே நீராவி வண்டியைச் செலுத்தி அனுபவப்பட்டு விட்டதினாலேயே அதன் பிரச்சனைகள் தீர்ந்து விடவில்லை என்பதைத்தானே ரயில் விபத்துகள் நமக்கு நினைவூட்டுகின்றன. நீராவி வண்டி இந்த உலகத்தில் உபயோகத்தில் உள்ள வரையிலும் அதன் பாதையைக் கூர்ந்து கவனித்து வர வேண்டும். பாலங்களின் பலத்தைக் கண் கொட்டாமல் கவனித்து ஆவன செய்ய வேண்டும். இந்த வேலைகளை விடாமலும் அதிக எச் சரிக்கையுடனும் செய்து வர வேண்டும் என்ற பாடத்தை ரயில் விபத்துக்கள் உணர்த்தவில்லையா?

RangaRakes
tamilnavarasam.com

இருப்புப் பாதையையும், நீராவி வண்டியையும் மனிதனுடைய வாழ்க்கைப் பாதையுடன் இணைத்து சிந்தனை செய்யுங்கள்; பல உண்மைகளைப் புரிந்து கொள்ளலாம்.

## பிரச்சனை ஒரு தொடர்கதை

ஒரு பெண் கர்ப்பிணியாக இருக்கும் காலத்தில் அந்தப் பெண்ணைச் சேர்ந்தவர்களுக்கு அவருடைய கர்ப்பம் ஒரு பிரச்சனையாக இருக்கும். 'பெண் பெற்றுப் பிழைக்க வேண்டுமே' என்று அதற்காக என்னென்ன முயற்சிகளைச் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்வார்கள்.

அதாவது அந்தப் பெண் பிரசவித்து விட்டால் கவலை விட்டது என்ற மனோபாவம் எல்லாருக்கும் இருக்கும்.

பெண் சுகமாக ஆண் குழந்தையைப் பெற்றெடுப்பாள். தாயும் சேயும் நலம்.

'சரி, பிரச்சினை தீர்ந்தது' என்று அவரவர்கள் தங்கள் தங்கள் வேலைகளைப் பார்க்கப் போய்விட முடியுமா?

தலைகாட்டும் புதுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும்.

பிரசவித்த பெண்ணின் உடலைத் தேற்ற வேண்டும். குழந்தையை அண்டும் சிறு சிறு பிணிகளிலிருந்து காப்பாற்றி வளர்த்தாக வேண்டும்; கொஞ்சம் அஜாக்கிரதையாக இருந்தாலும் குழந்தை அல்லது தாயின் நிலை அபாயமாகி யாராவது ஒருவரையோ அல்லது இருவரையுமோ இழக்க நேரிட்டாலும் வியப்பில்லை.

குழந்தை வளர்ந்துவிட்ட பின், சிரித்துப் பேசி விளையாடுகிறான். பிரச்சனை இத்துடன் நின்றதா? இவனைக் கல்வி கற்க பள்ளிக்கு அனுப்ப வேண்டும். நல்ல பழக்க வழக்கங்களுடன் உயர்ந்த மனிதனாக எதிர்காலத்தில் விளங்கும் வண்ணம் வளர்க்க வேண்டும்.





இப்படிப் பார்த்தால் இதே குழந்தை தொண்ணூறு வயது தாத்தாவாகிவிட்ட பிறகும்கூட பிரச்சினைகள் தீர்ந்து விடுவதில்லை என்பது தெளிவாக விளங்கும்.

எவ்வளவோ ஜாக்கிரதையாக இருந்தும் ரயில் விபத்து போல நல்ல திட உடல் படைத்த மனிதனுக்கு இருபது வயதிலோ, நாற்பது வயதிலோ, ஐம்பது வயதிலோ அல்லது தொண்ணூறு வயதிலோ திடீரென ஒரு நாள் ஆபத்து நேரிடலாம்.

ஆகவே வாழப் பிறந்த மனிதன் இறுதி நாள்வரை தன்முன் எதிர்ப்படும் பிரச்சனைகளை சமாளித்தாக வேண்டிய கட்டாய சூழ்நிலையில்தான் வாழ்கிறான்.

எவ்வளவோ ஜாக்கிரதையாக இருக்கும் மனிதன் எந்த வயதிலாவது ஏதாவது ஓர் ஆபத்தில் சிக்கிவிடுகிறான் என்றால் வாழ்க்கைப் பிரச்சனைகளை சமாளித்த முறையில் அவன் ஏதோ தவறு செய்து விட்டிருக்கிறான் என்றுதான் பொருள். அது பிரச்சனைகளின் குற்றமன்று. மனிதனின் தவறுதான்.

வாழ்க்கைப் பிரச்சனைகளில் ஏற்படும் தோல்வியின் தன்மையும் இத்தன்மையதுதான். சரியான வழியில் பிரச்சனைகளை அணுகாத காரணத்தால்தான் வாழ்க்கையின் பல சிக்கல்களை நம்மால் நீக்க முடிவதில்லை. இதற்கு நாம்தான் காரணமேயன்றி பிரச்சனைகளோ சிக்கல்களோ காரணமன்று.

வாழ்க்கையில் குறுக்கிடும் பிரச்சனைகள் எதுவும் தீர்க்க முடியாத அளவுக்கு சிக்கலானவை அல்ல.

சோம்பலற்ற மனம், எதையும் அலட்சியப்படுத்தாத உற்று நோக்கும் பண்பு, கலங்காத அறிவு, பண்புள்ள நெஞ்சம், நீதியும் தெளிவுமான தீர்மானம், உருப்படியான கல்வி, திடமான உடல் ஆகிய இந்த சாதனங்கள் மனிதனிடம்

tamilnavarasam.com

அமைந்திருந்தால் பிரச்சனைகளைத் தெளிவாக உணர்ந்து, அவற்றை எதிர் கொள்ளலாம். பிரச்சனையை முன்னதாக எதிர்கொள்வது மட்டும் போதாது. சுறுசுறுப்பாகவும் விரைவாகவும் அதனை ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கான செயல்முறை வகுக்கும் பண்பும் நம்மிடம் அமைந்திருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட சமயத்தில், ஆபத்தான நிலையில் தன் முன் கிடத்தப்பட்டிருக்கும் நோயாளியைப் பரிசோதிக்கும் டாக்டரின் திறமை நமக்கு வேண்டும்.

நோயாளியைப் பரிசோதனை செய்து சிகிச்சை செய்வதில் ஒரு விநாடி காலதாமதமானாலும் அவன் உயிர் பிரிந்து விடும். அஜாக்கிரதையின் காரணமாக ஓர் உயிரைக் காப்பாற்ற முடியாத டாக்டர் கொலை செய்தவனுக்கு ஒப்பாகிறான்.

வீண் காலம் போக்கி, சோம்பிக் கிடந்து சரியான சந்தர்ப்பத்தில் வாழ்க்கையின் முன் நிற்கும் பிரச்சனைகளை ஆராயாதவர் இப்படிப்பட்ட குற்றத்தைத்தான் செய்கிறார்.

டாக்டரின் குற்றம் பிற உயிரைப் போக்குகிறது. சோம்பேறியின் காலக் கொலையோ அவனையே அழிக்கிறது. வாழ்க்கையைத் திறம்பட நடத்தாத மனிதனின் அறிவு சமுதாயத்தையே பாதிக்கிறது. இப்படிப்பட்ட ஆள்கள் நிரம்பிய சமுதாயம் வாழும் வழியிலிருந்து விலகி தாழ்வுப் பாதாளக் குழியை நோக்கி நகருவதில் வியப்பென்ன?

## பிரச்சனைகள் எப்படி உருவாகின்றன?

''வாழ்க்கையில் பிரச்சனைகள் எப்படி உருவாகின்றன?'' என்ற கேள்விக்குச் சுலபமாகப் பதிலளித்து விடலாம்.

மனிதன் இயற்கைச் சக்திகளோடு தன் வாழ்க்கையை இணைத்துக் கொள்ள முயற்சி செய்யும்போது ஏற்படும்



போராட்டங்களே பிரச்சனைகளைச் சிருஷ்டிக்கின்றன. இதைத்தான் பிரச்சனைகள் என்று குறிப்பிடுகிறோம்.

வாழ்க்கைப் பிரச்சனைகளின் தன்மையை நம்மால் காட்ட இயலாது. சமயத்துக்கும் சந்தர்ப்பத்துக்கும் ஏற்ப புதுப்புது உருவம் எடுத்து மனிதனைத் திணற வைப்பதால்தான் பிரச்சனை என்று கூறுகிறோம். பிரச்சனைகளின் தன்மை எப்படிப்பட்டது. எந்தெந்த காலத்தில் இவை எப்படி மனிதனை சந்திக்கின்றன. இவற்றை எப்படி எதிர்த்துச் சமாளிப்பது என்ற விஷயங்கள் முன்கூட்டியே தெரிந்திருந்தால் அவற்றை சிக்கல்கள் என்றோ புதிர்மயமான பிரச்சனைகள் என்றோ எப்படிக் கூறமுடியும்?

புத்திசாலியான மனிதன் தன்முன் எதிர்ப்படும் பிரச்சனைகளை சமாளிக்கிறான் என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் அவற்றை அடியோடு ஒழித்து வெற்றி கொள்கிறான் என்று கூற முடியாது.

போர் முனையில் நிற்கும்போது எதிரி தரும் பலமான அடிமையைத் தடுத்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதனாலேயே எதிரியை வெற்றி கண்டு விட்டதாக எண்ணி நிமிர்ந்து நிற்க முடியுமா? விநாடியில் எதிரியின் அடுத்த அடி எந்த நேரமும் தன்னைத் தாக்கலாம் என்று எதிர்பார்த்து அதை தடுக்க உடனடியாக ஆயத்தமாகும் வீரன்தான் (வெற்றியே கிட்டாவிட்டாலும்) உயிரோடாவது திரும்ப முடியும்.

வாழ்க்கையில் திடீர் திடீரெனத் தலைகாட்டும் பலதரப்பட்ட பிரச்சனைகளை சமாளிக்கும் அளவுக்கு தன்னைப் பலப்படுத்திக் கொள்ள மனிதர் ஒவ்வொருவரும் முயலுவது ஒன்றுதான், வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கு எதிராக மனிதன் எடுக்கக்கூடிய சிறந்த நடவடிக்கை எனலாம்.

RangaRakes
tamilnavarasam.com

பொதுவாக மனிதன் மூன்று பண்புகளின் அடிப்படையில் வாழ்க்கை நடத்துகிறான்.

இச்சைப் பண்பு, ஆற்றல் பண்பு, அறிவுப் பண்பு ஆகிய இவைதான் அந்த மூன்று பண்புகள்.

இந்த மூன்று பண்புகள் அடங்கிய ஒரு வட்டத்தில்தான் மனிதத் தன்மை சுழன்று வருகிறது எனலாம்.

இச்சைப் பண்பு என்று குறிப்பிடப்படுவது உடல் சம்பந்தப்பட்ட உணர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட தாகும். பசி, காம உணர்ச்சி, கோபதாபங்கள் மற்றும் இவை போன்ற பலதரப்பட்ட உணர்ச்சி வகைகள் இதில் அடங்கும்.

ஆற்றல் பண்பானது உள்ளத்தின் வேகத்தின் மூலம் நிகழ்வது. லட்சிய வேட்கை, துணிவு, புகழுக்காக - பெருமைக்காக, மரணத்தையும் எதிர்கொள்ளத் தயாராகும் ஆண்மை வேகம் ஆகிய இவை ஆற்றல் பண்பின் தன்மை.

அறிவுப் பண்பு மூளையின் பலத்தைக் கொண்டு கண்முன் தென்படும் உலகத்தைப் பகுத்துணரும் தன்மையைக் குறிப்பதாகும். சிந்தித்தல், நல்லதை உணர்ந்து கெட்டதைத் தள்ளுதல், வாழ்க்கையின் மேடு பள்ளங்களை உணர்ந்து அதற்கேற்ப நடைபோட உதவுதல் ஆகியவை அறிவுப் பண்பின் தொழில்.

மேலே குறிப்பிடப்பட்ட மூன்று பண்புகளும் பொதுவாக எல்லா மனிதரிடமும் அமைந்திருக்கின்றன. ஆனால் மேற்படி பண்புகளின் அளவு எல்லாரிடமும் ஒரே அளவில் அமைந்திருப்பதில்லை.

ஒவ்வொரு மனிதரிடமும் ஏதாவது ஒரு பண்பின் ஆதிபத்தியம் ஓங்கி நிற்கும். அதற்கேற்றபடி அவர்கள் வாழ்க்கை முறை அமைந்திருக்கும். அவர்களைச் சந்திக்கும் பிரச்சனைகளும் அதற்கு ஏற்ப இருக்கும்.



அகிலம் முழுவதிலுமுள்ள மக்களின் தன்மையை ஆராய்ந்து நோக்கினால் ஓர் உண்மை புலப்படும். இச்சைக் குணத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட மக்கள்தான் உலகத்தில் அதிகமாக இருக்கின்றனர்.

தூண்டில்காரனுக்கு மிதப்பின் மீதே கண் இருப்பதைப் போன்று இவர்கள் நோக்கமெல்லாம் கவலையின்றி இன்பமாக வாழ வேண்டும் என்ற குறிக்கோளில்தான் இருக்கும்.

இப்படிப்பட்டவர்களின் மனதிலே பேராசை குடி கொண்டிருக்கும். பொறாமையுணர்ச்சி நிறைந்திருக்கும். அற்ப விஷயங்களுக்காக சச்சரவில் ஈடுபடும் மனப்பான்மை போன்ற குணங்கள் இவர்களிடம் அமைந்திருக்கும்! இவர்கள் தொழில் துறையிலேயே அதிக நாட்டம் கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் நல்ல முதலாளிகளாக இருப்பார்கள். அல்லது தொழிலாளிகளாக இருப்பார்கள்.

ஆற்றல் பண்பின் வழிபட்டவர்களோ முரட்டு சுபாவமுள்ளவர்கள். கடினமான உள்ளம் படைத்தவர்கள். துணிவு நிரம்பியவர்கள். போராட்டம், புகழ், வெற்றி ஆகிய இவற்றில் இவர்கள் மனம் மிதந்து கொண்டே இருக்கும்.

போர் வீரர்களாக சேவை செய்வதில் இவர்களுக்கு ஆசை அதிகம். போலீஸ்காரர்கள் போன்ற துணிவுக்கும் மன திடத்துக்கும் அதிக வாய்ப்புள்ள வேலைகளில் இவர்கள் இருப்பார்கள். நேர்முகமாக வாழ்க்கை நடத்த வசதி இல்லை என்றால் திருடர்களாகவோ ரௌடிகளாகவோ மாற இவர்கள் பின்வாங்க மாட்டார்கள்.

அறிவுப் பண்பின் ஆற்றலில் திளைப்பவர்களோ மிகவும் சாதுக்களாக இருப்பார்கள். படிப்பு, சிந்தனை, ஆராய்ச்சி போன்ற அலுவல்களில் சதா மூழ்கிக் கிடப்பார்கள். பெருங் கூட்டம், கும்பல்களுக்கு மத்தியிலே இவர்களைக் காண

RangaRakes

tamilnavarasam.com

முடியாது. இரைச்சலைக் கண்டால் இவர்களுக்குப் பிடிக்காது. தனிமையில் இருந்து சிந்திப்பதில்தான் இவர்கள் அதிக ஆர்வம் காட்டுவார்கள்.

காலத்தின் கோலமாக தற்காலத்தில் அறிவு ஜீவிகளாக வாழ்பவர்களும் தங்கள் பண்புக்கு ஏற்ப செயல்படுவதில்லை. மோசடி மனப்பான்மை, வஞ்சித்து ஏமாற்றுதல், வன்முறை போன்றவை அவர்களில் சிலரிடம் அமைந்திருக்கின்றன.

இதற்குக் காரணம் அறிவுப் பண்புடன் மற்ற பண்புகளும் அவர் மூளையில் கோளாறான நிலையில் குடிகொண்டுவிட்டதுதான்.

என்றாலும் சரியான நிலையில் அறிவுப் பண்பாளர்களாக இருப்பவர்களால் சமுதாயத்திற்கு எவ்வளவோ நன்மை உண்டு.

இவர்களிடம் பொதுவாக தன்னலம் அமைந்திருக்காது. சுய தேவைகளைப் பற்றி லட்சியம் செய்யாமல் பொதுநல நோக்கத்துடன் உழைக்க வேண்டும் என்ற பெருநோக்கு இவர்களிடம் இருக்கும். மனித வாழ்க்கையின் பிரச்சினைகளைப் பற்றி சிந்தனை செய்து அவற்றை சமாளிக்கும் முறைகளை வகுக்க இவர்களால் முடியும். அதற்கேற்ற ஆற்றல் இவர்களிடம் உண்டு.

சமுதாயத்தின் சிக்கல்கள் தீருவதற்கு மேற்குறிப்பிட்ட பண்புகள் அமைந்த மக்களின் ஏகோபித்த கூட்டுறவுதான் சிறந்த வழியாகும்.

## குழப்பம் - ஓர் ஆபத்து

மேற்குறிப்பிட்ட பண்புகள் ஒரு மனிதரிடம் குழப்பமான நிலையில் இருந்து விட்டால் அதைவிட சமுதாயத்துக்கு ஆபத்து வேறில்லை.



அறிவுப் பண்பு மிக்கவர்கள் அரசில் அமர்ந்து திட்டம் தீட்டவும், ஆற்றல் பண்பு நிறைந்தவர்களின் நாட்டின் பாதுகாப்பாளராக விளங்கவும், இச்சைப் பண்பு மிக்கவர்கள் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உற்பத்தியாளர்களாகவும் உள்ள சமுதாய அமைப்பு சிறப்பாக இருக்கும்.

இதற்கு மாறாக ஆற்றல் பண்புள்ளோரிடம் அரசும், அறிவுப் பண்புள்ளோரிடம் பாதுகாப்பும், இச்சைப் பண்புள்ளோர் மேற்கண்ட இரண்டிலும் தலையிடும் நிலையும் இருந்தால் சமுதாயத்தில் ஆபத்தான குழப்ப நிலைதான் நிலவும்.

சமுதாய நிலையை விவரித்துக் கூறுவது எனது நோக்கமன்று. வாழ்க்கைப் பிரச்சனைகளை சமாளிக்கக் கூடிய நிலையில் மனிதன் அமைய வேண்டும் என்பதுதான் என் நோக்கம். ஆகவே விஷயத்துக்கு வரலாம்.

சமுதாயத்தில் குழப்பமற்ற நிலை அமைய ஆற்றல், அறிவு, இச்சை ஆகிய பண்புகள் எப்படி சரியான நிலையில் பொறுப்பேற்றிருக்க வேண்டுமென்று கூறினேனோ அப்படியே தனி மனிதனுக்கும் அந்தப் பண்புகள் அமைய வேண்டும். அப்போதுதான் மனிதனால் வாழ்க்கைப் பிரச்சனைகளை சரியான நேரத்தில் உணர்ந்து, அவற்றைச் சமாளிக்க முடியும்.

மனிதன் ஒவ்வொருவரிடமும் அறிவுப் பண்பு, ஆற்றல் பண்பு, இச்சைப் பண்பு ஆகிய மூன்றும் உண்டு என்றும், ஆனால் அவை எல்லா மனிதரிடமும் ஒரே மாதிரி அமைவதில்லை என்றும் முன்னர் குறிப்பிட்டுள்ளேன்.

மேற்படி பண்புகளை தம்மிடம் ஓர் ஒழுங்குபடுத்தி அமைத்துக் கொள்ள மக்கள் முயற்சி செய்ய வேண்டும். சற்று சிரமந்தான் என்றாலும் அப்படி அமைத்துக் கொண்டால்தான் வாழ்க்கையின் பிரச்சனைகளைச் சமாளிக்க முடியும்.

RangaRakes

tamilnavarasam.com

முன்பு குறிப்பிட்ட முப்பண்புகளில் ஏதாவது ஒன்று மட்டும் சிறப்பாக அமையப் பெற்றவர் வாழ்க்கையோடு ஒட்ட முடியாமல் பல சங்கடங்களை அனுபவிக்க நேரு வதைக் கவனித்திருக்கலாம்.

ஓர் அறிஞன் சிந்திப்பதையும், ஆராய்ச்சி செய்வதையும் மட்டும் தன் வேலையாகக் கொண்டு வாழ முற்படும்போது வாழ்க்கை அவனுக்குப் பளுவாகி விடுகிறது. வாழ்க்கை நடத்துவதே ஒரு பிரச்சனையாகிறது.

அறிஞனின் சிந்தனை அகில உலகத்துக்கும் வழி காட்டக் கூடிய தகுதி படைத்ததாக இருப்பினும் அவன் வயிற்றுப் பிரச்சனை தீர அது வழி காட்டுவதில்லை. வறுமை அவனை வாட்டி வதைக்கிறது.

அதைப் போன்றே வெறும் ஆற்றல் பண்பில் மட்டும் சிறந்து விளங்குபவன் வாழத் தெரியாத முரடனாக, சமூகத் துக்கு ஓர் அபாய அறிகுறியாக விளங்குகிறான். அவனுடைய பலத்தை மட்டும் முன்னே நிறுத்தி அதை ஆதாரமாகக் கொண்டு பிழைப்பது இயலாத காரியம். இராணுவம், போலீஸ் போன்ற துறையில் சேர்ந்து அவன் ஓரளவு பயன் பெறலாம். ஆனால் அந்தப் பண்பு மிக்க எல்லாருமே இராணுவத்திலும், போலீஸிலும் சேர்ந்து விட முடியாது. வேறு வழியில்லை என்ற நிலை ஏற்படும்போது அதிகத் துணிவு மிக்கவர்கள் கொள்ளைக் காரர்களாகிறார்கள். அல்லது ரௌடிகளாக மாறி சமுதாயத்திற்குத் தொல்லை தருகிறார்கள்.

மற்ற இரண்டு பண்புகளும் சக்தியற்ற நிலையில், இச்சைப் பண்பு மேலோங்கி நிற்பவர்கள் முழுச் சோம்பேறி களாகிறார்கள். பிச்சைக்காரர்களாகிறார்கள். உழைத்துப் பிழைப்பதை வெறுத்து எப்படியாவது உண்டு கொழுத்து உறங்குவது ஒன்றுதான் இவர்களுக்கு உவப்பான விஷயம். இவர்களால் எப்படி ஒழுங்காக வாழ்ந்து விட முடியும்?



மூன்று பண்புகளும் சரி நிலையில் அமையும்போதுதான் மனிதன் நல்வாழ்வு வாழ்வது சாத்தியமாகிறது.

ஒருவனிடம் அறிவுப்பண்பு சரியானபடி அமையுமாயின் அது வாழ்க்கையைப் பகுத்தறிந்து சிக்கல்களை அகற்றத் திட்டம் தீட்டி, சரியான பாதையில் செல்ல வழிகாட்டி அவனை ஆட்சி செய்யும்.

ஆற்றல் பண்பு அவனிடம் ஒழுங்கான முறையில் அமைந்திருப்பின் அறிவின் ஆட்சிக்கு உட்பட்டு அறிவு தீட்டும் திட்டங்களை அது செயலாற்றும், செயல் முறையில் ஓர் ஒழுங்கு இருக்கும். தெளிவு காணப்படும். அறிவின் ஆட்சிக்கு உட்படாத ஆற்றலில்தான் கோளாறுகளும் குழப்பமும் தலைகாட்டும்.

அறிவு, ஆற்றல் ஆகிய இரு பண்புகளுக்கும் கட்டுப்பட்டு அவை சரியானபடி செயல்புரிய இச்சைப் பண்பு துணை புரியும். பலமும் ஆரோக்கியமும் பெற்று உடல் வளர்ந்தால் தானே அறிவும் ஆற்றலும் இயங்க முடியும்! அந்தப் பணியை இச்சைப் பண்பு நிறைவேற்றுகிறது.

வாழ்க்கையின் பிரச்சனைகள் பலவற்றைச் சமாளித்து சீரான முறையில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு சுகமாக வாழும் மக்களைக் கவனியுங்கள். அவர்கள் அப்படி வாழ்வதன் ரகசியம் முன் குறிப்பிடப்பட்ட முப்பண்புகளும் சரியானபடி தத்தமது அலுவல்களைச் செய்வதால்தான்.

ஒருவன் வாழ்க்கையில் ஒரு குழப்பமான நிலையில் இருக்கிறான் என்றால் அவன் தன்னிடம் அமைந்திருக்கும் முப்பண்புகளைப் பற்றி யோசிக்க வேண்டும். ஏதோ ஒரு பண்பு தனது கடமையை ஒழுங்காக நிறைவேற்றாததே குழப்பத்துக்குக் காரணம் என்பதை உணர்ந்து அந்தப் பண்பின் சக்தியை வளர்க்க முயல வேண்டும்.

RangaRakes tamilnavarasam.com

வாழ்க்கையில் ஏதாவது ஒரு பிரச்சனை எப்பொழுதாவது தலை காட்டினால் அது பெரிய விஷயமன்று; அதைச் சமாளிப்பதும் கஷ்டமன்று. திரும்பத் திரும்பப் பல பிரச்சனைகள் தலைகாட்டினால் - தங்களைச் செயலற்றவர் களாக்கினால் அதனால் மனமிடிந்து விட வேண்டாம். அந்தப் பிரச்சனைகளைச் சமாளிக்கப் பிறரிடம் ஓடாதீர்கள்.

சிலரிடம் ஒரு விரும்பத்தகாத பழக்கம் உண்டு. வாழ்க்கையில் தாங்கள் படும் கஷ்டங்களையும், அடிக்கடி இவர்கள் வாழ்க்கையில் குறுக்கிடும் பிரச்சனைகளையும் பிறரிடம் சொல்லிக்கொள்வதில் ஓர் உற்சாகம். இப்படிச் செய்வதனால் அவர்களது நிலைமை பரிகசிக்கத்தக்கதாக மாறுமேயன்றி, பிரச்சனை தீராது.

உங்கள் பிரச்சனைகளை உங்களால்தான் தீர்த்துக் கொள்ள முடியுமே தவிர பிறரால் அது சாத்தியப்படாது. என்னதான் விளக்கிக் கூறினாலும் உங்கள் பிரச்சனையின் உண்மையைப் பிறரால் புரிந்து கொள்ள முடியாது.

ஆகவே உங்கள் வாழ்க்கையில் அடிக்கடி குழப்பம் நேரிடுகிறது என்றால் உடனடியாக முன்பு குறிப்பிடப் பட்டிருக்கும் முப்பண்புகளின் குறையை உணர்ந்து அதை சரி செய்து கொள்ள முயற்சியெடுங்கள்.

## புரட்சி நடக்கிறதா?

இதற்கு முன் வேறெந்தக் காலத்தைக் காட்டிலும் இன்று நம்முடைய நாட்டில் வாழ்க்கைப் பிரச்சனை சிக்கலுடைய தாகிவிட்டது என்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம்.

ஓர் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய நாட்டில் மக்களிடமிருந்த அமைதியும், இன்பமும், திருப்தியும் நிறைந்த வாழ்க்கை இன்று கனவாய், பழங்கதையாய் மாறி



விட்டது. எதிர்காலத்தில் இன்னும் மோசமாகும் என்பதற் கான அறிகுறிகள்தான் தென்படுகின்றனவே தவிர, பிரச் சனைகள் தீர்ந்து விடும் என்பதற்கான அறிகுறி எதுவுமே இல்லை.

மனித வாழ்க்கை நிம்மதியற்றதாகி விட்டது. திருப்தி யற்ற சோர்ந்த முகங்களைத்தான் எங்கும் காண்கிறோம். வறுமை தீர்வதற்கான வாய்ப்பு சமீபத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. சமூகநிலையில் நாணயமும் நம்பிக்கையும் இல்லை. யோக்கியமாக வாழ்பவன் பிழைக்கத் தெரியாத வன் என்று பரிகசிக்கப் படுகிறான். அயோக்கியன் ஆனந்த மாக வாழ முடிகிறது. உண்மைக்கு மதிப்பில்லை. பொய் போற்றப்படுகிறது.

உண்மையிலேயே மனித வாழ்க்கை இன்று ஒரு தீராத பிரச்சனைக்கு உள்ளாகிக் கிடக்கிறது.

ஆனால் இன்று நாம் முன்னேறி விட்டதாகக் கூறிக் கொள்கிறோம். மனித வாழ்க்கையின் பல பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு விட்டதாகவும், மக்களிடையே விழிப்பு தோன்றி விட்டதாகவும், நாட்டில் புரட்சி தாண்டவ மிடுவதாகவும் பேசப்படுகிறது.

நூற்றுக்கணக்கான பத்திரிகைகள் நாட்டு நலனுக்காகக் காரசாரமாக எழுதுகின்றன. ஆயிரக்கணக்கான நூல்கள் மனிதனின் இடுக்கண்களைப் பற்றிப் பக்கம் பக்கமாக விளக்கித் தள்ளுகின்றன. மேடையிலே சொற்பொழி வாளர்கள் பாட்டாளி மக்களின் பரிதாபம் பற்றி குடம் குடமாக கண்ணீர் வடிக்கின்றனர். நாடகத்திலே, சினிமா விலே பாமர மனிதனின் பரிதவிப்புக் காட்சிகள் மின்னு கின்றன. ஆம்... எந்தப் பக்கம் நோக்கினும் புரட்சியின் நிழலுருவம் கம்பீரமாகத் தோற்றமளிக்கிறது! ஆனால் அந்த

RangaRakes

tamilnavarasam.com

உருவத்திலே உயிர் இருக்கிறதா? உணர்ச்சியிருக்கிறதா? கிடையவே கிடையாது. வெறும் பொய்த் தோற்றம்!

சோளக் கொல்லையிலே கம்பீரமாக நிற்கிறதே ஒரு திருஷ்டிப் பரிகாரப் பொம்மை! துணிக்கடையிலே அழகான உடைகள் அணிவிக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டி யிருக்கிறதே ஒரு விளம்பரப் பதுமை! அவற்றுக்கு என்ன மதிப்பிருக்கிறதோ, என்ன சக்தியிருக்கிறதோ - அந்த நிலைதான் இன்று நடமாடும் 'புரட்சி' என்ற வார்த்தைக்கு இருக்கிறது. காரணம் இங்கே இளமை மனம் கொண்ட உண்மைப் புரட்சிக்காரர்கள் குறைந்து விட்டனர்; பிஞ்சிலே பழுத்த வயோதிகப் புரட்சிக்காரர்கள் பெருகிவிட்டனர்.

புரட்சி பற்றிப் பேசுவது இங்கு வியாபார முறையாகி விட்டது. அரசியல்வாதி என்று சொல்லிக் கொள்வோரின் விளையாட்டுக் கருவியாகி விட்டது. லட்சியவாதிகள் என்போரின் கனவிலே மட்டும் நின்றுவிட்டது. ஒன்றும் புரியாத பாமர மக்களுக்கோ இது எட்ட நின்று வேடிக்கை பார்க்கத்தக்க ஒரு புதிர் விளையாட்டுக் காட்சியாகி விட்டது.

இன்று அரசியல் பிரச்சனை பிரமாதமாக அடிபடுகிறது. மூலைக்கு மூலை கட்சிவாதப் பிரதிவாதங்கள்! கண்ட விடமெல்லாம் கட்சிகள் சம்பந்தமான கலவரங்கள்! இவை சர்வசாதாரண நிகழ்ச்சிகளாகி விட்டன.

பொதுவாக ஒரு பெரும் போராட்டத்திற்குப் பிறகு சமூகத்தில் கிளம்பக் கூடிய ஊழல்கள் சிலவற்றைப் புரிந்துக் கொண்டு அடைய முடியாத இனிப்பான லட்சியங்கள் சிலவற்றை மக்களுக்குக் காட்டி, அதை விளம்பரப்படுத்தி ஏமாற்றுகிற கலவரக் கும்பல்கள் இந்தச் சீர்கேடான நிலைக்கு ஒரு காரணம் என்று கூறலாம். இந்தக் கும்பலின் கையில் இருக்கும் வலிவான ஆயுதம் வெறும் பேச்சுதான். இந்தப் பேச்சைத் தங்கு தடையின்றி, சமய சந்தர்ப்பமின்றி



சண்டப் பிரசண்டமாக அள்ளி வீசுவதில் இவை எப்பொழுதும் பின்வாங்கமாட்டா. இம்மாதிரி பொறுப் பற்ற பேச்சுகளே இந்த நாட்டைச் சீரழித்து வைத்திருக் கின்றன என்பதில் சந்தேகமே இல்லை.

எந்த ஒரு விஷயமும் ஓர் அளவுக்கு மீறும் பொழுது அது சக்தியிழந்து விடுவது மட்டுமின்றி எதிரிடையான பலனை யும் உண்டாக்கிவிடுகிறது. நம் நாட்டிலே பேச்சுக்கலை இந்த நிலையைத்தான் அடைந்து விட்டது.

பொதுநல சேவைக்கு பேச்சுக்கலை ஓர் அருமையான சாதனம். பண்புள்ளோரின் பேச்சு, பயனுள்ள பேச்சு மக்களுக்குச் செய்யும் நன்மைகள் அளவிட முடியாதவை. படித்தவர்கள் குறைவாக உள்ள நம் நாட்டிலே பேச்சுக் கலையைக் கொண்டு எவ்வளவோ பிரமாதமான நன்மை களை மக்களின் வாழ்விலே மலர வைக்கலாம். ஆனால் இங்கே பேச்சுக்கலை என்ன பாடுபடுகிறது!

'பேசுவது' என்றால் இங்கு ரொம்ப பேர் 'உபதேசம்' செய்வது என்று கருதி விடுகிறார்கள். தங்களுக்கு தகுதி யிருக்கிறதா இல்லையா என்பது பற்றி கவலைப்படுவ தில்லை. கண்ணை மூடிக் கொண்டு உபதேசம் செய்ய எல்லாரும் கிளம்பி விடுகிறார்கள்.

நாட்டிய அரங்கிலே பத்து வயதுச் சிறுமியும் காதல் பாட்டுக்கு அபிநயம் பிடிப்பது அவ்வளவு சாதாரணமாகி விட்டது. அந்த மாதிரி இன்று மேடையிலே அரசியல் என்றால் ரூபாய்க்கு எத்தனை படி? என்று கேட்பவர்களும் உலகத்துக்கு உபதேசம் செய்ய முற்பட்டு விட்டார்கள்.

இங்கு ஓர் அரசியல்வாதியாக உலாவ வேண்டுமானால் அதற்கு அரசியல் அறிவு இருக்க வேண்டுமென்ற அவசியி ல்லை. புரட்சிக்காரன் என்று பெயரெடுக்க வேண்டு ஏ மனப்பான்மை தேவையில்லை!

RangaRakes

tamilnavarasam.com

சீர்திருத்தக்காரனாக இருப்பவன் எந்த வித சீர்திருத்தமும் செய்ய வேண்டுவதில்லை! தேச சேவகனாக மாற எந்த சேவையும் தேவையில்லை. மேடையிலே நின்று நான்கு மணிநேரம் பேசத் தெரிந்தால் போதுமானது. அந்தப் பேச்சிலே கருத்து இருக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. ஆனால் கலாட்டா செய்யும் பண்பிருந்தால் போதும். இந்த ரகப் புரட்சி வீரர்களின் தலைமையில் எத்தகைய புரட்சி ஏற்பட முடியும்?

வானம் பொய்த்து விட்ட காரணத்தால் விளைச்சல் குன்றி அதனால் பஞ்சத்துக்கு இலக்காகி பரிதவித்த மக்களைப் பற்றிய விவரம் எல்லாருக்கும் புரியும். நூல் பஞ்சத்தினால் ஓட்டாண்டியாகி விட்ட நெசவாளிக் குடும்பங்களின் சோகக் கதையை யாவரும் அறிவர். பஞ்சாயத்தின் கொடுமைக் காளாகி தற்கொலை செய்து கொண்ட மனிதர்களின் பரிதாபச் செய்திகள் பலப்பல. பத்து மாதம் சுமந்து பெற்ற குழந்தையை ஒரு சில ரூபாய்க்கு விற்கத் துணியும் அளவுக்குத் தள்ளப்பட்ட தாய்மார்களைப் பற்றிய செய்தி களைப் படிக்கிறோம். சாலையோரத்தில் செத்துக்கிடக்கும் ஜென்மங்கள் - முச்சந்திகளிலே எலும்பும் தோலுமாகக் கையேந்தி நிற்கும் குழந்தைகள் - இவை அன்றாடக் காட்சிகளில் சில. ரிக்ஷா இழுத்து வயிற்றுக்காக உயிரையே அடகு வைக்கும் ரிக்ஷாக்காரனின் துயர நிலை யாருக்குத் தான் புரியாது?

இவ்வளவு விஷயங்களும் மக்களுக்குப்புரியும். ஆனால் எந்தவிதமான உணர்ச்சி பிரதிபலிக்கிறது? யாரிடமாவது எழுச்சி மனப்பான்மை தலைகாட்டியதா? புரட்சியின் வாடை வீசியதா? இந்த அவலநிலையை மாற்றி அமைக்க வேண்டும் என்ற ஆவேசம் எழுந்ததா? இல்லவே இல்லை; நாட்டின் துயரநிலை கேவலம் நாடகக் காட்சியாகி விட்டது.



பத்திரிகையிலே, புத்தகங்களிலே, சினிமாவிலே பார்த்து ரசிக்க வேண்டிய சாதாரண விஷயமாகி விட்டது.

இப்படி மக்களின் உணர்ச்சியையே மங்க அடித்தவை செயல் திட்டமற்ற, பொறுப்பற்ற ஆடம்பரப் பேச்சுகள் தான் என்பதை மறுக்க முடியாது.

பொதுக் கூட்டங்கள் நடைபெறும் இடங்களுக்கு வரும் மக்களின் மனநிலையிலும், பாட்டுக் கச்சேரி, சினிமா பார்க்கப் போகும் மக்களின் எண்ணத்திலும் இன்று மாறுபாடே இல்லை. இரண்டும் ஒன்றுதான்.

சினிமாவில் நடிகன் எப்படி நடித்தான். பாட்டுக் கச்சேரியில் பாடகி அல்லது பாடகனின் குரல் நயம் எப்படி இருந்தது என்று விமர்சனம் செய்வது போல பொதுக்கூட்டங் களில் பேசும் பேச்சாளனை இன்று மக்கள் அளவெடுக் கிறார்கள்.

பேச்சாளனின் தோற்றம் எப்படி இருந்தது? பேச்சில் எத்தனை இடத்தில் அடுக்குமொழிகள் சிதறின? எப்படி எதிர்க்கட்சிகளைத் திட்டினான்? என்றுதான் மக்கள் கவனிக்கிறார்களே தவிர, அவன் என்ன பேசினான்? அதனால் தங்களுக்கு ஏற்படக் கூடிய பயன் என்ன? என்று யாரும் சிந்திப்பதில்லை.

இந்த மட்டரக மனப்பான்மை வளர்ந்ததன் காரணமாகத் தான் பேச்சாளர்கள் கேவலம் தங்களை ஒரு காட்சிப் பொருளாக மட்டும் மாற்றிக் கொண்டு விட்டனர். புகழடைவதற்காக பேச்சாளன் பேசவேண்டியது, பொழுது போக்காக மக்கள் அதைக் கேட்க வேண்டியது என்ற நிலை வளர்ந்து விட்டது.

இப்படிப்பட்ட நிலையில் வாழ்க்கையின் உண்மையான பிரச்சனைகள் உணரப்பட்டு அதற்குப் பரிகாரம் தேடும் நிலை உடனே ஏற்படும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

RangaRakes

tamilnavarasam.com

இன்று நம்மிடையே ஏராளமான விவேகாநந்தர்கள் இருக்கின்றனர். ஆனால் ஒரே ஒரு காந்தியடிகளைக் கூட கண் முன் பார்க்க முடியவில்லை.

விவேகாநந்தர் அன்று பேசினார். அதற்கு அவசியம் இருந்தது. காரணம் அடிமை இந்தியாவின் குரல்வளை நெறிக்கப்பட்டிருந்ததால் அதன் நிலைமையை எடுத்து உலகத்துக்கு ஒலிபரப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது.

இன்று அடிமை இந்தியன் விடுபட்டு சுதந்திரப் பேரொளி சூழ நிற்கிறான். இன்று அவனுக்கு வேண்டியது பலவீன மான அவன் உடலைத் தேற்ற மருந்துதான். அழகான பேச்சுகள் அல்ல.

காந்தியடிகள் சுதந்திரப் போராட்டம் நடத்தியபோது பேச்சுக்கு முக்கியத்துவம் தரவில்லை. அன்றைய சூழ்நிலையில் பொதுமக்களை நேரடியாக இணைக்கவும் இல்லை. 'சுதந்திர இந்தியாவைப் பலப்படுத்த இன்று முயலுங்கள். சுதந்திர இந்தியாவுக்காக இன்று நூல் நூற்றுப் பழகுங்கள், சேரிகளை சுத்தம் செய்யுங்கள், தீண்டாமையை விடுங்கள், ஒற்றுமையாகத் திரண்டு நில்லுங்கள். அது போதும் சுதந்திரத்தை நான் மீட்டு வந்து உங்கள் மத்தியில் வைக்கிறேன்,'' என்றார் காந்தியடிகள்.

அவர் சொன்னதைச் செய்தார். நாமோ அவர் சொன்னதை மறந்து விட்டோம். அமெரிக்காவையும் இங்கிலாந்தையும் காப்பியடித்து வெறும் பேச்சு பேசுகிறோம். அடக்கமாக செயலாற்றுவதை விடுத்து ஆடம்பரமாக ஆர்ப்பாட்டம் செய்கிறோம்.

இந்த நிலையில் சமுதாயத்தின் பிரச்சனைகள் தீருமா? சமுதாயத்தின் பிரச்சனை தீராத போது அதன் அங்கத்தினனான தனி மனிதனின் வாழ்க்கைப் பிரச்சனை தீருமா?



## கலையுணர்ச்சியும் பிரச்சனைகளும்

சரியான முறையில் கலையுணர்ச்சியை வளர்த்து அதன் மூலம் மக்களின் பிரச்சனைகள் பலவற்றுக்கு தீர்வு காண வேண்டும் என உழைக்கும் பேரறிஞர்கள் இருக்கவே செய்கிறார்கள்.

என்றாலும் கலையுணர்ச்சியை வளர்த்தல் என்ற பெயரால் இன்று நடக்கும் படுமோசமான ஊழலை - அதனால் மனிதன் அடையும் வீழ்ச்சியை சொல்லும்போது பெரும்பான்மைக் கருத்துகளைச் சாட நேரிடுகிறது. இப்போது சிறுபான்மையினரான உண்மை அறிஞர்கள் பாதுகாப்பிடத்துக்கு அனுப்பப்படுகின்றனர். ஆகவே போலிகளைச் சாடும்போது அது உண்மைப் பேரறிஞர் களைப் பாதிக்காது; பாதிப்பதாக யாராவது கருதினால் அவர்களும் போலிகளாகத்தான் இருக்க வேண்டும்.

மக்களிடையே இன்று கலையுணர்ச்சி பெருகிவிட்ட தாகவும் அதனால் மனித வாழ்க்கை பல வகையிலும் பண்பட்டு பல பிரச்சனைகளுக்கு ஈடு கொடுத்து விட்ட தாகவும் கூறிக் கொள்கிறோம்.

போதாக் குறைக்கு மக்களிடையே கலையுணர்ச்சி இன்று வளர்ச்சியடைந்து விளங்குகிறது என்றும், அந்த வளர்ச்சி யின் துணை கொண்டு மக்கள் முன்னேற்ற சிகரத்தை நோக்கித் தாவுகின்றனர் என்றும் கூறுகிறோம். சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு இது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் அறியாமை என்பது எளிதில் புலப்படும்.

கலையுணர்ச்சி வாழ்வுக்கு வழி வகுத்துத் தரும் சாதனம் என்பது உண்மைதான். கலையும் விஞ்ஞானமும் மனிதனின் மனதைப் பண்படுத்துகின்றன. வாழ்க்கையில் அவன் முன் எதிர்ப்படும் சிக்கல்களை நீக்குகின்றன.

RangaRakes
tamilnavarasam.com

ஆதியில் மனிதனுக்குக் கலையுணர்ச்சி தோன்றாத போது மனிதனுக்கும் மிருகத்துக்கும் அவயவங்கள் தவிர மனப் பண்பில் மாறுபாடு காணமுடியாத நிலை இருந்தது. மனிதன் முரட்டு சுபாவமுள்ள மிருகமாகவே இருந்தான். கலை உணர்வு அவன் மனதைப் பண்படுத்தத் தவறியிருந்தால் அவனுடைய முரட்டு சுபாவம் பயங்கரமான முறையில் வளர்ந்திருக்கும். அந்த வளர்ச்சி அவன் தோழர்களையே எதிர்த்துத் தாக்கி அழிக்க முயற்சி செய்திருக்கும். அந்த முயற்சியின் பயனாக மனித இனமே அழிய நேர்ந்திருக்க லாம். அதனால், கலை வளர்ச்சியை யாரும் குறை கூற முடியாது.

ஆனால், இன்று கலை எப்படி வளர்ந்திருக்கிறது? இதுதான் சிந்தனைக்கு உரியது.

மனித இனத்துக்கு வளம் தரும் - வளர்ச்சிக்கு ஆக்கம் தரும் கலை நாட்டுக்குத் தேவை.

இன்றைய நிலை என்ன?

இன்றுள்ள கலை, மனிதனின் பழங்கால மனப்பண்பான முரட்டுத்தனத்தை நீக்கிவிட்டது. ஆனால், அவன் வீரத்தை யும் ஒழித்து விட்டது.

அந்தக் காலத்தில் அவன் கொண்டிருந்த அர்த்தமற்ற மூடநம்பிக்கைகளைப் போக்கிவிட்டது. அதே நேரத்தில் அவனுக்கு இருக்க வேண்டிய மனத் திடத்தையும் கலகலக்க வைத்துவிட்டது.

போராடுவதையே லட்சியமாகக் கொண்டிருந்தவனும் போர்க் குணத்தை மாற்றிக் கொள்ள முயன்றான். அத்துடன் தன் தேவைகளுக்காக செயலாற்ற வேண்டும் என்ற எண்ணத்தையும் மறந்தான். அந்தக் காலத்தில் அவனுக்குப் பேசத் தெரியாது. ஆனால், செயலாற்றத் தெரியும். இன்று



அளவுக்கு மீறிப் பேசுகிறான். செயல் என்றால் சோர்ந்து போய் உட்கார்ந்து விடுகிறான்.

பழங்காலத்தில் அவன் முகத்தைக் கொண்டு அகத்தை அறியலாம். கோபதாபங்களை எளிதில் உணரலாம். இன்றோ எல்லாம் அச்சில் வார்த்தது போன்ற நடைமுறை. தன்னைப் பற்றி சிந்திக்காமல் பிறரைப் பார்த்து வேஷம் போடும் சூழ்நிலை! அறிஞன் என்ன செய்தான் என்பதைப் பற்றிச் சிந்திக்காமல் எப்படி இருந்தான் என்பதை மட்டும் தெரிந்து கொண்டு அதன்படி நடப்பது இன்று இயல்பாகி விட்டது.

பொதுவாக சொல்லப் போனால் கலையுணர்வு இன்று மனிதப் பண்பையும், ஒழுக்கத்தையும் வளர்ப்பதற்கு மாறாக வெளி வேஷம் போடவும், அலங்காரமாகப் பேசவும் கற்பித்திருக்கிறது.

இந்த வெளிவேஷமும் அலங்காரப் பேச்சும் எல்லாரிட மும் குடிகொண்டதன் விளைவாக ஒருவருக்கொருவர் சந்தேகப்படுவதும் அவநம்பிக்கை கொள்வதும் சர்வ சாதாரணமாகிவிட்டது. இதனால் ஒரு சந்தர்ப்பத்தில் ஒற்றுமையுடன் ஒன்று திரண்டு நிற்கும் குணம் மாறி, எப்பொழுதும் நெல்லிக்காய் மூட்டையாக நிற்கும் நிலை சமுதாயத்தில் வளர்ந்து விட்டது. இந்தப் போலி நிலைக்கு கலையுணர்ச்சி என்று இன்று நாம் கருதிக் கொண்டிருப் பவையே காரணமாகும்.

இன்று வளர்ந்துள்ள கலை மனிதர்களின் புகழுக்கு மட்டும் ஆக்கம் அளிக்கிறது - வாழ்வுக்கு அல்ல. ஒரு கலைஞன் - தன் செயலை மற்றவர் புகழ வேண்டும் என்று விரும்புகிறானே தவிர சமுதாயத்திற்கு அது பயனளிக்க வேண்டுமே என்று எண்ணுவதில்லை. சமீபத்திய தலை முறையில் மக்கள் இந்த ஆடம்பர அடிச்சுவட்டில்தான் கால் வைத்து நடந்து வருகிறார்கள்.

RangaRakes

tamilnavarasam.com

அறிஞர் ரூஸோ கூறுவதுபோல நம்முடைய குழந்தைகள் ஆடம்பரமான ஸ்தாபனங்களுக்குச் செல்லுகிறார்கள். தங்கள் தாய்மொழியை மறந்து விடுகிறார்கள். ஆனால், உலக வழக்கிலே இல்லாத பாஷையைப் பேசுவதில் நிபுணர்களாக இருக்கிறார்கள். பாட்டிசைக்கிறார்கள். ஆனால், பாட்டின் அர்த்தம் தெரியாது. உண்மைக்கும் பொய்க்குமுள்ள வித்தியாசம் அவர்களுக்குத் தெரியாது. ஆனால், அவை வேறுபட்டவையல்ல என்று அழகாக எடுத்துப் பேசுகிறார்கள். தாராளபுத்தி, நிதானம், தைரியம், கருணை இவற்றைப் பற்றி அவர்களுக்குக் கவலையே இல்லை.

இந்த நிலையை சமுதாயத்தின் வளர்ச்சியென்று கூறி, இந்த வளர்ச்சியை உண்டாக்கிய கலையை வாழ்த்த முற்படுவதில் அர்த்தமிருக்க முடியுமா?

மனித சமுதாயத்திற்குக் கலை வேண்டும். ஆனால், அது ஆடம்பரத்தின் சின்னமாக இருக்கக் கூடாது. கேவலம் மனிதனுடைய திறமையை மட்டும் அளந்து காட்டும் அளவுகோலாக இருக்கக் கூடாது. மனிதனின் மனதை வளர்க்கும் மருந்தாக இருக்க வேண்டும். ஒழுக்கத்தை உண்டாக்கும் சாதனமாக இருக்க வேண்டும்.

இன்று நாம் கலை என்று கருதிக் கொண்டிருப்பவை ஒழுக்கத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை. சமுதாயத்தின் உடல் மட்டும் அழகாக இருந்தால் போதும், உயிர் தேவை யில்லை என்று அவை கூறுகின்றன. இதை ஒப்புக் கொள்ள முடியுமா?

தினந்தோறும் காலையில் குளித்து உடலைச் சுத்தமாக வைத்துக் கொள்ள முயலுகின்றோம். சலவை கலையாத வெள்ளுடை உடுக்கப் பழகுகிறோம். பத்து பேருக்கு நடுவே



கண்ணியமாக (அதாவது பிறர் தன்னைப் பற்றி பிரமாதமாக நினைத்துக் கொள்ளும் வகையில்) நடமாட நினைக்கிறோம். மனதில் தேங்கி நிற்கும் அழுக்குகளை அப்புறப்படுத்த நினைப்பதேயில்லை.

மனிதன் தன்னைப் பற்றி சிந்திக்க வேண்டும். தன் நலனுக்கு உதவக்கூடிய சில கட்டுப்பாடுகளை தனக்குத் தானே விதித்துக் கொள்ள வேண்டும். அதை தன் நலனுக்காக நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். தன் வாழ்வுக்காக அமைத்துக் கொண்டுள்ள வழி, மற்றவர்களுக்குச் சற்றேனும் இடைஞ்சலைத் தரக்கூடாது. அப்படி பிறருக்கு இடையூறு தரும் செயல்களைத் தன் திட்டத்திலிருந்து மாற்றிக் கொள்ள முயலவேண்டும். அந்த மாற்றம் சுய வாழ்வைப் பாதிப் பதாகவும் இருக்கக் கூடாது.

இப்படி தன்னை ஒரு நிலைப்படுத்திக் கொண்ட பின்பு தனது அனுபவத்தை, பிறருக்கு எடுத்துக் கூறலாம். எடுத்துக் கூறலாமே தவிர வற்புறுத்தக்கூடாது. உபதேசம் செய் வதையே தொழிலாகவும் கொள்ளக் கூடாது. இப்படித் தன்னை ஒழுங்குப்படுத்திக் கொண்டவன் சமுதாயத்தின் தகுதியுள்ள ஓர் உறுப்பினனாகிறான். பிறகு அவன் சமுதாயத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு ஓர் ஒழுங்கான பாதையில் நடைபோடுகிறான். இந்தப் பண்பைத்தான் பொதுவாக 'ஒழுக்கம்' என்று கூறலாம்.

இந்தப் பண்பை உண்டாக்குவதற்காகக் கலை பயன்படு கிறது என்றால் அதை வரவேற்போம், அப்படியில்லையே!

உங்கள் முன் 'கலைஞன்' என்று உலாவும் மனிதனைக் கண்டால் அவன் கலையை எப்படி உருவாக்கியிருக்கிறான் என்று கவனிக்க வேண்டாம். அது சமுதாயத்துக்கு எந்த அளவுக்குப் பயன்படும் என்று பாருங்கள். அவன் சிருஷ்டித்த கலை உள்ளம் அழகாக இருக்கிறதா என்று

RangaRakes

tamilnavarasam.com

மட்டும் கவனித்து திருப்தி அடைந்துவிட வேண்டாம். அவர்கள் செய்யும் ஆர்ப்பாட்டத்துக்கு செவி சாய்க்காதீர்கள். ஆனால், அவர்கள் செயல் சிறிதாயினும் அதற்குத் தலை வணங்குங்கள்...

கலை, மனித வாழ்க்கையைப் பண்படுத்தி அவர்கள் பிரச்சனைகளைத் தீர்க்கும் - சிந்தனையைத் தரும் அருமையான ஒரு சாதனம்தான். அது துருப்பிடித்துக் கிடக்கிறது. அந்தத் துருவை அகற்றி பழையபடி அது ஒளி பெற இன்றும் வாழும் மக்கள் ஆதரவு பெற்ற தமிழ்த் தலைவர்கள் முனைய வேண்டும். அதைச் செய்யாமல் கலை உணர்வை வளர்ப்பதன் மூலம் வாழ்க்கைப் பிரச்சனைக்கு பரிகாரம் தேட முற்படுவது சிக்கலை அவிழ்க்கப் போய் மேலும் சிக்கல்களை உண்டாக்கியது போலத்தான்.

✻ ✻ ✻

RangaRakes tamilnavarasam.com

# சிந்தனையாளர்களின் சுவையான அனுபவங்கள்

## கொஞ்ச நேர மனைவி

ஒரு தடவை ஆபிரகாம் லிங்கன் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது அவர் அமெரிக்க நாட்டு ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

லிங்கனுக்கு அடுத்து ஓர் இளம்பெண் அமர்ந்திருந்தாள்.

லிங்கன் அவளை நோக்கி, "நான் புகைப்பிடிக்கலாம் என நினைக்கிறேன். உங்களுக்கு ஏதும் ஆட்சேபணை இல்லையே?" என்று மரியாதையுடன் கேட்டார்.

"வீட்டில் உங்கள் மனைவி முன்பு எவ்வளவு அடக்கமாக புகை பிடிப்பீர்களோ அந்த மாதிரி புகை பிடியுங்கள்" என்றாள் அந்த இளம்பெண்.

"என் மனைவியின் முன்னால் நான் புகை பிடிப்பது இல்லை" என்றார் லிங்கன்.

"அப்படியா, தயவு செய்து நான் ரயிலை விட்டு இறங்கும்வரை என்னை உங்கள் மனைவியாக நினைத்துக் கொள்ளுங்கள்" என்றாள் அந்த இளம் பெண்.

## ஆங்கிலம் தெரியாதா?

சுவாமி விவேகானந்தர் ஒரு சமயம் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார்.

அவர் அமர்ந்திருந்த அதே பெட்டியில் சில இளைஞர்களும் இருந்தனர்.

RangaRakes tamilnavarasam.com

அவருடைய துறவிக் கோலத்தைக் கண்ட இளைஞர்கள் அவருக்கு ஆங் ல மொழி தெரியாது என்று எண்ணிக்கொண்டு அவரைப்பற்றி கேலியும் கிண்டலுமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

சுவாமிகள் அவர்கள் பேச்சைப் பற்றிக் கவலைப் படாமல்— பொருட்படுத்தாமல் மௌனமாக அமர்ந் திருந்தார்.

இறுதியில் எல்லாரும் இறங்கவேண்டிய ரயில் நிலையம் வந்தது.

இளைஞர்களுடன் சேர்ந்து விவேகானந்தரும் இறங்கினார்.

விவேகானந்தரை வரவேற்க ஒரு பெரிய கூட்டம் ரயில் நிலையத்தில் காத்துக் கொண்டிருந்தது.

சுவாமி விவேகானந்தரைக் கண்டதும் திரண்டிருந்த மக்கள் வாழ்த்தொலி எழுப்பி அவருக்கு மாலைகள் அணிவித்தனர்.

தம்மை வரவேற்க வந்தக் கூட்டத்தினருடன் விவேகானந்தர் சரளமாக ஆங்கில மொழியில் உரையாடியதைக் கண்ட இளைஞர்கள் திகைப்பும்— வியப்பும் அடைந்தனர்.

அவர்கள் சுவாமி விவேகானந்தரின் பாதம் பணிந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர்.

## ஏன் இவ்வளவு பெத்தே?

பெரியார் ஈ. வெ. ரா பழைய குடியரசு இதழில் தாமே எழுதியிருந்த ஒரு தகவல் இது—

ஆபீசுக்கு எதிர்த்தாற் போல ஒரு வீடு. அவங்க நம்ம ஜாதி இல்லே. அவங்களுக்கும் எங்களுக்கும் ஒரு மாதிரியான முறை— அண்ணன் தம்பி— மாமன் மச்சான்னு கூப்பிட்டுக்குவோம்.



அந்த முறையில் எதிர் வீட்டுக்காரன் ஒருவன் எனக்கு மாப்பிள்ளையா வேணும். அவன் மனைவிக்கு நான் அண்ணனா வேணும்.

அவனுக்கு நாலு குழந்தைகள். கைக்குழந்தை வேறு, மனைவி வயித்திலும் ஒரு குழந்தை. கோபம் வந்தா அவன் பொண்டாட்டியைப் போட்டு அடிப் பான். அவள் ‘குய்யோ முறையோ’ என அழுவாள்.

ஒரு தடவை அந்தப் பெண் என்னிடம் வந்து, ‘இவருகிட்ட நான் படற அவஸ்தை கொஞ்ச நஞ்ச மில்லை. எங்காவது ஆத்திலே குளத்திலே விழுந்து செத்துப் போயிடலாமான்னு தோணுது இந்தக் குழந் தைங்க அனாதையாயிடுமேன்னுதான் பார்க்கிறேன்’ அப்படின்னா.

‘இத்தனை குழந்தையும் நீ ஏன் பெத்துகிட்டே? ஒண்ணு ரெண்டோட நிறுத்திக்கப்படாதா’ன்னு கேட்டேன்.

“நானா பெத்துக்கிட்டேன். கடவுள் கொடுத்தாரு கடவுள் கொடுத்ததை வாணாம்னு சொல்ல நாம யாருன்னு” அவ சொன்னா.

எனக்கு ஒரே சிரிப்பாகத்தான் வந்தது.

## சொந்தக் குரலால் பேசவேண்டும்

கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் ஒரு தடவை மதுரை நகருக்கு வந்திருந்தார்.

தமிழ்க் கவிஞர்கள் இருவர் தாகூரைச் சந்திப் பதற்காக அவர் தங்கியிருந்த இடத்திற்குச் சென் றிருந்தனர்.

தாகூருக்கு தமிழ்மொழி தெரியாது. ஆகையால் அவர் விளங்கிக் கொள்வதற்கு வசதியாக இருக்கும்

RangaRakes tamilnavarasam.com

என்பதற்காக ஆங்கில மொழியில் தாகூரைப் பாராட்டி கவிதைகள் எழுதி எடுத்துச் சென்றிருந்தனர்.

தங்களைத் தமிழ்க் கவிஞர்கள் என்று வர்ணித்துக் கொண்ட அவர்கள் ஆங்கில மொழிக் கவிதையைப் படித்துக் கொடுத்தனர்.

அந்தக் கவிதைத் தாளைக் கையில் வாங்கிக் கொண்ட தாகூர் "உங்களைத் தமிழ்க் கவிஞர்கள் என்று அறிமுகப்படுத்திக் கொண்டீர்கள். ஆனால் தமிழ்க் கவிதையால் என்னைப் பாராட்டாமல், ஆங்கில மொழிக் கவிதையால் என்னைப் பாராட்டியிருக்கிறீர்களே! உங்கள் சொந்தக் குரலால் பேசுவது போலவே சொந்தத் தாய்மொழியால் என்னைப் பாராட்டியிருந்தால் நான் மகிழ்ச்சியடைந்து இருப்பேன். கிளிப்பிள்ளைகள் போல ஆங்கில மொழியை நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம்; ஆனால் நமக்கென சொந்தத் தாய்மொழி ஒன்று இருக்கிறது, அந்த மொழியால்தான் ஒருவரைப் புகழவேண்டும்" என்று சொன்னார்.

அதைக் கேட்டுத் தமிழ்ப் புலவர்கள் வெட்கமடைந்தார்கள்.

## அவருக்கு ஏன் மரியாதை?

குற்றாலத்தில் ரசிகமணி டி. டி. கே. சிதம்பரநாத முதலியாரது இல்லத்திற்கு ஓர் இளைஞர் வந்திருந்தார்.

தான் கொண்டு வந்திருந்த பணம் செலவாகி விட்டது என்றும் திரும்பி ஊர் போக பணம் தேவைப்படுகிறது என்றும் அந்த இளைஞர் சொன்னார்.

அந்த இளைஞர் பொய் சொல்லுகிறார் என்று அங்கே இருந்த மற்றவர்களுக்குத் தோன்றியது.

ஆனால் டி.டி.கே.சி. அந்த இளைஞருக்கு அவர் கேட்ட பணத்தைக் கொடுத்து அனுப்பினார்.



அங்கே இருந்த ஒரு தமிழறிஞர் "ஐயா அந்த இளைஞன் யோக்கியமானவன் அல்ல என்று படுகிறது, அவன் பொய் சொல்லுகிறான் என்றே நாங்கள் நினைக்கின்றோம், நீங்கள் அவனுக்குப் பணம் கொடுத்து அனுப்பினீர்களே!" என்று கேட்டார்.

டி.டி.கே. சிரித்துக்கொண்டு, "அவன் பொய் சொல்லுகிறான் என்று எனக்கும் நன்றாகத் தெரியும், நான் இப்போது அவனுக்குப் பணம் கொடுத்துவிட்டால் இனி அவன் மற்றவர்களைத் தொந்தரவு செய்யாமல் ஊர் போய்ச் சேர்ந்துவிடுவான் அல்லவா? அதற்காகத் தான் நான் பணம் கொடுத்தேன்," என்றார்.

## ஸ்ரீயின் கதை

இப்போது தமிழக அரசு தனி மனிதரின் பெயருக்கு முன்னால் 'திரு' என்னும் அடைமொழியைப் பயன்படுத்தி வருவது எல்லாருக்கும் தெரியும்.

ஆங்கில ஆட்சிக் காலத்தில் இருந்த சென்னை அரசாங்கம் 'மகா ராஜ ராஜ ஸ்ரீ' என்ற அடைமொழியையே பயன்படுத்தி வந்தது.

நூற்று ஐம்பது ஆண்டுகளாக நிலவி வந்த இந்தப் பழக்கத்திற்கு முடிவு கட்டியவர் சர்தார் வேதரத்தினம் பிள்ளைதான்.

'ஸ்ரீ' என்று சுருக்கமாக குறிப்பிட்டால் போதாதா? 'மகா ராஜ ராஜ ஸ்ரீ' என்று நீளமாக ஏன் குறிப்பிட வேண்டும்? என்று அப்போது முதலமைச்சராக இருந்த ராஜாஜி அவர்களுக்கு சர்தார் வேதரத்தினம் ஒரு கடிதம் எழுதினார்.

சர்தார் வேதரத்தினம் அவர்களின் யோசனையை ஏற்று 'ஸ்ரீ' என்ற சொல்லை மட்டுமே மரியாதை அடைமொழியாகப் பயன்படுத்த ராஜாஜி உத்தரவிட்டார்.

RangaRakes tamilnavarasam.com

பாரதம் சுதந்திரம் அடைந்த பிறகு அமைந்த தமிழக அரசு 'ஸ்ரீ'க்கு பதிலாக 'திரு' என்ற மரியாதை அடைமொழியைப் பயன்படுத்த ஆரம்பித்தது.

**பட்டத்தினால் என்ன பயன்?**

ஆசாரிய வினோபாபாவே ஒருதடவை தான் பெற்றிருந்த உயர் கல்விக்கான பட்ட சான்றுகளைத் தீயிலிட்டுக் கொளுத்தினார்.

அதைத் கண்ட அவருடைய தாயார் 'என்ன செய்கிறாய்? அரும்பாடுபட்டு படித்துப் பெற்ற பட்டங்களை எரிக்கிறாயே? உனக்குப் புத்தி கெட்டுப் போய் விட்டதா?'' என்று கடிந்துகொண்டார்.

அதைக் கேட்ட வினோபாபாவே சிரித்துக் கொண்டே 'அம்மா, நான் எதிர்காலத்தில் வாழப் போவது சுதந்திர பாரதத்தில் சுதந்திர சர்க்காரில். வெள்ளைக்கார அரசாங்கம் கொடுத்த பட்டங்களுக்கு மதிப்பு இருக்காது. தவிர வெறும் பட்டங்கள் மட்டுமே மனித வாழ்வை உயர்த்திவிடுவதில்லை. கடுமையான உழைப்புதான் வாழ்க்கையை உயர்த்தும். அதனால் வெள்ளைக்கார அரசாங்கம் கொடுத்த பட்டங்கள் சாம்பலாகிப் போனதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்,'' என்றார்.

**வயதே ஒரு சுமைதான்**

கவியரசர் ரவீந்திரநாத் தாகூர் தமது என்பதாவது வயதைத் தொட்டபோது காந்தியடிகள் ஒரு வாழ்த்துத் தந்தியை அவருக்கு அடித்திருந்தார்.

"எண்பது வயது போதாது. நூறு வயதுக்கு மேலும் வாழ்ந்து கலைச்சேவை செய்வீராக.''

"இது காந்தியடிகள் அனுப்பிய தந்தி வாசகம்.



தாகூர் காந்தியடிகளுக்குப் பதில் தந்தி அனுப்பினார்.

உங்கள் அன்புக்கு நன்றி. "வயது என்பது ஒரு சுமை. எண்பது வயதைச் சுமக்கவே நான் சிரமப் பட்டுக்கொண்டிருக்கிறேன். நூறு—நூற்றைம்பது வயதுகளைச் சுமக்கும் அளவுக்கு எனக்கு சக்தியில்லை.

இது காந்தியடிகளுக்குத் தாகூர் அனுப்பிய பதில் தந்தி.

**யார் வேலையை யார் செய்வது?**

அமரராகிவிட்ட கோவைத் தொழிலதிபர் ஜி. டி. நாயுடு ஒரு நாள் அலுவலகம் தொடங்கப் பெறாத காலை நேரத்தில் தமது தொழிலகத்தின் தலைமை நிர்வாகி அலுவலகத்திற்குள் பிரவேசித்தார்.

அறையில் மேஜை நாற்காலிகள் தாறுமாறாகக் கிடந்தன. மேஜை மீது இருந்த பொருட்கள் சிதறிக் கிடந்தன. அறையில் குப்பைக் கூளமும் காணப்பட்டது.

ஜி.டி. நாயுடு தாமே அறையை ஒழுங்குப்படுத்தினார். குப்பைக்கூளங்களை அகற்றினார். அந்தந்தச் சாமான்களை அந்தந்த இடங்களில் ஒழுங்காக வைத்தார்.

பிறகு ஒரு கடிதம் எழுதி கையொப்பமிட்டு வைத்தார்.

'உம்முடைய அறையை ஒழுங்குபடுத்தி வைக்க ஒரு சந்தர்ப்பமளித்ததற்கு மிகவும் நன்றி.''

இதுதான் இந்தக் கடிதத்தின் விளக்கம்.

அலுவலக நேரத்தில் அலுவலகம் வந்த தலைமை நிர்வாகி ஜி. டி. நாயுடுவின் கடிதத்தை கண்டு பதறி விட்டார்.

RangaRakes

tamilnavarasam.com

ஓடோடிச் சென்று அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

“உமது வேலையை ஒழுங்காகச் செய்திருந்தால் வேலையை விட்டுவிட்டு என்னிடம் மன்னிப்புக்கேட்க வரவேண்டி இருக்காதல்லவா?” என்றார் ஜி.டி. நாயுடு.

## கடனாளி எழுத்தாளர்

உலகப் புகழ் பெற்ற எழுத்தாளரான எட்கார் வாலஸிடம் இன்றைய எழுத்தாளர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் ஒன்று உண்டு.

எட்கார்வாலஸ் தமது எழுத்தின் மூலம் பல லட்சம் பவுன் சம்பாதித்தார்.

ஆனால் ஊதாரித்தனமாக செலவு செய்த காரணத்தால் கடனாளியாகவே இருந்தார்.

எட்க்கார்வாலஸ் இருநூறு நாவல்களையும், இருநூறு சிறுகதைகளையும் எழுதியுள்ளார். இவருடைய துப்பறியும் கதைகளுக்கு மக்களிடம் நல்ல வரவேற்பு இருந்தது.

அதாவது நூல்களை வெளியிட்ட புத்தக வெளியீட்டாளர்கள் ஒன்று சேர்ந்து அவர் மறைந்த பிறகு கடனை அடைத்தார்கள்.

## எளிய உடைகள்

மகாத்மா காந்தி வட்ட மேஜை மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக இங்கிலாந்துக்குப் போயிருந்தார்.

மன்னரைச் சந்தித்து உரையாட வேண்டும் என்றால் அதற்காக சந்திக்க வருபவர் ஆடம்பரமாக உடையணிந்திருக்க வேண்டும் என்பது அங்கு மரபு.

காந்தியடிகளோ இடுப்பில் ஒரு வேஷ்டி அணிந்து மார்பில் ஒரு துணியைப் போர்த்திக் கொண்டிருந்தார்



இங்கிலாந்தின் மரபு தளர்த்தப்பட்டு அந்த உடையுடனேயே மன்னரைச் சந்திக்க காந்தியடிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

பின்னர் பத்திரிகை நிருபர்களுடன் காந்திஜி உரையாடிக் கொண்டிருந்தபோது ஒரு நிருபர் மன்னரைச் சந்திக்கும்போது இவ்வளவு குறைந்த உடையுடன் ஏன் சென்றீர்கள்?” என்று கேட்டார்.

காந்திஜி சிரித்துக்கொண்டே, “உங்கள் மன்னர் என்னைப் போன்ற நான்கு பேர் அணியக்கூடிய உடைகளை அவர் ஒருவரே அணிந்திருக்கிறார். அதனால்தான் என் உடைகளைக் குறைத்துக்கொண்டேன்” என்றார்.

## அடிகளில் பாதி

இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக இருந்தவர்களில் ஸர் ராபர்ட் பில் என்பவர் குறிப்பிடத்தக்கவர்.

சின்ன வயதிலிருந்தே மெலிந்த உடலுடைய நோஞ்சானாக அவர் இருந்தார்.

அவர் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது ஒரு தடவை முரட்டுச் சிறுவன் ஒருவன் அவரை வலுச் சண்டைக்கு இழுத்து அடித்துக் கொண்டிருந்தான்.

ராபர்ட் பில் அவனைத் திருப்பி அடிக்க சக்தியின்றி அடியை வாங்கிக் கொண்டிருந்தார்.

அருகிலிருந்து அந்தக் காட்சியைக் கவனித்துச் கொண்டிருந்த ஒரு சிறுவன் முரட்டுச் சிறுவனை நெருங்கி “இவனை எத்தனை அடிகள் அடிப்பதாக எண்ணியிருக்கிறாய்?” என்று கேட்டான்.

“ஏன் எதற்காக கேட்கிறாய்?” என்று முரட்டுச் சிறுவன் கேட்டான்.

RangaRakes tamilnavarasam.com

‘‘இனி மேற்கொண்டு இவனுக்கு நீ கொடுக்க நினைக்கிற அடிகளை எனக்குக் கொடுத்துவிடு. நான் வாங்கிக் கொள்கிறேன்’’ என்றான் அந்தச் சிறுவன்.

அந்தச் சிறுவன்தான் இங்கிலாந்தின் உலகப் புகழ் பெற்ற கவிஞனாகத் திகழ்ந்த பைரன்.

**விஷம் சாப்பிடத் தயார்**

பிரிட்டிஷ் பிரதமராக இருந்த சர்ச்சிலின் அலுவலகத்திற்கு ஒரு முரட்டுப் பெண்மணி வந்தார்.

தனக்கு விதிக்கப்பட்டிருக்கும் வீட்டுவரி தொடர்பாக சலுகை தரவேண்டும் என்று சர்ச்சிலிடம் பிடிவாதமாக வற்புறுத்தினாள்.

‘‘சாதாரண நிர்வாக விஷயங்களில் நான் தலையிடக் கூடாது. உனக்கு என்னால் உதவி செய்ய முடியாது. சம்பந்தப்பட்ட அதிகாரியைப் போய்ப் பார்’’ என்றார் சர்ச்சில்.

பெண்மணியோ திரும்பத் திரும்ப தனக்கு உதவி செய்யவேண்டும் என்று சர்ச்சிலை நச்சரித்தாள்.

சர்ச்சில் மசிந்து கொடுக்கவில்லை. அந்தப் பெண்மணி அளவு கடந்த கோபம் கொண்டாள்.

‘‘ஒரு பெண்மணியிடம் இரக்கமாக நடந்துகொள்ள விரும்பாத நீர் ஒரு ராட்சதர். நான் உமது மனைவியாக இருந்திருந்தால் உமக்கு விஷம் கொடுத்து கொன்றிருப்பேன்’’ என்று கத்தினாள்.

சர்ச்சில் புன்னகையுடன் ‘‘அம்மணி நீ எனது மனைவியாக அமையும் துர்பாக்கியம் நிகழ்ந்திருந்தால் நீர் கொடுக்கும் விஷத்தை மகிழ்ச்சியோடு வாங்கிக் குடித்துவிட்டு என் வாழ்க்கையை முடித்துக் கொண்டிருப்பேன்’’ என்றார்.



**நாய்க்குத் தெரிந்த உண்மை**

பேரறிஞர் டாக்டர் ஜான்சனை மட்டந்தட்டும் நோக்கில் அவருடைய நண்பர் பாஸ்வெல் கீழ்க்கண்டவாறு ஒரு கேள்வி கேட்டார்.

சமுதாயத்தில் ஓர் அறிவாளியால் அப்படி என்ன பிரமாதமான நன்மை ஏற்பட்டு விடப்போகிறது. அறிவாளியைவிட ஒரு நல்ல சமையற்காரனால் சமுதாயத்துக்கு எவ்வளவோ நன்மை.

இது பாஸ்வெல்லின் கேள்வி.

ஜான்சன் கீழ்க்கண்டவாறு பதில் அளித்தார். ‘‘நீர் சொல்லும் விஷயம் தெருவிலே செல்லுகிற எந்த நாய்க்கும் நன்றாகத் தெரியுமே? இதைப் போய்ப் பிரமாதப்படுத்துகிறீரே?’’

**காந்திஜிக்கு வேலை கிடைக்கவில்லை**

காந்திஜி பாரிஸ்டர் பட்டம் பெற்று இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்த சமயம்.

தமக்காக ஒரு வேலைக்கு அவர் அலைந்துக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயம் ஒரு செய்திப் பத்திரிகையில் விளம்பரம் ஒன்று வெளியாயிருந்தது.

செல்வந்தர் ஒருவர் இல்லத்தில் ஒருவருக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுக்க ஆள் தேவை. மாத சம்பளம் 75 ரூபாய்’’ என்று விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

காந்திஜி அந்த வேலைக்காக விண்ணப்பித்திருந்தார்.

நேரடிப் பேட்டிக்கு வருமாறு அவருக்கு அழைப்பு வந்திருந்தது.

வேலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையுடன் காந்திஜி அங்கே விரைந்தார்.

RangaRakes
tamilnavarasam.com

காந்திஜியின் கல்வித் தகுதிச் சான்றிதழ்களை வாங்கிப் பார்த்த செல்வந்தர் குடும்பத்தினர், "அடேயப்பா! பாரிஸ்டர் பட்டம் பெற்றிருக்கிறீரே! உம்மைப் போன்ற பெரிய படிப்பாளி எங்களுக்கு வேண்டாம். சாமானிய பி.ஏ. பட்டதாரி இருந்தால் போதும்" என்று கூறி அவரை அனுப்பி விட்டனர்.

காந்திஜி மிகுந்த ஏமாற்றத்துடன் வீடு திரும்பினார்.

### நரகத்தில் ஒரு வேலை

அமெரிக்க ஜனாதிபதியாக கூலிட்ஜ் இருந்த பொழுது அவருடைய நேர்முகச் செயலாளரிடம் பணி புரியும் ஒருவர் கூலிட்ஜை சந்தித்து தமது அதிகாரியைப் பற்றிக் குறை கூறிப் புகார் செய்தார்.

"தங்கள் உதவியாளரிடம் நான் பணியாற்றுகிறேன். அவர் தனக்குக் கோபம் வரும்போதெல்லாம் 'நீ நரகத்துக்குப் போ' என ஏசுகிறார். இது எனக்கு வேதனையைத் தருகிறது" என்றார்.

கூலிட்ஜ் சிரித்துக்கொண்டே "நீங்கள் அவரிடம் சென்று சொல்லுங்கள். "ஐயா! எனக்கு உங்களின் தலைமையில் வேலை செய்யத்தான் பிடிக்கிறது. நீங்கள் நரகத்திற்கு பதவி மாற்றம் பெறும்போது நானும் அங்கு வந்துவிடுகிறேன். இவ்வாறு சொல்லிப் பாருங்கள்" என்றார்.

கூலிட்ஜ் சொல்லிக் கொடுத்த யோசனை நல்ல பயனையே தந்தது.

### சைபருக்கு மதிப்பு

காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார்.



சத்தியமூர்த்தியின் ஆவேசப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த சத்தியமூர்த்தியைப் பிடிக்காத ஒருவர் எழுந்து "உங்களைப் போன்ற வாய் வீச்சுப் பேர்வழிகளால் நாட்டுக்கோ கட்சிக்கோ ஒரு பயனும் இல்லை. அதிகம் பேசாத காந்தியடிகள்தான் தேசத்தின் ஜீவனாக இருக்கிறார். அவர் ஒன்று என்ற எண்ணாக இருக்கிறார் என்றால் உங்களைப் போன்றவர்கள் வெறும் ஜீரோ(0) வாகத்தான் இருக்கிறீர்கள்," என்று சாடினார்.

சத்தியமூர்த்தி அடக்கமாக—அமைதியான குரலில் பதிலளித்தார்.

அன்பர் சொல்லுவது போன்று என்னைப் போன்றவர்கள் சைபர்கள்தான். ஆனால் 'ஒன்று என்ற காந்தியின் பக்கத்திலே அமைந்திருக்கிறது சைபர்கள்தான். ஒன்று என்ற எண்ணுக்குப் பக்கத்தில் அமையும் ஒவ்வொரு சைபருக்கும் பெரிய மதிப்பு உண்டு என்பதும் அன்பருக்குத் தெரியாது போலும்," என்றார்.

எதிர்ப்பாளர் அப்புறம் வாயே திறக்கவில்லை.

### சின்ன வயதிலேயே போராட்டம்

நேதாஜி பத்து வயதுச் சிறுவனாக இருந்தபோது ஒரு தடவை பள்ளி செல்வதற்கு வீட்டை விட்டு வெளியே வந்தபோது தடுக்கி விழுந்தார். காலில் பலமாக அடிபட்டு பல நாட்கள் உயிருக்குப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

இதைப்பற்றி பிற்காலத்தில் குறிப்பிட்ட நேதாஜி என்னுடைய போராட்டம் எனது பத்தாவது வயதிலேயே தொடங்கிவிட்டது. அதன்பிறகு வாழ்நாள் முழுவதும் பலவிதமான போராட்டங்களைச் சந்திக்க வேண்டி வந்துவிட்டது என்றார்.

RangaRakes tamilnavarasam.com

### உண்மையான துறவி யார்?

கடவுளை நம்பாத நாத்திக மனப்பான்மை படைத்த ஒரு செல்வந்தர் ஒரு தடவை இராமகிருஷ்ண பரமஹம்சருடன் உரையாடிக்கொண்டிருந்தார். அப்போது அவர் சுவாமி தாங்கள் கடவுளுக்காக தங்கள் வாழ்க்கையைத் துறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன்,'' என்றார்.

பரமஹம்சர் புன்னகைத் தவழும் முகத்துடன் ''நான் ஒரு துறவியாக இருக்கலாம். ஆனால் என்னை விட நீர்தான் பெரிய துறவி,'' என்றார். செல்வந்தருக்கு தூக்கிவாரிப் போட்டது. ''உங்களைவிட நான் பெரிய துறவியா எப்படி?'' என்று திகைப்புடன் கேட்டார்.

''ஐயா நானோ கடவுளுக்காக என் வாழ்க்கையை துறந்தேன். நீரோ சுகபோக வாழ்க்கைக்காக கடவுளையே துறந்துவிட்டீர். ஆகவே என்னைவிட நீர்தான் பெரிய துறவி ஆகிறீர்'' என்றார்.

செல்வந்தர் வெட்கத்துடன் தலைகுனிந்து கொண்டார்.

### யாருடைய பணம்

புகழ்பெற்ற பாரத நாட்டு எழுத்தாளர் நல்லாசிரியராக திகழ்ந்தவர். கே.ஏ. அப்பாஸ் அண்மையில்தான் அவர் அமரரானார்.

விடுதலைப் போராட்டக் காலத்தில் கே.ஏ. அப்பாஸ் ஒரு பொதுநல நிறுவனத்திற்காக பலரிடம் சென்று நிதி வசூல் செய்து கொண்டிருந்தார்.

பாம்பே நகரத்திற்கு அப்பொழுது மால்கம் ஹெய்லி என்ற வெள்ளையர் கவர்னராக இருந்தார்.

கே.ஏ. அப்பாஸ் தமது குழுவினருடன் ஒருநாள் அவரைச் சந்தித்து நிதி உதவி கோரினார்.



மால்கம் ஹெய்லி கேலியாகச் சிரித்தார்.

''உங்களுக்குத்தான் வெள்ளைக்காரர்களைக் கண்டால் பிடிப்பதே இல்லையே! எங்களை விரட்டியடிக்கப் பார்க்கிறீர்கள். அப்படியிருக்க என்னிடமே நிதி வசூலுக்கு வந்திருக்கிறீர்களே!'' என்றார்.

அப்பாஸ் கம்பீரமாக குரலை உயர்த்தி ''கவர்னர் அவர்களே, நாங்கள் உங்களிடம் கையேந்திப் பிச்சைக் கேட்கவில்லை. ஏறத்தாழ நூறு ஆண்டுக்காலமாக எங்கள் மக்களின் செல்வங்களைச் சுரண்டி எடுத்துச் சென்றிருக்கிறீர்களே, அதில் ஒரு பகுதியைத்தான் திரும்பக் கேட்க வந்திருக்கிறோம்,'' என்றார்.

கவர்னர் மறுவார்த்தை பேசாமல் நூறு ரூபாயை அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டார்.

### தாங்குவது யார்?

ஒரு தடவை பண்டிதமணி கதிரேசன் செட்டியார் திருவாவடுதுறை ஆதினத் தலைவரைச் சந்திக்கச் சென்றிருந்தார்.

கதிரேசன் செட்டியார் ஆதினத் தலைவரைத் தாழ்ந்து வணங்கியபோது கால் நழுவிக் கீழே விழப் போனார்.

அதைக்கண்ட ஆதினத் தலைவர் சட்டென எழுந்து கதிரேசன் செட்டியாரைத் தாங்கிப் பிடித்தார்.

கதிரேசன் செட்டியார் மறுபடியும் ஆதினத் தலைவரை வணங்கி, ''சுவாமி எல்லாம் இயல்பாகத்தான் நடந்திருக்கிறது,'' என்றார்.

''இயல்பாக என்ன நடந்தது?'' என ஆதினத் தலைவர் விளங்காமல் கேட்டார்.

''என்னைப் போன்ற அடியவர்கள் தவறுவதும், தங்களைப்போன்ற ஆன்மிகப் பெரியவர்கள் தவறிய

RangaRakes
tamilnavarasam.com

வர்களைத் தாங்கி வழி நடத்துவதும் இயல்புதானே? அதுதான் இப்போதும் நடந்திருக்கிறது,'' என்று விளக்கம் சொன்னார் கதிரேசன் செட்டியார். ஆதினத் தலைவர் மகிழ்ச்சியுடன் புன்னகை செய்தார்.

## கோடீசுவரத் தந்தையும் மகனும்!

ஒருமுறை அமெரிக்கக் கோடீசுவரரான ராக்பெல்லர் பிரான்சு நாட்டுக்குப் போயிருந்தார். பிரான்ஸில் உள்ள ஒரு பிரபல ஓட்டலுக்குச் சென்ற இராக்பெல்லர், ஓட்டல் நிர்வாகியைப் பார்த்து "வசதிகள் சற்று குறைவாக இருந்தாலும் பரவாயில்லை. மலிவான வாடகைக்கு ஒரு அறை கிடைக்குமா?'' என விசாரித்தார்.

வந்திருப்பவர் ராக்பெல்லர் என அறிந்ததும் ஓட்டல் அதிபர் வியப்படைந்தார். அவர் ராக்பெல்லரை நோக்கி "ஐயா, தங்கள் மகன் இங்கு வரும் போதெல்லாம் எங்கள் ஹோட்டலில் அதிக வசதிகள் நிறைந்த அதிக வாடகையுள்ள அறையில் அல்லவா தங்குகிறார். தாங்களோ மலிவான அறையை கேட்கிறீர்களே?'' எனக் கேட்டார்.

ராக்பெல்லர் சிரித்துக்கொண்டே "ஐயா, என் மகனுக்கு கோடீசுவரரான ஒரு தந்தை இருக்கிறார். எனக்கு அப்படி ஒன்றுமில்லை,'' என்றார்.

## பகலில் பார்வை—இரவில் எழுத்து!

ஜான் ஆர்ப்டிட் ராண்டி என்பவர் போலந்து நாட்டில் 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர்.

இவர் ஸ்வீடனில் உள்ள உப்சலா ஸ்டாக்ஹோம் நகரங்களுக்குச் சென்று அங்குள்ள அரசு நூலகத்தில் சில முக்கிய வரலாற்று நூல்களைப் பிரதி எடுக்க விரும்பினார்.



அரசாங்கம் அதற்கு அனுமதி தரவில்லை. நூல்களை அருகே அமர்ந்து படிக்கலாமே தவிர பிரதி எடுக்கக்கூடாது என்று கூறிவிட்டனர்.

ஆர்ப்டிட் ராண்டி அந்த நூலகத்தில் அமர்ந்து தேவைப்படும் நூல்களைக் கவனத்துடன் படித்து மனத்தில் பதியவைத்துக் கொண்டார். இரவில் நினைவிலிருந்தவற்றை எழுதி வைத்துக் கொண்டார்.

இவ்வாறு தேவையான நூல்களில் முக்கிய பகுதிகளை அவர் பிரதி எடுத்துவிட்டார்.

## பூமியை அசைக்க முடியும்

நான் நிற்பதற்கு ஓர் இடமும் சரியான நெம்பு கோலும் என் கைக்குக் கிடைத்தால் இந்த பூமியை அசைத்து நகர்த்திவிட முடியும்'' என்று ஒரு தடவை ஒருவரை புகன்றார், ஆர்க்கிமிடிஸ் என்ற கிரேக்க தத்துவ ஞானி.

நிலைத்தளம் ஒன்றின் மீது ஒரு நீண்ட கோலைப் படியச் செய்து அந்தக் கோலின் நீண்ட முனைகளைக் கையில் பிடித்துத் தூக்கும் ஒரு பலமற்ற சிறுவனால் பலம் வாய்ந்த பெரிய மனிதனால் நகர்த்த இயலாத கனமான பொருளையும் நகர்த்திக் காட்டமுடியும் என்றார் ஆர்க்கிமீடிஸ்.

இதுதான் ஆர்க்கிமிடிஸ் கண்டுபிடித்த நெம்பு கோலின் தத்துவம்.

## கடவுளே காப்பாற்று

ராபர்ட் இங்கர்சால் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த தத்துவமேதை. அவர் தொடக்கத்தில் கடவுளைப் பற்றி கேலியாகவும் பேசுவார்.

RangaRakes

tamilnavarasam.com

ஒரு தடவை இங்கர்சாலின் மகள் மாடிப்படிகளில் ஏறும்போது தவறி விழுந்துவிட்டார்.

அதைப் பார்த்த இங்கர்சால் தன்னை மறந்து பதறியவாறு "கடவுளே என் மகளைக் காப்பாற்று," என்று கதறிவிட்டார்.

நல்ல வேளையாக இங்கர்சாலின் மகள் காயம் படாமல் தப்பி விட்டாள்.

ஆனால் தன் மகள் கடவுள் அருளால்தான் பிழைத்தாள் என்று ஏற்றுக்கொள்ள அவர் மறுத்துவிட்டார்.

### காந்தியடிகள் எதிர்பார்த்தது

மகாத்மா காந்தி 1934ஆம் ஆண்டில் தமிழ் நாட்டுக்கு வருகை தந்தார்.

அப்போது பெரும்பாலும் திறந்த காரில் நின்றபடியே திரளான மக்களுக்குத் தரிசனம் கொடுத்து வந்தார்.

அவருடன் சேர்ந்து பயணம் செய்த அவனாசிலிங்கம் "பாபுஜி மக்கள் உங்கள் பக்கம் இருக்கிறார்கள் என்பது உண்மைதான். அதே சமயம் மக்களோடு, மக்களாக யாராவது எதிரியும் இருக்கக் கூடுமல்லவா? உங்கள் உயிருக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால்?" என்று கவலையோடு கூறினார்.

காந்திஜி சிரித்துக்கொண்டே "அவனாசிலிங்கம்! என்னைப் போன்றவர்கள் ஒன்று தூக்குக் கயிற்றால் தொங்க நேரிடும் அல்லது சுட்டுக் கொல்லப்பட வேண்டியிருக்கும். அதனால் மரணத்துக்காகப் பயந்து கொண்டு எப்போதும் பாதுகாவலோடு செல்ல முடியுமா? என்றார். சொன்னது போலவேதானே காந்திஜியின் முடிவு அமைந்தது.



### கால்களின் அளவு

அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் மிகவும் உயரமான மனிதர்.

ஒரு தடவை நண்பர்கள் மத்தியில் வேடிக்கையாக உரையாடிக் கொண்டிருந்தபோது மனிதனின் உடல் உறுப்புக்கள் எந்த அளவுக்கு நீளமாக இருக்க வேண்டும் என்ற பேச்சு வந்தது.

"ஒரு மனிதனுக்கு கால்கள் எந்த அளவு நீளமாக இருக்க வேண்டும் என்பதுபற்றி என்னிடம் தெளிவான கருத்து உண்டு" என்றார் லிங்கன்.

"என்ன கருத்து?" என்று நண்பர்கள் ஆவலுடன் விசாரித்தனர்.

சாதாரணமாக இடுப்பிலிருந்து தரையைத் தொடும் அளவுக்கு கால்கள் இருந்தால் போதும்" என்றார் லிங்கன்.

நண்பர்கள் அந்த நகைச்சுவையைக் கேட்டு சிரித்தார்கள்.

### புத்தக வெளியீட்டில் புதுமை

ஆந்திர மாநிலத்தில் 'திகம்பர கவுலு' என்ற புரட்சிக் கவிஞர் ஒருவர் இருக்கிறார்.

அவருடைய சிந்தனை செயற்பாடு அனைத்துமே புரட்சிகரமாக இருக்கும்.

அண்மையில் தாம் எழுதிய மூன்று கவிதை நூல்களை அவர் வெளியிட்ட விதமும் புரட்சிகரமாக இருந்தது.

முதல் நூலை நடு இரவில் ஒரு ரிக்ஷாக்காரனைக் கொண்டு வெளியிடச் செய்தார்.

RangaRakes
tamilnavarasam.com

இரண்டாவது நூலை வெளியிட்டவர், ஒரு ஹோட்டல் பரிசாரகர்.

மூன்றாவது நூல் பிச்சைக்காரனை வைத்து வெளியிட்டார்.

## ஹிட்லர் கேட்ட சோதிடம்

உலகத்தை கிடுகிடுவென நடுங்கச் செய்த சர்வாதிகாரியான ஹிட்லருக்கு சோதிடத்தில் நம்பிக்கை உண்டு. அப்படி ஒரு பலவீனம் அவருக்கு.

இரண்டாவது உலக யுத்தக் காலத்தில் ஒரு நாள் ஹிட்லர் ஒரு பிரபல சோதிடரை தமது இல்லத்துக்கு வரவழைத்து "நான் எப்பொழுது மரணமடைவேன்?" என்று கேட்டார்.

"யூதர்களின் விடுமுறை நாளன்று" என்றார் சோதிடர்.

"யூதர்களின் விடுமுறை நாள் என்றைக்கு?" என்று ஹிட்லர் கேட்டார்.

"நீங்கள் மரணமடைந்த நாள்தான் அவர்களுக்கு விடுமுறை" என்றாராம் சோதிடர்.

அவ்வாறு சொல்லிவிட்டு அந்த சோதிடர் உயிரோடு போனாரா என்றுத் தெரியவில்லை.

## தகுதியில்லாத விண்ணப்பம்

ருஷ்ய நாட்டில் புரட்சி நடக்காததற்கு முன்பு நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி இது.

இரயில்வே கம்பெனியில் ஒன்றில் வேலைக் கோரி இளைஞர் ஒருவர் விண்ணப்பம் செய்திருந்தார்.



நேர்முகப் போட்டிக்கு இந்த இளைஞர் அழைக்கப் பட்டிருந்தார்.

அவருக்குள்ள தகுதிகள் போதுமானதல்ல என்று இரயில்வே நிர்வாகத்தினர் வேலை கொடுக்க மறுத்து விட்டனர்.

அந்த விண்ணப்பத்தாரர் யார் தெரியுமா? உலகப் பொதுவுடமை இயக்கங்களுக்கு அடி எடுத்துக் கொடுத்த ஆதார புருஷரான காரல் மார்க்ஸ்.

## தலைவராவதற்கு முன் தொழிலாளி

பழம்பெரும் தொழிற்சங்கத் தலைவரான பி. இராமானுஜம் கடந்த 40 ஆண்டு காலமாக தொழிலாளர் பணிக்கு தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்.

பாரத நாட்டின் குறிப்பிடத்தக்க தொழிற் சங்கங்களில் ஒன்றான இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸின் பொதுச்செயலாளராகவும், தலைவராகவும் நெடுங்காலமாக பணியாற்றியவர்.

இவர் தொழிற்சங்க இயக்கத்தில் முதன் முதலாக தொடர்பு கொண்டது ஒரு சுவையான விஷயம்.

விடுதலைப் போராட்டக் காலத்தில் தொழிலாளர் பிரிவின் தலைவராக சர்தார் வல்லபாய் பட்டேல் இருந்தார்.

இராமனுஜரும், குல்சாரிவால் நந்தாவும் காந்தியடிகளைச் சந்தித்து தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபடதாங்கள் விரும்புவதாகக் கூறினார்.

"தொழிலாளர் இயக்கத்தில் தொடர்பு கொள்வதற்கு உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது?" என காந்திஜி வினவினார்.

RangaRakes

tamilnavarasam.com

"நாங்கள் இருவரும் பட்டதாரிகள்" என்று நந்தாவும் இராமானுஜமும் கூறினார்கள்.

"பட்டங்களுக்கும் தொழிலாளர் நலனுக்கும் என்ன சம்பந்தம்? அது போதாது. நீங்கள் இரண்டு பேரும் ஏதாவது ஒரு தொழிற்சாலையில் முதலில் தொழிலாளியாக வேலை பார்க்க வேண்டும். இதுதான் முக்கியமானதாகும்," என்றார் காந்திஜி.

அவரே இரண்டு மில்களில் பணிபுரிவதற்கு அவர்களுக்கு இரண்டு சிபாரிசு கடிதம் கொடுத்தார்.

நந்தா அகமதாபாத் மில் ஒன்றிலும் இராமனுஜம் அகமாதாபாத்திலுள்ள மற்றொரு மில்லிலும் சாதாரணத் தொழிலாளிகளாக வேலை பார்த்தனர்.

பலகாலம் மில் தொழிலாளிகளாக பணிபுரிந்த பிறகே தொழிலாளர் இயக்கங்களில் தொண்டாற்ற காந்தியடிகள் இராமனுஜத்திற்கும், குல்சாரிலால் நந்தாவிற்கும் அனுமதி அளித்தார்

### சுதந்திரத்தின் பலன் என்ன?

பாரதம் சுதந்திரம் அடைந்த சில மாதங்களுக்குப் பிறகு ஒரு தடவை பஞ்சாபிற்கு வந்திருந்தார் நேருஜி.

ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிவிட்டு நேருஜி தனது கார் இருக்குமிடத்திற்கு வந்தபோது ஒரு முரடன் அவரை இடைமறித்தான்.

"என்ன?" என்று கேட்டார் நேருஜி.

"சுதந்திரம் வந்துவிட்டதால் என்னைப் போன்றவர்களுக்கு என்ன இலாபம்?" என்று அந்த முரடன் கேட்டான்.

நேருஜி அவனைத் தட்டிக் கொடுத்தார். "அன்பரே சுதந்திரத் திருநாட்டின் முதல் அமைச்சரிடம் இப்படி வழிமறித்து உதவிகேட்கும் துணிச்சல் உனக்கு ஏற்பட்டிருக்கிறது. இதுவே நீ பெற்ற சுதந்திரத்தின மிகை.

வெள்ளைக்கார ஆட்சியிலேயே இப்படி ஒரு வெள்ளைக்கார அதிகாரியை கேட்டிருந்தால்கூட உன் தலை துண்டாக விழுந்திருக்கும்" என்றார் நேருஜி.

முரடன் வெட்கித் தலைகுனிந்து நேருஜிக்கு அடி பணிந்தான்.

### காந்தியடிகளின் நகைச்சுவை

காந்தியடிகள் கவிஞர் இரவீந்திரநாத் தாகூரின் சாந்திநிகேதனுக்கு ஒரு தடவைபோய் இருந்தார்.

கவியரசர் காந்தியடிகளை வரவேற்கும் போது "என்றும் இளமை பொருந்திய எங்கள் இதய அரசியான சாந்தி நிகேதன் தங்களை வரவேற்பதில் பெருமை கொள்கிறாள்" என்று கூறினார்.

காந்தியடிகள் சிரித்துக்கொண்டே "அப்படியானால் இந்தக் கிழவனுக்கு அதிர்ஷ்டம் அடிக்கிறது என்று சொல்லுங்கள். இல்லாவிட்டால் என்றும் இளமையுடன் திகழும் உங்கள் அரசி பல்லில்லாத கிழவனை வரவேற்பாளா?" என்றார்.

அங்கே சிரிப்பொலி எழுந்தது.

### நான்தான் அந்த ஆள்

ஜோகிரி மால்டி என்பவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர் அவர் சர்க்கஸ் கோமாளி. 1779ஆம்ஆண்டுக்கும் 1837ஆம் ஆண்டுக்கும் இடையே வாழ்ந்தவர்.

அவருடைய நகைச்சுவை நடிப்பு பிரிட்டிஷ் மக்களிடையே மிகவும் பிரபலமாக இருந்தது.



RangaRakes

tamilnavarasam.com

மான்செஸ்டர் நகரில் வாழ்ந்த டாக்டர் ஜெம்ஸ் ஹாமில்டன் என்பவர் அந்தக் காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற டாக்டர்.

1808-ஆம் ஆண்டில் ஒரு நாள் மாலைப்பொழுதில் அவரிடம் ஒருவர் வந்தார்.

வந்தவருடைய முகவாட்டம் டாக்டரின் மனத்தை உருக்கியது.

"உங்களுக்கு உடம்பு சரியில்லையா?" என்று டாக்டர் என்று கேட்டார்.

"உடம்பில் ஒரு குறைபாடும் இல்லை டாக்டர். மனசுதான் சரியில்லை.' என்றார் வந்த மனிதர்.

"அப்படி என்ன கவலை? மனம் விட்டு என்னிடம் கூறுங்கள். நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று பரிவுடன் கேட்டார் டாக்டர்.

"உலகமே என்னைச் சுற்றிக்கொண்டு நெருக்குவது போல எனக்குத் தோன்றுகிறது. மனம் எந்த நேரமும் குழப்பத்தால் தத்தளிக்கிறது. நான் மகிழ்ச்சியுடன் சிரித்துப் பல வாரங்களாகிவிட்டன. வாழ்க்கையே விரக்தியாக இருக்கிறது. தற்கொலை செய்துகொள்ளலாமா என்று பல தடவை யோசிக்கிறேன் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்," என அழாத குறையாக அந்த மனிதர் கூறினார்.

"இவ்வளவுதானா? கவலைப்படாதீர்கள். சிரிக்கப் பழகுங்கள். வாழ்க்கைமீது உங்களுக்கு ஒரு பிடிப்பு ஏற்பட்டுவிடும்" என்று டாக்டர் போதனை செய்தார்.

"எப்படி சிரிக்கப் பழகிக்கொள்வது என்றுதான் தெரியவில்லை நீங்கள்தான் ஒரு வழி சொல்லுங்களேன்," என்றார் அந்த மனிதர்.

நான் ஒரு யோசனை சொல்லுகிறேன். இன்றிரவு நடைபெறும் சர்க்கஸ் காட்சிக்குச் செல்லுங்கள். அங்கே



கிரிமால்டி என்றொரு கோமாளி பலவிதமான வேடிக்கைகளைக் காண்பிக்கிறார். அவரது செயல்களும் சொற்களும் உங்களை வயிறு குலுங்க சிரிக்க வைக்கும்.

அப்படிப்பட்ட தமாஷ் பேர்வழி அவர். சர்க்கஸ் முடிந்து வெளியே வரும்போது உங்கள் மனது இலேசாக ஆகிவிட்டிருப்பதை உணருவீர்கள்," என்றார் டாக்டர்.

சிகிச்சைக்காக வந்த நபர் கலகலவெனச் சிரித்தார்.

பிறகு சொன்னார் "டாக்டர், மேக்கப் போடாமல் இருப்பதால் உங்களுக்கு அடையாளம் தெரியவில்லை என்று நினைக்கிறேன். நான்தான் அந்த கிரிமால்டி."

டாக்டர் அயர்ந்து போனார்.

## ரத்தத்தினால் எழுதப்பட்ட நூல்

ஜப்பானில் ஒரு காலத்தில் சு—தோக்கு என்ற ஒருவர் மன்னராக இருந்தார்.

அவர் ஒரு நூல் எழுதியிருக்கிறார். அந்த நூல் புத்தரைப் பற்றி எழுதப்பட்ட ஒன்று.

ஒரு மன்னர் புத்தரைப் பற்றி நூல் எழுதுவதில் என்ன அதிசயம் இருக்கிறது என்று கேட்கிறீர்களா?

135 பக்கங்கள் உள்ள அந்த நூல் முழுவதையும் சு—தோக்கு தன் உடல் ரத்தத்தைக் கொண்டே எழுதினாராம்.

## சித்திரத்தின் தீர்க்கத் தரிசனம்

டேவிட் லோ என்பவர் உலகப் புகழ்பெற்ற கார்ட்டூன் ஓவியர். தம்முடைய கார்ட்டூன் சித்திரங்களில் எந்தப் பிரச்னை குறித்தும் அழுத்தமாக குறிப்பிடுவார்.

RangaRakes
tamilnavarasam.com

சில சமயம் அவருடைய கார்ட்டூன் சித்திரங்கள் தீர்க்க தரிசனம் வாய்ந்தவையாகவும் அமைந்து விடுவது உண்டு.

பாரதம் விடுதலை பெற்ற உடனே டேவிட் லோ ஒரு கேலிச் சித்திரம் வரைந்திருந்தார்.

காந்தியடிகள் உபவாசம் இருப்பது போலவும் அவருக்கு எதிரே வகுப்பு வெறி என்ற புலி அவரை முறைத்துப் பார்த்தவாறு அமர்ந்திருப்பது போலவும் ஒரு கார்ட்டூன் வரைந்திருந்தார்.

அந்தக் கார்ட்டூன் சித்திரம் வெளியான சில நாட்களுக்குப் பின்னர் காந்திஜியை கோட்சே சுட்டுக் கொன்றுவிட்டான்.

ஆம். வகுப்பு வெறி உணர்ச்சி அவரைக் கொன்று விட்டது.

டேவிட் லோவின் கார்ட்டூன் சித்திரம் ஒரு தீர்க்கத் தரிசனமாக அமைந்துவிட்டது.

## பொதுவுடமையா? தனி உடைமையா?

அமெரிக்காவில் பிரபலமான பொதுவுடமைவாதி என்று பேசப்பட்ட எர்க் மார்வெல் என்பவரும் அவருடைய நண்பரும் சந்தித்துக் கொண்டனர்.

நண்பருக்கு பொதுவுடமைத் தத்துவத்தில் வெறுப்பு — தனி உடமை முறையில் விருப்பமுள்ளவர்.

அவர் நண்பரை நோக்கிக் கேலியாக, "நண்பரே! உலகத்தில் எல்லாப் பொருட்களுமே பொதுவுடமை ஆக்கப்பட வேண்டும் என்று கூறுகிறீரே, உமது மனைவியை பொதுவுடமை ஆக்கிடச் சம்மதிப்பீரா?" என்று கேட்டார்.

எர்க் மார்க்வெல் சொன்ன பதில் இது.



"தனிவுடமையே சிறந்தது என்று நம்பும் நீர் உமக்கு உரிமையுடைய உமது மக்களையே மணந்து கொள்வீரா?"

நண்பர் அதற்கு மேல் ஏதும் பேசவில்லை.

## தேயிலையால் புகழ்பெற்றவர்

லிப்டன் தேயிலைத் தூளை இக்காலத்தில் உலகம் முழுதும் பயன்படுத்துகிறார்கள். லிப்டன் தேயிலைத் தூள் நமது நாட்டிலும் பிரபலமான ஒன்று.

இந்த லிப்டன் தேயிலைத் தொழில் தொடங்கி உலகப் புகழ் பெற்றவர் தாமஸ் லிப்டன் என்ற அமெரிக்கர்.

தேயிலை வாணிபத்தில் அவர் காண்பித்த வழியைப் பின்பற்றிந்தான் இன்று உலகம் முழுவதிலும் தேயிலை வியாபாரிகள் செயற்படுகிறார்கள்.

இந்த தாமஸ் லிப்டன் இளமைப் பருவத்தில் வறுமையில் வாடினார். வயலில் கூலி வேலை செய்தார். செய்தித்தாள் விற்பனை செய்தார்.

ஒரு நண்பரிடம் நூறு பவுன் கடனாகப் பெற்று தேயிலைகளை வாங்கி விற்று அந்தத் தொழிலில் உயர்ந்த நிலையை எட்டிப் பிடித்தார்.

## பள்ளி செல்லாத பேரறிஞர்

முத்தமிழ்க்காவலர் என்ற புகழுடன் இன்று நம்மிடையே வாழும் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், முறையாகப் பள்ளிக்குச் சென்று கல்வி பயின்றதே இல்லை.

தந்தையின் கடையில் அமர்ந்திருக்கும்போது ஓரிடத்தில் அமர்ந்து மணலில் எழுதி கொஞ்சங் கொஞ்சமாகத் தமிழ் பயின்றார்.

பின்னர்தான் தமிழறிஞர் முத்துசாமி கோனாரிடம் முறையாகத் தமிழ் பயின்றார்.

RangaRakes

tamilnavarasam.com

வெங்கடசாமி நாட்டார், திரு. வி. க. போன்ற பேரறிஞர்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டு பின்னர் தமதுதமிழறிவை வளர்த்துக் கொண்டார்.

### யார் யாருக்குச் சொத்து?

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மாபெரும் தலைவராக இருந்த அமரர் ப. ஜீவானந்தம் அவர்களின் சாதாரண குடிசை வீட்டுக்கு முதலமைச்சராக இருந்த காமராஜர் திடீரென சென்றார்.

வீடு இருந்த நிலையைக் கண்டதும் முதல்வர் காமராஜரின் மனம் வேதனைப்பட்டது.

"வீட்டை இப்படி வைத்திருக்கிறீர்களே? கூடிய விரைவில் ஒரு நல்ல வீட்டுக்கு ஏற்பாடு செய்கிறேன்" என்றார் காமராஜர்.

ஜீவா மறுத்துவிட்டார்.

"எனக்கு இருக்கும் இந்த வீடுகூட இல்லாதவர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். நான் மட்டும் சலுகை பெறுவது நியாயமாக இருக்க முடியுமா?" என்று பதிலளித்தார் ஜீவா.

### அம்பேத்காரின் உண்மைப் பெயர்

பாரத அரசியல் நிர்ணய சபையில் இருந்து அருள் தொண்டு ஆற்றிய அம்பேத்கார் அவர்களைப் பற்றி பலர் அறிந்திருப்பார்கள். ஆனால் அவருடைய உண்மைப் பெயர் பலருக்குத் தெரிந்திருக்காது.

அம்பேத்காரின் உண்மைப் பெயர் பீமராவ். அவருடைய ஆசிரியரின் பெயர்தான் அம்பேத்கார்.

பீமராவ் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும் ஆசிரியர் அம்பேத்கார் பீமராவைத் தமது மகன் போல அன்போடு பாசத்தோடு நடத்தினார். ஆர்வத்துடன் கல்விப் பயிற்றுவித்தார். தம்முடைய இல்லத்திலேயே பீமராவுக்கு உணவும் அளித்தார்.



பீமராவ் கல்வித் துறையிலும் சமூக நிலையிலும் முன்னேற்ற நிலை அடைந்ததற்கு தமது ஆசிரியர் அம்பேத்காரே காரணமாக இருந்ததால் நன்றிக்கு அறிகுறியாக பீமராவ் ராம்ஜி அம்பேத்கார் என்று தமது பெயருடன் ஆசிரியர் பெயரையும் இணைத்துக் கொண்டார்.

நாளடைவில் அவருடைய இயற்பெயர் மறைந்து, அம்பேத்தகார் என்ற பெயரே நிலைத்து விட்டது.

### பூகம்பம் ஏன் ஏற்படுகிறது?

பூகம்பம் அதாவது பூமி அதிர்ச்சி ஏன் ஏற்படுகிறது? எப்படி ஏற்படுகிறது? என்பதை இந்தக் காலத்தில் விஞ்ஞான பூர்வமாகக் கண்டுபிடித்து கூறுகிறார்கள்.

பூமி அதிர்ச்சிபற்றி விஞ்ஞான பூர்வமான உண்மைகள் தெரியாத சமயத்தில் பூமி அதிர்ச்சியை அடிப்படையாக வைத்து 1774ஆம் ஆண்டில் வால்ட்டேர் என்ற அறிஞர் நையாண்டி நாவல் ஒன்றை எழுதினார்.

லிஸ்பன் நகரத்தில் அந்தச் சமயத்தில் ஏற்பட்ட பயங்கரமான பூமி அதிர்ச்சிதான் அவர் நாவலின் கருப்பொருள்.

மனிதனுடைய பேராசை, ஒழுக்கக்கேடு, அகங்காரம் ஆகியவற்றுக்காக கடவுள் மனித இனத்துக்குக் கொடுக்கும் ஒரு தண்டனைதான் பூமி அதிர்ச்சி என்று வால்ட்டேர் அந்த நூலில் கூறுகிறார்.

### சின்ன வயதில் பெரிய சாதனை

சின்னஞ்சிறு வயதிலேயே சாதனைகள் பல ஆற்றி பெருமை பெற்றவர் சர் ஐசக் நியூட்டன்.

புகழ்பெற்ற ஆங்கில அறிவியல் அறிஞனான நியூட்டன் 1642க்கும் 1727க்கும் இடையே வாழ்ந்தார்.

சிறுவனாக இருந்தபோதே தானியங்களை மாவாக ஆக்கக் கூடிய ஒரு யந்திரத்தை அவர் கண்டுபிடித்தார்.

RangaRakes

tamilnavarasam.com

அந்த யந்திரம் வெறும் காற்றின் ஆற்றலினாலேயே இயங்கியது.

மற்றும் நீர்க்கடிகாரம், நிழல் கடிகாரம் போன்றவை யும் அவர் கண்டுபிடித்தவைதான்.

## திப்பு சுல்தானின் ராக்கெட்

தற்காலத்தில் யுத்த களத்திலே ராக்கெட்டுகளைப் பயன்படுத்துவது சாதாரண வழக்கமாக இருக்கிறது. ராக்கெட் என்பது அண்மைக்கால கண்டுபிடிப்பு என்று தானே நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம்?

நெடுங்காலத்திற்கு முன்னரே நமது நாட்டில் ராக்கெட் போர் நடந்திருக்கிறது.

கி.பி. 1782ஆம் ஆண்டில் மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த சீரங்கல் பட்டினத்தை ஆட்சி செலுத்திக் கொண்டிருந்த திப்பு சுல்தானுக்கும் அப்போது ஆங்கில கவர்னராகப் பணியாற்றிக் கொண்டிருந்த காரன் வாலிஸ் பிரபுவுக்கும் இடையே பெரும்போர் ஒன்று நிகழ்ந்தது.

அந்தப் போரின்போது வெள்ளையர் படைகளை நோக்கி சரமாரியாக ராக்கெட்டுகளைப் பயன்படுத்தினாராம்.

துப்பாக்கி பீரங்கி போன்ற நவீன போர்க் கருவிகள் இருந்தும் காரன் வாலிங் பிரபுவின் படையினால் திப்பு சுல்தானின் சிறிய ராக்கெட்டுகளின் தாக்குதலை சமாளிக்க முடியாமல், பின்வாங்கி ஓடினாராம்.

○ ○ ○

RangaRakes

tamilnavarasam.com

# திட்டம் போட்டுக் கலக்கலாம்

# (PLANNING)

ஜி. கே. அசோகன்

'எதையும் செய்யலாம்' என்பது மிருக குணம். 'இதைத்தான் செய்யவேண்டும்' என்று திட்டமிட்டுச் செயல்படுவது மனித குணம். நம்முடைய ஆறாம் அறிவின் கொடை.

இந்த இரண்டுக்கும் என்ன வித்தியாசம் என்று யோசித்தால், நம் பழந்தமிழிலேயே ஏகப்பட்ட பொன்மொழிகள் உள்ளன. உதாரணமாக 'பதறாத காரியம் சிதறாது'. யோசித்துச் செயல்படுவதால் கிடைக்கும் நன்மைகளை உணர்த்தும் அற்புத வாசகம் இது.

ஆங்கிலத்தில் 'ப்ளானிங்' என்று அழைக்கப்படும் திட்டமிடுதலை நாம் ஒவ்வொருவரும் தினந்தோறும் செய்துகொண்டுதான் இருக்கிறோம். ஆனால் அதை நாமே உணர்வதில்லை. சுவாசம்போல நம்மையும் அறியாமல் அது தானாக நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

உதாரணமாக தியேட்டருக்குப் படம் பார்க்கச் செல்கிறோம், அல்லது ஊருக்குப் பயணம் என்று சிறு விஷயங்களில் தொடங்கி வேலை தேடுவது, திருமணத்துக்குப் பெண் தேடுவது, வீடு கட்டுவது என்று பெரிய வேலைகள்வரை எல்லாமே நம் மனத்தில் திட்டங்களாக உருவெடுத்து விடுகின்றன. பின்னர் அவற்றை வரிசைக்கிரமமாக நிறைவேற்றத் தொடங்குகிறோம்.

இதில் ஒரே பிரச்னை, ஒரு திட்டம் இன்னொரு திட்டமாக மாறுவதில்லை. ஒவ்வொருமுறையும் புதுப்புதுத் திட்டங்களை யோசிக்கவேண்டிய கட்டாயம்.

அதற்குப் பதிலாக, மனத்தில் அன்றிக் காகிதத்தில் திட்டமிடப் பழகிக்கொண்டால் எல்லாமே சுலபமாகிவிடும்.

RangaRakes tamilnavarasam.com

நீங்களும் ஒரு ப்ளானிங் எக்ஸ்பர்ட் ஆகிவிடலாம். எதையும் குறித்த நேரத்தில், சரியான முறையில் செய்து கொடுத்துப் பெயர் வாங்கலாம்.

இது ஒன்றும் பிரம்ம சூத்திரம் அல்ல, கொஞ்சம் முயற்சி செய்தால் நாம் ஒவ்வொருவரும் ப்ளானிங் வித்தகர்கள் ஆகமுடியும். இஷ்டப்படி செயல்படாமல் முறைப்படி வேலை செய்து வெற்றியடையமுடியும்.

அந்த வெற்றிப் பயணத்தில் உங்களுக்குத் துணை புரியக்கூடிய பத்து மிகச் சிறந்த புத்தகங்களை இங்கே தொகுத்துத் தந்திருக்கிறோம். திட்டமிடுதல்பற்றிச் சர்வதேச அளவில் பல வல்லுனர்கள் தங்களது அனுபவங்களை, சிந்தனைகளை, உத்திகளைப் புத்தகங்களாக எழுதியுள்ளார்கள், ஒலிநாடாக்களாக, குறுந்தகடுகளாக, வீடியோ பதிவுகளாக வெளியிட்டுள்ளார்கள். அவற்றிலிருந்து வடிகட்டித் தேர்ந்தெடுத்த பத்தே பத்து முத்துகளைமட்டுமே இந்தப் புத்தகத்தில் இடம் பெறச் செய்திருக்கிறோம்.

ஒருவிஷயம், இந்தப் புத்தகத்தின் நோக்கம் பல நல்ல புத்தகங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதுமட்டுமே. இதைப் படிக்கும் நீங்கள் இந்தப் புத்தகங்களைக் கண்டறிந்து முழுமையாகப் படித்துப் பயன் பெறவேண்டும், இதே துறை சார்ந்த மற்ற பல நூல்களையும் ஆர்வத்துடன் தேடிப்பிடித்துப் படிக்கவேண்டும் என்பது எங்கள் விருப்பம். அதற்கான ஓர் ஆரம்பத்தை இந்தச் சிறு அறிமுக நூல் உருவாக்கித் தந்தால் நாங்கள் மகிழ்வோம்.

பயனுள்ள புத்தகங்களை வாசியுங்கள், அவற்றில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களை முயன்று பாருங்கள். உங்களுக்குப் பொருத்தமாகத் தோன்றுபவற்றைப் பயன்படுத்தத் தொடங்குங்கள். சிறப்பாகத் திட்டமிட்டு அதைவிடச் சிறப்பாகச் செயல்படுங்கள். வெற்றிக்கு வாழ்த்துகள்!

*



# 1. கெட்டிங் டு ப்ளான் பி
# (Getting To Plan B) - 2009

ஜான் முல்லின்ஸ் (John Mullins)
ராண்டி கோமிஸர் (Randy Komisar)

* இதுவரையிலான விற்பனை: ஆயிரக்கணக்கான பிரதிகள்
* மொழிபெயர்ப்பு: பத்துக்கும் மேற்பட்ட மொழிகளில்

உலக அளவில் புகழ் பெற்ற கிரிக்கெட் அணி, ஆஸ்திரேலியா. கடந்த பல வருடங்களாகவே அவர்களை ஜெயிப்பதற்கு இன்னொருவர் கிடையாது என்கிற அளவுக்கு ஆதிக்கம் செலுத்திவருகிறார்கள்.

அவர்களிடம் சென்று ‘உங்களுடைய வெற்றிக்கு என்ன காரணம்?’ என்று கேட்டால் ஆஸ்திரேலிய கேப்டன் கூறுவார். ‘ப்ளானிங்!’

திட்டமிடுவதுமட்டும்தானா? அதுவே வெற்றிக்கு உத்திரவாதமாகிவிடுமா?

இல்லை. வெறும் ப்ளானிங் போதாது. அதைச் சரியாகச் செயல்படுத்தவும் தெரிந்திருக்கவேண்டும்.

சரி, செயல்படுத்துகிறேன். ஆனால் அதில் பிரச்னைகள் வருகிறது. என்ன செய்ய?

’அப்போதுதான் ‘ப்ளான் பி’யைக் கையில் எடுக்கவேண்டும். பதறாமல் பயணத்தைத் தொடரவேண்டும்’ என்பார் ஆஸ்திரேலிய கேப்டன்.

‘ப்ளான் பி’யா? அதென்ன?

பொதுவாக எந்த ஒரு வேலையையும் தொடங்குவதற்குமுன்னால் ஒரு திட்டம் யோசித்தால் போதாது. ஒருவேளை அது சொதப்பிவிட்டால் என்ன செய்வது என்கிற

RangaRakes
tamilnavarasam.com

இரண்டாவது திட்டத்தையும் யோசித்துவைத்துவிடவேண்டும். அதுதான் ப்ளான் பி!

உதாரணமாக, சினிமாவுக்குப் போகிறோம். டிக்கெட் கிடைக்கவில்லை. அதற்குப் பதிலாக பீச்சுக்குப் போய்த் திரும்பலாம் என்று யோசித்துவிட்டுக் கிளம்புகிறோம். இதில் சினிமா 'ப்ளான் ஏ', பீச் 'ப்ளான் பி'.

இந்தச் சின்ன உதாரணம் எல்லோருக்கும் புரியும். ஆனால் பெரிய திட்டங்களைத் தீட்டும்போது நம்மில் யாராவது 'ப்ளான் பி' பற்றி யோசிக்கிறோமா? அதற்குக் காரணம் 'ப்ளான் ஏ' மேல் உள்ள அசாத்திய நம்பிக்கைதானா? அல்லது, அலட்சியமா?

'கடவுளை நம்புங்கள். ஆனால் உங்கள் காரைப் பூட்டிவையுங்கள்' என்று ஆங்கிலத்தில் ஒரு பிரபலமான பொன்மொழி உண்டு. அதுகூட 'ப்ளான் பி'தான்!

'ப்ளான் பி' பற்றி ஆங்கிலத்தில் ஏராளமான புத்தகங்கள் உள்ளன. அவற்றில் முக்கியமானது, இந்த 'கெட்டிங் டு ப்ளான் பி'. இதன் ஆசிரியர்கள் ஜான் முல்லின்ஸ் மற்றும் ராண்டி கோமிஸர்.

எந்த ஒரு திட்டத்தையும் தயார் செய்கிறபோதே அதில் பாஸிட்டிவ் என்ன, நெகட்டிவ் என்ன என்று யோசித்துவிடவேண்டும். அந்த நெகட்டிவ் அம்சங்களுக்கு மாற்றாக இன்னொரு 'ப்ளான் பி' திட்டத்தைத் தயார் செய்துவிடவேண்டும் என்பதுதான் இந்தப் புத்தகம் சொல்லும் மையக் கருத்து. இதற்கான பல எளிய உத்திகளை ஆசிரியர்கள் விளக்கி வழி சொல்கிறார்கள்.

1. உங்களுடைய திட்டத்தில் வெறும் 'நம்பிக்கை' அடிப்படையில் என்னென்ன விஷயங்களை ஊகித்திருக்கிறீர்கள்? ஒருவேளை அந்த நம்பிக்கை பொய்யாகிவிட்டால் என்ன செய்வீர்கள்? உணர்ச்சிவயப்படாமல் யோசியுங்கள்



2. ஒரு திட்டம் நிச்சயம் வேலை செய்யும் என்று நம்புங்கள். அதேசமயம் அது ஏன் வேலை செய்யாது என்று குறை சொல்கிறவர்களை அலட்சியப்படுத்தாதீர்கள், அவர்கள் சொல்வதில் உண்மை இருக்கிறதா என்று கொஞ்சம் யோசிக்கப் பழகுங்கள். பல சந்தர்ப்பங்களில் அந்த விமர்சனங்களே உங்களுக்கு வழிகாட்டிகளாக அமையும்

3. ப்ளான் ஏ, ப்ளான் பி இரண்டும் ரொம்ப வித்தியாசமாக இருக்கலாம். அல்லது ஒன்றிலிருந்து லேசாக மாறுபட்டதாக இருக்கலாம். அந்த ஒப்பீடு முக்கியம் அல்ல. ஒன்று சொதப்பினால் இன்னொன்று நிச்சயமாகக் கை கொடுக்குமா என்று யோசித்துக்கொள்ளுங்கள்

4. ஒருவேளை உங்கள் 'ப்ளான் பி'யிலும் ஓட்டை இருப்பின், 'ப்ளான் சி'பற்றி யோசியுங்கள். தப்பே இல்லை!

*

## 2. நோ–நான்சென்ஸ் ப்ளானிங் (No-Nonsense Planning) - 1984

ரிச்சர்ட் எஸ். ஸ்லோமா (Richard S. Sloma)

* இதுவரையிலான விற்பனை: பல லட்சம் பிரதிகள்
* மொழிபெயர்ப்பு: பத்துக்கும் மேற்பட்ட மொழிகளில்

ஆங்கிலத்தில் 'நோ-நான்சென்ஸ்' என்றால், ஒரு விஷயத்தைப்பற்றித் தெளிவாக யோசிப்பது, யார் என்ன சொல்வார்களோ என்பதைப்பற்றிக் கவலைப்படாமல் முடிவெடுத்துச் செயல்படுவது.

பல வருடங்களுக்கு முன்னால் ஆசிரியர் ரிச்சர்ட் எஸ். ஸ்லோமா 'நோ-நான்சென்ஸ் மேனேஜ்மென்ட்' என்ற தலைப்பில் ஒரு சுவாரஸ்யமான புத்தகம் எழுதினார்.

RangaRakes tamilnavarasam.com

வாசகர்கள் அதன் தனித்துவமான ஸ்டைலை மிகவும் ரசித்தார்கள். பாராட்டினார்கள். லட்சக்கணக்கில் வாங்கிக் குவித்தார்கள்.

இதைத் தொடர்ந்து ரிச்சர்ட் எஸ். ஸ்லோமா 'நோ-நான்சென்ஸ் ப்ளானிங்' என்ற தலைப்பில் திட்ட மிடுதலைப் பற்றிய ஒரு சுவையான தனிப் புத்தகத்தை எழுதியிருக்கிறார். கால் நூற்றாண்டு காலத்துக்கு முன்னால் வெளியான இந்தப் புத்தகம் இப்போதும் பரபரப்பாக விற்றுக் கொண்டிருக்கிறது, பலருடைய வீட்டு நூலகங்களில் இடம் பிடித்திருக்கிறது, அநேகமாக எல்லா மேனேஜ்மென்ட் கல்லூரிகளிலும் இதைத் தவறாமல் பார்க்கமுடியும்.

அப்படி இந்தப் புத்தகத்தில் என்னதான் சொல்கிறார் ரிச்சர்ட் எஸ். ஸ்லோமா? நோ-நான்சென்ஸ் ப்ளானிங் என்பது என்ன?

நீங்கள் வாழ்க்கையில் சாதிக்க விரும்பும் அத்தனைக்கும் சரியான திட்டம்தான் அடிப்படை. அது பொருத்தமாக அமைந்துவிட்டால் முடியைக் கட்டி மலையை இழுத்துவிடலாம். சொதப்பிவிட்டால் எத்தனை சங்கிலிகளைக் கட்டி இழுத்தாலும் அது நகராது.

ஆக, திட்டமிடுதல் சாதாரண விஷயம் இல்லை. அதற்கென்று நேரம் ஒதுக்கிச் சிந்திக்கவேண்டும். பல்வேறு அம்சங்களை யோசித்து முடிவு செய்யவேண்டும். இப்படி:

1. நான் எதைத் திட்டமிடுகிறேன்? நான் எதிர்பார்க்கும் இறுதி இலக்கு என்ன?

2. அங்கே சென்று சேர்வதற்கு எந்தப் பாதையையும் பயன்படுத்தலாமா? அல்லது ஏதேனும் வழிகாட்டிகள் உண்டா? ('நேர்மையானமுறையில்தான் சம்பாதிப்பேன்', 'என்னுடைய சொந்த ஊருக்கு நல்லது செய்யும்விதமாகவே என் முதலீடுகளை அமைத்துக்கொள்வேன்' என்பதுபோல)





3. என்முன்னே எந்தெந்தப் பாதைகள் உள்ளன? அவற்றினிடையே என்ன வித்தியாசம்? ஒவ்வொன்றிலும் பயணம் எப்படி வித்தியாசப்படும்? ப்ளஸ் என்ன? மைனஸ் என்ன?

4. பாதையைத் தேர்வு செய்தபின், நான் என்னென்ன வேலைகளைச் செய்யவேண்டியிருக்கும், அவை ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு நேரமாகும்?

5. இந்த வேலைகளை நானே தனியாகச் செய்துவிடமுடியுமா? அல்லது மற்றவர்களின் துணை தேவைப்படுமா? யார் அந்த மற்றவர்கள்? அவர்களது ஆதரவைப் பெறுவது எப்படி? எப்போது? இப்படித் தனி நபர்களை நம்பியிருக்காமல் நம் திட்டம் எப்படி வேண்டுமானாலும் க்ளிக் ஆகும் என்கிற முதிர்ச்சி நிலையை எட்டுவதற்கு என்ன வழி?

6. எந்த வேலைக்குப் பிறகு எந்த வேலையைச் செய்யவேண்டும்? இந்த வரிசை மாறினால் என்ன பிரச்னைகள் வரக்கூடும்?

7. ஒரு குறிப்பிட்ட வேலை சரியான நேரத்தில் முடியாமல் சொதப்பினால் எப்படிச் சமாளிப்பது? மாற்றுத் திட்டங்கள் என்ன?

8. ஒரு திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான செலவுகளைக் கணக்கிடுவது எப்படி?

9. நம் திட்டம் சரியான பாதையில்தான் சென்றுகொண்டிருக்கிறதா என்பதை எப்படிக் கண்காணிப்பது? ஒருவேளை பிரச்னைகள் இருந்தால் பாதை மாறுவது எப்படி?

10. ஒரு திட்டத்தைச் சரியாகவோ தவறாகவோ செயல்படுத்தி முடித்தபின்னர் அதில் கற்றுக்கொண்ட பாடங்களை வருங்காலத்துக்குப் பயன்படும்படி மாற்றி அமைப்பது எப்படி?

tamilnavarasam.com

இவை சிறு சாம்பிள்மட்டும்தான். இப்படி இருபது ப்ளானிங் தத்துவங்களை உதாரணங்களுடன் விளக்கி உத்திகளைச் சொல்லித்தருகிறார் ரிச்சர்ட் எஸ். ஸ்லோமா. அவரது சுவாரஸ்யமான நடையில் கற்றுக்கொண்ட விஷயங்களை மக்கள் அத்தனை சுலபத்தில் மறப்பதில்லை!

*

## 3. ஸ்ட்ராடஜிக் ப்ளானிங் ஃபார் டம்மீஸ் (Strategic Planning For Dummies) - 2006

எரிகா ஓல்ஸன் (Erica Olsen)

- இதுவரையிலான விற்பனை: பல லட்சம் பிரதிகள்
- மொழிபெயர்ப்பு: சுமார் பத்து மொழிகளில்

ஆங்கிலத்தில் 'ஃபார் டம்மீஸ்' என்ற வகைப் புத்தகங்கள் மிகவும் புகழ் பெற்றவை. மிகச் சாதாரணமான விஷயங்களில் ஆரம்பித்து ரொம்பச் சிக்கலான தலைப்புகளைக்கூட வாசகர்களுக்குப் புரியும்வகையில் தெளிவான விளக்கங்கள், புள்ளிவிவரங்கள், ஓவியங்கள், கார்ட்டூன்கள் போன்றவற்றின் துணையோடு புட்டுப்புட்டு வைத்திருப்பார்கள்.

'டம்மீஸ்' புத்தகங்களின் சிறப்பம்சம், இவற்றை யார் வேண்டுமானாலும் படிக்கலாம். அப்படி ஓர் எளிமையான மொழி நடை, சுலபமாகப் புரியும் தன்மையில் அசத்துவார்கள்.

அந்த வரிசையில், ஸ்ட்ராடஜிக் ப்ளானிங் பற்றிச் சொல்லித்தரும் 'டம்மீஸ்' புத்தகம் இது. எழுதியவர் புகழ் பெற்ற திட்ட வித்தகர் எரிகா ஓல்ஸன்.

கொஞ்சம் பொறுங்கள். போன பேராவில் ஒரு பிரச்னை. 'ப்ளானிங்' புரிகிறது, அதென்ன 'ஸ்ட்ராடஜிக்' ப்ளானிங்?



'ஸ்ட்ராடஜி' என்ற ஆங்கில வார்த்தையைத் தமிழில் 'வியூகம்' என மொழிபெயர்க்கலாம். இது போர், ராணுவப் பின்னணியில் இருந்து வருகிற ஒரு வார்த்தை.

அந்தக் காலத்தில் ராஜாக்கள் எதிரி நாடுகளின்மீது போரிடும்போது முதலில் அவர்களுடைய மேப்பை எடுத்துவைத்துக்கொண்டு வியூகம் அமைப்பார்கள். 'நாம் இந்த மலை உச்சியிலிருந்து தாக்கலாம், அதே நேரம் இந்த ஆற்றங்கரையிலிருந்து ஒரு சிறிய படை அவர்களை அடிக்கவேண்டும். இந்தப் பக்கம் இருக்கும் வாசலை மூடிவிட்டால் அந்தக் கோட்டைக்குச் சாப்பாடு கிடைக்காது. சீக்கிரம் சரணடைந்துவிடுவார்கள்'... இப்படி.

இதைத்தான் 'ஸ்ட்ராடஜிக் ப்ளானிங்' என்கிறோம். அதாவது, ஒரு பருந்துப் பார்வையில் களத்தைப் பார்த்து எதை எப்படிச் செய்வது என்று தீர்மானிப்பது. செயல்படுத்துவது.

இங்கே 'களம்' என்பது போர்க்களமாக இருக்கவேண்டும் என்று அவசியம் இல்லை. உங்களுடைய வீடு, அல்லது அலுவலகம், அல்லது கல்லூரி, அல்லது வேறு களம். ஸ்ட்ராடஜியை யோசித்துத் திட்டமிடுகிறீர்களா என்பதுதான் முக்கியம். அதை இந்தப் புத்தகம் மிக அழகாகச் சொல்லித்தருகிறது.

'ஸ்ட்ராடஜிக் ப்ளானிங்'கில் கவனிக்கவேண்டிய ஒரு விஷயம், தொலைநோக்குப் பார்வை. தினசரி நடவடிக்கைகளுக்கான ப்ளானை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று தாற்காலிகமாக ஒத்திப்போட்டுவிட்டு, கொஞ்சம் மேலே சென்று சிந்திக்கிறோம்.

உதாரணமாக, ஒரு மாணவர் தனது அடுத்த பரீட்சையைப் பற்றிச் சிந்திப்பது ஸ்ட்ராடஜிக் ப்ளானிங் ஆகாது. 'நான் நன்றாகப் படித்து டாக்டர் ஆவேன்' என்று இலக்கு நிர்ணயித்துக்கொண்டு அதற்கான நீண்டகாலத் திட்டங்களை வகுப்பதைதான் ஸ்ட்ராடஜிக் ப்ளானிங் என்று

RangaRakes

tamilnavarasam.com

அழைக்கிறோம். இதைச் நிரூபிப்பதற்காக ஏராளமான விஷயங்கள் இந்தப் புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் முக்கியமான அம்சங்கள்:

1. ஸ்ட்ராடஜிக் ப்ளானுக்கும் தினசரி ப்ளானுக்கும் இடையே உள்ள வித்தியாசங்கள் என்னென்ன?

2. ஒரேயடியாகக் களத்தில் குதித்துக் குழம்பாமல் படிப்படியாகத் திட்டமிட்டு முன்னேறுவது எப்படி?

3. வளர்ச்சிக்கான திட்டமிடுதல், அதைக் கண்காணித்து உறுதிப்படுத்துதல்

4. தொலைநோக்குப் பார்வை என்றால் என்ன? அதை எப்போது செய்யவேண்டும், எப்போது செய்யக்கூடாது?

5. நம்முடைய கடந்தகாலத்தை எப்படி ஆராய்வது? அதன் அடிப்படையில் நமது ஸ்ட்ராடஜிக் ப்ளானை மாற்றுவது அவசியமா? ஏன்? எப்படி?

6. நமது அடிப்படை நோக்கம் என்ன? அது எப்படி ஸ்டாடஜிக் ப்ளானைப் பாதிக்கிறது?

7. ஒரே நேரத்தில் பல செயல்பாடுகள் நம் கவனத்தைக் கோரினால் அவற்றில் எது முக்கியம் என்று தீர்மானிப்பது எப்படி?

8. எதிர்பாராத விஷயங்கள் நடைபெறும்போது எப்படிச் சமாளிப்பது? இங்கேயும் 'ப்ளான் பி' உண்டா?

இப்படி அடிப்படை விஷயங்களில் தொடங்கித் தீவிர ஸ்ட்ராடஜிக் ப்ளானிங் உத்திகள்வரை சகலத்தையும் எளிய நடையில் விளக்கிச் சொல்லும் பயனுள்ள புத்தகம் இது!

*



## 4. தி 1–2–3 மனி ப்ளான்
## (The 1-2-3 Money Plan) - 2009

க்ரிகரி கார்ப் (Gregory Karp)

* இதுவரையிலான விற்பனை: பல லட்சம் பிரதிகள்
* மொழிபெயர்ப்பு: பத்துக்கு மேற்பட்ட மொழிகளில்

திட்டமிடுவதில் பல வகைகள் உண்டு. அவற்றில் மிக முக்கியமான ஒன்று, பணத் திட்டம்!

நம் ஊரில் காசு சம்பாதிப்பது ஓர் எதேச்சையாக நடக்கும் விஷயம். ஆனால் மேலை நாடுகளில் அப்படியில்லை 'முப்பது வயதில் நான் ஒரு மில்லியனராக இருப்பேன்' என்று யோசித்துத் திட்டமிடுவார்கள். அதைச் செயல்படுத்திச் சம்பாதித்து அசத்துவார்கள்.

இதனால் ஆங்கிலத்தில் 'உங்களுடைய முதல் மில்லியன் டாலர்களைச் சம்பாதிப்பது எப்படி?' என்று பல புத்தகங்கள் உள்ளன. இவையெல்லாம் பணத் திட்டத்தின் அடிப்படை அம்சங்களைச் சொல்லித்தருகின்றன.

அந்தவகையில் பணம் சம்பாதிப்பதற்கான திட்டமிடுதலைச் சொல்லித்தரும் ஓர் அருமையான புத்தகம் 'தி 1-2-3 மனி ப்ளான்'. இதனை எழுதியிருப்பவர் புகழ் பெற்ற பொருளாதாரத்துறை நிபுணர் க்ரிகரி கார்ப்.

பணம் திட்டமிடுதல் மிகச் சிறிய வயதிலேயே தொடங்கிவிடவேண்டும். எவ்வளவு சம்பாதிக்கவேண்டும் என்கிற இலக்கு நிர்ணயித்துக்கொள்வதுதான் முதல் படி. அதன்பிறகு அந்தப் பயணத்தில் எந்தெந்த உத்திகளைப் பயன்படுத்தவேண்டும், எப்போது எவ்வளவு சம்பாதிக்கவேண்டும், அதற்கான செலவுகள் என்னென்ன, அதில் சேமிப்பு எவ்வளவு இருக்கவேண்டும், ஒருவேளை

RangaRakes
tamilnavarasam.com

எதிர்பாராத செலவுகள் நேர்ந்தால் என்ன செய்யவேண்டும் என்று கச்சிதமான சிந்தனையும் தெளிவும் இருக்கவேண்டும்.

காசு விஷயத்தில் யோசிப்பதைவிட முடிவெடுப்பதுதான் முக்கியம். அதுவும் சரியான முடிவாக, பர்ஃபெக்டாக இருக்கவேண்டும் என்று அவசியம் இல்லை. நாலு தப்புச் செய்தால் ஐந்தாவது தடவை சரியாகச் செயல்படுவோம். அதன்பிறகு செய்த அதே தவறை இன்னொருமுறை செய்யாமல் இருந்தால் போதும்.

மற்ற திட்டங்களைவிட, பணச் சேமிப்பு சார்ந்த திட்டங்களில் இலக்கு நிர்ணயிப்பது மிக அவசியம். அதுவும் குறுகிய கால இலக்குகள் (அடுத்த வருடத்துக்குள் நான் மாதம் பத்தாயிரம் ரூபாய் கூடுதலாகச் சம்பாதிப்பேன்), நீண்ட கால இலக்குகள் (நாற்பது வயதில் சொந்த வீடு, கார், வங்கியில் இத்தனை ரூபாய் சேமிப்பு என்று செட்டிலாகி விடவேண்டும்) என்று பிரித்துக் கொண்டு செயல்படுவது நல்லது.

இலக்குகளை நிர்ணயித்தபிறகு, மாதாந்திர, வருடாந்திரக் கணக்குகளைப் பார்க்க மறந்துவிடக்கூடாது. வாராந்திர, தினசரிக் கணக்குகளைப் பார்க்கிறவர்கள் கூட இருக்கிறார்கள். நாம் அவ்வளவு தூரம் போக வேண்டியதில்லை. மாதம் ஒருமுறை நமது சம்பளம், செலவுகள், சேமிப்பு, சொத்துகள், கடன்கள் போன்றவற்றை அலசிப் பார்த்து நாம் சரியான பாதையில்தான் சென்றுகொண்டிருக்கிறோமா என்று யோசித்துத் திட்டமிடுவது அவசியம்.

உதாரணமாக, ஒரு பெரிய திறமைசாலி. நன்றாகச் சம்பாதிக்கிறார். ஆனால் மூன்று வருடமாக ஒரு ரூபாய்கூடச் சம்பள உயர்வு இல்லாமல் இருக்கிறார். இது சரியா?

அவர்மட்டும் தனது பணத் திட்டத்தைச் சரியானபடி அமைத்துக்கொண்டிருந்தால் வேலை மாற்றம் அல்லது இதே வேலையில் இன்னொரு பதவி உயர்வு பற்றி யோசிக்கத் தொடங்கியிருப்பார். இதைக் காண்பிப்பதுதான் திட்டங்களை அலசுவதன் நோக்கம்.



மூன்றாவது விஷயம், நாம் எங்கெல்லாம் பணத்தை வீணடிக்கிறோம் என்று யோசிப்பது. சேமிப்பு என்பது வரவு மைனஸ் செலவு என்பதால், வரவை அதிகப்படுத்துவதும் செலவைக் குறைப்பதும் ஒரே ரிஸல்ட்தான் தருகிறது.

நீங்கள் எத்தனை பெரிய சம்பாத்தியக்காரராக இருந்தாலும் பரவாயில்லை, செலவுக் கணக்கு எழுதத் தொடங்குங்கள். ஐந்து ரூபாய்க்கு மேல் செலவாகும் ஒவ்வொரு விஷயமும் உங்கள் கணக்குப் புத்தகத்தில் இருந்தே தீரவேண்டும். மாதந்தோறும் செலவுகளைக் கூட்டிக் கழித்துப் பார்த்து எங்கெல்லாம் சேமிப்பு சாத்தியம் என்று முடிவுசெய்யவேண்டும்.

கடைசியாக, முதலீடுகள். இவற்றுக்கும் திட்டமிடுவது அவசியம். நீங்கள் தங்கத்தில் முதலீடு செய்யலாம், ரியல் எஸ்டேட்டில் புகுந்து விளையாடலாம், ம்யூச்சுவல் ஃபண்ட், ஷேர் மார்க்கெட் பேர்வழியாக இருக்கலாம், எதற்கு வம்பு என்று இன்ஷூரன்ஸ், பென்ஷன் பாலிஸி, ஃபிக்ஸட் டெபாசிட் என்று செல்லலாம். வழி எதுவானாலும் சரி, பொருத்தமான திட்டம், அதன்படி செயலாற்றல் இரண்டும் இருந்தால்தான் வேண்டிய நேரத்தில் பணம் கிடைக்கும்படி யோசித்து முதலீடு செய்யமுடியும்.

ஆக, சரியானபடி திட்டமிட்டு உழைத்தால் வளம் பெருகும், செல்வம் கொழிக்கும், நிச்சயம்!

*

## 5. ஃப்ளைட் ப்ளான்
## (Flight Plan) - 2008

ப்ரயன் ட்ரேஸி (Brian Tracy)

* இதுவரையிலான விற்பனை: பல லட்சம் பிரதிகள்
* மொழிபெயர்ப்பு: சுமார் பத்து மொழிகளில்

RangaRakes
tamilnavarasam.com

ஒரு விமானம். இந்தியாவின் தெற்கு மூலையாகிய கன்னியாக்குமரியில் கிளம்புகிறது. வடக்கு மூலையாகிய காஷ்மீரில் சென்று இறங்குகிறது.

இப்போது இந்த விமானத்தை ஓட்டுகிற பைலட், அவரது உதவியாளர்கள் என்ன செய்வார்கள்? சரேலென்று விமானத்தைத் தூக்கிக்கொண்டு கிளம்பிவிடுவார்களா?

ம்ஹூம். இல்லை. அவர்கள் ஏகப்பட்ட ஹோம் வொர்க் செய்யவேண்டியிருக்கும். இதை 'ஃப்ளைட் ப்ளான்' என்று அழைப்பார்கள்.

முதலில் அவர்கள் தாங்கள் பயணம் செய்யவிருக்கும் விமானம் எது என்று யோசிப்பார்கள், எத்தனை பேர் பயணம் செய்யவேண்டும் என்று கணக்கிடுவார்கள், எவ்வளவு எடை கொண்ட பெட்டிகளைத் தூக்கிச் செல்லவேண்டும் என்று பார்ப்பார்கள், இவை எல்லாம் பொருந்துகிறதா என்று கவனிக்கவேண்டும்.

அடுத்து, தாங்கள் தேர்ந்தெடுத்துள்ள விமானம் கன்னியாக்குமரியில் எந்தத் தளத்தில் இருந்து கிளம்பப்போகிறது? அதன் அளவுகள் என்ன? அங்கிருந்து இத்தனை பெரிய விமானம் டேக்-ஆஃப் செய்வதற்கான வசதிகள் உண்டா?

ஒருவேளை டேக்-ஆஃப் செய்யமுடியும் என்றால், எந்தத் திசையிலிருந்து செய்தால் நல்லது? காற்றின் ஓட்டம் எப்படி இருக்கும்?

எப்படியோ, மேலேறிவிட்டோம். விமானம் எந்தப் பாதையில் பயணம் செய்யவேண்டும்? எவ்வளவு தூரம்? எவ்வளவு நேரம்? நடுவில் ஏதேனும் இடங்களில் இறங்கி ஏறுகிற 'ஸ்டாப்'கள் உண்டா? அல்லது நான்-ஸ்டாப் பயணமா? அதற்கு ஏற்ற பெட்ரோல் நிரப்பிக் கொண்டு விட்டோமா? வழியில் நாம் பறந்து செல்கிற வழிகளில்



எல்லாம் பறக்க நமக்கு அனுமதி உண்டா? இல்லை என்றால் யாரிடம் அனுமதி பெறவேண்டும்? எப்படி?

நிறைவாக, காஷ்மீரை நெருங்குகிறோம். எந்த விமான நிலையத்தில் இறங்குவது? அங்கே இந்த அளவு விமானம் ஒன்று இறங்குவதற்கான வசதிகள் உண்டா? அனுமதி உண்டா? எத்தனை மணிக்கு இறங்கவேண்டும்?

புரிகிறதில்லையா? விமானம் ஒன்றைக் கிளப்புவது என்றால் இத்தனை விஷயங்களை யோசித்துவிட்டுதான் உண்மையான பயணத்தைத் தொடங்கவேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் எங்கேயாவது வம்பில் மாட்டிக்கொள்வோம்.

நம் வாழ்க்கையின் இந்த விமானப் பயணத்தைப் போன்றதுதான். சரியான திட்டமிடல் இல்லாமல் கிளம்பினால் சிரமம். இதை விளக்கும் ஓர் அருமையான புத்தகம், பிரபல மேலாண்மை நிபுணர் ப்ரயன் ட்ரேஸி எழுதிய 'ஃப்ளைட் ப்ளான்'.

மிகச் சுவாரஸ்யமான நடையில் எழுதப்பட்டிருக்கும் கலகலப்பான புத்தகம் இது. ஒரு விமானப் பயணத்தை அடிப்படையாக வைத்து நமது திட்டமிடுதல் கூறுகளை அழகுற விளக்குகிறார் ப்ரயன் ட்ரேஸி:

1. உங்களுடைய இலக்கைத் தெளிவாக முடிவு செய்துகொள்ளுங்கள். அதில் குழப்பம் இருந்தால் பயணம் சொதப்பிவிடும்

2. கிளம்பியபின் இலக்கை நினைத்துச் சந்தேகம் கொள்ளாதீர்கள். 'கௌன் பனேகா க்ரோர்பதி' அமிதாப் பச்சன் பாஷையில் சொல்வதென்றால் 'லாக் செய்துவிடுங்கள்!'

3. டேக்-ஆஃப், அதாவது உங்கள் வேலைகளைத் தொடங்கும் விதம்பற்றி யோசியுங்கள். ஒவ்வோர் அம்சத்தையும் தெளிவாகத் திட்டமிடுங்கள்

4. விமானப் பயணத்தில் பல தடைகள் வரக்கூடும். பயந்து கீழே இறங்கிவிடமுடியாது. அத்தனையையும் சமாளிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். ஆபத்து சாத்தியங்களை முன்கூட்டியே யோசித்துப் பக்காவாக ரிஸ்க் ப்ளான் போட்டுவையுங்கள்

5. டேக்-ஆஃப் போலவே, கீழே இறங்குவதும் முக்கியம். உங்களது திட்டத்தின் நிறைவுப் புள்ளியைப்பற்றியும் தெளிவாக யோசித்து வைத்துக்கொள்ளுங்கள். அதற்கு இப்போதே தயாராக இருங்கள். வெற்றி, தோல்வி எதுவாக இருந்தாலும் சரி!

ஃப்ளைட் ப்ளான் அடிப்படையில் நம் லைஃப் ப்ளானையும் அமைத்துக்கொண்டால் அநாவசியக் குழப்பங்கள் இன்றி நிம்மதியாகப் பயணம் செய்யலாம், நிச்சயமாக ஜெயிக்கலாம்!

*

## 6. ஹவ் டு ப்ளான் அண்ட் எக்ஸிக்யூட் (How To Plan And Execute) - 2007

வாலஸ் ஸ்டெட்டினிஸ் (Wallace Stettinius)

- இதுவரையிலான விற்பனை: பல லட்சம் பிரதிகள்
- மொழிபெயர்ப்பு: சுமார் பத்து மொழிகளில்

சின்னஞ்சிறு புத்தகம் ஒன்று, உங்களது சிந்தனையையே மாற்றிவிடக்கூடுமா?

நிச்சயம் முடியும். அதுதான் வாலஸ் ஸ்டெட்டினிஸ் எழுதியிருக்கும் 'ஹவ் டு ப்ளான் அண்ட் எக்ஸிக்யூட்' புத்தகத்தின் தனிச் சிறப்பு. ஒரு பயணத்தில் தன்னந்தனியே உட்கார்ந்தால் அரை மணி நேரத்தில் வாசித்து முடித்துவிடக்கூடிய எளிய புத்தகம். ஆனால் அதற்குள் எத்தனையோ உண்மைகளும் உத்திகளும்



கொட்டிக்கிடக்கின்றன. ஒவ்வொன்றாகப் பயன்படுத்தினால் நமது திட்டமிடுதல் பலமடங்கு முன்னேறிவிடும்!

இந்தப் புத்தகத்தின் அடிப்படை, திட்டமிடுதலுக்கான 24 உத்திகள். இவற்றைச் சரியானபடி பயன்படுத்தினால் எப்பேர்ப்பட்ட திட்டமும் உங்களுடைய விரல் நுனியில் சுருண்டு கிடக்கும் என்கிறார் வாலஸ் ஸ்டெட்டினிஸ். இவை அனைத்தும் எளிமையான, எவரும் பயன்படுத்தக்கூடிய உத்திகள் என்பது இன்னும் விசேஷம்!

அந்த இருபத்து நான்கு உத்திகளில் முக்கியமானவற்றைமட்டும் இங்கே சுருக்கமாகப் பார்க்கலாம்:

1. உங்களுடைய துறை எது, களம் எது என்பதைத் தெளிவாகத் தீர்மானித்துக்கொள்ளுங்கள். அது புரியாமல் இறங்கினால் எந்தத் திட்டமும் ஒழுங்காக அமையாது

2. நீங்கள் செய்யவிருக்கும் வேலையில் என்னென்ன வாய்ப்புகள் உள்ளன, என்னென்ன எதிர்ப்புகள் உள்ளன என்பதை நன்கு அலசிக்கொள்ளுங்கள். ஆழம் பார்க்காமல் காலை விடாதீர்கள்

3. இலக்குகளை நிர்ணயித்துக்கொள்வது மிக அவசியம். அவை நம்பர்களாக (எளிதில் கணக்கிடக் கூடியவையால) அமைந்தால் இன்னும் நல்லது. உதாரணமாக 'நான் பெரிய கிரிக்கெட் வீரனாவேன்' என்பதைவிட 'அடுத்த வருடம் ஐபிஎல்லில் நான் விளையாடுவேன்' என்பது சுலபத்தில் உறுதி செய்யக் கூடிய இலக்கு

4. அடுத்து, இந்த இலக்குகள் எதார்த்தத்தில் சாத்தியமானவைதானா என்று அலசுங்கள். உணர்ச்சிவயப் படாதீர்கள். நேர்மையாக யோசித்து, நிச்சயம் முடியும் என்று நீங்கள் நினைக்கிற இலக்குகளைமட்டுமே தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள்

5. ஒவ்வோர் இலக்கையும் அடைவதற்கான பாதைகளைக் கணக்கிடுங்கள். அவற்றை சீர் தூக்கிப் பார்த்து ஒன்று அல்லது இரண்டைமட்டும் தேர்ந்தெடுங்கள்

6. இந்தப் பாதைகளில் பயணம் செய்வதற்கான திட்டங்களை வடிக்கத் தொடங்குங்கள். கவனம், பாஸிட்டிவ், நெகட்டிவ் இரண்டையும் யோசித்தபிறகே உங்கள் திட்டம் எழுதப்படவேண்டும்

7. ஒருவேளை ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளை ஒரே நேரத்தில் செய்யவேண்டியிருந்தால், அவற்றில் எது முக்கியம் என்று யோசித்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் ஒரே சமயத்தில் இரண்டு விஷயங்களைத் துரத்தி இரண்டிலும் ஏமாந்து நிற்க நேர்ந்துவிடும்

8. உங்கள் திட்டத்தை எழுதிவையுங்கள். அது எப்போதும் கண்ணில் படும்படியான ஓர் இடத்தில் இருக்கட்டும். அவ்வப்போது அதை எடுத்துப் பார்த்துப் பரிசோதித்துக்கொண்டே இருங்கள். நாம் வழி மாறுவதுபோல் தோன்றினால் சரி செய்யுங்கள் - வழியை அல்லது திட்டத்தை

9. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் உங்களுக்கு உதவக்கூடியவர்கள் சிலர் இருக்கலாம். அவர்களுக்கு இதைப்பற்றித் தெளிவாக விளக்கிச் சொல்லுங்கள். அவர்களது முழு ஒப்புதலைப் பெறுங்கள். அப்போதுதான் அவர்கள் மனம் உவந்து ஒத்துழைப்பார்கள், உங்கள் வேலைகள் சுலபத்தில் முடியும். அநாவசியத் தடைகளுக்கு இடம் அளித்துவிடாதீர்கள்

10. திட்டம் நிறைவேறுகிற கட்டத்தில் யார் என்ன செய்கிறார்கள் என்பதைத் தொடர்ந்து கூர்ந்து கவனித்துவாருங்கள். ஏதேனும் பிழைகள் இருந்தால் அன்பாகச் சொல்லித் திருத்துங்கள். நீங்களே பிழை செய்தால் கடுமையாக விமர்சித்துக்கொள்ளுங்கள். பல நேரங்களில் பெரிய திட்டங்கள் சொதப்பி விழுவது சின்னஞ்சிறு தவறுகளால்தான்!



நம்மில் பலர் நினைப்பதுபோல், திட்டமிடுவது 'மேனேஜர்'களின் வேலை இல்லை. அதற்கென்று ப்ளானிங் நிபுணர்களும் தேவையில்லை. நாம் ஒவ்வொருவரும் திட்டங்களைத் தீட்டமுடியும், சரியாகச் செயல்பட்டு ஜெயிக்கமுடியும், அதற்குத் தேவையான முழு நம்பிக்கையை இந்தப் புத்தகம் ஊட்டுகிறது.

*

## 7. ப்ளான் டு வின்
## (Plan To Win) - 1998

ஜான் கார்ஸைட் (John Garside)

* இதுவரையிலான விற்பனை: லட்சக்கணக்கான பிரதிகள்
* மொழிபெயர்ப்பு: பத்துக்கும் மேற்பட்ட மொழிகளில்

திட்டமிடுதல் பற்றிப் பல ஆங்கிலப் பழமொழிகள் உண்டு. அவற்றில் மிகப் பிரபலமானது: "If you fail to plan, you plan to fail.'

அதாவது, நீங்கள் திட்டமிடத் தவறினால், தோல்விக்குத் திட்டமிடுகிறீர்கள் என்று அர்த்தம். அந்த அளவுக்குத் திட்டமிடுதல் முக்கியமானது.

யாராவது தோல்விக்குப் போய்த் திட்டமிட விரும்புவார்களா? அந்தச் சிந்தனையை மாற்றி, 'வெற்றிக்குத் திட்டமிடுங்கள்' என்று சொல்லித்தரும் ஓர் அருமையான புத்தகம் 'ப்ளான் டு வின்'. இதன் ஆசிரியர் ஜான் கார்ஸைட்.

அடிப்படையில் திட்டம் என்பது என்ன? நோக்கம் அல்லது இலக்கு, அதற்கான பாதை, செயல்பாடுகள், செய்கிறவர்கள், நேரம், ரிஸல்ட், கண்காணிப்பு மற்றும்

RangaRakes

tamilnavarasam.com

பாடங்கள். இவை ஒவ்வொன்றையும் எடுத்துக்கொண்டு விரிவாக அலசுகிறது இந்தப் புத்தகம்.

உதாரணமாக நீங்கள் ஒரு கடை தொடங்க விரும்புகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அதற்கு எப்படித் திட்டமிட்டு வெற்றி பெறமுடியும் என யோசிப்போம்.

முதலில், நோக்கம் அல்லது இலக்கு. இந்தக் கடை தொடங்குவதன்மூலம் நீங்கள் என்ன சாதிக்க விரும்புகிறீர்கள்? காசு சம்பாதிப்பதுதான் உங்கள் நோக்கமா? அல்லது நாலு பேருக்கு நல்லது செய்ய விரும்புகிறீர்களா? சிலருக்கு வேலை தர விரும்புகிறீர்களா? பெரிய பிஸினஸ் மேக்னெட் ஆகவேண்டும் என்கிற கனவு உங்களுக்கு உண்டா? இந்த இலக்கைப் பொறுத்துதான் உங்களது திட்டம் அமையமுடியும்.

அடுத்து, பாதை. நீங்கள் அமைக்கவிருப்பது பெட்டிக்கடையா, அல்லது சூப்பர் மார்க்கெட்டா? கையேந்திபவனா, அல்லது மல்ட்டி-குஸின் ரெஸ்டாரன்டா? பட்ஜெட் படமா, அல்லது ஸ்டார் படமா?... இப்படிதான் நீங்கள் உங்களது பாதையை யோசிக்கத் தொடங்குகிறீர்கள். பல விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்த்து ஒரு முடிவுக்கு வருகிறீர்கள்.

மூன்றாவதாக, செயல்பாடுகள். கடை ஆரம்பிப்பது என்றால் அதை அரசாங்கத்தில் பதிவு செய்வது, நிலம் வாங்கிக் கட்டடம் எழுப்புவது, அல்லது வாடகைக்கு எடுப்பது, கடைக்கான பொருள்களைக் கொள்முதல் செய்வது, பெயர் வைப்பது, விளம்பரம் செய்வது, மக்களை அணுகுவது என்று ஏகப்பட்ட வேலைகள் இருக்கின்றன, இவை அனைத்தையும் நம் ப்ளானில் சேர்த்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

இந்த வேலைகள் சகலத்தையும் நாமே செய்வது சாத்தியம் இல்லை. வேறு சிலரும் நம் உதவிக்குத் தேவைப்படுகிறார்கள். யார் அந்த வேறு சிலர்? அவர்களை எப்படிப் பயன்படுத்திக்கொள்வது? இதனால் அவர்களுக்கு என்ன லாபம்? அவர்கள் நம்முடைய திட்டப்படி நடக்க ஒப்புக்கொள்வார்களா, அல்லது பிரச்னை செய்வார்களா? அப்படிச் செய்தால் மாற்று ஏற்பாடுகள் என்ன? எல்லாம் யோசித்துக்கொள்வது அவசியம்.



அடுத்து, இந்த வேலைகளெல்லாம் எப்போது செய்யப்படவேண்டும். இது மிகவும் முக்கியமானது பொங்கல் நேரத்தில் பட்டாசுக்கடை வைப்பதும், உழைப்பாளர் தினத்தன்று வேலன்டைன்ஸ் டே கார்ட் விற்பதும் சரிப்படாது. ஆகவே ஒவ்வொரு வேலைக்கும் உரிய நேரத்தை நிர்ணயித்து அதன்பிறகு செயல்பாட்டில் இறங்குவதுதான் புத்திசாலித்தனம்.

வேலைகள் தொடங்கிவிட்டனவா? அவற்றைத் தொடர்ந்து கண்காணிப்பது அவசியமாகிறது. இல்லையென்றால் பாதை மாறுவது தெரியாமலே வழி தவறிப் போய்க்கொண்டிருப்போம். இதற்கும் நம் திட்டத்திலேயே இடம் ஒதுக்கவேண்டும். கண்காணிப்பு வேலையை நாமே வைத்துக்கொள்ளாமல் நம்முடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான, அதேசமயம் நாம் செய்யும் தவறுகளைத் தயங்காமல் சுட்டிக்காட்டக்கூடிய ஒருவரிடம் ஒப்படைப்பது மிகவும் நல்லது. உதாரணமாக, உங்கள் கணவர் அல்லது மனைவி, அலுவலகத் தோழர், நெருங்கிய உறவினர், இப்படி!

கடைசியாக, பாடங்கள், எந்தத் திட்டமும் நமக்குப் பல தோல்விகளைக் கொண்டுவரும். அதில் தப்பில்லை. அந்தத் தோல்விகளில் இருந்து பாடம் கற்றுக்கொண்டோமா என்பதுதான் முக்கியம். இதைத் தொடர்ந்து கவனித்துவந்தால் எல்லாச் சறுக்கல்களும் நம்மை மேலே நோக்கிதான் அழைத்துசெல்லும்!

*

RangaRakes
tamilnavarasam.com

## 8. ப்ளான் யுவர் கரியர்

## (Plan Your Career) - 2007

ராஜீவ் சந்திரா (Rajeev Chandra)

* இதுவரையிலான விற்பனை: பல லட்சம் பிரதிகள்
* மொழிபெயர்ப்பு: ஏராளமான மொழிகளில்

ஆங்கிலத்தில் ஒருவரது பணிவாழ்க்கையைக் குறிப்பிடுவதற்குக் 'கரியர்' என்று ஒரு வார்த்தை உள்ளது. அதற்கு இணையான தமிழ் வார்த்தை என்ன என்று கொஞ்சம் யோசியுங்கள்.

நாம் எவ்வளவுதான் யோசித்தாலும் வித்தியாசமாக அப்படியும் இப்படியும் சுற்றி வளைக்கதான் முடியுமேதவிர, தமிழில் இதற்கு ஒரு பொருத்தமான வார்த்தை இல்லை என்பதுதான் உண்மை. அதற்குக் காரணம் தமிழில் எந்தக் குறையும் இல்லை. தமிழர்களுக்கு, ஏன் இந்தியர்களுக்கே தங்களது பணிவாழ்க்கையைத் திட்டமிடுவது ஒரு பரிச்சயமான அனுபவமாக (அப்போது) இருந்ததில்லை.

அந்தக் காலத்தில் நம் முன்னோர் ஒரு வேலையில் அமர்ந்தால் அதையே நிரந்தரமாகக் கருதினார்கள். அந்த நிறுவனத்துக்குள்ளாக ப்ரமோஷன், சம்பள உயர்வு என்று ஆசைப்படுவார்களேதவிர, அங்கிருந்து வேறு எங்கேனும் தாவிச் செல்லவேண்டும் என்று அவர்கள் நினைத்தது கிடையாது. ஆகவே அவர்களைப் பொறுத்தவரை பணிவாழ்க்கை என்பது ஒரு நிறுவனம் சார்ந்த வேலை ஒன்றைக் கண்டறிவதோடு முடிந்துவிடுகிறது.

இது அந்தக் காலத்துக்குச் சரிப்படும். இன்றைய நவீன யுகத்தில் நாம் அப்படி இருந்தால் காலம் நம்மைக் கடந்து எங்கேயோ போய்விடும். ஒரு துறையில் நுழையும்போதே, அல்லது அந்தப் பக்கம் செல்வதற்கு முன்பாகவே நமது



பணிவாழ்க்கையைக் கச்சிதமாகத் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். பின்னர் அதனைச் சரியாகச் செயல்படுத்தி முன்னேறவேண்டும். அதுதான் புத்திசாலித்தனம்.

ஆச்சர்யமான விஷயம், கரியர் ப்ளானிங் என்பது சாதாரண குமாஸ்தாவில் தொடங்கிப் பெரிய அரசியல்வாதிகள், ஆட்சியாளர்கள்வரை எல்லோருக்கும் பொருந்தும். அவரவர் அளவில் அதில் இடம் பெறும் விஷயங்கள் மாறும். அவ்வளவுதான்.

கரியர் ப்ளானிங் பற்றி ஆங்கிலத்தில் ஏராளமான புத்தகங்கள் வந்துள்ளன. ஒவ்வொரு துறைக்கும் இவை மாறுபடும். இங்கே நாம் பார்க்கவிருக்கும் புத்தகம் ராஜீவ் சந்திரா என்பவர் எழுதியது.

சரி. நான் என்னுடைய கரியரை ப்ளான் செய்து உழைக்க ஆசைப்படுகிறேன். அதற்குநான் முதலில் என்ன செய்யவேண்டும்?

உங்களுடைய துறையில் நீங்கள் என்னவாக நுழைய ஆசைப்படுகிறீர்கள் என்பதை உணருங்கள். பின்னர் அதே துறையில் வேறு என்னென்ன வாய்ப்புகள் உள்ளன, அதில் எவையெல்லாம் உங்களுக்குப் பொருந்தும் என்பதை விசாரித்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

உதாரணமாக, சினிமாத் துறையில் க்ளாப் அடிக்கும் பையனாக உள்ளே வரும் ஒருவருக்கு, சொந்தமாகப் படம் இயக்குகிற ஆர்வம் வரலாம். உடனடியாக அல்ல, என்றைக்காவது ஒருநாள்.

அதே நேரம், பக்கத்து ஸ்டுடியோவில் இன்னொரு க்ளாப் பையன். அவருக்கு நடிகராகிற ஆசை.

இவர்கள் இருவரும் கரியர் ப்ளானிங் செய்யலாம். ஆனால் இலக்கு மாறுவதால் அவர்களது திட்டமும் மாறுபடும். இல்லையா?


tamilnavarasam.com

அதுதான் உங்களது கரியர் ப்ளானிங் வழிமுறையின் அடுத்த கட்டம். உங்களது இலக்கைப் பொறுத்து நீங்கள் செல்ல விரும்பும் பாதையைத் தீர்மானித்துக்கொள்ளுங்கள். அங்கே சென்றடைய என்னென்ன செய்ய வேண்டியிருக்கும், அவற்றை எப்போது செய்ய வேண்டியிருக்கும் என்று தெளிவாக யோசித்து முடிவெடுங்கள்.

மூன்றாவது, மைல் கற்கள். கரியர் ப்ளானிங் என்பது மிக நீண்ட பயணம். அதை முழுவதுமாகச் செய்து முடிப்பதற்குள் ஆங்காங்கே மைல் கற்களை அமைத்துக்கொண்டால் நமது பயணம் சரியான திசையில்தான் இருக்கிறதா என்பது புரியும். ஏதாவது பிரச்னை என்றால் சரி செய்துகொள்ளலாம்.

உதாரணமாக, ஒரு சாதாரண குமாஸ்தா. அவர் ஏதேனும் ஒரு கம்பெனியில் மேனேஜராக விரும்புகிறார். அவர் இப்படி மைல் கற்களை உருவாக்கிக்கொள்ளலாம்: 6 மாதத்தில் பிரமோஷம், இரண்டு வருடத்தில் சீனியர் குமாஸ்தா, ஐந்து வருடத்தில் வேறு கம்பெனிக்கு மாறி அஸிஸ்டென்ட் மேனேஜர், பத்தாவது வருடத்துக்குள் மேனேஜர்!

இது ஓர் உதாரணம்தான். இப்படி ஒவ்வொரு துறைக்கும் வெவ்வேறுவிதமான கரியர் ப்ளான், மைல் கற்கள் சாத்தியம். யோசித்து முடிவெடுங்கள், கவனமாகச் செயல்படுத்துங்கள். நிச்சயம் ஜெயிக்கமுடியும்!

*

## 9. ஷைன்

## (Shine) - 2006

லாரி ஏ தாம்ஸன் (Larry A Thompson)

* இதுவரையிலான விற்பனை: லட்சக்கணக்கான பிரதிகள்
* மொழிபெயர்ப்பு: சுமார் பத்து மொழிகளில்



சென்ற புத்தகத்தில் கரியர் ப்ளானிங் பற்றிப் பார்த்தோம். அங்கே சினிமா நட்சத்திரமாவதை ஓர் உதாரணமாகக் குறிப்பிட்டிருந்தோம்.

சினிமாத்துறைமட்டுமல்ல, அநேகமாக எல்லாத் துறைகளிலுமே 'ஸ்டார்'கள் இருக்கிறார்கள். இவர்கள் தங்களுடைய சொந்த வெளிச்சத்தில் மின்னுகிறவர்கள். சுற்றியிருக்கிற மற்றவர்கள் இவர்களை ஆச்சர்யத்தோடு நிமிர்ந்து பார்க்கிறார்கள். தாங்களும் அப்படி மாறமுடியாதா என்று ஏங்குகிறார்கள்.

அப்படி நீங்கள் விரும்பும் துறையின் 'ஸ்டார்' ஆக மாறுவது சாதாரண விஷயமில்லை. அதற்காக நீங்கள் திட்டமிட்டு வேலை பார்க்கவேண்டும் என்று சொல்லும் ஒரு நல்ல புத்தகம் 'ஷைன்'. இதன் ஆசிரியர் லாரி ஏ தாம்ஸன் பல புகழ் பெற்ற நட்சத்திரங்களுக்கு மேலாளராகவும் ஆலோசகராகவும் பணியாற்றியவர். அப்போது அவர் பெற்றுக்கொண்ட அனுபவத்தை வைத்து இந்தப் புத்தகத்தை எழுதியிருக்கிறார்.

நட்சத்திரமாக மின்னுவதற்குத் திட்டமிடுவது எப்படி?

முதலில், ஒரே வானில் பல நட்சத்திரங்கள் இருந்தால் சரிப்படாது. அந்த வெளிச்சத்தில் நீங்கள் எடுபடமாட்டீர்கள்.

ஆகவே, நீங்கள் தேர்ந்தெடுக்கும் துறையில் ஏற்கெனவே ஏகப்பட்ட 'ஸ்டார்'கள் இருந்தால், நீங்கள் உங்களை ஒரு கேள்வி கேட்டுக்கொள்ளவேண்டும்: நான் இங்கேதான் ஸ்டாராகி மின்ன விரும்புகிறேனா? அல்லது வேறு துறைக்குச் சென்றுவிடுவது புத்திசாலித்தனமா?

உதாரணமாக, இந்திய கிரிக்கெட் அணியில் பேட்ஸ்மேன்கள் ஜாஸ்தி. அவர்களுக்கு மத்தியில் இன்னொரு பேட்ஸ்மேனாக உள்ளே நுழைவது புத்திசாலித்தனமா? அல்லது, ஃபுட்பால் டீமுக்குப் போய்விடலாமா?

RangaRakes

tamilnavarasam.com

ம்ஹூம். நான் வேறு துறைக்குச் செல்ல விரும்பவில்லை. இதே துறையில்தான் ஸ்டாராக விரும்புகிறேன்.

அப்படியென்றால், மற்ற நட்சத்திரங்களைவிட நீங்கள் ஒரு படி அதிகமாக மின்னவேண்டும். உங்களால் முடியுமா? ஆம் எனில், எப்படி?

உதாரணமாக, அதே கிரிக்கெட் உதாரணம், அதே பேட்ஸ்மேன்களின் கூட்டம், நீங்கள் அதனுள் நுழைந்து ஓர் அதிரடி பேட்ஸ்மேனாகப் பெயர் வாங்கலாம், அல்லது பவுலிங்கிலும் கலக்கி ஆல் ரவுண்டராகலாம், அல்லது, விக்கெட் கீப்பராக நுழைந்து பேட்டிங்கிலும் கலக்கத் தொடங்கி ஸ்டார் ஆகலாம்.

துறையைத் தேர்வு செய்துவிட்டோம். அடுத்து, நட்சத்திரங்கள் உயரத்துக்குச் சென்றால்தான் மதிப்பு. அதற்கான வழிமுறைகளைத் தேட ஆரம்பிக்கவேண்டும்.

நட்சத்திரங்களாக விரும்புகிறவர்கள் சாதாரண வெற்றிகளில் திருப்தி அடைந்துவிடக்கூடாது என்கிறார் லாரி ஏ தாம்ஸன். பெரிய, மிகப் பெரிய வெற்றிகளைத் தொடர்ந்து சாதிக்கிறவர்கள்தான் நட்சத்திரங்களாகமுடியும்.

பொதுவாக பெரிய வெற்றிக்குத் தடை என்ன என்று பார்த்தால் ‘இது போதும்’ என்கிற மனப்பான்மைதான். பல சமயங்களில் அதுவே நம்மைத் திருப்தியடையச் செய்துவிடுகிறது. இன்னும் மேலே போய் சிறப்பாகச் செயலாற்றமுடியுமா என்று யோசிக்கக்கூடத் தவறிவிடுகிறோம்.

அதற்குப் பதிலாக ‘இது போதாது’ என்கிற மனப்பான்மை நட்சத்திரங்களாகத் திட்டமிடுகிறவர்களுக்கு வேண்டும். நமது இலக்குகளை மேலே மேலே நிர்ணயித்துக்கொண்டே இருந்தால்தான் பயணம் உயரத்தை நோக்கிச் செல்லும்.



உதாரணமாக, நீங்கள் ஒரு ஓட்டப் பந்தய வீரர் என்று வைத்துக்கொள்வோம். 100 மீட்டர் தூரத்தைப் பத்து விநாடிகளில் ஓடிக் கடக்கிறீர்கள். சந்தோஷம்!

ம்ஹூம். சந்தோஷம் இல்லை. அதை ஒன்பதரை விநாடிகளில் ஓடிக் கடக்கமுடியுமா? இப்படிக் கேள்வி கேட்கத் தொடங்குங்கள். உலகத்தைப் பற்றிய உங்களது பார்வையே மாறிவிடும்.

ஒருவேளை, நீங்கள் அந்தத் தூரத்தை ஒன்பதரை விநாடிகளில் கடக்கக் கற்றுக்கொண்டுவிட்டால், ஒன்பது விநாடிக்குத் தாவுங்கள். படிப்படியாகத் திட்டமிட்டு முன்னேறிச் சிறந்த நட்சத்திரமாக மின்னுங்கள்!

*

## 10. ப்ளானிங் அண்ட் கோல் செட்டிங் ஃபார் பர்ஸனல் சக்ஸஸ்

## (Planning and Goal Setting for Personal Success) - 2006

சாமுவேல் ப்ளாங்க்ஸன் (Samuel Blankson)

- இதுவரையிலான விற்பனை: பல ஆயிரம் பிரதிகள்
- மொழிபெயர்ப்பு: சுமார் பத்து மொழிகளில்

ஆஃபீஸ் வேலைக்காகத் திட்டமிடுவது எல்லோருக்கும் தெரியும். பர்ஸனல் திட்டமிடுவது?

இங்கே ‘பர்ஸனல்’ என்பது உங்களுடைய தனிப்பட்ட வேலைகளுக்காகத் திட்டம் எழுதுவது அல்ல. உங்களது தனிவாழ்க்கையையே திட்டமிட்டுக்கொள்வது.

RangaRakes

tamilnavarasam.com

ஆங்கிலத்தில் இதுபற்றிப் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. அவற்றில் முக்கியமான ஒன்று சாமுவேல் ப்ளாங்க்ஸன் எழுதி வெளியிட்ட 'ப்ளானிங் அண்ட் கோல் செட்டிங் ஃபார் பர்ஸனல் சக்ஸஸ்'.

தனிப்பட்ட முன்னேற்றம் அடைய விரும்புகிறவர்கள் ஒன்று, இரண்டல்ல, முழுசாக எட்டு வகைகளில் திட்டமிடவேண்டும் என்கிறார் சாமுவேல் ப்ளாங்க்ஸன். அவர் குறிப்பிடும் அந்த எட்டு பிரிவுகள்:

1. குடும்பம்
2. உறவுகள்
3. சமூகம்
4. ஆன்மிகம்
5. தான தர்மம்
6. கல்வி
7. பொருளாதாரம், வேலை
8. பொழுதுபோக்கு மற்றும் மகிழ்ச்சி

இந்த எட்டுப் பிரிவுகளுக்கும் தனித்தனி திட்டங்களை அமைத்துக்கொள்ளவேண்டும். அவை தனித்தனி நோக்கங்களின் அடிப்படையில் அமையவேண்டும்.

இங்கே 'நோக்கம்' என்பது வெறுமனே 'நான் இப்படி ஆவேன்' என்று வாக்கியமாக இருக்கக்கூடாது. ஸ்மார்ட்டாக இருக்கவேண்டும்!

'ஸ்மார்ட்' என்கிற ஆங்கில வார்த்தையில் ஐந்து எழுத்துகள். எஸ் - எம் - ஏ - ஆர் - டி. இந்த ஐந்து எழுத்துகளுக்கும் வெவ்வேறு அர்த்தம் சொல்லி அதை இலக்கு



/ நோக்கம் / கோல் உடன் இணைக்கமுடியும்:

எஸ் - சிம்பிள் - எளிமை

எம் - மெஷரபிள் - அளக்கக்கூடியது

ஏ - அட்டெய்னபிள் - அடையக்கூடியது

ஆர் - ரியலிஸ்டிக் - எதார்த்தமானது

டி - டைம் பவுண்ட் - நேரம் அடிப்படையிலானது

உதாரணமாக, 'நான் வரும் 2020க்குள் எங்கள் நிறுவனத்தின் மேலாளர் பதவியை அடைவேன். எனக்குக் கீழே குறைந்தபட்சம் 20 பேர் வேலை செய்வார்கள். நான் மாதம் இத்தனை ஆயிரம் ரூபாய்கள் சம்பாதிப்பேன். அதில் இருபது சதவிகிதத்தை என் வருங்காலத்துக்காகச் சேமித்துவைப்பேன். பத்து சதவிகிதத்தை நல்ல சமூகப் பணிகளுக்காகத் தானமாக வழங்குவேன். அப்போதும் நான் எனது குடும்பத்தினருடன் தினமும் இரண்டு மணி நேரங்களையாவது முழுமையாகச் செலவிடுவேன். என் தனிப்பட்ட உடற்பயிற்சிக்காக அரை மணி நேரமாவது ஒதுக்குவேன்.'

புரிகிறதா? மற்ற திட்டங்களோடு ஒப்பிடும்போது இந்தத் திட்டம் கச்சிதமாக வரும். காரணம், இதன் இலக்கு தெளிவாக இருக்கிறது. எளிமையாக, அளவிடக்கூடியதாக, அடையக்கூடியதாக, எதார்த்தமானதாக, நேரம் அடிப்படையிலானதாக, அதேசமயம் மேற்சொன்ன எட்டு வகைகளையும் கருத்தில் கொண்டதாக. அதுதான் அந்தத் திட்டத்தின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்துத் தருகிறது.

இப்படி ஸ்மார்ட்டான இலக்குகளைத் தீர்மானித்துக்கொண்டு அவற்றை நோக்கித் திட்டமிடும்போது மைல் கற்கள் தானாக அமைந்துவிடும். அவற்றைக் கவனித்துக்கொண்டு வேகமாக முன்னேறமுடியும்.

RangaRakes tamilnavarasam.com

சில சமயங்களில் நமது நோக்கங்கள் சரியாக அமையாமல் போகலாம். அதுபோன்ற நேரங்களில் அவற்றை நம் நம்பிக்கைக்கு உரிய நண்பர்கள், உறவினர்கள், நலம் விரும்பிகளிடம் விளக்கிச் சொல்லி நிஜமாகவே அதுதான் நம் நோக்கமா என்று உறுதிப்படுத்திக்கொள்வது முக்கியம்.

உதாரணமாக 'நிறையச் சம்பாதிக்கவேண்டும்' என்பது ஒருவருடைய நோக்கம். ஆனால் அவர் நிறையச் சம்பாதிக்க விரும்பக் காரணம், மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்பதுதான். ஆக, நோக்கம் சம்பாதிப்பது அல்ல, மகிழ்ச்சியாக இருப்பதுதான். அதைப் பொறுத்து அவரது திட்டங்களும் மாறுபடும் அல்லவா?

இப்படி உங்கள் நோக்கத்தை ஒருமுறைக்குப் பலமுறை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள், பின்னர் அதற்கேற்பத் திட்டமிடுங்கள், மேலே நாம் பார்த்த எட்டு வகைகளை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். முன்னேறிச் செல்லுங்கள். வாழ்த்துகள்!

❋

RangaRakes

tamilnavarasam.com

# வியப்பூட்டும் உண்மைகள்

**அறிஞர்களை ஆதரித்தவன்**

புனித ரோம சாம்ராஜ்ஜியத்தை ஏற்படுத்திய சார்லி மாக்னே பெரும் புலவர்களையும் அறிஞர்களையும் ஆதரித்தவன். ஆனால் அவன் முறையாக எழுதக் கற்றுக் கொள்ளவேயில்லை. எழுதுவதற்கான சாதனங்கள் எப்போதும் அவன் தலையணைக்கடியில் இருக்கும். நேரம் கிடைக்கும்போது எழுதிப் பழக முயல்வான். வயதான காலத்தில் இம்முயற்சியை அவன் மேற்கொண்டதால் அதிக முன்னேற்றம் காண முடியவில்லை. குழந்தைக் கிறுக்கல்கள்போல அவன் எழுதிய சில எழுத்துகளையே பின்னர் காண முடிந்தது.

**வாக்கைக் காப்பாற்றியவன்**

சீனாவிலிருந்து துருக்கி வரை மாபெரும் சாம்ராஜ்ஜியத்தை ஏற்படுத்திய தாமர்லேன் மரண வெறிகொண்டவன். இப்போது ஈரான் உள்ள பகுதியில் அவனுடைய துருப்புகளில் 3000 பேர் கொல்லப்பட்டு விட்டனர், இந்த இறப்புக்கு மனிதத் தலைகளைக் கொண்டே ஈடு செய்ய வேண்டுமென்று தம் படையினருக்கு உத்தர விட்டான். 70,000 தலைகள் வெட்டப்பட்டு மலை போல் குவிக்கப்பட்டன.

RangaRakes
tamilnavarasam.com

துருக்கியிலுள்ள சிவாஸ் என்ற நகரத்தை தந்திரமாக ஏமாற்றினான். சரணடைந்து விட்டால் ஒரு சொட்டு ரத்தம் வீணாகாது என்று உறுதியளித்தான். உயிர் பிழைக்குமென்ற நம்பிக்கையில் எதிர்த்தவர்கள் சரணடைந்தனர், கொடுத்த வாக்கை தாமர்லேன் காப்பாற்றினான். ஒரு சொட்டு ரத்தம் கூடத் தரையில் சிந்தாமல் 4000 ஆர்மினியப் போர் வீரர்களை உயிரோடு புதைத்தான். கிறிஸ்தவர்களை நீரில் மூழ்கடித்துக் கொன்றான். இவ்வளவு கொலை வெறிபிடித்த அவன் போர் முனையில் சாகவில்லை. ஏகமாகக் குடித்துவிட்டு படுக்கையில் உயிரை விட்டான்.

### இருபது வருட சாபம்

அமெரிக்க அதிபர்களில் 20 ஆண்டு இடைவெளியில் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் பதவியிலிருக்கும் போதே உயிர் துறந்து விடுகிறார்கள். இவ்வாறு இது வரை தேர்ந்தெடுக்கப்பட்ட எட்டுப் பேரில் ஏழுபேர் கொல்லப்பட்டோ நோயுற்றோ இறந்திருக்கிறார்கள்.

வில்லியம் ஹாரிசன் 1840, ஆபிரகாம் லிங்கன் 1860, கார் ஃபீல்ட் 1880, மெக்கின்லி 1900, ஹார்டிஞ்ச் 1920, ரூஸ்வெல்ட் 1940, கென்னடி 1960.

நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு 12 ஆண்டுக் காலம் அதிபராகப் பதவி வகித்த ரூஸ்வெல்ட் யாராலும் முறியடிக்கமுடியாத சாதனையை ஏற்படுத்தியிருக்கிறார் 1951-இல் செய்யப்பட்ட அரசியல் சாதனைத் திருத்தப்படி ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் தேர்தலில் போட்டியிட முடியாது. அதிகபட்சமாக எட்டு ஆண்டு தான் பதவி வகிக்க முடியும்.

### பெருமைக்குரிய ஸ்மட்ஸ்

தென்னாப்பிரிக்காவின் இரண்டாவது பிரதமராகப் பதவி வகித்த ஜான் ஸ்மட்ஸ் 12 வயது வரை பள்ளிக்கூடமே போனதில்லை. ஆனால் அதற்குப் பிறகு ஐந்தே ஆண்டுகளில், பத்து ஆண்டுகளில் படிக்க வேண்டியதைக் கற்று விஞ்ஞானம், இலக்கியம் இரண்டிலும் ஒரே சமயத்தில் முதல் வகுப்பில் தேறிப் பட்டம் பெற்றார். அடுத்து இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சட்டம் படித்துப் பட்டம் பெற்றார். ராயல் சொஸைட்டி உறுப்பினராகவும் ஆனார். அருமையான தத்துவ நூலொன்றையும் எழுதியவர், பிரிட்டிஷ் இராணுவத்தில் ஃபீல்டுமார்ஷல் பதவியும் வகித்தார். சிறந்த ராஜ தந்திரி என்ற முறையில் உலகப் புகழ் பெற்ற முதல் தென்னாப்பிரிக்கப் பிரதமரும் இவர்தான். முதல் உலகப் போரின்போது இங்கிலாந்து பிரதமர் லாயிட் ஜார்ஜுக்கும் இரண்டாவது உலகப் போரின்போது வின்ஸ்டன் சர்ச்சிலுக்கும் நம்பிக்கையான ஆலோசகராக இருந்தவர்.



### மூன்று முயற்சிகள்

ஒருவர் கொலையுண்டுதான் இறக்க வேண்டும் என்றிருந்தால் அதிலிருந்து யாரும் தப்பமுடியாது என்பது ஹிட்லருடைய கருத்து. என்னதான் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துகொண்டாலும் அதிலிருந்து தப்புவது கடினம் என்று அவர் கூறுவார். ஹிட்லரைக் கொல்வதற்கு நடைபெற்ற முயற்சிகளிலிருந்து மூன்று முறை அவர் அதிசயமாகத் தப்பியிருக்கிறார். பாதுகாப்பு ஏற்பாடுகள் சிறந்த முறையில் செய்யப்பட்டிருந்ததாலன்று; அதிருஷ்டம் அவர் பக்கம் இருந்ததால். தற்கொலை செய்து கொண்டு சாக வேண்டுமென்று அவர் விதி இருந்தபோது மற்றவர்களால் எப்படி அவரைக் கொல்ல முடியும்?

ஓரிடத்தில் முக்கியமான பேச்சு வார்த்தைகளை நடத்திக்கொண்டிருந்தபோது அவரைக் கொல்வதற்குத் திட்டமிடப்பட்டு இருந்தது. அந்த இடத்தை விட்டுக்

RangaRakes

tamilnavarasam.com

கிளம்புவதற்கு குறித்திருந்த நேரத்திற்குப் பத்து நிமிடம் முன்னதாகவே கிளம்பிப் போய்விட்டதால் இந்தக் கொலை முயற்சியிலிருந்து அவர் தப்பினார்.

இரண்டாவது முறை அவரைத் தீர்த்துக்கட்டுவதற்கு நியமிக்கப்பட்டிருந்த ஆள், ரயிலில் வந்துகொண்டிருந்தபோது டிக்கட் இல்லாமல் பிராயணம் செய்ததற்காகப் பிடிபட்டுவிட்டான். நிச்சயித்திருந்த நேரத்துக்கு அவனால் போய்ச்சேர முடியவில்லை. அதனால் ஹிட்லருடைய உயிர் பிழைத்தது.

மூன்றாவது தடவை அவர் அதிகாரிகளுடன் முக்கிய பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருந்த இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் வெடிக்கும் விதத்தில் குண்டு வைக்கப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் குண்டு வெடிக்கவும் செய்தது. அந்த அறையை பிளந்து சிதறியது. ஆனால் அங்கிருந்த யாரும் சாகவில்லை. காரணம் அந்த அறை மரத்தினால் ஆனதாக இருந்ததுதான். கல் கட்டடமாக இருந்திருந்தால் அத்தனை பேரும் இறந்து போயிருப்பார்கள். இவ்வாறு மூன்று முறை தப்பியவர் எதிரிகளிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பத் தாமே தற்கொலை செய்து கொண்டார்.

**திட்டம் தோற்றது**

ரஷ்யாவின் சர்வாதிகாரியாகத் திகழ்ந்த ஜோசப் ஸ்டாலினைக் கொலை செய்வதற்கு ஹிட்லர் ஒரு திட்டம் வகுத்தார். அவருடைய ரகசியப் போலீஸ்படை கடுமையாகச் செயல்படக்கூடியது. எந்தக் கொலை பாதகத்துக்கும் அஞ்சாது. அடிப்படையின் தலைவராக இருந்த ரிப்பன் டிராப், ரஷ்யாவில் ஜெர்மன் தூதுவராக இருந்தார். ஒரு பவுண்டன் பேனாவைப் போல ரிவால்வர் செய்வது, ஸ்டாலினை தூதரகத்துக்கு வரச்செய்து யாரும் சந்தேகப்படாத விதத்தில் அவரைக் கொன்றுவிடுவது என்று திட்டமிட்டு அப்பொறுப்பு ரிப்பன் டிராப்பிடம் ஒப்படைக்கப்பட்டது. என்ன முயன்றும் ஸ்டாலினை தூதரகத்துக்கு வருமாறு செய்ய முடியாததால் இத்திட்டம் கைவிடப்பட்டது.



ஸ்டாலினுடைய காரோட்டியைச் சரிகட்டி அவர் காரில் அமரும் இடத்துக்கடியில் குண்டு வைக்க அடுத்த திட்டம் வகுக்கப்பட்டது. ஜெர்மன் ரகசியப் போலீசில் பணியாற்றிய இரண்டு பேரிடம் இப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு அவர்கள் ரகசியமாக மாஸ்கோவில் பாரசூட் மூலம் இறக்கப்பட்டனர்.

நம்புவதற்குக் கடினமான அதிசயம் என்னவென்றால் ஸ்டாலினைக் கொல்ல அனுப்பப்பட்ட ரகசியப் போலீஸ்காரர்கள் இருவரும் ரஷ்யர்கள்! ஜெர்மன் போலீஸ் படையில் ரகசியமாகச் சேர்ந்து அவர்களுடைய திட்டங்களை வேவு பார்த்து வந்த ஒற்றர்கள். ஸ்டாலினுக்கு விதிக்கப்பட்டிருந்தது இயற்கையான சாவு. அப்படியிருக்க மற்றவர்களால் எப்படி அவரைக் கொல்ல முடியும்?

**உயிர் காத்த கிழவர்**

இரண்டாவது உலகப்போரின் போது நேச நாடுகளின் படைத்தளபதியாக இருந்த ஐசன்ஹோவரைக் கொன்றுவிடத் திட்டமிடப்பட்டது. போர் முடிவுக்கு வருவதற்குச் சில நாள்கள் முன்பு நடந்த நிகழ்ச்சி இது.

குறிப்பிட்ட ஒரு வழியாக அவர் வருவார் என்பதையறிந்த ஜெர்மன் ஒற்றர்கள் அவர் வரும் காரின் மீது குண்டெறிந்து கொல்வதற்காகப் பதுங்கியிருந்தனர். குறிப்பிட்ட நேரத்தில் சில கார்கள் வந்தன. ஒற்றர்கள் குறிபார்த்து குண்டை வீசினர். கார்கள் சிதைந்து எரிந்தன. காரில் ஐசன்ஹோவர் இல்லாததால் அவர் தப்பினார்.

இந்த அதிசயம் எப்படி நேர்ந்தது தெரியுமா? கொலை முயற்சிக்குத் திட்டமிடப்பட்டிருந்த இடத்

RangaRakes
tamilnavarasam.com

துக்கு சில மைல்கள் முன்பே வயதான ஒரு தம்பதி சாலையில் சிரமப்பட்டு நடந்து வந்து கொண்டிருப் பதைக் கண்ட ஐசன்ஹோவர் தமது காரை நிறுத்தி அவர்களை விசாரித்தார். தங்கள் கிராமத்துக்கு அவர் கள் போய்க் கொண்டிருப்பதாக அறிந்த அவர் காரில் ஏறிக்கொள்ளுமாறும் தாமே கொண்டு விடுவதாகவும் கூறினார். தம்முடன் வந்த அதிகாரிகளிடம் முன்னே போகுமாறும் தாம் அந்த வயோதிகர்களைக் கிராமத்தில் விட்டுவிட்டு வருவதாகவும் கூறிச் சென்றார்.

வயோதிகத் தம்பதிக்கு உதவ ஐசன்ஹோவர் கிரா மத்துக்குப் போகாமல் இருந்திருந்தால் அன்றே அவர் கதை முடிந்திருக்கும்.

**பெண்ணாக மாறினார்**

சென்ற நூற்றாண்டில் ஐரோப்பாவை ஆட்டிப் படைத்த நெப்போலியன் 1814 ஆம் ஆண்டில் நடை பெற்ற போரில் தோல்வியடைந்தான். எதிரிகளிடம் சரணடையாமல் தன் உயிரைப் போக்கிக் கொள்ள விரும்பிய அவன் எப்போதும் தன்னிடம் தயாராக வைத்திருந்த விஷத்தை அருந்தி விட்டான். ஆனால் அவன் உயிர் போகவில்லை.

பல ஆண்டுகளாக குப்பியில் அவன் வைத்துக் கொண்டிருந்த விஷத்தின் வீரியம் குன்றி விட்டதே அதற்குக் காரணம். வாந்தியெடுத்து விஷம் வெளிப் பட்டு விட்டது. அப்போது அவன் இறந்திருந்தால் அந்த ஆண்டு வாடர்லு போர் நடைபெற்றிராது. அதிலும் தோல்வி கண்டு ஹெலினா தீவில் சிறை வைக் கப்பட்டு 1821 இல்தான் இறந்தான். அவன் எப்படி இறந்தான் என்பது குறித்துப் பலவிதமான கருத்துகள் நிலவுகின்றன.

தெற்கு அட்லாண்டிக் கடலில் இருந்த செயின்ட் ஹெலினா என்ற தீவில் தன் கடைசி ஆறு ஆண்டுகளை



நெப்போலியன் கழித்தான். 52 வயதில் இறந்தபோது பெரிதும் நோய்வாய்ப்பட்ட மனிதனாக இருந்தான். எதனால் இறந்தான் என்பது இன்றுவரை மர்மமாகவே உள்ளது. கான்சர் நோயினால் இறந்ததாகச் சிலரும், உறவினரால் விஷமிட்டுக் கொல்லப்பட்டதாகச் சிலரும் கூறுகின்றனர். சிறையிருந்த கட்டடத்தின் சுவர்களில் ஒட்டப்பட்டிருந்த பேப்பர் ஆர்செனிக் விஷம் அடங் கியது; இதன் காற்றுப்பட்டே இறப்பு நேர்ந்தது என் பதும் ஒரு கருத்து.

டாக்டர் கிரின்பிளாட் என்ற அமெரிக்க நிபுணர் 1982இல் வியப்பூட்டும் ஒரு புதிய விவரத்தை வெளி யிட்டார். கடைசிக் காலத்தில் அவர் பெண்ணாக மாறிக் கொண்டிருந்தார் என்பதே அது. உடல் ஹார்மோன் களில் ஏற்படும் கோளாறால் இவ்வாறு நேர்கிறது, நெப் போலியன் இறந்த பிறகு அவரது உடலைப் பரிசோ தித்த டாக்டர் ஒருவர் இவ்வாறு கூறியிருக்கிறார். 'அவரது உடலில் பெண்மை அதிகரித்திருந்தது, மார்ப கங்கள் உருண்டு திரண்டு இருந்தன. சருமம் பெண்க ளுடையதைப் போல் மிருதுவாயிருந்தது. உடலில் ரோமங்களே இல்லை!'

முதல் மனைவி ஜோஸப்பைனிடம் தீராக் காதல் கொண்டிருந்த நெப்போலியன் 1810இல் 2வது மனைவி மேரி லூயிவை மணந்து கொண்டபோது அவளிடம் நெப்போலியனுக்கு ஈடுபாடு இருக்கவில்லை என்பதை யும் டாக்டர் கிரின்பிளாட் சுட்டிக்காட்டி ஆண்மை குறைந்துவிட்டதே இதற்குக் காரணம் என்கிறார்.

**பெயர் மாற்றம்**

உலகப்புகழ் பெற்ற அமெரிக்க எழுத்தாளரான பேர்ள்பக் சீனாவில் பல ஆண்டுகள் வாழ்ந்தவர் சீனாவை நிலைக்களனாகக் கொண்டு அவர் எழுதிய 'குட் எர்த்' என்ற நவீனம் நோபல் பரிசு பெற்றது.

RangaRakes tamilnavarasam.com

பின்னர் அவர் அமெரிக்காவில் வந்து தங்கி அமெரிக்க வாழ்க்கை முறையை அடிப்படையாகக் கொண்ட நாவல் எழுத விரும்பினார். இதற்காக ஜான் செட்ஜெஸ் என்ற புனைபெயரைச் சூட்டிக்கொண்டார். பதிப்பாளர்கள் அவர் வேறு பெயரில் எழுதுவதை விரும்பவில்லை. பேர்ள்பக் என்ற பெயரிலேயே எழுத வேண்டும் என்று வற்புறுத்தினர்.

ஒரு சோதனை முயற்சியாக டவுன்ஸ்மென் என்ற நாவலை எழுதி புதிய புனைபெயரில் வெளியிட்டார். அந்தப் பெயரில் ஒளிந்திருப்பவர் பேர்ள்பக்தான் என்பது யாருக்கும் தெரியாது.

புத்தகம் வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. 'பெயர் தெரியாத ஓர் எழுத்தாளரின் முதல் புத்தகமே மிகச் சிறப்பாக உள்ளது' என்று விமரிசகர்கள் பாராட்டினர். புதிய புத்தகத்தை எழுதியவர் பேர்ள்பக்தான் என்பது சில ஆண்டுகளுக்குப் பிறகே உலகுக்குத் தெரிய வந்தது.

### வெட்டுண்ட காலுக்கு அடக்கம்

மெக்சிகோ நாட்டின் ஜனாதிபதியாக இருந்தவர் அன்டோனியா அன்னா என்பவர். யாருமே செய்திராத படி, அதிசய ஊர்வலம் ஒன்றை இவர் நடத்தினார்.

1838ஆம் ஆண்டில் மெக்சிகோ நாட்டின் படைகளுக்குத் தலைமை தாங்கி, புரட்சியாளர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்றினார். அந்தப் போரில் அவருடைய ஒரு கால் படுகாயமடைந்து முழங்காலுக்குக் கீழே வெட்டும்படி ஆயிற்று. துண்டிக்கப்பட்ட காலை அவர் நான்கு ஆண்டுக்காலம் பாதுகாத்து வைத்திருந்தார்.

1842இல் நாட்டின் சர்வாதிகாரியாகி விட்டார். அவரது ஆதரவாளர்கள் அந்தக் காலை உரிய சடங்குகளுடன் வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக எடுத்துச் சென்று ஆலயத்தில் முறைப்படி அடக்கம் செய்தனர்.



இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இராணுவப்புரட்சி ஏற்பட்டு அவர் வீழ்ச்சியடைந்தார். அப்போது அடக்கம் செய்யப்பட்ட காலை யாரோ தோண்டி எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள்.

### வாயில் புகுந்த குண்டு

ஸ்காட்லாந்தைச் சேர்ந்த கர்னல் ஜேம்ஸ் கார்டினல் என்பவர் 1706ஆம் ஆண்டு நடைபெற்ற போரில் கலந்து கொண்டார், தம் படை வீரர்களுக்கு உரக்கக் கட்டளையிட்டுக் கொண்டு இருந்தபோது எதிரியின் துப்பாக்கிக் குண்டு ஒன்று அவர் வாய்க்குள் புகுந்து கழுத்தின் பின்புறமாக வெளியேறியது. பற்களோ, நாக்கோ சேதமடையவில்லை. இந்தச் சம்பவம் நடந்து 30 ஆண்டு கழித்தே அவர் காலமானார். அதுவரை அந்த ஓட்டை இருந்து வந்தது.

### கனவில் வந்த சாவு

ஜான் டைலர் என்பவர் அமெரிக்க அதிபராக இருந்தவர். அவருடைய மனைவி ஒரு நாள் ஒரு கனவு கண்டார். 'நான் செத்துக் கொண்டிருக்கிறேன் ஜூலியா' என்று அலறியபடி அவளது கணவர் அக்கனவில் ஓடி வந்தார். அப்போது ஜனாதிபதி ஊரில் இல்லை, நூறு மைல்களுக்கப்பாலுள்ள வேறு ஊரில் இருந்தார்.

மனைவி கலவரமடைந்தவளாக விழுந்தடித்துக் கொண்டு அந்த ஊருக்குச் சென்றாள். கணவர் நலமாக இருப்பதைக் கண்டு மன ஆறுதல் அடைந்தாள். கனவில் கண்டது போல் அசம்பாவிதம் நடந்து விடாதற்காக கடவுளுக்கு நன்றி செலுத்தினாள். இருவரும் ஜனாதிபதி மாளிகைக்குத் திரும்பினர்.

ஆனால் மறுநாள் அவள் கனவில் கண்டது நடந்தே விட்டது. 'நான் செத்துக்கொண்டிருக்கிறேன் ஜூலியா'

RangaRakes
tamilnavarasam.com

என்று அலறியபடி ஓடி வந்து அவர் கீழே விழுந்து உயிரை விட்டார்.

**300இல் ஒன்றே முறையானது**

போலந்து நாட்டின் மன்னராக 1697இல் தேர்ந் தெடுக்கப்பட்ட அகஸ்டசுக்குப் பிறந்தது 300 குழந்தை களாம். ஆயினும் அவர் இறந்தபோது அவருடைய வாரிசைத் தேர்ந்தெடுப்பதில் எந்தப் பிரச்னையும் ஏற் படவில்லை. ஏனெனில் 300 பிள்ளைகளில் ஒரே பிள்ளைதான் முறையாகப் பிறந்தது.

**8000 இளவரசர்கள்**

சவூதி அரேபியாவின் மன்னராக 1932இல் பதவி யேற்ற அப்துல் அஜிசுக்கு 79 குழந்தைகள். நாட்டி லுள்ள செல்வாக்கு மிக்க குடும்பங்களைச் சேர்ந்த பெண்களை மணந்து கொண்டு அவர்களுடன் உறவைப் பலப்படுத்திக் கொண்டார். 1953இல் அவர் இறந்தபோது 34 பிள்ளைகள் உயிருடன் இருந்தனர். இப்போது சவூதி அரசு குடும்பத்தில் எண்ணாயிரம் இளவரசர்களும் இளவரசிகளும் உள்ளனர்.

**போகாத உயிர்**

ஆசியா மைனரில் மித்ரிடேடஸ் என்ற ஓர் அரசன் இருந்தான். கொஞ்சங்கொஞ்சமாக விஷத்தை உண்டு அவன் தன் உடல், விஷத்தினால் பாதிக்க முடியாத விதத்தில் செய்து கொண்டிருந்தான், தனக்கு யாராவது விஷம் வைத்துவிடுவார்களோ என்று பயந்துகொண்டு அவன் இவ்வாறு செய்யப் போக, தன் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்த போது அது பாதகமாக அமைந்துவிட்டது.

ரோமானியர் நாட்டின் மீது படையெடுத்து வந்த போது அவர்களிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் தன் உயிரைப் போக்கிக் கொள்ள முயன்றான். அதற்காக இவன் அருந்திய விஷம் உயிரைப் போக்கவில்லை, வேறு வழி தெரியாமல் தன் அடிமை ஒருவனிடம் வாளால் தன்னை வெட்டிக் கொல்லுமாறு பணித்தான். எதிரியிடம் பிடிபடாமல் உயிரைப் போக்கிக் கொண் டான்.



**இப்படியும் நடந்தது**

ஹம்ப்ரி கைநாஸ்டன் என்ற ஆங்கிலேயர் இஸா பெல் என்ற பெண்ணை மணந்து கொண்டு பத்து வருட காலம் அவளுடன் வாழ்ந்த பிறகு விவாகரத்து செய்தார். 15 ஆண்டுகள் தனியாக வாழ்ந்த பிறகு மீண்டும் திருமண ஆசை எழுந்தது. மரியன் என்ற பெண்ணை மணந்து கொண்டு அவளுடன் 13 வருட காலம் வாழ்ந்தார்.

அவருடைய உயிர் பிரியும் தருணத்தில்தான் ஓர் உண்மை தெரிய வந்தது. தாம் மணந்து கொண்டு இல்லறம் நடத்திய இரு பெண்களுமே ஒருவர்தான் என் பதே அந்த அதிசய உண்மையாகும்.

**மன்னர் கொடுமை**

கலேஷியா நாட்டைச் சேர்ந்த டையோபிரசுக்கு ஏழு பிள்ளைகள். அவர்களில் ஒருவனிடம் மட்டுமே அவனுக்கு அலாதி பிரியம். அவனே தனக்குப் பிறகு அரசனாக வரவேண்டுமென்று விரும்பினான். இதற் காக அவன் செய்த கொடுமை என்ன தெரியுமா? மற்ற ஆறு பிள்ளைகளுக்கும் மரண தண்டனை விதித்து விட்டான்.

**கொள்கைக்காக மகன் பலி**

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த விஞ்ஞானி களில் ஒருவர் மாக்ஸ் பிளாங்க். உலகுக்குப் பெரும் சேவை செய்த அவருடைய சொந்த வாழ்க்கை சோக மானது. தமது ஏழு குழந்தைகளையும் ஒருவர் பின் ஒருவராக இழந்தவர். மூத்த மகன் முதல் உலகப் போரில் உயிரிழந்தான்.

RangaRakes

tamilnavarasam.com

கடைசியாக எஞ்சிய ஒரே மகன் எர்வின். ஹிட்லரைக் கொல்ல நடந்த சதியில் பங்கு கொண்டதாக 1944-ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டான். மாக்ஸ் பிளாங்க் நாஜிக் கட்சியை ஆதரிக்க முன் வந்தால் மகனை விடுதலை செய்வதாகக் கூறினார்கள்.

நாஜிகளிடம் வெறுப்புக் கொண்ட மாக்ஸ் பிளாங்க் தமது மகனுடைய உயிர் பணயமாக வைக்கப்பட்ட போதிலும் கூட அந்த நிபந்தனைக்குப் பணிய மறுத்தார். நாஜிகள் எர்வினைச் சுட்டுக் கொன்றனர்.

## புரட்சிக்கு எதிர்ப்பு

பிராணவாயுவைக் கண்டறிந்தவர் பிரிட்டிஷ் விஞ்ஞானி ஜே. பி. பிரிஸ்ட்லி. பிரான்சில் நடைபெற்ற புரட்சியை பிரிட்டிஷ் மக்கள் எதிர்த்தனர். ஆனால் பிரிஸ்ட்லி அதை ஆதரித்தார். எட்மண்ட் பர்க் இதற்காக அவரை காமன்ஸ் சபையில் கடுமையாகத் தாக்கிப் பேசினார்.

பர்மிங்ஹாமிலிருந்த பிரிஸ்ட்லி வீட்டில் மக்கள் கூட்டம் புகுந்து வீட்டைச் சூறையாடியது. அவரது ஆராய்ச்சிக் கூடத்தையும் நூலகத்தையும் நாசப்படுத்தியது. உயிருக்குப் பயந்து பிரிஸ்ட்லி தம் குடும்பத்தாருடன் லண்டனுக்குத் தப்பிச் சென்றார். அங்கும் அவருக்கு எதிர்ப்பு. சக விஞ்ஞானிகள்கூட அவரை ஆதரிக்கவில்லை.

கொண்ட கொள்கைக்காக அவர் தாய்நாட்டை விட்டே வெளியேறும்படி ஆயிற்று. அமெரிக்காவில் தஞ்சமடைந்து அங்கேயே தமது இறுதி நாள்களைக் கழித்தார்.

## விஞ்ஞானியின் தியாகம்

ரேடியத்தைக் கண்டுபிடித்து நோபல் பரிசு பெற்றவர்கள் கியூரி தம்பதி. கணவர் பியரி ஒரு நாள் சாலையைக் கடக்கும்போது குதிரை வண்டியேறிப் பரிதாபமாக உயிரிழந்தார்.



இக் கோரக் காட்சியைக் காண நேர்ந்த மேரிக்கு அந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு வெகு நாள்களாயிற்று. 'பியரி இறந்து விட்டார்' என்று புலம்பிக் கொண்டே பல நாள் அவர் செயலற்றிருந்தார். கதிர் வீச்சுள்ள பொருள்களை ஆராய்ந்து வந்த மேரி நாளடைவில் அதன் பாதிப்பாலேயே காலமானார்.

மேரியின் மகள் ஐரீனும் சிறந்த விஞ்ஞானி. அவரும் நோபல் பரிசு பெற்றவர். ஒருநாள் சோதனைக் கூடத்தில் பணியாற்றிக் கொண்டு இருந்தபோது, கதிரியக்கப் பொருள் இருந்த குப்பி கீழே விழுந்து உடைந்து விட்டது. அங்கிருந்த எல்லாரையும் வெளியே போகச் சொல்லிவிட்டு அப்பொருளை அப்புறப்படுத்துவதில் முனைந்தார்.

பலருடைய உயிரைக் காப்பாற்றிய அவர் அந்த கதிரியக்கத்துக்குப் பலியானார்.

## இரண்டு மணி இடைவெளி

மார்கரட், பிளாரன்ஸ் ஆகிய இருவரும் இரட்டைப் பிறவிகள். இரண்டு மணி நேர இடைவெளியில் பிறந்தவர்கள். 87 வயதில் இறந்த போதும் அதே இரண்டு மணி நேர இடைவெளி இருந்தது. 15 வயதில் இருவரும் ஒரு கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்து 40 வருடம் உழைத்தனர்.

இருவருமே மணம் செய்து கொண்டனர். ஆனால் இருவருக்குமே குழந்தை பிறக்கவில்லை.

## ஒற்றுமை

ஆபிரகாம் லிங்கன் அவருடைய குடும்பத்தில் கொலையுண்ட இரண்டாவது நபர் ஆவார். மற்றொருவர் அவருடைய பாட்டனார். அவருடைய பெயரும் ஆபிரகாம்தான். இருவருக்கும் மேலும் இரு ஒற்றுமை

RangaRakes tamilnavarasam.com

களும் உண்டு. இருவரது மனைவியர் பெயரும் மேரி. இருவருக்குமே தாமஸ் என்ற பெயரில் ஒரு மகன் இருந்தான்.

**என்ன தவறு?**

ஜான் மாக்டொனால்ட், கனடாவின் முதல் பிரதமராக இருந்தவர். அங்கிருந்த பிரிட்டிஷ் காலனிகளை ஒன்றுபடுத்தி ஒரே நாடாகச் செய்ததில் இவருடைய பங்கு குறிப்பிடத்தக்கது.

ரயில் பாதை அமைப்பதற்கு காண்ட்ராக்ட் வழங்கியதில் பெரும் தொகையை லஞ்சமாகப் பெற்றதாக அவர் மீது பெருங் கண்டனம் எழுந்தது. 'பணம் வாங்கி வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுப்பதற்கு அதைப் பயன்படுத்தினேன். அதில் என்ன தவறு?' என்று தைரியமாகக் கேட்டார். இவ்வாறு வெளிப்படையாகப் பேசியதற்கான விலையையும் அவர் கொடுக்க வேண்டியிருந்தது. அந்த வருடம் நடந்த தேர்தலில் மக்கள் அவரைத் தோற்கடித்தனர்.

**300 வருடத் தீர்ப்பு**

சூரியன்தான் பூமியைச் சுற்றுகிறது என்று கிறிஸ்தவ மதவாதிகள் நம்பினார்கள். அது தவறு. பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது என்று கோபர்னிகஸ் கூறியதை ஆதரித்ததற்காக கலீலியோவுக்கு தெய்வ நிந்தனை செய்ததாகக் குற்றம் சாட்டி மத கோர்ட் தண்டனை விதித்தது. அவ்வாறு கூறியது தவறு என்று ஒப்புக்கொள்ளுமாறு கட்டாயப்படுத்தியதுடன் அவரை வீட்டுச் சிறையிலும் வைத்தனர். தம் வாழ்நாளின் கடைசி ஏழு ஆண்டுகளை அவர் தனிமையில் கழித்தார். கண் பார்வையும் போய்விட்டது. 1642இல் அவர் இறந்தபோது முறைப்படி அவரை அடக்கம் செய்வதற்கும் மத குருமார்கள் தடைவிதித்தனர்.



கலீலியோ கூறிய உண்மை மறுக்க முடியாத விதத்தில் விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்டவுடன் மதவாதிகள் தாங்கள் வழங்கிய தீர்ப்பைத் திருத்த வேண்டியதாயிற்று. அவர் இறந்து 300 ஆண்டுகளுக்குப் பிறகு மதவாதிகள் கோர்ட் கலீலிலேயோவின் வழக்கைத் திரும்ப விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அவர் குற்றவாளி அல்லரென்று தீர்ப்பளித்தது.

**புனிதமான காதல்**

புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞரான ராபர்ட் ப்ரௌனிங் தாம் பார்த்தேயிராத பாரெட் என்ற பெண்ணுக்கு 'உன் புத்தகங்களையும் உன்னையும் நான் பெரிதும் நேசிக்கிறேன்' என்று கடிதம் எழுதினார், பாரெட்டும் ஓர் எழுத்தாளர்தான். குதிரைச் சவாரி செய்தபோது கீழே விழுந்து முதுகெலும்பில் அடிபட்டு அதிகமாக நடமாட முடியாத நிலையில் வீட்டிலேயே அடைந்து கிடந்தவர். அவளுடைய தந்தை ஒரு விசித்திரமான நபர். தம் பிள்ளைகள், பெண்கள் யாருமே திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று கட்டாயப்படுத்தி வைத்திருந்தார்.

ராபர்ட் கடிதம் எழுதியபோது அவருடைய வயது 34. பாரெட்டின் வயது 40. கடிதங்கள் தொடர்ந்தன. காணாமலே இருவரிடையே காதல் வளர்ந்தது. ஒரு நாள் அவளைச் சந்தித்தபோது அவளுடைய அழகு அவரைப் பெரிதும் கவர்ந்தது. உடல் ஊனத்தை அவர் பொருட்படுத்தவேயில்லை. ரகசியமாக சர்ச்சுக்குச் சென்று தங்கள் திருமணத்தை முடித்துக் கொண்டனர். ஒரு வாரத்துக்குப் பிறகு யாரும் அறியாமல் இத்தாலி சென்று விட்டனர்.

பதினைந்து வருடகாலம் இருவரும் இன்பமாக வாழ்ந்தனர். அவள் உடலும் நன்கு தேறியது. இங்கி

RangaRakes

tamilnavarasam.com

லாந்துக்குத் திரும்பவேயில்லை. 11 வயதான மகனையும் அன்புக் கணவரையும் பிரிந்து 1861இல் பாரெட் காலமானார். ராபர்ட் ப்ரௌனிங்கின கவிதைகளை வளப்படுத்தியதில் பாரெட்டுக்குப் பெரும்பங்குண்டு.

**தாஜ்மகால் தப்பியது**

வில்லியம் பெண்டிங் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது தாஜ்மகாலை இடித்து அதிலுள்ள அற்புதமான சலவைக்கற்களை இங்கிலாந்துக்கு அனுப்பி வைக்கத் திட்டமிட்டிருந்தார். ஷாஜஹான் அரண்மனையில் இருந்த குளியல் தொட்டியிலிருந்த சலவைக்கற்களைப் பெயர்த்து ஏலம்விட்டார். நல்லவேளையாக தாஜ்மகால் தப்பியது. இந்த உண்மையை ஏஷியாடிக் சொஸைட்டி கூட்டத்தில் 1900ஆம் ஆண்டு தெரிவித்தவர் லார்டு கர்ஸான்.

**காப்பி பிரியர்**

உடலில் ரத்தம் சுற்றிவரும் விதத்தைக் கண்டறிந்து கூறியவர் வில்லியம் ஹார்வி, காப்பி என்றால் அவருக்கு உயிர். இதை அவர் தமது உயிலில் வெளிப்படுத்தியிருந்தார். 'லண்டன் மருத்துவச் கல்லூரி நண்பர்களுக்காக என்னிடமுள்ள 56 பவுண்டு காப்பிக்கொட்டையை விட்டுச் செல்கிறேன். என் நினைவாக நண்பர்கள் இது தீரும்வரை காப்பி குடித்து மகிழவேண்டும்' என்று உயிலில் கூறப்பட்டிருந்தது.

**வாழ்க்கையை மாற்றிய முடிவு**

இளம் வயதில் ஐசன்ஹோவர் விளையாட்டுகளில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். கால் பந்தாட்டத்தில் கால் முறிவு ஏற்பட்டதால் பேஸ் பால் ஆடத் தொடங்கினார். நன்றாக குத்துச் சண்டையும் போடுவார்.

கல்லூரிக்குப் படிக்கச் சென்றிருந்த அவர் விடுமுறையில் சொந்த ஊருக்கு வந்திருந்தார். அப்போது



ஒரு குத்துச் சண்டை வீரர் தன்னை யாராலும் வெல்ல முடியாது என்று சவால் விட்டுக் கொண்டு இருந்தார்.

நண்பர்கள் பலரும் ஐசன்ஹோவரிடம் அவர் இந்தச் சவாலை ஏற்கவேண்டும் என்று வற்புறுத்தினர். மறுக்க முடியாமல் அவரும் ஒப்புக் கொண்டார்.

நாள் குறிப்பிடப்பட்டு போட்டி தொடங்கியது, அதைக் காண ஊரே திரண்டிருந்தது. இரண்டே ரவுண்டுகளில சவால் விட்டவனை மண்கவ்வச் செய்தார் ஐசன்ஹோவர்.

குத்துச் சண்டையையே தொழிலாக மேற்கொள்ளுமாறு நண்பர்கள் அவருக்கு ஆசை காட்டினர். நல்ல வேளை! அந்த ஆசைக்கு அவர் பலியாகவில்லை. அந்த ஒரு கணநேர முடிவே அவரது வாழ்க்கைப் பாதையை மாற்றக் காரணமாக இருந்தது. அமெரிக்க இராணுவத் தளபதியாகவும் பின்னர் ஜனாதிபதியாகவும் வர முடிந்தது.

**தந்தையின் கொடுமை**

பிரஷ்யாவை 46 வருட காலம் ஆண்ட பிரடரிக், மாமன்னன் என்ற பெயர் பெற்றவன். இவன் பெற்றோரால் மிகக் கொடுமையாக நடத்தப்பட்டான். 18 வயதிலேயே பிரான்சுக்கு ஓடிவிட முயன்றான். தந்தை அவனைப் பிடித்துச் சிறையில் அடைத்தார். சிறையிலிருந்து அவன் தப்புவதற்கு உதவி செய்ய முன்வந்த லெப்டினன்ட் காட்டே என்பவன் அகப்பட்டுக் கொண்டான். பிரடரிக்கின் கண் முன்னாலே அவன் தூக்கிலிடப்பட்டான். 15 மாத சிறைவாசத்துக்குப் பிறகு வேண்டா வெறுப்பாக விடுவிக்கப் பட்டான். தந்தைக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவன் சிறப்பான ஆட்சி நடத்தியதுடன் தன் நாட்டின் பரப்பையும் இருமடங்காகச் செய்தான்.

RangaRakes
tamilnavarasam.com

## வறுமையில் பிறந்த தத்துவம்

பணத்தின் ஆதிக்கம் சமுதாயத்தை எப்படி பாதிக்கிறது என்பது குறித்து வேறெவரையும்விட அதிகமாகச் சிந்தித்த கார்ல் மார்க்ஸ் வாழ்க்கையை ஓட்டுவதற்கே போதிய பணம்இல்லாமல் கஷ்டப்பட்டவர். ஐரோப்பாவிலிருந்து நாடு கடத்தப்பட்டு லண்டனை அடைந்தவர் அங்கு தங்கியிருந்த அறைக்கு வாடகை கொடுக்க முடியாததால் குடும்பத்தோடு வெளியேற்றப்பட்டார். அப்போது அவரது உடைமைகள் பலவற்றை இழந்தார்.

1851 முதல் 1856வரை வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவித்தார். அப்போது அவருடைய இரு குழந்தைகள் இறந்தனர். நியூயார்க் டெய்லி ட்ரிப்யூன் பத்திரிகை கட்டுரையாளராக அவர் பணியாற்றிய போதிலும் வருமானம் வாழ்க்கை நடத்தப் போதுமானதாக இல்லை. அவருடைய நண்பர் ஏங்கெல்ஸ் தமது வருமானத்தில் ஒரு பகுதியைக் கொடுத்து உதவியதால்தான் பட்டினி கிடக்காமல் இருக்க முடிந்தது.

1865இல் மனைவியுடைய தாயார் சொத்திலிருந்து 120 பவுன் கிடைத்தது. அதற்குப் பிறகுதான் மூலதனம் என்ற ஆராய்ச்சி நூலை எழுதத் தொடங்கினார். அதன் முதல் பகுதி 1867இல் வெளியானது.

## சவ அடக்கப் புதுமை

பச்சை மணிக்கல் மிகவும் உறுதியானது. இறந்தவர் உடலைப் பாதுகாக்க அது உதவும் என்று பண்டைக் கால சீனர்கள் நம்பினர். கி.மு. 125இல் டௌவான் என்ற அரசி இறந்தாள். அவளுடைய உடலைப் பாதுகாக்க அரசர் 2160 மணிக்கற்களைத் தங்கக் கம்பியில் கோத்து கவசம் போல உடை தயாரித்து அரசிக்கு அணிவித்து அடக்கம் செய்தார். கி.மு. 113இல் இறந்த அரசருக்குச் செய்யப்பட்ட மணிக்கல் கவசம் 2690 கற்களைக் கொண்டது. மேலும் பல விலையுயர்ந்த கற்களும் அதில் பதிக்கப்பட்டிருந்தன. 1968ஆம் ஆண்டில் மாஞ்செங் என்ற இடத்தில் இவை தோண்டியெடுக்கப்பட்டன.



## சூரியனுக்குப் பலி

மத்திய அமெரிக்காவில் வாழ்ந்த அஸ்டெக்குகள் சூரியன் ஒவ்வோர் இரவில் இறந்து விடுவதாகவும் மறுநாள் உயிர்த்தெழுவதற்கு அதற்கு மனித ரத்தம் தேவைப்படுகிறது என்றும் நம்பினார்கள். இதற்காக அவர்கள் ஆண்டுதோறும் 15 ஆயிரம் பேரைப் பலி கொடுத்தனர். இவர்களில் பெரும்பாலோர் போர்களில் கைதிகளாகப் பிடிபட்டவர்கள். இந்தக் கைதிகளில் அழகாக உள்ள ஒருவனை ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்து தங்கள் பிரதான கடவுளுக்குப் பலியிடுவார்கள். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவனை ஒரு வருட காலம் பிரமாதமாக உபசரிப்பார்கள். அரசனைப்போல நடத்தி எல்லா வசதிகளையும் அனுபவிக்க அளிப்பார்கள். கடைசி மாதத்தை நான்கு இளம்பெண்களுடன் இன்பமாகக் கழிப்பான். பலியிடப் போகும் நாளன்று அவனை ஊர்வலமாக அழைத்துச் செல்வார்கள். பலீபீடத்தில் ஐந்து பேர் அவனைப் பிடித்துக் கொள்ள, மதகுரு அவன் மார்பைப் பிளந்து இருதயத்தை வெளியே எடுத்து தெய்வத்துக்குப் படைப்பார்.

தாடியுடன் கூடிய அழகான காற்றுக் கடவுள் வரப் போகிறார் என்று அஸ்டெக் மக்கள் நம்பிக் கொண்டிருந்தனர். ஸ்பெயினிலிருந்து ஹெர்னன்கார்டஸ் படையுடன் வந்தபோது அவன்தான் அந்தக் கடவுள் என்று பணிந்தனர். கொள்ளையடிக்க வந்த கார்டஸின் பணி சுலபமாகப் போய் விட்டது.

RangaRakes
tamilnavarasam.com

**விபத்தின் விளைவு**

எதிர்பாராமல் நடக்கும் சில நிகழ்ச்சிகள் சிலரை திடீரென்று புகழ் பெற்றவர்களாக்கி இருக்கின்றன. கேம்பிரிட்ஜில் படித்துக் கொண்டிருந்தார் நியூட்டன். அப்போது கொடிய பிளேக் நோய் நாட்டைத் தாக்கியது. மூன்றே மாதங்களில் லண்டன் மக்களில் பத்தில் ஏழு பங்குப் பேர் அதற்குப் பலியாகிவிட்டார்கள். கேம்பிரிட்ஜ் கல்லூரி மூடப்பட்டது. நியூட்டன் தமது தாயாரது பண்ணைக்கு வந்து தங்கியிருந்தார். தோட்டத்தில் அவர் அமர்ந்திருந்தபோது ஓர் ஆப்பிள் அவர் தலையில் விழ அது புவியீர்ப்பு சக்தியைக் கண்டறிய வழி செய்தது. நியூட்டன் உலகப் புகழ் எய்திவிட்டார்.

ஓ ஹென்றி ஒரு வங்கியில் காஷியராக வேலை பார்த்து வந்தார். அப்போது ஆயிரம் டாலர் திருட்டுப் போய்விட்டது. அவர்மீது குற்றம் சாட்டி ஐந்துஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தார்கள். தன் வாழ்நாளில் எழுத்தாளராவது பற்றி நினைத்தும் பார்த்திராத அவர் சிறையில் சிறு கதைகள் எழுதத் தொடங்கினார். சிறையிலிருந்து வெளிவந்ததும் உலகப் புகழ் பெற்ற எழுத்தாளராகி விட்டார்.

ஷேக்ஸ்பியர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். கிராமத்தில் முரட்டுத்தனமாக நடந்துகொண்டதால் பலருடைய வெறுப்புக்காளாகி லண்டனுக்கு ஓடும்படி ஆயிற்று. ஒரு நாடகக் கொட்டகையில், நாடகம் பார்க்க வருபவர்களின் குதிரைகளைப் பார்த்துக் கொள்ளும் வேலை கிடைத்தது. தினசரி பல நாடகங்களைக் காண நேர்ந்ததன் விளைவாக அவரே பிரபல நாடக ஆசிரியரானார்.

இளம் வயதில் எச். ஜி. வெல்ஸ் கால் எலும்பு முறிந்து ஒரு வருடம் படுத்த படுக்கையாகி விட்டார். அப்போது பல புத்தகங்களைப் படிக்க நேர்ந்ததால் அவருக்கும் இலக்கிய தாகம் உண்டாயிற்று.



பிரபல விஞ்ஞானியான ராபர்ட் பாயில் ஒரு முறை உடல் நலமின்றி இருந்தபோது தவறுதலாக விஷத் தன்மையுள்ள மருந்தை அவருக்குக் கொடுத்து விட்டனர். எப்படியோ உயிர் பிழைத்த அவருக்கு அதன் பிறகுதான் ரசாயனத்தைப் படிக்கும் ஆர்வம் ஏற்பட்டது. தமது கண்டுபிடிப்புகளால் நிலைத்த புகழ் பெற்றார்.

**ஈக்கு சவ ஊர்வலம்**

ரோமானியக் கவிஞரான வர்ஜில் ஒரு ஈக்கு மாபெரும் சவ ஊர்வலத்தை நடத்தினார். இதற்கு செலவான தொகை இருபதாயிரம் பவுன். தங்கப்பெட்டியில் அது எடுத்துச் செல்லப்பட்டது. அகஸ்டஸ் என்ற பெயரில் பின்னர் சக்கரவர்த்தியான ஆக்டேவியஸ் சவ ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களில் முக்கியமானவன். அடக்கம் செய்வதற்கு முன் பலரும் சொற்பொழிவாற்றினார்கள்.

**நாய்ச் சிலை**

ஜப்பானைச் சேர்ந்த டாக்டர் வினோ என்பவரின் நாய்க்கு ஷிபூகா ரயில் நிலையத்துக்கு முன்னால் ஒரு சிலை எழுப்பியிருக்கிறார்கள். ஹோஷிகோ என்ற அந்த நாய் ஒவ்வொரு நாள் காலையிலும் தன் எஜமானருடன் ரயில் நிலையத்துக்கு வந்து அவரை வழியனுப்பி வைக்கும். மாலையில் அவர் திரும்பி வரும்போது வரவேற்க வரும்.

ஒரு நாள் டாக்டர் திரும்பி வரவில்லை. போன இடத்தில் அவர் இறந்து விட்டார். ஆயினும் அவருடைய நாய் காலையிலும் மாலையிலும் 11 வருடங்கள் வந்து போய்க் கொண்டிருந்தது. பின்னர் அது இறந்து விட்டது. அதை எஜமானரின் கல்லறை அருகிலேயே

RangaRakes

tamilnavarasam.com

புதைத்ததுடன் மக்கள் அதற்கு சிலையும் அமைத்தார்கள்.

**கல்லறைக் கவிதை**

தாந்தே கேப்ரியல் ரோஸட் சிறந்த ஓவியர் மட்டுமல்லர் கவிஞரும் ஆவார். இன்றும் அவரது அற்புதக் கவிதைகள் அறிஞர்களால் போற்றப்படுகின்றன. 1860 ஆம் ஆண்டில் எலிசபெத் சிடல் என்ற அழகான மங்கையை அவர் மணந்து கொண்டார். அவளிடம் ஆழ்ந்த காதல் கொண்டிருந்தார். மணமான இரண்டாண்டுகளில் அவள் இறந்து விட்டாள். அந்தத் துயரத்தைத் தாங்க முடியாத ரோஸட்டி தாம் எழுதியிருந்த கவிதைகளை எல்லாம் அவளை அடக்கம் செய்த கல்லறையில் வைத்து விட்டார்.

அவற்றை எடுத்துப் பிரசுரிக்க வேண்டும் என்று நண்பர்கள் வற்புறுத்தியதின் பேரில் ஏழு வருடங்களுக்குப் பின் கல்லறை திறக்கப்பட்டு கவிதைகளின் கையெழுத்துப் பிரதிகள் எடுத்துப் பிரசுரிக்கப்பட்டன. அறிஞர்கள் இவற்றைப் பெரிதும் ரசித்துப் பாராட்டினர். ஆனால் ராபர்ட் புசானன் என்பவர் அதைக் குறை கூறி எழுதினார். இதனால் மனமுடைந்த ரோஸட்டி அதன் பிறகு எழுதுவதையே நிறுத்தி விட்டார். இவருடைய சகோதரர் கிறிஸ்டினா ரோஸட்டியும் சிறந்த கவிஞர் ஆவார்.

**ராணியைக் காத்த வண்டு**

விக்டோரியா மகாராணி பயணம் செய்த ரயில் லண்டனை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. வெளியே மழை. எங்கும் பனி விழுந்து படர்ந்திருந்தது. ஒரு கருத்த உருவம் எதிரே பயங்கரமாக கைகளை அசைப்பதை ரயில் டிரைவர் பார்த்தார். என்னவென்று புரியாமல் பிரேக் போட்டு ரயிலை நிறுத்தினார்.



சிப்பந்திகள் கீழே இறங்கி ரயில் பாதையை சோதித்தனர். 200 மீட்டருக்கு அப்பால் பெருமழையில் ஒரு பாலம் இடிந்து கிடந்தது. எச்சரிக்கை செய்த கரிய உருவம் காணப்படவில்லை. டிரைவர் எதேச்சையாக என்ஜின் விளக்கைப் பார்த்தார். ஒரு பெரிய வண்டு அதில் ஒட்டிக்கொண்டு இறந்து கிடந்தது. உயிரோடிருந்த போது அதன் கால்கள் அசைந்ததுதான் கரிய உருவமாக நிழலில் தெரிந்திருக்கிறது. இராணியின் உயிரைக் காத்த அந்த வண்டு பாடம் செய்யப்பட்டு பிரிட்டிஷ் மியூசியத்தில் இன்றும் உள்ளது.

**புரியாத புதிர்**

டிரினிடாடில் நிலக்கீல் உற்பத்தியாகும் ஏரி ஒன்று உள்ளது. 1595-இல் சர் வால்டர் ராலே இதைக் கண்டுபிடித்தார். ஏரி 114 ஏக்கரில் பரந்திருக்கிறது. மையப் பகுதியில் 285 அடி ஆழம் உள்ளது. இங்கிருந்து பல நாடுகளுக்கும் தார் எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. இதுவரை 60 லட்சம் டன்களுக்கும் மேல் எடுத்தும் ஏரி வற்றவேயில்லை. இது எப்படி ஏற்பட்டது என்பது விஞ்ஞானிகளுக்கு இன்றும் விளங்காத புதிராகவே இருக்கிறது.

**வாசக எதிர்ப்பு**

ஷெர்லக் ஹோம்ஸ் என்ற துப்பறியும் கதாபாத்திரத்தைப் படைத்து இறவாப் புகழ் பெற்றவர் ஆர்தர் கானன்டாயில். ஒரு நாவலில் ஷெர்லக் ஹோம்ஸ் மலையுச்சியிலிருந்து விழுந்து உயிரிழந்து விடுவதாகக் கதையை முடித்திருந்தார்.

இதனால் மக்களிடையே பெரும் புரட்சி வெடித்தது. தெருவெல்லாம் ஆர்ப்பாட்டங்கள். ஷெர்லக் ஹோம்ஸ் உயிரை மீட்க வேண்டும் என்று உரத்த கோரிக்கை. பார்லிமெண்டிலும் இதுபற்றி விவாதம்

RangaRakes

tamilnavarasam.com

நடந்து பிரிட்டிஷ் அரசு அவரைப் பிழைத்தெழச் செய்யும்படி ஆசிரியரைக் கேட்டுக் கொண்டது.

வேறு வழியின்றி ஆசிரியர் இறந்துவிட்ட தன் கதாபாத்திரத்துக்கு உயிர் கொடுத்தார். அவர் வாழ்ந்ததாக ஆசிரியர் வர்ணித்திருந்த வீட்டை நகரசபை ஒரு நினைவுக்கூடமாக மாற்றியுள்ளது.

**தாடி வளர்த்தது ஏன்?**

அமெரிக்காவில் அடிமை வியாபாரத்தை ஒழிந்த ஆபிரகாம் லிங்கனைப் பற்றி எண்ணும்போது தாடியுடன் கூடிய அவர் முகமே கண்முன் நிற்கும். அவரது முகத்தையும் தாடியையும் பிரித்துப் பார்ப்பது கடினம்.

ஆனால் லிங்கன் எப்போதுமே தாடி வைத்துக் கொண்டிருந்தவர் அல்லர். நான்கு ஆண்டு காலமே அவர் தாடி வளர்த்தார். அதற்குக் காரணமாக இருந்தது 11 வயதான ஓர் இளம்பெண்.

வெஸ்ட்ஃபீல்டைச் சேர்ந்த கிரேஸ் பெடல் என்ற அச்சிறுமி ஒரு நாள் லிங்கனின் போட்டோ ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவரது முகம் மெலிந்தும் கன்னங்களில் குழி விழுந்தும் இருக்கும், விளக்கின் நிழல் போட்டோவில் பட்டபோது அது மேலும் அழகாக இருப்பது போல சிறுமிக்குத் தோன்றியது.

லிங்கன் தாடி வளர்த்தால் எல்லாப் பெண்களும் அவரை விரும்புவார்கள். அவரை ஆதரித்து வோட் போடுவார்கள் என்று சிறுமி நினைத்தாள். அப்போது தேர்தல் சமயம்.

சிறுமி லிங்கனுக்கு ஒரு கடிதம் எழுதினாள். 'தாடி வளர்த்தால் உங்கள் முகம் அழகாக இருக்கும் எல்லாப் பெண்களும் உங்களுக்கு வோட் போடுவதுடன் தங்கள் கணவன்மாரையும் வலியுறுத்திப் போட வைப்பார்கள். நீங்கள் ஜனாதிபதியாகி விடலாம்' என்று எழுதினாள்.



கடிதத்தைப் படித்த லிங்கன் அச்சிறுமிக்கு உடனே பதில் எழுதினார். "இதுவரை நான் மீசையோ, தாடியோ வைத்துக் கொண்டதில்லை. இப்போது திடீரென்று வளர்த்தால் மக்கள் கேலி செய்யமாட்டார்களா?" என்று கடிதத்தில் கேட்டிருந்தார் அவர். 'உன்னுடைய நலனில் மிகவும் அக்கறையுள்ளவன்' என்று குறிப்பிட்டிருந்த பெண்ணுக்கு கடிதம் சென்றது.

லிங்கன் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றார். அவர் சென்ற விசேஷ ரயில் வெஸ்ட் ஃபீல்ட் அருகேயுள்ள ஒரு ஸ்டேஷனில் நின்றது. ஏராளமான பேர் அவரை வாழ்த்தக் கூடி இருந்தனர். அக்கூட்டத்தில் சிறுமி கிரேசும் இருந்தாள்.

"எனக்கும் பிரியமான ஒரு சிறுமி இந்த ஊரில் இருக்கிறாள். அவளை நான் பார்த்துப் பேச விரும்புகிறேன். அவளுடைய பெயர் 'கிரேஸ் பெடல்" என்றார் லிங்கன்.

கூட்டத்தில் பரபரப்பு. சிரமப்பட்டு சிறுமியைத் தேடிக் கண்டுபிடித்து அவளை அவர் முன்கொண்டு வந்து நிறுத்தினர். அவளை அன்புடன் தூக்கி முத்தமிட்டார். சிறுமி அவர் முகத்தைப் பார்த்தாள். தாடி இருந்தது.

"உனக்காகத்தான் வளர்த்தேன்" என்றார். அவள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மீண்டும் நாம் சந்திப்போம் என்று கூறி லிங்கன் விடை பெற்றுச் சென்றார்.

இச்சம்பவம் குறித்து லிங்கன் தம் நண்பர்களிடமெல்லாம் கூறி, "சில சமயங்களில் மிக அற்பமான விஷயங்கள்கூட நமது வாழ்க்கைப் போக்கையே மாற்றி விடும்" என்றார்.

லிங்கன் வாழ்ந்த இல்லம் இன்றும் அன்றிலிருந்தது போலவே பேணிக் காக்கப்பட்டு வருகிறது. அவ்

RangaRakes

tamilnavarasam.com

வீட்டின் சுவரை அந்த 11 வயது சிறுமியின் கடிதம் அலங்கரித்துக் கொண்டிருக்கிறது.

**மேதையின் வாழ்வு**

மேனாட்டு இசை மேதைகளில் மிகவும் புகழ்பெற்ற பித்தோவன், 11 வயதுக்குள்ளேயே பல இசைக்கருவி களையும் வாசிப்பதில் தேர்ச்சி பெற்றுவிட்டார். 13 வயதில் தமது முதல் இசையை அமைத்து வெளியிட்டார். வாலிபப் பருவத்தில் கேட்கும் ஆற்றலை இழந்து விட்டதால் அவரது சுபாவமே அடியோடு மாறிவிட்டது. தன் அறைக்குள் யாரும் வருவதையோ தமது பொருள்களைத் தொடுவதையோ அவர் விரும்புவதில்லை. பல நாள் உணவு கொள்ளவும் மறந்துவிடுவார். தம்மிடம் பணமேயில்லையைன்று இறுதிவரை பஞ்சப்பாட்டு பாடி வந்தார். ஆனால் அவர் இறந்த போது கணிசமான தொகை அவர் பெட்டியில் இருந்தது.

அணிந்த உடையை மாற்றவே அவருக்குப் பிடிக்காது. கிழிந்து அழுக்கடைந்த உடைகளையே அணிந்திருப்பார். நண்பர்கள் அவர் கந்தல் உடைகளை அவர் அறியாமல் அகற்றிவிட்டு புதிய உடைகளை வைப்பார்கள். பெருங்கோபக்காரர். அப்போது கண்மண் தெரியாமல் நடந்து கொள்வார். எல்லாரும் தம்மை ஏமாற்றுவதாகக் குறைக் கூறிக்கொண்டேயிருப்பார். பெரிய இடத்துப் பெண்கள் பலருடன் நட்பு இருந்தபோதிலும் யாரையும் மணந்து கொள்ளவே இல்லை.

ஹாப்ஸ்பர்க் அரசி தம்மை மறுநாள் வந்து பார்க்குமாறு சொல்லியனுப்பினார். அன்று முழுவதும் தமக்கு வேலை இருப்பதாகவும் முடிந்தால் அடுத்த நாள் வருவதாகவும் துணிவுடன் பதில் கூறியவர். அவரது அசிரத்தையும் மருத்துவர்களின் அறியாமையும், அவருடைய முடிவை மோசமாக்கிவிட்டது. ஒரே மாதத்தில் 75 புட்டி





மருந்துகளை உட்கொண்டார். 55 வயதிலேயே ஆயுள் முடிந்தது.

**178 பேரைப் பெற்றவன்**

பண்டைய எகிப்தியப் பாரோக்களில் சாதனை புரிந்ததிலும் தன்னைப் பற்றிப் பறைசாற்றிக்கொண்டதிலும் இரண்டாவது ரமேசசுக்கு இணையாக யாருமே இல்லை. பத்து வயதிலேயே படைத்தலைவராக இருந்தவர். தமது அந்தப்புரத்தில் ஏராளமான பெண்களை வைத்திருந்தார். கி.மு. 1213ஆம் ஆண்டு 90 வயதில் இறந்தபோது 111 பிள்ளைகளும் 67 பெண்களும் இருந்தனர். அபு சிம்பல் ஆலயத்தைக் கட்டியவர் இவரே. ஹிட்டைட்டுகளை வெற்றி கொண்டதைக் குறிக்கும் கம்பத்தில் 'முடிதாங்கிய மன்னர்க்கெல்லாம் தலைவர், உலகைத் தம் காலடியில் அடக்கியவர்' என்றெல்லாம் குறிப்பிடப்பட்டு உள்ளது.

**பலதுறை வித்தகர்**

தபால் சேவையை லாபகரமாக நடத்த முடியும் என்று செய்து காட்டியவர் யார்? பத்திரிகையின் முதன் முதலில் கார்ட்டூன்களை வெளியிட்டவர் யார்? மின்னல் ஒரு வகை மின்சாரமே என்று கண்டறிந்து கூறியவர் யார்? சர்க்குலேட்டிங் லைப்ரரியை முதலில் தொடங்கியவர் யார்? அமெரிக்காவில் பஞ்சாங்கத்தை வெளியிட்டுப் பிரபலப்படுத்தியவர் யார்?

இத்தனை கேள்விகளுக்கும் பதில் பெஞ்சமின் பிராங்லின் என்பதாகும். இரண்டு ஆண்டுகளே பள்ளியில் படித்தவர். தாமாகவே புத்தகங்களைப் படித்து தமது பலதுறை அறிவைப் பெருக்கிக் கொண்டவர். அவர் எழுதிய சுயசரிதை அமெரிக்க இலக்கியத்தில் சிறந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. அமெரிக்காவின் விடுதலைப் பிரகடனத்தை உருவாக்கியதில் இவருக்கும் பங்கு உண்டு. எத்தனையோ விஷயங்களைக் கண்டு

பிடித்த அவர் எதற்குமே உரிமையைப் பதிவு செய்து கொள்ளவில்லை.

**சொர்க்கம் தந்தவர்**

அதிகமாகப் படித்தே தமது பார்வை இழந்தவர் கவிஞர் மில்டன். அரசாங்க ஆதரவையும், மனைவியையும் இழந்தபோதிலும், நம்பிக்கையை இழக்காமல் இழந்த சொர்க்கம், மீண்ட சொர்க்கம்போன்ற இறவாத இலக்கியங்களைப் படைத்தார். பார்வையிழந்த அவர் சொல்லிக் கொண்டு வர, அவரது பெண்கள் எழுதி வந்தார்கள். அவர்களும்கூட தந்தையின் மேதைமையை உணர்ந்து விருப்புடன் இப்பணியைச் செய்யவில்லை. வேண்டா வெறுப்பாகத்தான் செய்தனர்.

**கிடைக்காத இராணி பதவி**

பிரிட்டனின் நான்காம் ஜார்ஜ் மன்னர் 1795இல் கரோலினை மணந்து கொண்டபோது அவருக்கு ஏற்கெனவே வேறொரு திருமணம் முடிந்து இருந்தது. பத்து ஆண்டுகளுக்குமுன்பே மரியா என்ற கத்தோலிக்க விதவையைக் காதலித்து ரகசியமாக மணந்து கொண்டிருந்தார். கத்தோலிக்க மத விதிகளின்படி அத்திருமணம் செல்லுபடியாகக் கூடியதுதான். ஆனால் ஆங்கில சட்டப்படி பிரிட்டிஷ் அரசுரிமைக்கு வரக்கூடியவர்கள் கத்தோலிக்கர்களை மணந்துகொள்ள முடியாது.

ஒரு பெண் குழந்தை பிறந்ததும் ஜார்ஜ் கரோலினிடமிருந்து பிரிந்து மரியாவுடன் வாழத் தொடங்கினார். கரோலின் இத்தாலி சென்று இன்னொருவருடன் வாழ்ந்து கொண்டிருந்தாள். தந்தை இறந்து ஜார்ஜ் மன்னரானபோது இங்கிலாந்து திரும்பி வந்த அவள் ராணி பதவிக்கு உரிமை கோரினாள். ஆனால் முடிசூட்டும் விழாவில் கலந்து கொள்ளக்கூடாது என்று அவள் தடுக்கப்பட்டாள். இதனால் மனமுடைந்த அவள் ஒரு மாதத்தில் உயிர் துறந்தாள்.



**இரு வேறு நீதி**

ஆப்ரிக்காவில் பல இடங்களைக் கண்டுபிடித்த சாமுவேல் பேக்கர் அங்கே தமது, மனைவியையும் விலை கொடுத்து வாங்கிக்கொண்டார், துருக்கியரிடம் அடிமைப்பட்டிருந்த ஹங்கேரியப் பெண் அவள். அடிமைகளை ஏலம் விட்டபோது, பேக்கர் அவளை விலை கொடுத்து வாங்கினார், இருவரும் ஆப்ரிக்காவில் ஆறு வருடங்கள் சேர்ந்து வாழ்ந்த பிறகு இங்கிலாந்து திரும்பி மணந்து கொண்டனர்.

விக்டோரியா ராணி பேக்குக்கு நைட் பட்டம் அளித்து கௌரவித்தார். ஆனால் மணந்துகொள்ளாமல் ஆறு ஆண்டுகள் இல்லறம் நடத்தினாள் என்பதற்காக அவர் மனைவியைப் பார்க்கவும் மறுத்து விட்டார்.

**தகுதிக்கு அளவுகோல்**

ஸ்காட்லாந்தைச் சேர்ந்த டேவிட் ஹ்யூம் இன்று ஒரு சிறந்த சிந்தனாவாதியாக மதிக்கப்படுகிறார். கல்லூரியில் தத்துவப் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தபோது இவருக்கு அதற்கு வேண்டிய கல்வித் தகுதி இல்லையென்று கூறி சேர்த்துக் கொள்ள மறுத்துவிட்டார்கள். எனவே எளிய பல வேலைகளை அவர் வாழ்க்கையை ஓட்டுவதற்காகச் செய்யவேண்டியிருந்தது. அவர் எழுதிய அற்புதமான தத்துவ நூல்கள், அவர் வாழ்ந்த காலத்தில் யாராலும் போற்றப்படவில்லை. ஆனால் இன்று உலக முழுவதும் போற்றப்படுகிறது.

**விலங்குகளுக்கு ஆசி**

மெக்சிகோவில் செயிட் அந்தோணி தினத்தில் விலங்குகளும் வழிபாட்டில் கலந்து கொள்கின்றன. விலங்குகள் அலங்கரிக்கப்பட்டு அழைத்து வரப்படும்.

RangaRakes tamilnavarasam.com

மனிதர்கள் விலங்குகளின் நோய்களைத் தீர்ப்பவர் என்று செயின்ட் அந்தோணி மக்களிடையே பிரபலமானவர், தங்கள் விலங்குகளை ஆசீர்வதிக்கும்படி மக்கள் அவரிடம் வேண்டிக்கொள்வார்கள். விவசாயிகள் பூச்சி புழுக்களையும் ஆலயத்துக்கு எடுத்து வந்து அவற்றால் தங்கள் பயிருக்குச் சேதம் ஏற்படாமல் அருள வேண்டுவார்கள். செயின்ட் அந்தோணி தினம் ஜனவரி 17. எகிப்தில் கி.பி. 257முதல் 356வரை வாழ்ந்த அந்தோணி அங்கு முதல் கிறிஸ்துவ மடத்தை ஏற்படுத்தியவர் ஆவார்.

### தந்தையின் கோபம்

மகனைக் கடுமையாகக் கோபித்துக் கொண்ட தந்தை அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து ''இதை போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு போய்க்கொடு'' என்று கட்டளையிட்டார்.

ஏன், எதற்கு என்று விளங்காத மகன், போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று இன்ஸ்பெக்டரிடம் கடிதத்தைக் கொடுத்தான்.

இன்ஸ்பெக்டர் பையனை உடனே லாக்கப்பில் அடைத்து, 'உன் தொல்லை தாங்க முடியவில்லை. சிறையில் அடைத்து வையுங்கள்' என்று கடிதத்தில் எழுதப்பட்டிருக்கிறது'' என்றார்.

அன்று முழுவதும் லாக்கப்பில் இருந்துவிட்டுப் பையன் வீடு திரும்பினான். அன்று முதல் போலீஸ்காரர்கள் என்றாலே சிறுவனுக்கு பயம். அவன் வளர்ந்து பெரியவன் ஆனதும் மக்களைத் திகிலில் ஆழ்த்தும் படங்களை எடுத்துப் பேரும் புகழும் ஏராளமான பணமும் சேர்த்தான் அச்சிறுவன் யார் தெரியுமா? ஆல்பிரட் ஹிட்ச்காக்.

RangaRakes

tamilnavarasam.com

# ஏன்? என்ன? எப்படி?

## ஜனவரியின் கதை

ஆங்கிலப் புத்தாண்டின் கி.மு.தலைத் திங்கள் ஜனவரி அல்லவா? ஜனவரி என்பது 700க்கு முன் வழக்கில் இருந்ததில்லை. ஜானஸ் என்ற ரோமர்களின் கடவுள் இரண்டு முகங்களைக் கொண்டது. அவர் ஒரு முகத்தினால் கடந்த காலத்தையும் மற்றொன்றில் எதிர்காலத்தையும் காண்கிறாராம்.

ஜனவரியில் ஜானஸ் பழைய ஆண்டையும் புதிய ஆண்டையும் பார்க்கிறோம். ஐரோப்பிய நாடுகளில் கிரேக்கர்களே நாள்காட்டியை முதன் முதல் கண்டு பிடித்தனர். இவர்களிடமிருந்தே ரோமானியர்கள் நாள்காட்டியைப் பார்க்கும் பழக்கத்தைக் கடன் வாங்கினர். நாள்காட்டி கண்ட தொடக்க காலத்தில் ஜனவரி என்பதே கிடையாது. பிப்ரவரியும் கிடையாது. மார்ச்தான் முதல் மாதம். அப்போது ஆண்டின் மொத்த நாட்கள் 304; மாதங்களும் மார்ச் முதல் டிசம்பர் முடிய பத்தே மாதங்கள் வழக்கில் இருந்தன.

கி.மு.700 இல் அரசாண்ட ரோமானிய மன்னனான நியூமா பாம்பிளி ஜனவரி, பிப்ரவரி இரண்டு திங்கள்களையும் சேர்த்து ஆண்டுக்கு 12 மாதங்கள் என்று ஆக்கினார். ஜனவரி 11 ஆம் மாதம் பிப்ரவரி 12ஆம் மாதம். கி.மு.4-ல் பதவியில் இருந்த ஜூலியஸ் சீஸர் என்ற மன்னர் மேலும் சில திருத்தங்கள் செய்து ஜனவரியை ஆண்டில் முதல் திங்களாக்கி பிப்ரவரியை இரண்டாவதாக்கினார்.

RangaRakes
tamilnavarasam.com

ஜானஸ் என்ற கடவுளின் பெயரால் இத்திங்கள் அமைந்தது. இரு முகங்கள் கொண்ட கடவுளின் ஒரு முகம் கடந்த ஆண்டினையும் மற்றொரு முகம் வருகின்ற புதிய ஆண்டினையும் சித்தரிக்கின்றனவாம்.

ஜனவரி முதல் நாள் வாழ்த்துக்குரிய நாளாகி அந்த நாளில் நண்பர்களையும் உறவினர்களையும் வாழ்த்தும் வழக்கம் பின்னர் வந்தது. லண்டனில் டிராபல்கர் சதுக்கத்தில் பொதுமக்கள் டிசம்பர் 31 நள்ளிரவில் கூடி நின்று புத்தாண்டை வரவேற்பர். நியூயார்க்கில் இதேபோல் டைம்ஸ் சதுக்கத்தில் பொதுமக்கள் ஒன்று சேர்ந்து புத்தாண்டை வரவேற்பார்கள்.

பிரிட்டனில் ஜனவரி நாளில் கருப்பு அங்கி அணிந்து கொண்டு, பொழுது விடிந்ததும் கையில் ரொட்டித் துண்டும் நிலக்கரி கட்டியும் வைத்துக் கொண்டு நண்பர்கள் வீடு செல்வது வழக்கமாம். இப்படிச் சென்றால் ஆண்டு முழுவதும் உணவு நன்கு கிடைக்குமாம்.

## 'பிப்ரவரியின்' கதை

ஜூலையும் ஆகஸ்டும் வந்தது எவ்வாறென்றும் இங்கே காணலாம். ஜனவரியின் கதையைச் சற்று முன்னர் படித்திருப்பீர்கள். ஜூலியஸ் சீஸர் என்ற மன்னர் பிப்ரவரியை ஓர் ஆண்டின் இரண்டாவது திங்களாக்கினார் என்பதும் உங்களுக்குத் தெரியும். அவரது காலத்துக்கு முன்புவரை பிப்ரவரி மாதம் 30 நாட்களைக் கொண்டிருந்தது. இந்த முப்பது, நாளில் ஒரு நாளை எடுத்து பிப்ரவரியை 29 நாளாக்கி, அந்த ஒரு நாளை ஜூலையோடு சேர்த்து ஜூலையை 31 நாட்கள் உள்ள திங்களாக்கினார். அத்தோடு விடாமல் தன் பெயரான ஜூலியஸ் சீஸரின் நினைவாக ஜூலை என்ற பெயரையே அந்த மாதத்துக்கு வைத்துவிட்டார். (அதற்கு முன் அந்தக் குறிப்பிட்ட மாதத்துக்கு வேறு பெயர் இருந்தது.)



ஜூலியஸ் சீஸருக்குப் பிறகு அகஸ்டஸ் என்பவர் வந்தார். அவரும் பிப்ரவரியிலிருந்து ஒரு நாளை எடுத்து அந்த மாதத்தை 28 நாட்கள் உள்ள மாதமாகக் குறைத்து விட்டார். எடுத்த ஒரு நாளை ஜூலைக்கு அடுத்ததாக உள்ள மாதத்துடன் சேர்த்து 31 நாளாக்கித் தன் பெயரின் நினைவாக அதற்கு ஆகஸ்டு என்றும் பெயர் சூட்டி விட்டார். என்றாலும் பின்னால் வந்தவர்கள் ஆண்டுக் கணக்கு சரியாக இருக்க பிப்ரவரியில் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை 1 நாளைக் கூட்டி லீப் ஆண்டாக்கினார்.

பிப்ரவரி என்றால் என்ன பொருள்? லத்தீனில் பிபரவரியஸ் என்ற சொல்லுக்குத் தூய்மைப்படுத்து என்று பொருள். முதல் முதலில் இது ஆண்டின் பன்னிரண்டாவது மாதமாக இருந்ததல்லவா? அப்போது புத்தாண்டை வரவேற்றிட இப் பிப்ரவரியான கடைசித் திங்களைத் தூய்மைப்படுத்தும் மாதமாக (நம் தமிழகத்தில் மார்கழியில் கடைசி நாளில் போகிப் பண்டிகை கொண்டாடுவோம் அல்லவா? அதுபோல) வைத்திருந்தனர். 12 வது மாதமான பிப்ரவரிதான் ஜூலியஸ் சீஸர் காலத்தில் ஆண்டின் இரண்டாவது மாதமாக மாற்றப்பட்டுவிட்டதே.

## மார்ச் என்றால் என்ன?

பிப்ரவரியிலிருந்து மார்ச் மாதம் வருவோம். இம் மாதத்திற்கான பெயர்க் காரணம் என்ன?

மார்ச் மாதத்தில் கிரேக்க நாட்டில் திடீரென்று காற்று வீசுவதும் மழை பெய்வதும் உண்டும். மார்ஸ் என்ற செவ்வாய் கடவுள் கிரேக்கர்களால் போர்த் தெய்வமாகக் கருதப்பட்டு வந்தது. இக்கடவுளின் உருவமே அச்சம் தரக்கூடியதாக அமைந்திருக்கும். கையில் ஈட்டி கேடயம் கொண்டு தோற்றம் தரும். இதே செவ்வாய் கடவுளை பயிர்களைப் பாதுகாக்கும் கடவுளாகவும் பயிர் விளை நிலங்களில் கிரேக்க மக்கள் ஆராதித்து வந்தனர். அக்

RangaRakes tamilnavarasam.com

காலத்தில் கிரேக்கர்களின் வாழ்க்கையில் இரண்டு வித முக்கியமான செயல்கள் நிறைந்திருந்தன. ஒன்று பயிரிட்டுத் தானியங்களை அறுவடை செய்வது. மற்றொன்று போரிடுவது. எனவே இவ்விரண்டு செயல்களுக்கும் உரிய கடவுளான 'மார்ஸ்ஸை' எண்ணி மார்ச் மாதம் என்று இதற்கு 'நாமகரணம்' சூட்டினர்.

## ஏப்ரல் என்றால் என்ன?

ஏப்ரல் மாதத்தின் கதை என்னவோ ஜனவரி, பிப்ரவரி போல சுவையாக இல்லை. ஏப்ரல் என்ற சொல்லானது 'அப்ரோடைட்' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து வந்ததா அல்லது 'ஏப்ரரி' என்ற லத்தீன் மொழியிலிருந்து வந்ததா என்ற சர்ச்சை உண்டு. என்றாலும் ரோமானியர்கள் ஏப்ரல் மாதத்தை காதல் தெய்வமான வீன (சுக்கிரனுக்கு) ஸூக்கு உரியதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

ஏப்ரரி என்ற லத்தீன் மொழிச் சொல்லுக்கு 'திறப்பு' என்பது பொருள். அதாவது மார்ச் மாதத்தின் காற்றுக்கும் மழைக்கும் பிறகு உண்மையான ஆண்டின் பருவநிலை மந்தகாசமான காற்றுடன் வீசத் தொடங்கும். இளந்துளிர்கள் மரங்களில் மிளிர்வதானது நல்வரவேற்புக்கும் புதிய பருவத்தின் திறப்புக்கும் வழிகோலுவதாகக் கொள்ளலாம். எனவே ஏப்ரரி என்பதே ஏப்ரலின் தோற்றுவாய் என்பது பொருத்தமாக இருக்கிறது.

## மே மாதம்

மே மாதத்தின் கதைக்கு வருவோம். 'மையா' என்ற தேவதையின் பெயரால் இம்மாதத்திற்கு இப்பெயர் வந்தது. இத்தேவதையின் தந்தைதான் அட்லாஸ் என்று புகழ் பெற்றவர். அவரே உலகைத் தாங்குவதாகக் கதைகள் சொல்லப்படுகின்றன. இடைக்காலத்தில் மே முதல் தேதியன்று இங்கிலாந்தில் மே இராணி முடிசூட்டிக்



கொள்வதாயும் மே துருவத்தில் நடமாடுவதாகவும் கருதப்பட்டு வந்தது. மே தினம் என்பது தொழிலாளர் நாள் அல்லவா? எப்போது முதல் இது கடைப்பிடிக்கப்பட்டது? 1889 ஆம் ஆண்டு முதல்தான் மே தினம் உலகின் பொதுவுடைமை நாடுகளில் கொண்டாடப்பட்டு வருகிறது. பின்னர் உலக முழுதுமான தொழிலாளர் நாளாயிற்று.

## ஜூன் திங்களின் வரலாறு

இப்போது ஜூன் மாதத்தின் பெயரைப் பற்றிப் பார்க்கலாம். ஜூன் என்றால் என்ன பொருள் என்பது பற்றிச் சில கருத்து வேற்றுமைகள் உண்டு. ஜூனியஸ் என்பது மிகப்பழம் ரோமானிய குடும்பத்தின் பெயரைக் குறிப்பது. இதன் நினைவாக இப்பெயர் வந்தது என்று சிலர் சொல்கின்றனர். என்றாலும், ஜூபிடர் கடவுளின் மனைவியின் பெயர் ஜூனோ என்பது. சொர்க்கத்தின் அதிதேவதையாவாள் இந்த ஜூனோ. இவள் தேர் மீது ஏறிப் பவனி வருவாளாம். முன் காலத்தில் இந்த ஜூன் திங்களின் தொடக்கத்தில் பந்தயங்களில் ஜூனோவின் பேரால் திருவிழா கூடக் கொண்டாடினராம். இதைப் பார்த்தால் ஜூனோவிலிருந்துதான் ஜூன் வந்திருக்கலாம். பழங்குடியினரான ஜூனியஸ்ஸிலிருந்து அல்ல என்று தோன்றுகிறது.

## ஜூலை மாதம்

ஜூலியஸ் சீஸர் என்று ஒரு ரோமானிய மன்னர், அவர் புகழ் வாய்ந்தவர்; தனது பெயரின் நினைவாக ஜூலை மாதத்திற்குப் பெயர் அளித்தார். அவர்தான் ரோமானிய காலண்டர் (நாள்காட்டி) முறையை அறிமுகப்படுத்தினார். ரோமில் முன்பெல்லாம் ஆண்டுக்குப் பத்தே மாதங்கள் இருந்தது என்றும் ரோமானிய முறையில் இது ஐந்தாவது மாதமாக இருந்தது என்றும், அதை ஜூலியஸ் சீஸர்

RangaRakes
tamilnavarasam.com

ஏழாவதாக மாற்றினார் என்றும் முன்னர், ஒரு பகுதியில் படித்திருப்பீர்கள். அப்போது அதன் பெயர் 'குவிண்டிலிஸ்' என்பது. இப்படிப்பட்ட பெயரோடு ஒரு மாதம் இருப்பதா என்று எண்ணி, அதற்குத் தம் திருப்பெயரைச் சூட்டி 'ஜூலை'யாக்கி அந்த மாதங்களின் வரிசையையும் மாற்றி ஏழாவதாகச் செய்துவிட்டார் ஜூலியஸ் சீஸர்.

## ஆகஸ்டு என்றால் ஆறு!

ஆகஸ்டு மாதம் என்றால் ஆறாவது மாதம் என்று பொருள். இப்போது அல்ல. பழைய ரோமானியர்கள் ஆகஸ்டு திங்களைச் 'செக்ஸ்டிலிஸ்' (ஆறாவது என்று பொருள்) என்று அழைத்தனர். உங்களுக்குத்தான் தெரியுமே, ஆறாவது மாதம் எப்படிப் பின்னர் ஜூலியஸ் சீஸரால் எட்டாவது மாதமாக மாறிவிட்டது என்று. அகஸ்டஸ் என்ற ரோமானிய மன்னரின் நினைவாக ஆகஸ்ட் என்ற பெயர் ஏற்பட்டது; அவ்வளவுதான். அகஸ்டஸின் நினைவை இப்போது ஆகஸ்டு சொல்லிக் கொண்டிருக்கிறது.

## செப்டம்பர்

செப்டம்பர் என்று எப்படிப் பெயர் வந்தது? பழைய ரோமானியர்கள் வைத்த பெயர் இது. 'செப்டம்' என்றால் ஏழு என்று பொருள். பழைய காலத்தில் இது ஏழாவது திங்கள் தானே? பின்னர்தானே சீஸர் இதை ஒன்பதாவதாக மாற்றினார். சீஸர் அன்று குழப்பினாலும் இவை பழகிவிட்டன.

## அக்டோபர்

அக்டோபர் என்றால் என்ன? எட்டாவது என்பது இதன் பொருள். பழைய கதைதான். சீஸர் மாற்றத்தின் படி இது இப்போது 'பத்தாவது' மாதமாக மாறிவிட்டதே



அக்டோபர் திங்களை ஆங்கிலேய சாக்ஸானியர்கள் மஞ்சள் மாதம் என்று அழைப்பது வழக்கமாம்.

## நவம்பர் என்றால் என்ன?

இன்றைய காலண்டரின் கணக்கின்படி நவம்பர் மாதம் பதினொன்று என்றாலும் அதன் பழைய பொருள் என்னவோ ஒன்பதுதான். ஆங்கிலோ சாக்ஸானியர்கள் இதனைக் குருதி மாதம் என்று அழைப்பர். காரணம் குளிர் மிகுதியான இப்பருவத்தில் அவர்கள் விலங்குகளைப் பராமரிக்க முடியாமல் அவற்றைக் கொன்றுவிடுவார்களாம். குருதி பெருகி ஓடுமாம். எனவே குருதி மாதம் எனப் பெயரிட்டனராம்.

## கடைசி மாதம்

டிசம்பர் என்றால் என்ன? உண்மையில் அதன் பழைய பொருள் பத்தாவது மாதம் என்றாலும் இன்று அது ஆண்டின் பன்னிரண்டாவது திங்கள். அது மட்டுமா? டிசம்பர் நடுங்கவைக்கும் குளிர், விருந்துகள், கிறிஸ்துமஸ் என்பதும் உண்டே....?

## புத்தாண்டு வாழ்த்து

ஜனவரி மாதம் எவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்டது என்பதை அறிவோம். புத்தாண்டு வாழ்த்து இப்போது ஓர் கட்டாயம் என்பதுபோல் எல்லாரும் ஏற்றுக்கொண்டுவிட்ட பழக்கமாகிவிட்டது. நல்லெண்ணத்தையும் நன்றியுணர்வையும் உணர்த்துவிக்கும் வகையில் உணர்வுகளைப் பரிமாறிக் கொள்ள வாழ்த்து அட்டைகளை அனுப்பிக் கொள்கிறோம். வாழ்த்து அனுப்பும் வழக்கம் எவ்வாறு வந்தது?

முதன் முதல் எகிப்தியர்கள் வாசனைத் திரவியங்கள் அடங்கிய குப்பிகளை நண்பர்கட்கும் உறவினர்கட்கும்

RangaRakes tamilnavarasam.com

அனுப்பித் தங்களது வாழ்த்து முகமாகப் பரிமாறிக் கொண்டனராம். குப்பிகளில் உள்ள திரவியங்களின் நல் மணம் காற்றில் கலப்பது போன்று தங்களது நல் லெண்ணமும் பரவட்டும் என்று செய்தனராம். ரோமா புரியில் சிறப்பு நாட்களின்போது ஆலிவ் இலைகளின் மீது தங்கரேக்குகளைச் சுற்றி நண்பர்க்கும் உறவினர்க்கும் அனுப்புவதுண்டாம். நல்லெண்ண வாசகங்களைச் சந்தன மரப்பலகையில் செதுக்கிக் கிறிஸ்துவின் காலத்தில் பரிமாறிக் கொண்டனராம். பதினைந்தாம் நூற்றாண்டில்தான் வாழ்த்து என்பது ஒரு புது வடிவம் பெற்றது.

17 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் பெற்றோரைப் பிரிந்து விடுதிகளில் தங்கிப் பயின்ற மாணவர்கள் தங்களது பெற்றோர்க்குக் கிறிஸ்துமஸ் விழாவின்போது வாழ்த்து அனுப்பி வந்தனர். வாழ்த்து ஊர்விட்டு ஊர் செல்லும் வழக்கம் தொடங்கியது. 18, 19 நூற்றாண்டுகளில் அச்சுக் கலை பரிணமித்தபோது வாழ்த்து மடல் உருவாயிற்று. அச்சேறிய கிறிஸ்துமஸ் வாழ்த்து நண்பர்களுக்கு அனுப்பப் பட்டது. இதைப் பெற்ற சர்ஹென்றிகோல் என்பார் விருந்தின்போது தம் நண்பர்களுக்கு இதனைக் காண்பித் தார். பின்னர் முறையான கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள் வந்தன. இன்று ஆங்கிலப் புத்தாண்டு பெற்றுள்ள மவுசு பேறு எந்த ஆண்டிற்கும் கிடையாது.

## கிழமைகளின் பெயர்கள்

கிழமைகளை ஆங்கிலத்தில் Sunday, Monday, Tuesday, Wednesday, Thursday, Friday என்கிறோம். எப்படி இப்பெயர்கள் வந்தன தெரியுமா? Sun,Mon (ஞாயிறு, திங்கள்) என்ற கோள்களின் வழியாகSunday, Monday இரண்டு நாட்களும் வந்தன. மற்ற நாட்கள் கிழமைகள் கிரேக்க கடவுள்கள் மற்றும் தேவதைகளின் பெயரால் ஏற்பட்டன.



Tyri என்ற போர்த் தேவதை தந்த கிழமை Tuesday, வட கிரேக்கத்தின் மாபெரும் கடவுளான Woden பெயரால் Wednesday வந்தது. இடிக்குரிய தேவதையான Thor என்ற பெயரிலிருந்து Thursday ஏற்பட்டது. Woden கடவுளின் மனைவியான Freya என்ற பெயர் Fridayவைத் தந்தது. இவன் மனைவி தன் கணவனின் பெயரால் கிழமை அமை வதைக் கண்டு பொருமினாளாம். அவள் பொறாமைப் படாமலிருக்கவே வாரத்தில் ஒரு நாள் Friday என அவள் பெயரால் தரப்பட்டதாம். ரோமானியரது கடவுளின் பெயர் Saturn என்பது தந்த கிழமை Saturday.

நம் இந்தியாவில் வாரத்தின் பெயர்கள் எப்படி ஏற்பட்டன? நம் மக்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கோள்களை (Planets) ஆராய்ந்து அவற்றின் போக்கைக் கவனித்து வந்தனர். முக்கியமாக ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன்(குரு) வெள்ளி (சுக்கிரன்) சனி என்ற கோள்களின் மூலமாகவே ஏழு நாட்களும் தோன்றின. இந்தியில் ஞாயிற்றுக்கிழமையை இக்வார் என்பர். திங்களைச் சோம்பார் என்றும், செவ்வாயை மங்கல்வார் என்றும், புதனை புத்வார் என்றும், வியாழனைக் குருவார் என்றும், வெள்ளியைச் சுக்கிரவார் என்றும், சனியை சனிவார் என்றும் அழைப்பர்.

## படப்பிடிப்பு நினைவாற்றல்

படிக்கும் பாடத்தை அல்லது படித்த பத்திரிகைச் செய்தியை உங்களால் அப்படியே திரும்பவும் ஒப்புவிக்க முடியுமா? சிலருக்கு அது சாத்தியமான பழக்கம். தியோடர் ரூஸ்வெல்ட் என்பவர் அமெரிக்க அதிபராய் இருந்தார். அவரிடம் அதிசயிக்கத்தக்க நினைவாற்றல் இருந்தது. ஒரு செய்திப் பத்திரிகையை எடுத்து ஒரு நிமிடம் அல்லது அதற்கும் குறைவான நேரம்தான் பார்ப்பாராம். பிறகு மடித்து வைத்துவிட்டு பார்த்த முழுவதையும் ஒரு சொல்

RangaRakes
tamilnavarasam.com

விடாமல் அப்படியே ஒப்புவிப்பாராம். இதற்குப் பெயர் 'படப்பிடிப்பு நினைவாற்றல்' என்று பெயர். செய்தித் தாளைப் பார்த்த உடனே சிலருக்கு கண்கள் வழியாகப் பார்த்தவற்றின் படம் மூளையில் அப்படியே படிந்து விழுந்துவிடுகிறது. பிறகு நினைத்த மாத்திரத்தில் பார்த்ததை மனத்திரையில் கொண்டு வந்து கண்ணால் கண்டதைக் கண்டவாறே சொல்ல முடிகிறது என்கின்றனர் அறிவியலார்.

விவேகானந்தரிடமும் இவ்வாறான வியத்தகு ஆற்றல் இருந்ததாம். பள்ளியில் படிக்கும் காலத்தில் ஒரு முறை பார்த்துவிட்டு அதை அப்படியே ஒப்புவிப்பாராம். விவேகானந்தர் இளமையில் கண்களை மூடியபடி வகுப்பில் உட்கார்ந்திருப்பாராம். ஆசிரியர் இவரை தூங்கியதாக நினைத்துத் தான் சொன்னது என்ன சொல் என்று கேட்பாராம். அவரும் ஆசிரியர் சொன்னதைத் தயங்காமல் கூறுவாராம். அதுபோன்று சிறு வயதிலேயே குழந்தைகளைப் படப்பிடிப்பு நினைவாற்றலில் பழக்கினால் இது எளிதில் கைகூடுமாம்.

## கடல் பூதம்

கடலில் இராட்சதர்களைக் கண்டதாக மாலுமிகள் கதைகள் சொல்கின்றனர். இது உண்மையா? அண்மை கால ஆராய்ச்சியின்படி கடலுக்கு அடியிலிருந்து சில பேருருவங்கள் எழுவது உண்மை என்று உணர்த்தப்பட்டிருக்கிறது. பலப்பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மாபெரும் விலங்குகள் விட்டுப் போன பரம்பரை கடலுக்கடியில் வாழக்கூடுமென்றும் அவை வெளியே தலை காட்டலாம் என்றும் நம்புகின்றனர்.

1852 ஆம் ஆண்டு ஜனவரி 13 ஆம் நாள், பசிபிக் மாகடலில் மாபெரும் பூதத்தைக் கண்டதாக மோனோர்கீலா என்ற கப்பலில் பயணம் செய்தவர்கள் கூறினார்கள். நீல



நிறத்துடனும், மாபெரும் தலையுடனும், முள் வாளுடனும் கூடிய உருவத்தைக் கண்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தப் பூதம் கடலில் வேறொரு விலங்குடன் போரிடும்போது பார்த்த கப்பலின் தலைவர் கேப்டன் ஸ்பரி என்பவரின் கட்டளைப்படி மாலுமிகள் அப்பூதத்தைத் தாக்கினர். போர் மறுநாளும் தொடர்ந்தது. அவ்வழியே வந்த ரிபெக்கா சிம்ஸ் என்ற கப்பலைத் துணைக்கு அழைத்துப் போரைத் தொடர்ந்து ஒருவகையாக மாபெரும் பூதத்தைக் கொன்று தரையில் இழுத்துப் போட்டனர். பாம்பு போல் இருந்த அந்த உயிரினம் 35 மீட்டர் நீளமும் (தலை மட்டும் 3 மீட்டர் நீளம்) 10 மீ. அகலமும் கொண்டிருந்த தாம். இதற்குப் பற்கள் மட்டும் 100 இருந்தனவாம். அதன் தோலைக் கோடரியால் கூடப் பிளக்க முடியவில்லையாம். அந்த இறந்த பூதத்தை வைத்துக் கொண்டு அறிவியலார் பல ஆய்வுகள் செய்தனர்.

## கதை சொன்னவர் கதை

முயலும் ஆமையும் ஓட்டப்பந்தயத்தில் போட்டியிட்ட கதை உங்களுக்குத் தெரியும். முயல் வழியில் தூங்கிவிட்டதால் ஆமை வெற்றி பெற்றதும் தெரியும். இந்தக் கதையைச் சொன்னவரின் பெயர் தெரியுமா? ஈசாப் எனப்து அவர் பெயர். ஈசாப் சிறிய கதைகளாக நிறைய நீதிக் கதைகள் எழுதியுள்ளார். ஈசாப் சொன்ன கதைகளைப் படித்துள்ள நாம், இவரது சொந்தக் கதையைப் பற்றி அறிவோமா?

ஈசாப் பழங்காலத்து கிரேக்கத்தில் ஓர் அரசனிடம் அடிமையாக இருந்தார். பார்ப்பதற்கு அழகில்லாமல் குரூபியாகத் தோற்றம் அளித்தார். முதலில் அவரை மக்கள் வெறுத்தனர். என்றாலும் இவர் நிறைய வேடிக்கை கதைகளைச் சொல்வதைக் கேட்க மக்கள் இவரைச் சுற்றிகூடி விடுவார்கள்.

RangaRakes tamilnavarasam.com

ஈசாப் ஒரு வேடிக்கையான மனிதர். தம்மைச் சுற்றிலும் வாழும் மக்களையும் அவரது தவறுகளையும் மற்ற செய்கைகளையும் கூர்ந்து கவனிப்பார். தாம் பார்த்த மனிதர்களின் செய்கைகளையும் தவறுகளையும் விலங்குகள் செய்ததாகக் கதையை மாற்றிச் சொல்வார். அவர் கிரேக்க மன்னரிடம் அடிமையாக இருந்தார் அல்லவா? அந்தக் கிரேக்க மன்னன் பெயர் கிரோஸஸ் என்பது. ஒரு சமயம் கிரோஸஸ் ஈசாப்பிடம் சிறிது பணம் கொடுத்து டெல்பி என்ற ஊருக்கு அனுப்பினான். அந்த ஊர் மக்கள் பேராசைக்காரர்கள். ஈசாப்பின் உணவிற்கு நிறையப் பணம் கேட்டார்கள். பணம் கேட்ட பேராசைக்காரர்களுக்கு அவர் ஒரு கதை சொன்னார்.

ஈசாப் சொன்ன கதை என்ன தெரியுமா? பொன் முட்டை இட்ட வாத்தைக் கொன்ற பேராசைக்கார எஜமானின் கதைதான். பேராசைக்காரனின் கதையையே அங்கே சொல்லி அவர்களை உணர வைத்தார்.

ஈசாப்பின் உலகப் புகழ்பெற்ற சில கதைகள் பின் வருமாறு: 'வெட்டுக் கிளியும் எறும்பும்' 'திராட்சை புளிக்கும் என்று சொன்ன நரி' 'நரி நரி' என்று சொல்லி ஊராரை ஏமாற்றிய சிறுவன் (நம் பக்கத்தில் அதைப்புலி வருகிறது என்று சொல்லி வருகின்றனர்) முதலானவை.

## அமெரிக்காவைக் கண்டவர் யார்?

கொலம்பஸ்தான் அமெரிக்காவை கி.பி.1492ஆம் வருடம் கண்டுபிடித்ததாக படித்திருப்பீர்கள். அல்லது கேள்வியுற்றிருப்பீர்கள். உண்மை என்னவென்றால் கொலம்பஸுக்கு முன்னரே அமெரிக்காவைக் கண்டு பிடித்து விட்டார்கள் சிலர். அவர்கள் யார்?

கொலம்பஸின் கடல் பயணத்துக்கு ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னரே ஐஸ்லாந்து கிரீன்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து கடற் கொள்ளைக்காரர்கள் அந்த கண்டத்திற்கு வந்து குடியேறிவிட்டனர். ஏறக்குறைய கி.பி.10 இல் இவர்கள் அமெரிக்கா வந்து இறங்கிவிட்டது உண்மை. இங்கு ஏராளமான காட்டுத் திராட்சை பயிராகி மண்டிக் கிடந்ததால் அதிலிருந்து ஒயின் தயாரித்த இக்கடற் கொள்ளைக்காரர்கள் இந்த நாட்டிற்கு ஒயின்லாந்து என்றுகூடப் பெயரிட்டனர்.

கிரிஸ்டபர் கொலம்பஸோ, பாவம் கி.பி.1492இல் அமெரிக்காவின் உள்நாட்டில் கூடக் காலெடுத்து வைக்கவில்லை. பஹாமாஸ் என்ற இடத்தைத்தான் அவர் கண்டு பிடித்தார். அமெரிக்காவைக் கண்டவர் என்ற வரலாற்றுப் புகழ் மட்டும் கொலம்பஸுக்குக் கிடைத்துவிட்டது.

## விலங்குகளுக்கு ஏன் வால் இருக்கிறது?

குரங்குகள் வாலை ஒரு கையாகவே கருதுகின்றன. மரத்தின் கிளையில் சுற்றித் தொங்க கைபோல் பயன் படுத்துகின்றன. போவெர் என்ற விலங்கு தண்ணீரில் எதிரிகள் வந்தால் வாலைத்தட்டி நீர்த்துளிகளை இறைக்கவும் சேற்றில் வீடு கட்டும்போது தன் வாலினால் கூரையைத் தட்டிச் சரி செய்யவும் பயன்படுத்துகிறது. முதலை நீந்துவதற்குத் தன் வாலைப் பயன்படுத்துவதோடு, எதிரிகளை வாலால் ஓங்கி வீசிச் சுழற்றித் தள்ளவும் செய்கின்றது. அணில் மரத்துக்கு மரம் தாவும்போது தன் வாலைப் பயன்படுத்துகிறது. எப்படி வாலைக் கொண்டு சமநிலை செய்து கொள்கிறது. குதிரை மாடுகள் முதலானவை தம் மீது உட்காரும் ஈ முதலானவற்றை விரட்டுகின்றன. கங்காரு கூடப் பாயும்போது தன் வாலை சமநிலைக்காகப் பயன்படுத்துகிறது. பறவைகள் பறக்கும் போது திசை திருப்பிடவும், மயில் தோகை விரித்து அழகோடு ஆடவும் பயன்படுத்துகின்றன. முயல்கள் குட்டிகளை அடர்த்தியான வாலால் சுற்றிப் பாதுகாக்



RangaRakes

tamilnavarasam.com

சின்றன. நரி தன் வாலை நண்டு வளையில் நுழைக்கும், நண்டு நரியின் வாலைப் பற்றினால் வெளியே இழுத்து உதறி நண்டினைச் சாப்பிடும்.

நாய் மட்டும் தன் வாலைக் கொண்டு குழைத்து நன்றியைத் தெரிவிக்கின்றது.

## மீன்களுக்குக் காது கேட்குமா?

மீன்களுக்கு ஒலியை உணரும் ஆற்றல் உண்டா? தரைக்கு மேல் ஆரவாரத்தையும் பேரொலியையும் உயிரினங்களும் சேர்ந்து ஏற்படுத்துகின்றனவே, அதேபோல் தண்ணீருக்குள் வாழும் உயிரினங்களும் சத்தம் ஏற்படுத்தாமல் இல்லை.

மீன்களுக்கு ஒலியை உணரும் அமைப்புகள் உள்ளன. நம்மைப்போல் இவ்வுறுப்புகள் உடலின் புறப்பகுதியில் அமைந்து இல்லாமல் மீன்களுக்கு உட்செவியான உறுப்புகள் சிறு துளைகளோடு அமைந்துள்ளன. தண்ணீர் ஏற்படுத்தும் ஒலி அதிர்வுகளை இந்தச் சிறு துளைகளின் வழியாக மீன்கள் உணர முடியும். இது மட்டுமின்றி, மீன்களின் உடலிலும் சிறு சிறு நுண்ணிய துவாரங்கள் உள்ளன. இவற்றின் வழியாகவும் தண்ணீரில் உண்டாகும் ஒலி அதிர்வுகளை மீன்கள் உணர முடியும்.

தங்கமீன் எனப்படும் மீன் வகைக்கு இந்த உணரும் ஆற்றல் மிகுதியாக உண்டு. நீர் அதிர்வுகளை உடலின் நுண்ணிய துளைகள் பெற்று, அவற்றை எலும்புகளுக்குச் செலுத்தியதும் அவை உடனே மூளைக்கு உணர்த்தும் போது (வேண்டாத) எதிரிகள் தண்ணீரில் இருப்பதை அம்மீன்கள் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

ஆற்றங்கரை மீது அல்லது குளத்தங்கரை மீது மீன் பிடிக்கச் செல்பவர்கள் வேகமாக நடப்பதில்லை; மெதுவாகவே நடப்பர். மீன் தண்ணீருக்குள் நடமாடுவதை



நாம் அறிய முடியாது; ஆனால் கரையில் நாம் நடமாடுவதை மீன்கள் கேட்டு உணர முடியும்.

மீன்களுக்குக் கேட்கும் ஆற்றல் உண்டு என்பதை ஆராய்ச்சியின் மூலம் உணர்த்தியிருக்கிறார் டாக்டர் காமேஸ்வரன். அவர் சென்னை மருத்துவக் கல்லூரியில் காது, மூக்கு, தொண்டை நோய் வல்லுநர். இவர் பாபநாசம் அருவியிருகே தாம்பாளம் தட்டி ஒலி எழுப்பி மீன்களுக்கு உணர்த்தி அவற்றைத் துள்ளி வரச் செய்திருக்கிறார். இதுபற்றி சில புகைப்படச் சிலைடுகளும் அவரிடம் உள்ளன. சில முறை சென்னைத் தொலைக்காட்சியில் இவற்றைக் கொண்டு ஒரு நிகழ்ச்சியில் செய்து காண்பித்து மீன்களின் செவியுணர்வு ஆற்றலை வெளிப்படுத்தினார்.

## நாய் வளர்ப்பு

நாயை நீங்கள் அருமைப் பிராணியாக வளர்க்கத் தீர்மானித்து விட்டீர்களா? அப்படியானால் செய்ய வேண்டியவை சில. எப்படிப்பட்ட எந்த அளவிலான நாய் உங்களுக்குத் தேவை என்பதையும் அவற்றுக்கு எந்தவித மான உணவு தர வேண்டும் என்பதையும் முதலில் முடிவு செய்ய வேண்டும். அது மட்டுமின்றி, நீங்கள் அதனுடன் எவ்வளவு நேரம் அன்றாடம் செலவழிக்க முடியும் என்பதையும் முன்கூட்டியே எண்ணிவிடல் நன்று.

தீர்மானித்து விட்டீர்களா? எத்தகைய நாய் இனம் உங்களைக் கவர்கின்றதோ அதை வாங்கி விடுங்கள். பிறகு, லைசன்ஸ் எடுக்க வேண்டும். இத்துடன் உங்கள் செல்லப் பிராணியைப் பொதுவான நோய்களினின்றும், கொடிய வியாதியினின்றும் பாதுகாத்திடத் தக்க நடவடிக்கைகளும் எடுத்தாக வேண்டும். நாயை நீவிவிடுகின்ற வேலை ரகத்துக்கு ரகம் மாறுபடும். பொடியான முடியுள்ள நாய்களானால் முரட்டு டவலைக் கொண்டு அல்லது பிரஷ்

RangaRakes

tamilnavarasam.com

கொண்டு நீவ வேண்டும். நீள முடி போர்த்திய நாய் என்றால், எஃகு சீப்பு கொண்டு நீவுதல் நன்று.

இனி உணவு விஷயம். நாயை முதலில் எடை போட்டு வைத்துக் கொள்ளுங்கள். அதன் எடையில் ஒவ்வொரு கிலோவுக்கும் 10 கிராம் ஆட்டிறைச்சி என்ற கணக்கில் தீனிபோட வேண்டும். நாய்க்குட்டி என்றால் அன்றாடம் 3-4 முறைகளும், முழுமையாக வளர்ந்த நாய் எனின் ஒரே தடவையும் முழு உணவு தர வேண்டும். அவற்றுக்காகத் தூய புதிய நீர் ஏராளமாகத் தயாராக வைத்திருக்கவும் வேண்டும். போதுமான விவரம்! இனி தேடுங்கள் விருப்பமான நாயை!

## பார்வையற்றோர்க்கு பிரெய்லி எழுத்து

பிரெய்ல் எழுத்து என்றால் என்னவென்று தெரியுமா? பார்வையற்றவர்களும் படிக்கவும் எழுதவும் கூடிய எழுத்துக்கே பிரெய்ல் என்று பெயர். வெறும் புள்ளிகளைக் கொண்டே இவ்வெழுத்துக்கள் அமையும். அதாவது ஆறு புள்ளிகள் ஒவ்வொரு எழுத்திலும் மாறி மாறி அமைந்திருக்கும் பிரெய்ல் டைப்ரைட்டர் உண்டு; பிரெய்ல் சுருக்கெழுத்தும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

லூயிஸ்பிரெய்ல் என்ற பிரெஞ்சுக்காரர் ஒருவர் இருந்தார். சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் இவர் வாழ்ந்தவர். இவரும் எதிர்பாராத விபத்தினால் பார்வையற்ற வரானார். பின்னர் நம்பிக்கையுடன் இவர் பல ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து பார்வையற்றவர் படித்து பயன் பெறும் படியாகப் புள்ளிகளைக் கொண்டு எழுத்துக்கள் கண்டு பிடித்தார். பார்வை இல்லாதோர் கைவிரல்களால் புள்ளி களைத் தடவி எழுத்தறிந்து படிப்பர். 'பிரெய்ல்' எழுத்து முறை அதைக் கண்டுபிடித்தவரின் பெயராலேயே விளங்குகிறது.



## கடிகாரம் வந்த கதை

உலகத்தில் முதன் முதலில் எப்போது காலம் காட்டும் கருவி கண்டு பிடிக்கப்பட்டது. எனத் தெரியுமா? இந்தியா வில் பகல்போதில் சூரிய ஒளியின் நிழல் கொண்டு நாழிகை கண்டனர். இரவில் அரண்மனையில் எண்ணெய் ஊற்றி விளக்கு எரியும் நேரம் கொண்டு காலம் கண்டனர். எகிப்தியர்கள் ஒரு சாய்வு பலகையை நிறுத்திச் சூரிய வெளிச்சத்தினால் நிழல் விழுவதைக் கொண்டு அதை அளந்து காலம் கண்டு வந்தனர். இது கிறிஸ்து பிறப்பதற்கு 1300 ஆண்டுகட்கு முன்னர் எகிப்தியர் கண்ட முறை யாகும். சூரியவட்டம் கொண்டறியும் முறை அதே காலத்தில் மெஸபட்டோமியாவிலும் பழக்கத்தில் இருந்தது. கிள்ப்ஸியட்ரா என்ற நீர்க்கடிகை கண்டுபிடிக்கப்படும் வரை, சூரிய நிழல் கடிகைதான் பயன்பட்டு வந்தது. டெல்லிக்குச் சென்றால் ஜன்தர்மந்தர் என்ற பகுதியிலும், ஜெய்ப்பூர் அரண்மனை அருகிலும் இவ்வாறான சூரிய கடிகையைக் காணலாம். முகலாய மன்னர்கள் இவற்றை டெல்லியிலும் ராஜபுத்திரர் ஜெய்ப்பூரிலும் பயன் படுத்தினர்.

யந்திரக் கடிகாரம் பதின்மூன்றாம் நூற்றாண்டில்தான் பயன்படுத்தப்பட்டது. அப்போது அவை பெரிய அளவில் இருந்தன. ஸ்பிரிங் வைத்து அதனால் சுழலும் கடிகாரம் கி.பி.1450இல் கண்டுபிடிக்கப்பட்டது. இப்போது எலக்ட்ரானிக் கடிகாரங்கள் பிரசித்தம்.

## கடல்கள்: பத்து, ஏழு ஐந்து

உலகத்தின் முக்கியக் கடல்கள் என்னென்ன? உலகத்தின் பத்தில் ஏழு பங்கினை ஐந்து முக்கிய கடல்கள் ஆக்ரமித்துக் கொண்டுள்ளன. மிகப்பெரிய கடல் பசிபிக், அடுத்த அளவில் பெரியது அமெரிக்கா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா இவற்றைப் பிரிக்கும் கடலான அட்லாண்டிக்

RangaRakes tamilnavarasam.com

என்பது. இந்தியக் கடல் இந்திய முனையில் ஆசியா கண்டத்தைப் பிரிப்பது. வடதுருவத்தினைச் சுற்றியுள்ள கடல் ஆர்க்டிக் கடலாகும். தென் துருவத்தில் உள்ள கடல் தென்கடல் என்பது.

## சிந்திப்பார்க்கு உணவு என்ன?

நமது உடல் நன்கு வளரவும் நன்கு வேலை செய்யவும் சில சக்திப் பொருள்கள் தேவைப்படுகின்றன. நல்ல சமன் செய்யப்பட்ட உணவை நாம் உட்கொள்ள வேண்டும். விட்டமின்களையும், தாதுப் பொருள்களையும் நாம் காய்கறிகளிலிருந்தும் தண்ணீரிலிருந்தும் பெறு கிறோம். என்றாலும், நமக்குப் புரோட்டின்கள் கார்போ ஹைட்ரேட்டுகள் கொழுப்புப் பொருள்கள் முதலானவை தேவை.

முட்டை, பால், இறைச்சி, சிலவகை காய்கனிகள் ஆகிய வற்றிலிருந்து நாம் புரோட்டீன் பெறலாம். இந்தப் புரோட்டீன்கள் நமது உடலில் உள்ள எலும்புகளையும் தசைகளையும் வளர்க்க உதவுகின்றன.

கார்போஹைட்ரேட்களும், கொழுப்புச் சத்தும் நாம் ஓடவும் ஆடவும் - ஏன் சிந்தனை செய்யவும் உதவும் சக்தியைத் தருகின்றன. சர்க்கரையும் மாவுப் பொருளும் பிரதான கார்போஹைட்ரேட் பொருள்கள். இவற்றைச் சர்க்கரை, தானியங்கள், ஓட்ஸ், கோதுமை, பார்லி முதலிய வற்றிலிருந்து பெறலாம். கொழுப்புச் சத்துகளை வெண்ணெய் இறைச்சி தாவர எண்ணெய் முதலியவற்றி லிருந்து பெறலாம்.

நமது முன்னோர்கள் நல்ல உடல் வலு உள்ளவர் களாகவும், நல்ல சிந்தனையாளர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் நவதானியங்களையும் நன்கு சாப்பிட்டார்கள். நம்மில் பலருக்கு நவதானியங்கள் என்றால் என்ன வென்றே தெரியாது.



## நாம் ஏன் தும்முகிறோம்?

நம் நாசியின் உட்புறம் மிகவும் நுண்ணுர்வு கொண்ட அமைப்பைப் பெற்றது. அத்தகைய நுண்ணுணர்வினால் எத்தகைய 'எரிச்சல்'(நெடி) அதன் மீது ஏற்பட்டாலும் உடனே அது மூளைக்குச் செலுத்தப்படும். எனவே, மிளகாய்ப்பொடி போன்ற காரமான பொருளை நாம் முகர்ந்தால் அது நுண்ணிய பகுதிகளைப் பற்றியதும் எரிச்சல் உண்டாக்கி நாம் தும்மியாக வேண்டும் என்று மூளை கட்டளை இடுகின்றது. சரி, தும்மல் உருவாவது எவ்வாறு? நாம் மூச்சுக்காற்றினை வேகமாகவும் ஆழமாகவும் இழுத்துச் சுவாசிக்கிறோம். சுவாசப்பைகள் காற்றினால் நிரம்பிவிடுகின்றன. உடனே காற்றுக்குழாய் மூடிவிடுகின்றது. அடுத்தபடி வயிற்றுத்தசைகள் இறுகி விடுவதால் சுவாசப்பைகள் அழுத்தப்படுகின்றன. இப்போது காற்றுக்குழாய் திறந்து காற்றை மூக்கின் வழியாக வெகுவேகமாக உந்தித் தள்ளுகிறது. அப்போது அது தும்மலாக உருவெடுக்கின்றது.

## வெப்பமும் குளிரும்

சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள சரியான தொலைவு என்ன? இந்தத் தொலைவு சராசரியாக 1500 லட்சம் கி.மீட்டர் அல்லது 930 லட்சம் மைல்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால், பூமியானது சூரியனை ஒரு சீரான வட்டப்பாதையில் சுற்றிச் சுழல்வதில்லை. முட்டை போன்ற பாதையில் சுற்றுகிறது. ஏப்ரலில் அதன் தொலைவு 1465 லட்சம் கி.மீட்டராகவும் (915 லட்சம் மைல்களாகவும்) நவம்பரில் 1515 லட்சம் கி.மீட்டராகவும் (945 லட்சம் மைல்களாகவும்) இருக்கின்றது. இந்த 48 லட்சம் கி.மீட்டர் (30 லட்சம் மைல்) வித்தியாசத்துடன் தொலைவாகப் போனால் குளிரால் நடுங்குகிறோம், அருகில் சென்றால் கோடைக்காக வருந்துகிறோம்.

 tamilnavarasam.com

## ஆயுள் விவகாரம்

மனிதனுடைய சராசரி வயது 100 ஆண்டு என்கிறார்கள். மனிதனை விட அதிக காலம் வாழக்கூடிய விலங்குள் உள்ளனவா? மனிதனைவிட மூன்று நான்கு பங்கு அதிகம் வாழக்கூடிய விலங்குகள் உள்ளன. காலப்ப கோஸ் என்ற தீவுகளில் வாழும் இராட்சத ஆமைகள் 400 ஆண்டு காலம் வாழக் கூடியவவை. நீளமான பாம்புகள் நூறு ஆண்டுகளுக்கு மேலும் வாழ்வதுண்டு. மனிதனுக்குச் சமமான காலம் வாழும் விலங்குகளில் யானையைச் சொல்லலாம். யானையும் கிளியும் 60-70 ஆண்டுகள் வாழ்வதுண்டு. பூனையும் நாயும் மிகக் குறைந்த காலம் - அதாவது 15 ஆண்டுகள் வாழ்வன. குதிரைகளின் ஆயுட்காலம் 25 ஆண்டுகள்.

## கான்ஸ்டாண்டி நோபிலே இஸ்தான்புல்

இன்று ஒரு நகரம் ஐரோப்பா கண்டத்தின் ஒரு பகுதியாகவும் ஆசியா கண்டத்தின் மற்றொரு பகுதியாகவும் அமைந்து உள்ளது. அந்நகரம் இஸ்தான்புல் என்று அழைக்கப்படும். இது உலகின் மிகப்பெரும் நகரங்களில் ஒன்று, துருக்கிக்கு உரியது. இதைப்பற்றிய வரலாற்றைப் பார்ப்போம். ஆசியாவை ஐரோப்பாவினின்று பிரிக்கும் குறுகலான ஜலசந்தி பாஸ்போரஸ். இந்த ஜலசந்தியின் ஐரோப்பா பகுதியில் இஸ்தான்புல் அமைந்துள்ளது. கடலோரமாக முக்கோண வடிவிலான முகட்டில் உள்ளது. ரோம் நகரத்தைப் போலவே ஏழு குன்றுகளின் மீது இந்நகரம் அமைந்துள்ளது.

இந்த இஸ்தான்புல் ஒரு காலத்தில் பிளான்டியம் என்று அழைக்கப்பட்டது. ரோமானியர்களின் பிடிக்குள் இந்நகரம் வந்தது. கான்ஸ்டாண்டின் என்பவர் இதனைக் கான்ஸ்டாண்டிநோபில் என்று பெயரிட்டார். இதனைத்தான் கிழக்கத்திய பகுதிக்கு கி.பி.330 இல் தலைநகராகவும்



வைத்துக் கொண்டார். 1453 வரை, அதாவது துருக்கியர் கைக்கு இந்நகரம் வரும்வரை, கிரேக்க - ரோமானிய பண்பாட்டுக்குரியதாக இது விளங்கி வந்தது. பின்னர் சில ஐரோப்பிய நாடுகளின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலால் இந்நகரம் பல அவதிகளுக்கு உள்ளாயிற்று. என்றாலும், பழங்கால - நவீன காலப் பண்பாட்டிற்கு இது ஓர் இணைப்பாயிற்று.

பல நிலநடுக்கங்களுக்கு ஆளான இந்நகரம், இன்று சில பழைய பண்பாட்டுச் சின்னங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

## பெரிய முட்டை

மிகப் பெரிய முட்டையிடக் கூடிய பறவை நெருப்புக் கோழி. காரணம் பறவை இனங்களில் மிகப் பெரியது நெருப்புக் கோழிதான். முட்டையின் நிறம் வெள்ளையாக இருக்கும். அதன் எடை 3 பவுண்டு இருக்கும். நீள வாட்டில் சுமார் 8 அங்குலம் உயரமிருக்கும். வெறுந் தரையில் கூடுபோல மணலை அமைத்து அதில் முட்டையிடும் பெண் பறவை. இம்முட்டையைப் பகலில் ஆண் பறவை அடைகாக்கும். இரவில் பெண் பறவை அடைகாக்கும்.

## கடவுளின் கொடிச் சின்னங்கள்

நம் நாட்டில் வழங்கும் புராணங்களைப் புரட்டலாம். பொதுவாக எல்லாக் கடவுளரும் தங்கள் கொடிகளில் சின்னங்கள் அமைத்துக் கொண்டனர். சிவபெருமான் நந்திக் கொடியாளர். விஷ்ணு கருடக் கொடியாளர். பிரம்மா அன்னக் கொடியாளர்.

பாரதப் போரில் பாண்டவர்கள் ஐவர்க்கும் தனித்தனிக் கொடி இருந்தது. அர்ச்சுனன் அனுமன் கொடி, துரியோதனன் பாம்புக் கொடி கொண்டிருந்ததாயும்

RangaRakes tamilnavarasam.com

குறிப்புகள் உள்ளன. இராமாயணத்தில் வரும் இராவணன் வீணைக் கொடி வைத்திருந்தானாம். ஒவ்வொருவரும் 'கொடிகட்டிப்' பறந்தனர் என்பது தெரிகிறது.

## சிறிய பறவை

மிகப்பெரிய பறவை நெருப்புக் கோழி என்பதை அறிந்து கொண்டீர்கள். மிகச் சிறிய பறவையும் உண்டு. மத்திய அமெரிக்கப் பகுதியில் தேனீக்களைவிடச் சற்றுப் பெரியதாக உள்ளது. அவ்வகை சிறகு இல்லாதவை. இவை பட்டாணி அளவிற்கு முட்டையிடுகின்றன.

## கொடிகளும் கழுகுச் சின்னமும்

நாடுகளுக்கும் பொதுவாகச் சின்னம் தாங்கிய கொடிகள் உண்டு. கழுகைச் சின்னமாகப் பல நாடுகள் தங்கள் கொடிகளில் பொரித்துள்ளன. ஸ்பெயின், ஜெர்மன், அல்பேனியா, ஆஸ்திரியா என்ற நாடுகளைச் சொல்லலாம். ரோமானிய அரசாட்சியில் கழுகு சின்னமாய் பொரிக்கப் பட்டிருந்தது. சார்லே மாக்னே என்ற ரோம் மன்னரே இந்தச் சின்னத்தை அறிமுகப்படுத்தினார். இதைச் சில ஐரோப்பிய நாடுகள் ஒற்றைக் கழுகு, இரட்டைக் கழுகு என்று சின்னங்கள் அமைத்துக் கொண்டன. என்றாலும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அரசும் பறக்கும் கழுகைச் சின்னமாகக் கொண்டுள்ளது.

## செஞ்சிலுவைச் சங்கம்

செஞ்சிலுவைச் சங்கம் எப்படித் தோன்றியது என்று உங்களுக்குத் தெரியுமா? 1859-இல் ஆஸ்திரியாவிற்கும் சர்டீனியாவிற்கும் சாஸ்பெரினாவில் நடந்த போரின்போது ஜீன் ஹென்றி டொனாண்ட் என்ற ஓர் இளம் வங்கியாளர் இத்தாலி நாடு சென்றிருந்தார். இவர் சாஸ்பெரினா போரைக் கண்டார். சுமார் 40,000 ஆஸ்திரியா பிரெஞ்சு வீரர்கள் இப்போர்க்களத்தில் கையிழந்து, காலிழந்து குற்றுயிராய்த் துடிப்பதைக் கண்டு உளம் நெகிழ்ந்தார். 1862-ல் சாஸ் பெரினா நினைவுகள் என்ற நூலை வெளியிட்டு அந்நூலில், போர்க்களத்தில் குற்றுயிராகத் துடிக்கும் வீரர்களுக்கு உதவ சர்வதேச ரீதியில் ஓர் அமைப்பு நிறுவப்பட வேண்டும் என்று பல நாட்டு அரசுகளுக்கு வேண்டுகோள் விடுத்தார். இதன் விளைவாகப் பதினாறு நாடுகளிலிருந்து வந்த பிரிதிநிதிகள் ஜெனிவாவில் 1863இல் ஒன்று கூடினர். 1864இல் ஒரு முடிவு உண்டாயிற்று. 26 ஐரோப்பிய நாடுகள் ஒன்று சேர்ந்தன. போர்க்களத்தில் எந்தப் பகுதி வீரர் தாக்கப்பட்டுக் கிடந்தாலும், அவருக்குச் சிகிச்சை தரும் பணியைச் செஞ்சிலுவைச் சின்னம் அணிந்த மருத்துவர்களும் செவிலியர்களும் மேற்கொள்ளலாம் என்று முடிவு செய்தனர். பல நாடுகள் மேலும் இவ்வியக்கத்தில் சேர்ந்தன. தொடர்ந்து இவ்வியக்கம் இன்று சர்வதேச (பன்னாட்டு) செஞ்சிலுவைச் சங்கம் என்று மாறியுள்ளது. தொடங்கி வைத்த ஜீன்ஹென்றி டொனாண்டிற்கு நன்றி சொல்வோம்.



## பண்டமாற்று

வெகு காலத்திற்கு முன்னர், பண்டமாற்று செய்து வந்தனர். சிறுவர்கள் தங்களிடம் உள்ள விளையாட்டுப் பொருள் ஒன்றுக்கு மற்றொன்று என மாற்றி வாங்கிக் கொள்வதுபோலத்தான் இந்தப் பண்டமாற்று அன்று நடந்து வந்தது. உப்பைக் கொடுத்துப் பருப்பு வாங்குவது, மிளகாயைக் கொடுத்து அரிசி வாங்குவது என்று நடந்து வந்தது. இது மிகவும் நிதானமான செயலாக இருந்தது மட்டுமின்றி கடினமான நடைமுறைச் சிக்கலையும் உண்டு பண்ணிற்று.

ஏனென்றால் ஒருவர் சிறிய பொருளான மிளகு வாங்க விரும்புகிறார். அவரிடம் பதிலுக்குத் தந்திட மிளகு

போன்ற வேறு சில பொருள் இல்லாமல் உப்பு முட்டை யாக இருந்துவிட்டால் மிளகு கிடைக்கும் இடத்தை நாடி உப்பு முட்டைகளைச் சுமந்து செல்வது சிரமம்தானே.

எப்படியோ அன்று இவ்வாறு சிரமங்களை அனுபவித் தனர். பின்னர் சிறுகச் சிறுக இந்தச் சிரமங்களைத் தவிர்க்கத் தங்களிடம் இருந்த பொன்னையும், வெள்ளியையும் எடையிட்டு அளந்து கொடுத்து வழக்கப்படுத்தினர். பண்டமாற்று முறையும் மறைந்திடத் தொடங்கிற்று. கிறிஸ்து பிறப்பதற்கு 700 ஆண்டுகட்கு முன்னர் ஏசியா மைனரில் உள்ள லிடியன்ஸ் என்பவர்கள் முதலில் நாணயங்களைச் செய்தனர். இவற்றைக் கொண்டு செலவாணி நடந்து வந்தது. இம்முறை ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவிற்று.

நம் பாரதத்திலும் பழம்பெரும் மன்னர்களும் பொன் னால் காசுகள் வெளியிட்டதை வரலாற்றுக் குறிப்புகள் உணர்த்துகின்றன. தங்கம், வெள்ளி, செம்பு முதலான உலோக நாணயங்கள் 1914 ஆம் ஆண்டு வரை புழக்கத் தில் இருந்து வந்தன. அப்போதுதான் ஐரோப்பிய நாடுகள் காகிதத்தில் பணத்தின் மதிப்பை அச்சிட்டு வெளியிட முனைந்தனர். (இம்முறை அமெரிக்கர்களிடமிருந்து மேற் கொள்ளப்பட்டது.)

வெறும் காகிதத்தை அச்சடித்துப் பணக்கார நாடாகிவிட முடியாது. அந்தப் பணத்தின் அளவிற்கு அது செல்வ வளம் உள்ள நாடாக இருக்க வேண்டும்.

## விசிறிக் காற்று

மின்விசிறி சுழலும்போதோ அல்லது கைவிசிறி அசையும்போதோ அது எப்படிக் குளிர் காற்றைத் தருகிறது என்று தெரியுமா?



நம்மைச் சுற்றிலும் உள்ள காற்று அசைவின்றி நிலையாக இருக்கும்போது, நம் உடலில் சூடேறிவிடு கின்றது. நம்மைச் சுற்றியுள்ள காற்றும் நம் உடலைப் போல வெப்பமுற்றுவிட்டால், நம் உடலிலிருந்து மேற்கொண்டு வெப்பம் வெளியேற வழியின்றி நாம் இருப்புக் கொள்ளாமல் தவிக்கின்றோம். உடனே விசிறி எடுத்து அசைத்தால் சலனமற்ற காற்று அசைகிறது. வெப்பக் காற்று நகர்ந்து குளிர்காற்று கொணரப்பட்டு சுழற்சி உள்ள இடம் வந்தடைந்ததும் காற்று இதமாக உள்ளது. இப்படியே விசிறி சுழலச் சுழல குளிர் வருவதும் அனல் காற்று நகர்வதும் நடக்கின்றது. என்றாலும் காற்று மண்டலத்தில் சிறிதாவது ஈரம் இருந்தாக வேண்டும். இப்படிக் குளிர்காற்று வந்து நம்மை இதப்படுத்தாவிட்டால் வெப்பக் காற்றுதான் வரும். வேதனைதான் மிஞ்சும்.

## செடிகளின் தூக்கம்

செடிகளில் இரவில் தூங்குகின்றனவா? செடிகளுக்கு உறங்கி மூடிடக் கண் இமைகள் கிடையா; தளர்ந்து ஓய்ந்திட நம்மைப்போல் தசைகளும் கிடையா; என்றாலும் நம்மைப்போல அவை உறங்கத்தான் செய்கின்றன. நம்மைப்போல் இரவில் உறங்குவது எவ்வாறு? பகல் வேளையில் அவற்றின் வேலை என்ன? சூரிய ஒளியின் துணையில் செடிகள் உணவு செய்கின்றன. புதிய பகுதிகள் வளர்ச்சி பெறுவதிலும் செடிகள் பகலில் ஈடுபடுகின்றன. ஆனால் இரவு வந்ததும் சூரிய ஆற்றலைப் பயன்படுத்த முடியாது அல்லவா! எனவே, அவை உறங்கப் போய்விடுகின்றன. அதாவது உணவு செய்வது நிற்பதும் வளர்ச்சி பெறுவது நிற்பதுமே செடிகளின் உறக்கம் எனப்படுவது. இராக்காலங்களில் வளர்ச்சி நிற்கிறது. உணவு தேடும் வேலையும் நிற்கின்றது. பொழுது புலர்ந்து சூரியன் வரும் வரை அவை காத்திருக் கின்றன.

RangaRakes
tamilnavarasam.com

## சர்க்கஸ் என்றால் என்ன?

சர்க்கஸ் என்ற சொல் லத்தீன் மொழியிலிருந்து வந்தது. அம்மொழியில் சர்க்கஸ் என்றால் வளையம் என்று பொருள். முற்கால ரோம் நகரில் குதிரைப் பந்தயம் நடத்தவும், காட்டு விலங்குகளுடன் போரிடவும் இன்னும் பல்வேறு வேடிக்கைகள் காட்டிடவும் இவ்வாறான வட்டமான பந்தயத் திடல்களை அமைத்திருந்தனர். இப்போது அந்தக் கொடிய விளையாட்டுகள் மறைந்து, காணக்களிப்பூட்டும் ரம்மியமான வேடிக்கைகளும் விளையாட்டுகளும் இவ்வரங்குகளில் இடம் பெற்றுவிட்டன. சர்க்கஸ் என்ற சொல் மட்டும் பழக்கத்தில் நின்று விட்டது.

## புதை மணல், புதை சேற்றிலிருந்து தப்பிட

தண்ணீர் நிரவி எதையும் சட்டென்று இழுத்துக் கொள்ளக்கூடியதே புதை மணல் அல்லது புதை சேறு என்று சொல்லக் கூடியவை. சாதாரண மணல் பாங்கைப் போல, இப்புதை மணல் நிரவிய அழுத்தம் காரணமாகச் செறிந்து இருப்பதில்லை. எனவே, இது பயங்கரமானது. ஆற்றின் படுகையில் நீங்கள் நடக்கும்போது தனியாக நடந்து செல்லாதீர்கள். கவனமாக நடந்து செல்லுங்கள். எதிர்பாராதவிதமாக புதை மணலிலோ, புதை சேற்றிலோ காலை வைத்து அது உங்களை இழுக்கத் தொடங்கி விட்டால் என்ன செய்ய வேண்டும்? கையையோ காலையோ அசைக்காமல் பக்கத்தில் உள்ளவர் காது கேட்கும்படியாகக் கூக்குரலிட்டு அவரை நீண்ட கழி கொண்டுவரச் சொல்ல வேண்டும். அவர் தொலைவில் நின்றபடி கழியை உங்களிடம் நீட்டி அதை நீங்கள் இறுகப் பற்றிட, அவர் இழுத்து உங்களைக் காப்பாற்றிட வேண்டும்.



## வானிலை

அடுத்த வாரத்தின் வானிலையை வானொலியிலும் செய்தித் தாள்களிலும் அறிவிக்கின்றார்களே, அது எப்படி? உலகம் முழுவதும் வானிலை முன் அறிவிப்பு நிறுவனங்கள் பல உள. அவை ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டு எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து இணைந்து செயல்படுகின்றன. இதன்படி வானிலை முன்னறிவிப்பு ஆய்வாளர் காற்றின் வேகம், மேக மண்டல தட்ப வெப்ப நிலை, காற்றழுத்தம் முதலானவற்றைக் கணித்துச் சொல்ல முடியும். 1950-ஆம் ஆண்டில்தான் உலக வானிலை அமைப்பு என்பதே உருவாயிற்று. இதன் பயனால் பல நாட்டு மக்கள் வெவ்வேறு நாடுகளின் வானிலை பற்றி அறிந்திட முடிந்தது. இப்போது பல அரிய கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன. இவற்றுடன் பலூன்கள், விமானங்கள் ஆகியவை காற்றின் திசை பற்றிய விவரங் களைச் சேகரித்துக் கொணர்கின்றன. வான மண்டலத்தின் தட்ப வெப்ப நிலை பற்றியும் சரியான தகவல்கள் தருகின்றன. மழை மேகங்களின் போக்கு பற்றி அறிந்திட ராடார் கூடப் பயன்படுத்தப்படுகிறது. பூமண்டலத்தைச் சுற்றிலும் வானிலையைக் கணக்கிடச் செயற்கைக் கோள்கள் கூட விடப்படுகின்றன. இவையாவும் விண்ணில் இருந்தபடி மண்ணில் உள்ள அறிவியலாளர்களுக்குத் தகவலைத் தந்த வண்ணம் உள்ளன. எனவே நாளைய வானிலை, அடுத்த வாரத்து வானிலை யாவும் முன்னதாய் நமக்கு அறிவிக்கப்படுகின்றன.

## நீளமான ஆறு

உலகத்தின் மிக நீளமான நதி எது என்பது தெரியுமா? எகிப்திற்கும் சூடானிற்கும் உயிரளிக்கும் ஒற்றை நதியான நைல் நதிதான். ஆப்பிரிக்க நதியான இதன் நீளம் சுமார்

RangaRakes tamilnavarasam.com

6500 கி.மீட்டர். இதனை அடுத்து நீளமான அறு அமெஸான். இதன் நீளம் சுமார் 6200 கி.மீட்டர், என்றாலும் அமெஸான் உபநதிகள், கிளை நதிகள் ஆகியவற்றைக் கணக்கிட்டால் அமேஸான் பெரிய நதியாகிவிடும். இது பிரேஸில், பொலிவியா, பெரு, கொலம்பியா, ஈக்வேடார் முதலான நாடுகளில் பாய்கிறது.

சைனாவில் யாங்ட்ஸே - கியாஸ் என்ற நதியானது உலகின் மூன்றாவது ஒற்றை நதி. இதன் நீளம் சுமார் 4860 கி.மீட்டர்.

இன்னும் ஒரு செய்தி. அதாவது அமெரிக்காவின் மிஸிஸிபி மிஸௌரி என்ற இரு நதிகளையும் கணக்கிட்டு இரண்டின் நீளத்தையும் கூட்டி சுமார் 8000 கி.மீட்டர் என்றும், எனவே இதுவே மிக நீளமானது எனச் சிலர் வாதிப்பர். பாதி தொலைவு வரையில் மிஸிஸிபி நதியானது மிஸௌரியுடன் கலப்பதில்லை. எனவே இதைக் கணக்கில் எடுக்கலாமா என்ற சிலர் வாதிடுவர்.

## வண்ணச் சுடர்கள்

வண்ண வண்ணமான வாண வேடிக்கை பார்த்திருப்பீர்களே? பல நிறப் பொறிகள் பறக்க வானவெளியில் எவ்வாறு வண்ணம் சேர்க்கிறார்கள், வாணவெடியைக் கண்டவர் யார்? வாணவெடி என்பதே முதன் முதலில் சைனாவில்தான் தோன்றியது. சிறுகச் சிறுக, இது கிழக்கத்திய நாடுகளுக்கும் பரவிற்று. பதின்மூன்றாவது நூற்றாண்டில் குருசேடர்கள் என்பர் இந்தக் கலையை ஐரோப்பாவிற்குக் கொண்டு சென்றிருக்க வேண்டும். என்றாலும் முதலில் பார்த்த வினாவிற்கு வருவோம். வாணவெடியில் வண்ணச்சுடர்கள் வருவது எவ்வாறு? வாணவெடிப் பொருள்களில் உலோக உப்புப் பொடிகள் சேர்க்கப்படுகின்றன. இவை வெடிபடும்போது, செம்பு நீலநிறமாகவும், பேரியம் பச்சையாகவும், சோடியம்



மஞ்சளாகவும், ஸ்ட்ரோன்டியம் சிவப்பாகவும் மாறுகின்றன.

## இருதயத் துடிப்பு

நீங்கள் பயப்படும்போது உங்களது இருதயம் மிக வேகமாகத் துடிப்பது ஏன்?

நீங்கள் சாதாரணமாய் உட்கார்ந்திருக்கும்போது, உங்கள் இருதயம் நிமிடத்திற்கு 70 முதல் 80 முறை துடிக்கும். அதுதான் இருதயத்தின் போதுமான அளவு வேகம். இரத்த நாளங்களின் வழியாக இரத்தம் செல்ல வேண்டிய இருதயமானது இரத்தத்தைப் ‘பம்ப்’ செய்து கொண்டேயிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். இரவு பகலுமாக இப்படி ஓயாது இருதயம் இரத்தத்தைச் செலுத்திய வண்ணமாகவே உள்ளது. நீங்கள் அன்றாடம் உண்ணும் உணவில் உள்ள உயிர்ச் சத்துகளை இரத்தம் சுமந்து செல்லுகின்றது. நீங்கள் சுவாசிக்கும் காற்றில் உள்ள பிராணவாயுவைக் கூட இரத்தமே எடுத்துச் செல்கிறது. நீங்கள் இருதயத்தின் வேலையைப் பல சமயங்களில் உணர முடிவதில்லை. மூளையில் உள்ள ஒரு சிறப்பு உறுப்பானது இருதயத்தின் தசைகளுக்கு நீங்கள் உறங்கும்போதுகூட அறிக்கை கொடுத்தபடி இவ்வேலையைத் தொடர்ந்து செய்தபடி உள்ளது. இப்போது தெருவில் நீங்கள் வேகமாய் ஓடுவதாய் வைத்துக்கொள்வோம். அப்போது உங்களது கால் தசைகள் வேகமாகவும் கடினமாகவும் வேலை செய்கின்றன. அப்போது இரத்தம் சுமந்து செல்லும் அதிகப்படியான உணவை அத்தசைகள் பயன்படுத்துகின்றன. அதிகப்படி பிராணவாயு அவற்றுக்கும் தேவைப்படுகின்றது. இப்படி அதிகப்படி தேவைப்படும் உணவுச் சத்தையும் பிராணவாயுவையும் மூளையின் சிறப்பு உறுப்பானது எந்தக் கட்டளைக்கும் காத்திராமல் தானாகவே எடுத்து வருகின்றது. இருதயத்திற்கு அவசர

RangaRakes

tamilnavarasam.com

மான செய்தியை மூளை இப்படிப்பட்ட வேளைகளில் அனுப்பும், அப்போது இருதயமும் வெகு விரைவாக இயங்கும்.

நீங்கள் ஓடும்போதுதான் இப்படிப்பட்ட அவசரச் செய்திகள் அனுப்ப வேண்டும் என்பதில்லை. நீங்கள் நடந்து செல்லும்போது உங்கள் தெருமுனையில் ஒரு லாரி ஏறக்குறைய முட்டி கடந்து சென்று அச்சப்படுத்துகிறது என்று வைத்துக் கொள்வோம். இப்படிப்பட்ட இக்கட்டில் உங்களால் ஒரு சென்டி மீட்டர் கூட நகர முடியாமல் போகும். ஏதோ நீங்கள் ஓட்டப்பந்தயத்தில் ஈடுபட்டது போல் ஏற்பட்டுவிடும்.

லாரி உங்களைப் பயங்காட்டியது என்னமோ உண்மை தான். பயம் நீங்கிய பின்னர், பயத்தினால் உங்கள் இருதயம் படபடவென்று துடித்ததை உணர்கிறீர்கள். அபாயம் ஏற்படுவதை நீங்கள் உணர்ந்ததும், உங்களது உடலின் சிறு உறுப்புகளான சுரப்பிகளுக்குச் செய்தி ஓடிற்று. இரசாயனப் பொருள்களை இந்தச் சுரப்பிகள் இரத்தத்தில் உடனே கலந்தன. உடல் செயல்பட இந்த அதிசய இரசாயனப் பொருள்கள் உதவின. உங்கள் சுவாசம் வேகமடையவும் இவையே உதவின. உடலின் சில பகுதிகள் சேகரித்து வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள் வேண்டும் என்ற செய்தியும் கூடவே சென்றது. இவையும் சேர்ந்து இருதயத்தை வேகமாகத் துடிக்கச் செய்தன; அவ்வளவுதான். இந்தப் பயத்தால் ஏற்பட்ட சம்பவத்தினால் இருதயத்தைப் பொறுத்தவரை எவையெவை நிகழ்ந்தனவோ அவ்வளவும் நீங்கள் ஓடியிருந்தாலும் குதித்திருந்தாலும் நிகழ்ந்திருக்கும். ❑

RangaRakes tamilnavarasam.com